தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 359.

களாபூரணோதயம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1995] [விலை ரூ. 40-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 359.

களாபூரணோதயம்

பன்மொழிப்புலவர்,
மு. கு. ஜகந்நாதராஜா
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

1995] [விலை ரூ. 40—00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	களாபூரணோதயம்
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்	:	மு. கு. ஜகந்நாதராஜா
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	359
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	ஏப்ரல், 1995.
தாள்	:	14. 2 கிலோ-சேஷசாயீ
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	290
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	ஆப்காலிகோ
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ. 40—00

வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகம், தமிழ், வடமொழி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த இலக்கிய நூல்களை வெளியிட்டு இந்திய இலக்கிய வளர்ச்சிக்கும், மொழிப் பரிமாற்றத்திற்கும் பெருந்தொண்டினைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது.

சிறந்த தெலுங்கு மொழிக் காவியமும், சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ளதுமான 'களாபூரணோதயம்' என்னும் நூலினைத் தமிழ்மக்கள் கற்று மகிழவும், இலக்கிய இன்பத்தில் திளைக்கவும் வாய்ப்பாகத் தமிழில் மொழி பெயர்த்து இப்பொழுது சரசுவதி மகால் நூலகம் வெளியிடுகின்றது.

மகாகவி பிங்களிசூரனர் தெலுங்கு மொழியில் பதினாறாம் நூற்றாண்டில் இயற்றிய அழகிய காவியம் 'களாபூரணோதயம்'. இக்காவியம் இலக்கிய வனப்பும், நயமும் மிக்கது.

இதனை மூல நூலின் அழகும், சிறப்பும் சற்றும் மாறாத வகையில் தமிழில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார், சாகித்ய அகாடமி முதலான பல நிறுவனங்களின் விருதுகளைப் பெற்றுள்ள சிறந்த மொழி பெயர்ப்பாளர் பன்மொழிப் புலவர் உயர்திரு மு. கு. ஜகந்நாதராஜா அவர்கள்.

மூலத்தில் செய்யுள் வடிவில் அமைந்த களாபூரணோதயம், எளிமையாக அனைவருக்கும் சென்று சேர வேண்டும் எனும் உயரிய நோக்கில் இங்குத் தமிழில் உரைநடை வடிவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்பது நம் மகாகவி பாரதியின் ஆவலும் ஆணையும். அவ்வாறு செய்தலே மொழி யிலக்கியப் பரிமாற்றத்திற்கும், தமிழ் மொழி வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவும். அவ்வகையில் இந்நூல் இலக்கிய மொழிபெயர்ப்புப் பணியாகும்.

இவ்வரிய மொழிபெயர்ப்புப் பணியினைச் செய்து தந்துள்ள பன்மொழிப் புலவர் உயர்திரு மு. கு. ஜகந்நாத ராஜா அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலை வெளியிடத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு எனது நன்றியை உரித் தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும்,

இந்நூற் பதிப்புப் பணிக்குப் பெருந்துணையாகச் செயல்பட்ட நூலகத் தமிழ் பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களுக்கும்,

நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்துள்ள சரசுவதி மகால் நூலக அச்சகப் பணியாளர்களுக்கும்,

இந்நூல் சிறப்பாக வெளிவர உதவிய ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

இவ்வரிய மொழிபெயர்ப்பு நூலிற்குத் தமிழுலகம் பெரு வரவேற்பளித்தல் திண்ணம்.

தேவ. ஜோதி ஜெகராஜன், இ. ஆ. ப.,

தஞ்சாவூர். *மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,*

24—4—95. *சரசுவதி மகால் நூலகம்.*

முகவுரை

தெலுங்கிலக்கியத்தில் தனிச்சிறப்புமிக்க காவியம் களாபூரணோதயம். இது வடமொழியில் பாணபட்டரின் காதம்பரியைப்போலக் கவிஞரின் சுயமான படைப்பாகும். காளிதாசன் உட்பட மாபெரும் கவிஞர்கள் அனைவருமே இராமாயணம், பாரதம். பிருகத்கதை ஆகிய இதிகாசங்களிலுள்ள கதைகளை எடுத்துக்கொண்டு காவியங்களாகவும், நாடகங்களாகவும் படைத்தனர். சமஸ்கிருத புராணங்கள், பிராகிருத கதைத்தொகுதிகள் பல இருப்பினும் காவியங்கள் என்ற வகையில் பார்த்தால் சுய கற்பனைப் படைப்புகள் மிகச்சிலவே. காதம்பரிக்கும் மூலக்கதை பிருகத்கதை என்று தெரிகிறது. தண்டியின் தசகுமார சரிதம் போன்றவையும் சுபந்துவின் வாசவதத்தை போன்றவையும் பிருகத்கதைக் கருக்களை ஏற்று அமைத்த காவியங்கள்தான். இவைகள் உரைநடைக் காவியங்களும் ஆகும். களாபூரணோதயம்—முற்ற முழுக்கச் சுயமான கற்பனைப்படைப்பு. இத்தகைய சுயமான புனைந்துரைக் காவியமான களாபூரணோதயம் தென்மொழிகளில் தனிச் சிறப்புடன் மிளிர்கின்றது. களாபூரணோதயம் — சுய கற்பனைக் கதைக் காவியம் மட்டுமன்றிக் கவிதைச் சிறப்பு மிக்க காவியமுமாகும். தெலுங்கிலக்கியத்தின் சிறந்த விமரிசகரும் நாவலரும் மேதையுமாகிய டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் தெலுங்கிலக்கிய முழுப்பரப்பில் இருந்து கவிச்சிறப்புடைய முதல் நூலாக இதை மதித்துப் போற்றியுள்ளார். தமது 'கவித்வதத்வவிசாரம்' எனும்

நூலில் உண்மையான கவிதைக்குறைவிடமாக இந்நூலும் திக்கன்ன பாரதமும் வேமன்னரின் நீதிக் கவிதைகளுமே சிறப்புடையனவாக உள்ளமையை நிரூபித்துள்ளார். இத்தகு சிறப்புமிகுந்த களாபூரணோதயம் ஏட்டுப்பிரதி-தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் தெலுங்குப் பிரிவில் எண். D.146, 147 ஆக உள்ளது. இதனைச் சரசுவதி மகால் நூல் வெளியீட்டுக் குழுவினர் தமிழாக்கி வெளியிடவேண்டும் எனத் தீர்மானித்தனர். களாபூரணோதயத்திற்கு வாவிள்ள ராமசாமி சாஸ்திரிகள் – 1910இல் பதிப்பித்த பதிப்பும் ஆந்திரபிரதேச சாஹித்ய அகாடமி சார்பில் டாக்டர் மருபூரி கோதண்டராமரெட்டி 1981இல் பதிப்பித்த பதிப்பும் தெலுங்கில் உள்ளன. சிறப்புமிக்க இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவது தேவையானதும் பயன் மிக்கதுமான பணி எனக்கருதினேன்.

களாபூரணோதயம் மகாகவி பிங்களிசூரனர் பதினாறாம் நூற்றாண்டில் இயற்றிய நூல் ஆகும். சூரனரின் மற்ற இரு காவியங்களும் தனிச்சிறப்புடையவைதாம். இவர் இயற்றிய "ராகவபாண்டவ்யம்" புகழ்மிக்க படைப்பாகும். இது ஒரு சிலேடைக் காவியமாகும். தமிழில் சிலேடைப் பாடல்களாகத் தனிநிலைச் செய்யுட்கள் உண்டேதவிரக் காவியம் இல்லை. துவியர்த்தி காவியம் எனும் இரு பொருட்காவியங்கள் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் மட்டுமே உள்ளன. பிறமொழிகளில் இல்லை. இது ஒரு தனிச்சிறப்பாகும். ராகவபாண்டவீயம் — இராமாயண பாரதக் கதைகள் இணைத்து இயற்றப்பட்ட அரிய ஆற்றல் மிக்க காவியமாகும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்ற பழமொழிக்கேற்ப ஒரே நூலில் இரு காவியங்கள்! பாடல்களைப் பிரித்துப்பார்த்தால் இராமாயணக் கதையும் வரும். வேறொரு வகையில் பிரித்துப் பார்த்தால் பாரதக் கதையும் வரும். தசரதன்—சிரவணனை யானை என்று கருதிக் கொன்றுவிட்டு, தன்செயல் கண்டு வருந்துகிறான்.

பாண்டு—முனி தம்பதியர் மான் வடிவில் இருக்க, மான் என்று கருதி அம்பு எய்து கொன்றுவிடுகிறான். பின் பிழை உணர்ந்து வருந்துகிறான். இந்த இருநிகழ்ச்சிகளின் பின்னணியில் இருவர் வருந்துவதும் ஒரே பாடலில் அமைகிற நயம்கண்டு வியந்து போகிறோம். அப்பாடல் இது.

" ஏனுங் கனிகர மரயக
பூனிதிகா இட்டியெடல பொஸகுனெயேயம்
கானமெ காலனி யமகதி
தோநா வேட முனியுகமு தருங்கின்செ துதன். "

இதில் முதலடியை,

ஏனுங்கு அனி—யானை என
கர மரயக—நன்கு ஆராயாமல்
என்று, இராமாயணக் கதைக்குப் பிரித்தும்,
ஏனும் கனிகரம் அரயக—நானும்
இரக்கமின்றி—என்று பாரதக் கதைக்கும் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும். இது போன்றே மூன்றாம் அடியைக், 'கான மெகாலனி யமகதி—என்று காட்டு விலங்கு என்று எமதருமன் விதியால் என்று இராமாயணக் கதைக்குப் பிரித்துக்கொள்ளவேண்டும்.

'கானமெ கால நியம கதி—என்று காணவில்லை! காலத்தின் விதிவசத்தால்' என்று பாரதக் கதைக்குப் பிரித்துக்கொள்ளவேண்டும். இதுபோலச் செம்மொழி—பிரிமொழிச் சிலேடை நயங்கள் மூலமாக இவ்விரு மாபெரும் கதைகளை ஒரே காவியத்தில் அடக்கியுள்ள அரும்பெரும் ஆற்றல் பிங்களி சூரனர்க்கே அமைந்த தனிச்சிறப்பாகும்.

இவரது மூன்றாவது படைப்பான "பிரபாவதி பிரத்யும்னம்" நாடகப்பாங்குடைய சிறந்த சிறு காவிய மாகும்.

கண்ணன் மகன் பிரத்யும்னன், வஜ்ரநாபனின் மகள் பிரபாவதியைக் காதலித்தான். வஜ்ரநாபன் பிரத்யும்னனைச்

சிறை வைத்தான். கண்ணன் அவனை மீட்டு வஜ்ரநாபனை வதைத்துக் காதலர்களை இணைவித்து மணமுடித்த கதை இது. கவிதைச்சிறப்புமிக்க உரையாடல்கள் மூலம் இக்காவியம் சிறந்துள்ளது. இம்முப்பெருங் காவியங்களை இயற்றிய பிங்களிசூரனர்— நந்தியால சமஸ்தான அரசராகிய கிருஷ்ணராஜரின் அவையில் 1560இல் இந்நூல் படைத்தளித்ததாகக் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு தமது 'ஆந்திர கவுல சரித்ர'வில் கூறியுள்ளார். சூரனர் காலம் **1533—1583** என்று அறிஞர்கள் கூறுவர்.

இவரது முன்னோர் குறித்து ஒரு சுவையான கதை உண்டு. இவரது தாத்தா ஒருவர் காட்டுக்குச்சென்று வழியில் கிடந்த கண்ணாடித்துண்டு ஒன்றைக்கண்டு அதன் பளபளப்புக்கு வியந்து அதைக் கொணர்ந்து தம் வீட்டில் மாடக்குழியில் வைத்தார். அதன்பின் அதைப் பற்றி மறந்துவிட்டார். ஒருசில நாள்களில் ஒரு பெண் வேலைக்காரியாக வந்தமர்ந்தாள். எந்த வேலையையும் ஒரு நொடியில் செய்து முடித்துவிடுவாள். அவள் பெயர் பேகி. ஒரு நாள் இரவில் பேகி, தன் நீண்ட நாக்கால் விளக்குத் திரியைத் தூண்டக்கண்ட அவ்வீட்டுப் பெரியவர் இது பேய் என அறிந்து அவளை விலக்கிவிட முயன்றார். எனினும் அவள் வீட்டைவிட்டுப் போகவில்லை. எத்தகைய கடினமான வேலையையும் ஒரு நொடியில் முடித்து விட்டு வருவாள். வேறு வழியின்றி அப்பெரியவர் அவளிடமே "நீ ஏன் இங்கேயே கிடக்கிறாய்? எங்காவது போய்த்தொலை!" என்றுகூற அவள் "என் கண்ணாடித் துண்டைத் (மணி) தந்துவிட்டால் நான்போகமாட்டேனா?" என்றாளாம். அதன்பிறகு அந்தக் கண்ணாடித்துண்டைத் தந்தபிறகு பேகி போய்விட்டாளாம். இதனைப் பிங்களி சூரனர் தம் பிரபாவதிபிரத்யும்ன காவியத்தின் பாயிரத்தில்

"பேகி அனு கந்தர்வி ஒகதானினேலெ" என்று என்று குறிப்பிட்டுள்ளார். இக்கதை அக்கால நம்பிக்கையை விளக்குவதாக அமைந்துள்ளது.

சூரனரின் தந்தை அமரய்யா! சூரனர் சிவபக்தர் எனினும் மன்னன் வைணவர் ஆதலின் வைணவத்தையும் சிறப்பித்துக் காவியங்கள் படைத்துள்ளார்.

களாபூரணோதயக் கதை சிறிது சிக்கலாகத் தோன்றும். பிரம்மாவும் சரசுவதியும் ஒரு பொய்கைக் கரையில் அமர்ந்து கொண்டு பேசிய சரசசல்லாபமே — உருவகமாக — கதா பாத்திரங்களாகும் கற்பனை நயம் வியப்புக்குரியது. இக் காவியம் காதற்சுவையும் வியப்புச்சுவையும் மிக்கது. நவ ரசங்களும் நிறைந்தும், வருணனைகள், அணிநயங்கள் கவித்துவச் சிறப்புகள் மிகுந்தும் உள்ள அற்புதமான காவியம்.

சிருங்கார ரசத்தின் அதிநுட்பமான உணர்வுகளை இக் காவியத்தில் கவிஞர் பதிவு செய்துள்ளார். உளவியற் பாங்கில்—மேனாட்டறிஞர்கள் பிராய்டு, யங் முதலியோர் விஞ்ஞான ரீதியாக மெய்ப்பித்த பல கோட்பாடுகட்கு மூலமாகக் கற்பனை வளத்தாற் கண்டறிந்த மெய்ம்மைகளை இக்காவியத்தில் காணமுடிகிறது. தென்மொழிகளில் இதனையே முதற்புதினமாகக் (நாவல்) கருதலாம். உரை நடையிலின்றிச் செய்யுள் நடையிலமைந்த புதினமிது. இக்காவியத்தில் அக்காலச் சமுதாயத்தின் பிரதிபிம்பத்தைக் காணமுடியும். வரிவிதிப்பு, லஞ்சம், போன்ற அரசியல் சீர்கேடுகளையும் அங்கதமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

இக்காவியத்தின் முதல் நான்கு அத்தியாயங்கள் முற் பிறவிக் கதையாகவும் மற்ற நான்கு அத்தியாயங்கள் பிற் பிறவிக் கதையாகவும் அமைந்துள்ளன. கதையின் தொடக்கம் ஐந்தாம் அத்தியாயத்தில் அமைந்துள்ளது. ஆனால் கதையை விவரிக்கும் பாங்கில் அது நான்கு அத்தியாயங்கட்குப் பிறகே வருகிறது. இந்த உத்தி பிங்களிசூரனரின் கதையாக்கத் திறனைக் காட்டுகிறது. இறுதி இரண்டு அத்தியாயங்களில் கவிச்சுவை குறைந்து

மரபு வழிப்பட்ட வருணனைகள் மிகுந்துள்ளதாக விமரிசகர்கள் கருதுவர். இந்நூலின் சிறப்பையும், கதைப்போக்கையும் நன்குணர, அனுபந்தமாகச் சேர்த்திருக்கும் டாக்டர் சி. ஆர். ரெட்டியின் விமரிசனம் நன்குதவும். முதலில் அதைப் படித்துவிட்டுப் பின்னர் நூலினைப் படிப்பது நல்லது. இவ்வரிய காவியத்தைத் தமிழாக்கம் செய்யப் பணித்த தஞ்சை சரசுவதி மகால் நூலக நிறுவனத்தாருக்கும், சிறந்த முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராஜபாளையம்,
15—1—95.

மு. கு. ஜகந்நாத ராஜா

சமர்ப்பணம்

தாய்மொழி மராட்டியாக இருந்தும் தமிழ்ச் செல்வங்களையும், தெலுங்குச் செல்வங்களையும் வடமொழி, மராட்டிய நூல்களையும் பாதுகாத்து இந்தியப் பண்பாட்டிற்கு உதவிய

சரபோஜி மன்னருக்கு இந்நூல் சமர்ப்பணம்

களாபூரணோர்தயம்

பீடிகை

திருமகளின் முலையிணையிற் பூசிய குங்குமஒளியி னால் எழில்பெற்ற கௌஸ்துப மணி, புதிய சூரியன்போல அமைய, சான்றோர்தம் இதயத் தாமரைகளை மலர்விக்கும் தத்துவமாகிய திருமால், நந்தியால் ஸ்ரீ நரசிம்ம கிருஷ்ணராஜன் என்றும் திருவுடன் பொலியுமாறு அருள் புரிக!

தன் குலதெய்வமாகத் திகழும் தாண்டவ கிருஷ்ண னின் பாதத்தாமரைகளைச் சேவித்து வளமுடன் திகழும் நரசிம்ம கிருஷ்ணராஜ எல்லாச்செல்வமும் பெற்று இன்புறுக.

வலக்கை இடப்புறத்திற்கு முலைச்செண்டுகளைத் தடவச்செல்ல, இடக்கை நாணத்தால் இடைமறிக்க சினத்துடன் அந்தக்கை, பக்கத்திலுள்ள கன்னத்தைத் தொடுகின்றவாறே இன்புறுத்தும் அர்த்தநாரீஸ்வரனாகிய (அம்மையப்பனாகிய) பிரம்மம், கிருஷ்ணராஜ சிவ என்றும் காப்பாற்றுமாக.

எப்போதும் அன்புடன், நான்கு முகங்களையும் ஒரே தடவை முத்தமிட விரும்பியதுபோல வேதம் என்ற பெயரில் நான்கு உருவம் தரித்த மனைவி (கலைமகளின்) யின் சொல்லைத்தட்டாது படைப்புத் தொழில் செய்யும் பிரம்மன் ஸ்ரீ கிருஷ்ணராஜனுக்கு நீண்ட ஆயுள் தருவானாக.

வானிலிருந்து உலகுக்கிறங்கிய கங்கைக்கும் மன்மதனின் பகைவன் (சிவன்) முடியில் உள்ள சந்திரனுக்கும் உறைவிடமான பனிமலையைப்போல, அழகிய சுவைமிக்க காவியமயமாகிய பாரதி (சரசுவதி)க்கு உறைவிடமான வான்மீகி முனிவனையும் வியாச பகவானையும் வணங்குகிறேன்.

பேசுதற்கும் எண்ணுதற்கும் அரியதாகிய மகாபாரதத்தையும் இராமாயணத்தையும் வாழைப்பழம் உரித்துத் தந்தாற்போலத் தெலுங்கு மொழியில் இனிய நடையில் மொழிபெயர்த்து எல்லோருக்கும் புரியும்படிசெய்த நன்னயர், திக்கன்ன, எர்ராபிரகட ஆகிய கவிஞர்களை வணங்குகிறேன்.

பாராட்டுவதால் சிறிது பெருமையும், பாராட்டாததால் சிறுமையும் போலிக்கவிஞர்களால் நூல்கட்கு உருவாக்க முடியாது. அவர்களது செயல்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை. நகையாடுதற்கேனும் ஆட்டின் கழுத்தில் அதர் கிடந்தாற்போன்ற அவர்களைப்பற்றி எண்ணுவதேன்?

எதுகை மோனைகளின் இடமறிந்து கேடுறாதவாறு இலக்கிய இயல்பறிந்து, கடுஞ்சொல்லின்றி மென்சொற் புணர்ந்து, அடிநிலை பிறழாமல், சந்தமறிந்து கவிஞர்கள் பால்கறப்பவன்போலப் புகழ் சிறக்கப்பெறவேண்டும். எப்படிப் பால் கறப்பவன் நேரமறிந்து பசுவின் மனநிலை ஓர்ந்து, கடுஞ்சொல்லின்றி அதற்கு அறிமுகமான மென் சொற்கள் பேசிக் கால்கள் உதறாமல் விழிப்போடு சாதுரியமாகப் பால்கறப்பது போலத்தான் கவிஞனும் கவிதையைப் பெறவேண்டும். அப்படிக்கின்றிப் புகழ்பெறாதது மட்டுமன்றி நகைப்பிற்கிடனாக நேரும்.

என்றிவ்வாறு இறைவணக்கம்செய்து, நற்கவிஞர் களைத் துதித்து, போலிக் கவிஞர்களை அலட்சியப்படுத்து வதே தண்டனையாகக் கருதி, எல்லா இலக்கணங்களும் பொருந்திய மாபெரும் காவியம் இயற்றுவது புகழுக்குரிய தென்றும் பிற நகைப்பிற்கிடனாகும் என்றும் நினைந்து ஏதாவதொரு நவரச காவியம் புனைதல் வேண்டும் என்று குதூகலமுடையவனாய் இருந்தேன். அவ்வமயம், தனது புகழ், திசையானைகளின் தந்தங்களின் ஒளிக்குத் தோழி யாகவும், தனது ஆற்றல், சூரிய மண்டலத்தின் கடுந் திறலுக்கு ஆசிரியன் ஆகவும், தனது நீதி, யுகந்தர, பட்டி, சாணக்கியர்களின் சாதுரியத்திற்கு எடுத்துக்காட்டாகவும் தனது விலாசம் (நடை) மன்மதன், சயந்தன் முதலியவர் கட்கு மறுப்புரையாகவும் திகழுகின்ற சிறப்புடையவனும் மனுநெறிப்படி உலகுபுரந்தருளும் ஆட்சிச் சிறப்புடைய வனுமாகிய, நரசிம்மராஜுவின் குமாரர் இந்திரனொத்த நந்தியால கிருஷ்ணராஜு ஆட்சிபுரிந்து வந்தார்.

மணிமயமான ஆபரணங்களால் திசைகளைப் பல வண்ணமாக்குபவனும்,சந்தனம், கஸ்தூரி முதலிய பூச்சுக் களால் மணம் பரப்புபவனும் ஆகி அழகுடன் கொலு மண்டபத்தில் அமர்ந்து, பிரகஸ்பதி, சுக்கிரர்கள் போன்ற நீதிநூலாசிரியர்களின் நூல்கற்றுப் புகழ்பெற்ற பேரறிவு சான்ற மந்திரிகளும், வேதமந்திரங்கள் உணர்ந்து மந்திர தந்திரங்களால் சாந்தி கருமங்கள் இயற்றி நன்மை விளை விக்கும் புரோகிதர்களும், கணாதர், கபிலர், கௌதமர், ஜைமினி, வியாசர், பதஞ்சலி முதலிய முனிவர்களின் அறு வகைத் தரிசனங்களில் புலமைபெற்று, மறுத்தும், சிறப்பித் தும் வாதாடும் திறன்மிக்க வித்வான்களும், பதினெண் புரா ணங்களை நன்கறிந்த புராணிகர்களும், ஆசு, மதுர, சித்திர, விஸ்தார கவிகளாகிய, பாணர், பவபூதி, காளிதாசர்களைப் போன்ற கவிஞர்களும், பலவிதப் பழமையான ஜோதிட சித்தாந்தங்கள் உணர்ந்து, கலை, காஷ்டை, நிமிஷம் முதலிய நுட்பமான காலக்கணிதம் உணர்ந்த பொழுதறிவிப்

போரும், தன்வந்திரி, சரகர் முதலிய மருத்துவ வல்லுநர்களின் ஆயுர்வேத முறையறிந்த வைத்தியர்களும், விஸ்வாவசு, தும்புரு, நாரத, ஆஞ்சநேய, பரத, மதங்க, கோஹல, தத்திலர் முதலிய இசை, நாட்டிய, மேதைகளின் கலைகளை உணர்ந்த கலைஞர்களும், உருவெழிலும் கலைத் திறனும் மிக்கக் கணிகையரும், வீரத்தழும்புடைய மார்பும் வீரசாகசங்களும் உடைய படை வீரர்களும் புடைசூழ அம் மன்னன் அமர்ந்திருந்தான்

தக்க இடத்திலிருந்து காவலரனுமதிபெற்றுக் காண வந்த சிற்றரசகுமாரர்கள் தம் சேவையைக் கடைக்கணித்தல், நகைபுரிதல், பேசுதல் முதலியவற்றால் ஆதரித்துக் கொண்டும், பல்வித அரச அலுவல்கள் குறித்த அதிகாரிகளின் விண்ணப்பங்களைக் கேட்டுக்கொண்டும், புலவர்களின் மெய்க்கீர்த்திகளைக் கேட்டுக்கொண்டும், பேரவையிலிருந்த மன்னன் காவியங்கள் குறித்து அளவளாவியபோது, என்னை அழைத்தான்.

ஆபஸ்தம்ப சூத்திரம், கௌதம கோத்திரத்தைச்சேர்ந்த பிங்களி சூரனரின் பேரனும், அன்னமரின் மகள் வயிற்றுப் பேரனும், அமரய்யா, அம்பம்மாவின் மகனும், அமரய்யா எர்ரனார்ய எனும் தம்பியர் பக்தியுடன் சேவிக்க இருப்பவனும், நற்காவியப் படைப்பில் நிபுணன் எனப்புகழ் பெற்றவனும் ஆகிய சூரன என்ற பெயருடைய என்னை அம்மன்னன் அன்போடு அழைத்தபின், உடை, மணியணிகள் தந்து மகிழ்வித்துக் கௌரவத்துடன் இன்மொழிபேசி இவ்விதம் கூறினான்.

'உன்மூலமாக ஒரு பெருங்காவியம் இயற்றுவிக்க விரும்புகிறேன். உறக்கமில்லாதபடி படிக்கச்செய்யும் சுவை மிக்கதாகவும் புதுமையானதாகவும், இனிமைமிக்க சொற்சித்திரங்கள் உடையதாகவும் இருக்கவேண்டும். அறிஞர்கள் 'ஆஹா' என்று பாராட்டும்படி அமைதல் வேண்டும்.

இதற்குமுன் 'கருட சம்ஹிதை' முதலிய நூல்கள் பல இயற்றியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவை குறித்துக் கூறுவானேன்? பாராட்டும்படியாக இருபொருள் படும் சிலேடைக்காவியமாக 'ராகவ பாண்டவீயம்' எனும் நூலை உன்னைத்தவிர வேறெவராலும் எங்கேனும் இயற்ற முடியுமா? நம்மொழிக்காவியமாக உன்னால்தான் இயன்றது' என்றிவ்வாறு ஆதரவுடன் பணிக்கவும், நான் என் ஆற்றலைக்கண்டுகொள்ளாமல் ஒப்புக்கொண்டேன். அம்மன்னன் நினைத்தது முடியும் என்ற நம்பிக்கையால் இசைந்தேன்.

இவ்விதமாக முயன்று அம்மாமன்னனின் ஆணைக் கிணங்க எனது ஆற்றலுக்கேற்ப ஆராய்ந்து, அபூர்வமாகிய கதையமைப்பும், அற்புதமானதும், காதற்சுவை மிக்கதும் புண்ணியமிக்க வருணனைகள் உடையதும் ஆகிய 'களாபூரணோதயம்' எனும் மகாகாவியம் படைக்கத் தொடங்கினேன். அத்தகு எனது நூலுக்கு இறைவனாகிய நந்தியாலகிருஷ்ணராஜனின் மரபு குறித்து விவரிக்கின்றேன். எல்லா உலகமும் (குவளைமலர்களும்) ஆளும் இறைவனும், சூரியனால் செய்யப்பட்ட திருவினை உடையவனும், சௌபாக்கியசாலியுமாகிய சந்திரன் உலகிற் சிறந்திருந்தான். அத்திரிமுனிவன் கண்களிலிருந்து பிறந்தவன் (அத்திரிலோசனன்) ஆகிய அவன் எண்ணற்ற தாரகைகட்கு அதிபதியானான். அந்த முக்கண்ண (திரிலோசன)ன் மைந்தனாகப் பிறந்த குமாரன் (முருகன்) ஒரு தாரகனை வென்றது, அரிதான செயலல்ல.*

---

* **திரிலோசனன் — அ + திரிலோசனன் (அத்திரி + லோசனன்) என்னும் சொற்களின் நயம் காண்க. லோசனம் = கண் அ+திரிலோசனன் (அத்திரிமுனிவன்)கண்களில் பிறந்த சந்திரன் பல தாரகைகளை வென்றான். திரிலோசனன் (சிவன்) கண்களில் பிறந்த முருகன் ஒரு தாரகாசுரனையே வென்றான் என்பது கருத்து.**

அந்தச் சந்திரவம்சத்தில், பூலோகசந்திரனாகிய 'ஆரவிடி புக்கராஜன்' உலகப்புகழ் பெற்றவனாகப் பிறந்தான். அந்தப்புக்க மன்னனின் தோள்வலிமையின் அளவை, அவனது வாளுக்கிரையான வீரர்களால் புறக் கணிக்கப்பட்ட நளகூபரனுக்குத் தான் தெரிந்துகொள்ள முயன்றால் தெரிந்திருக்கும். [நளகூபரன் ரம்பையின் கணவன். வீர சுவர்க்கம் புகும் வீரர்கள் ரம்பையின் அரவணைப்பைப் பெறுவதால் நளகூபரன் புறக்கணிக்கப் பட்டான் என்பது கருத்து]

அறிவில் பிரம்மா, அழகில் மன்மதன், ஆய்வில் பிரஹஸ்பதி, வண்மையில் கர்ணன் என்று சான்றோர் அவனைப் புகழ்வர். நிரங்குச: கவய: [கவிஞர்கட்கு முழுச்சுதந்திரம் உண்டு. கவிஞர்களைத் தடுக்கும் அங்குசம் (துரட்டி) இல்லை என்பது பழமொழி] ஆதலால் அவர்கள் கூறுவதை ஏற்கவேண்டியுள்ளதேயன்றிப் புக்க மன்னனுக்கு இணையாரும் எவ்விதத்தும் இல்லை.

புக்கமன்னன் புனிதவதியாகிய 'அப்பலதேவி'யையும் சீலமிக்க 'பல்லாதேவி'யையும் திருமணம் புரிந்து கொண்டான். இவர்களுள் 'பல்லாதேவிக்கு' இந்திரகுமாரர் களைப்போன்ற புகழ்மிக்க ராமராஜா முதலியவர்கள் பிறந்த னர். புக்கமன்னனுக்கு மூத்த மனைவி அப்பலதேவி மூலமாக சிங்கரய்யா, அஹோபல ஆகிய இருவரும், ஆற்றல் மிகு நீதிக்கு வெற்றியும் நன்மையும் உருவாவது போலப் பிறந்தனர்.

அவர்களுள் சிங்கராஜா "ஔபளதேவி"யை மணந்தான். இவர்கட்கு நற்குணங்களும் செல்வமும், சிறப்பும் மிக்க நரசிங்கராஜு, நாராயணராஜு, திம்மராஜு எனும் மூன்று மக்கள் பிறந்தனர்.

இவர்களுள் புகழ்மிக்க நரசிம்மராஜு 'நந்தியால' எனும் நகரத்தை ஆண்டு சீர்பெற்றதால் அவரது மரபு 'நந்தியால' வம்சம் என்று புகழ்பெற்றது.

அந்த நரசிங்கராஜு கற்புக்கரசியாகிய 'மாதமதேவியை' மணந்துகொண்டார். இவர்கட்கு, சிங்கரராஜு, நாரராஜு, குமாரஒப்பளராஜு, வரதராஜு, ரகுபதி எனும் மக்கள் பிறந்தனர்.

நரசிங்கராஜனின் மகன் சிங்கரராஜு ஆட்சித்திறனிலும் வீரத்திலும், வண்மையிலும் இணையற்றவனாகத் திகழ்ந்தான். நாரராஜு நாராயணபக்தன். சான்றோர் பாராட்டும் நற்குணசீலன். அருச்சுணனைப் போலப் போரில் வீரம்மிக்கவன். சுவர்க்கத்திலிருப்பதால்தான் போலும் இந்திரன் அஞ்சாதிருந்தான். மித்திரனின் மகன் ஆதலினால் தானும் நண்பனாகக் கருதியதால்தான் போலும் யமன்[1] தன்நகரில் அஞ்சாதிருந்தான். மதுமயக்கத்தால் போலும் வருணன் தன் நகரில் கலங்காது இருந்தான்.

தான் செல்வம்மிக்கவன் என்ற செருக்கினால் போலும் குபேரன் தன் நகரில் அஞ்சாது இருந்தான். தங்களுக்குத் திக்கில்லாததால் போலும் மற்ற நால்வரும் மூலையிற் சேர்ந்து முடங்கிக்கிடந்தனர். போரில் நாரராஜு தன் பேரிகையை முழக்கும்போது எட்டுத் திசைக் காவலர்களும் இந்நிலையை உற்றனர்.

பகல்(ய்)[2] என்ற சொல் ஆகாயத்தாமரைபோல நாரராஜனின் ஆற்றலால் இல்லாததாயிற்று. சூரியனுக்குப் பகல் இருப்பதால் இம்மன்னனுக்கு இணையாகமாட்டான். சூரியனுக்குப் பகலில்லாத நாளுமுண்டோ? நரசிம்மராஜு மகன் நாரராஜு, உத்கல (ஒரிசா) மன்னனை அடக்கினான்.

---

1. யமன் மித்திரன் (சூரியன்) மகன். மித்திரன் என்றால் நண்பன் என்றும் பொருள். மித்திரன் மகன் என்ற சொல் சிலேடையின் நயம் காண்க

2. பகலு என்ற தெலுங்கு சொல்லிற்கு பகல் என்றும் பகைவர்கள் என்றும் இரு பொருளுண்டு. இச்சொல் மூலம் இக்கவிதை அமைக்கப்பட்டுள்ளது.

கொண்ட வீடு போரில் அற்புதத்திறல் காட்டிக் "குதூப மல்க"னை வென்றான். சவாயிபரீதுவை அடக்கினான். இம்மன்னனுக்கு இணை யாருமில்லை. திருமால் பக்தியி னால் அறச்செல்வமும் அறச்செல்வத்தால் வெற்றியும் வெற்றியால் ஒளிமிக்க தோள்வலிமையும், தோள் வலிமை யால் ஆட்சித்திறனும், ஆள் திறனால் சாம்ராஜ்யமும், சாம் ராஜ்யத்தினால் சாந்தகுணமும், சாந்தகுணத்தால் வேதம் முதலிய சகல கலைகளும், கலைகளால் பரந்த ஞானமும் ஞானத்தால் பகுத்தறிவும், அதனால் கொடையும் கொடை யால் தூய புகழும் அதனால் குலமும் அன்பும் இன்பும் அணிபெற்றிட நந்தியால நாரராஜன் சிறப்புடன் விளங்கி னான்.

முகிலொத்த வள்ளன்மையில் மட்டுமன்றி வேத வேதாந்த சாத்திர ஞானத்திலும், நேர்மையிலும் தூய்மையி லும் ஆற்றலிலும்கூடச் சிறந்தவனாக நரசிங்கராஜுவின் குமாரன் குமார ஒபளராஜு விளங்கினான்.

சாத்துவிக குணத்திலும், சத்தியவாக்கிலும், தானத்தி லும் தோள்வலிமையிலும் போர்வீரத்திலும் ஆட்சித் திறனி லும், தத்துவஞானத்திலும் வரதராஜு சிறந்தவனாகப் புகழ்பெற்றான்.

அருள்நோக்கிலும், சரணுற்றவர்களைக் காப்பதிலும் போர்வீரத்தால் தீயவரை அடக்குவதிலும் ரகுராமனைப் போன்றே ரகுபதிராஜு சிறந்து விளங்கினான்.

அவர்களில் சிங்கரய்யா, கௌரமாம்பாவை மணம் புரிந்து நரசிம்மராஜு, ரகுபதிராஜு, ஒபளராஜு எனும் மக்களைப் பெற்றான்.

இம்மூவரில் மூத்தவனாகிய நரசிம்மராஜுவுக்கும் ராமாம்பாவுக்கும் சினஒபளராஜு பிறந்தான். இந்த ஆவளி சின ஒபளராஜு போகத்தில் இந்திரன், தேசில்

சூரியன், தானத்தில் கர்ணன், தைரியத்தில் மேருமலை எனப் புகழ்பெற்றான்.

இது சிங்கரய்யாவின் சந்ததி. சிங்கரய்யாவின் தம்பியின் தம்பியாகிய ஓபளராஜுவின் வமிசத்தை விவரித்துக் கூறுகிறேன்.

அந்தக் குமார ஓபளராஜு கற்பும் பொற்பும் மிக்க குணவதி திருமலாம்பாவைத் திருமணம் செய்து கொண்டான். இவர்கட்கு நரசிங்கராஜு, பெத்த அஹோபலராஜு, மாதராஜு, சின்னஅஹோபலராஜு, நாரராஜு எனும் ஐந்து மக்கள் பிறந்தனர்.

அவர்களுள் நரசிங்கராஜு இருகுலத்துக்கும் திருவாகத் திகழும் எழிலும் நற்பண்பும்மிக்க லட்சுமீதேவியை மணம் புரிந்தான்.

இவர்கட்கு, புகழ்மிக்க ஓபளராஜு, கலைத்திறன்மிக்க திம்மராஜு, ஒளிமிக்க நாரராஜு எனும் மக்கள் பிறந்தனர்.

ஓபளராஜு திருவிலும் உருவிலும், பொருபடைத் திறனிலும் சிறந்து விளங்கினான்.

அஞ்சாமையும் ஒளிமிக்க வீரமும் சீலமும் உடைய குமார ஓபளராஜுவின் குமாரன் நரசிம்மராஜுவின் இரண்டாவது மகன் திம்மராஜு புகழ் மிக்கவனாக, புலவர்கள் பாராட்டும்படி திகழ்ந்தான்.

நரசிம்மராஜுவின் மூன்றாவது குமாரனாகிய நாரராஜு — நிலமடந்தைக்கு இனியவனாகி, மேருமலைக்கிணையான புகழ்பெற்றான். இவனது சிறிய தந்தையாகிய பெத்த ஓபளராஜு உத்தண்ட ஓபளராஜு, சின்ன ஓபளராஜு எனும் மக்களைப் பெற்றான்.

இவனது சிறிய சிறியதந்தையாகிய சின்ன ஓபளராஜு மூன்று மக்களைப்பெற்றான். திருமலய்யா, ராஜம்ராஜு

கிருஷ்ணராஜு என்ற அம்மூவரும் சீரும் சிறப்புடனும் இருந்தனர்.

நந்தியால குமார ஓபளராஜுவின் வமிசம் இது. இனி இவனது தம்பியின் வமிச சரிதம் விவரித்துரைக்கின்றேன். இவனது தம்பி வரதராஜு தன் மனைவி திருமலாம்பா மூலமாக ஸ்ரீரங்கராஜு, நரசிங்கராஜு, கனகராஜு எனும் மூன்று மக்களைப் பெற்றான்.

அவர்களுள் ஸ்ரீரங்கராஜு — அழகும் அரியநற்பண்பு களும் உடைய திருமலாம்பாவை மணந்தான். வெற்றித் திருவுடன் பொலியும் ஓபளராஜு, அறநெறி வழுவாத சான்றோர் புகழ் திம்மராஜு, புகழ்மிக்குடைய வரதராஜு திருமால் பக்திமிக்க, ஆசாரசிலனான கிருஷ்ணராஜு எனும் நால்வரை ஸ்ரீரங்கராஜு — திருமலாம்பா தம்பதியர் பெற்றனர்.

ஸ்ரீரங்கராஜுவின் தம்பி கனகராஜுவுக்குக் கனககிரி ஓபளேஸ்வரன் எனும் மகன் பிறந்தான். இது வரதராஜு வமிச சரித்திரம் ஆகும்.

இவ்விதம் சகோதரர்கள் வமிசம் அபிவிருத்தியடைந்து பண்புடனும் பாசத்துடனும் மகிழ்ச்சியுடன் நந்தியால நாரராஜு திகழ்ந்தான்.

அந்த நாரராஜு திருமலாம்பாவை மணம்புரிந்து கொண்டான். புண்ணியவதியும் குலமகளும் சிலவதியும் கற்புக்கரசியுமாகிய திருமலாம்பாதேவி மூலம் நரசிங்கராஜு மாதராஜு, கனகராஜு எனும் மூன்று மக்கள் பெற்றான்.

இவர்களுள் நரசிங்கராஜு, வீரதீரத்திலும், கலை ஞானத்திலும், கவிஞர்களை ஆதரிக்கும் வள்ளன்மையிலும் ஆபத்துக்குதவும் பாதுகாவலிலும் சிறந்து விளங்கினான்.

சந்திரனும் சூரியனும் இணைந்தாற்போல மகிழ்வித்தும் ஆற்றல்மிக்கும் இரவும் பகலும் இடையறாது ஒளி பொருந்திய மன்னனாக நரசிங்கராஜு திகழ்ந்தான்.

கொடை ஈரத்திலும் பொருபடை வீரத்திலும் நாரபூபதி மகன் மாதராஜு சிறப்புடன் திகழ்ந்தான்.

இரவலர்களும் எதிரிகளும் இவ்வுலகத்தும் சுவர்க்கத்திலும் தம் மனைவியருடன் கலந்தின்புறுமாறு வள்ளன்மையிலும் வாள்வீச்சிலும் கனகராஜு சிறப்புற்றான்.

கற்பகம், காமதேனு, சிந்தாமணிகளை விஞ்சிய வள்ளன்மையும், குபேரன் மகன் நளகூபரன், மன்மதன்களை விஞ்சிய களிப்பிலும், துரோணபீஷ்மார்ஜுனரை விஞ்சிய போராற்றலிலும், ஆதிசேடன், ஆதிவராகம், எண் திசைக்களிறுகளை விஞ்சிய பூபாரம் தாங்குவதிலும் சிறந்து கனகராஜு புகழ்பெற்றான்.

அம்மூவரில் மூத்தவனாகிய நரசிம்மராஜு பெதகொண்டமாம்பா, சினகொண்டமாம்பா எனும் இருவரை மணம் புரிந்தான்.

ஆற்றலும் ஆட்சியும் போலவும், வைராக்கியமும் பக்தியும் போலவும், சாந்தியும் அடக்கமும் போலவும் இருகொண்ட மாம்பாக்களும் அம்மன்னனுக்கு அணி செய்தனர்.

அவர்களுள் பெதகொண்டமாம்பா மூலமாக மூர்த்திராஜு, திம்மராஜு எனும் இருமக்களையும் சினகொண்டமாம்பா மூலமாகக் கிருஷ்ணமராஜுவையும் அம்மன்னன் பெற்றான்.

ஆதிசேடனையும் இமயமலையையும் பாற்கடலையும் எள்ளி நகையாடும் புகழும், சூரியனையும், ஆலகால விடத்தையும், அக்னியையும் வென்றிட்ட ஆற்றலும்

கற்பகத்தையும், கர்ணனின் புகழையும் ஜீமூதவாஹனனை யும் வென்ற வள்ளன்மையும் மன்மதனையும் சந்திரனையும் நளகூபரனையும் நகையாடும் எழிலும் பெற்று நந்தியால நரசிங்கராஜுவின் மகன் மூர்த்திராஜு சிறப்புற்றான்.

இவனது தம்பி திம்மராஜு, காம்பீர்யத்திலும் தைரியத்திலும் வீரத்திலும் மக்கள் புகழும்படியாகச் சிறப்புற்றான். மன்மதன் போன்ற எழிலும், பிரஹஸ்பதி போன்ற பேரறிவும், தாவானலம் போன்ற ஆற்றலும் மாருதி, பீமர்களைப் போன்ற வலிமையும் உடைய நந்தி யால திம்மராஜுவை வர்ணிக்கவும் இயலுமோ?

நரசிம்மமன்னன் மகன் திம்மராஜுவின் [1]புகழ் மூவுலகும் பரவவே, பூவுலகப் பெண்களைப்போல வான் மகளிரும் நாககன்னியரும் பௌர்ணமி நிலவெனக் கருதி நிலவு விளையாட்டாடுவார்கள்.

திம்மராஜுவின் புகழ் எண்டிசையும் பரந்து, கொடை தந்த தானதாரையால் கடல் நிறைந்து, போகபோக்கியங் களில் திளைத்தான்.

இந்தத் திம்மராஜுவின் தம்பியாகிய சினகொண்டாம் பிகாவின் அன்பு மதலையாகிய கிருஷ்ணமராஜுவும் பக்தியும் வினயமும் மிக்கவனாகப் புகழ்பெற்றான்.

புண்ணியாத்மாவாகிய நரசிங்கராஜு குமாரன் கிருஷ்ணமராஜு[2]வினை வருணிக்கப்புகுவது எளிதோ? திசைகள் எங்கும் இவன் புகழ் எனும் நதி பரந்து பாய்ந்ததனால் முதன்முதலில் கவிஞர்கள் எனும் குளங் களில் காவிய அமுதம் நிறைந்தன. இடையறாது என்றும் போகபோக்கியங்களில் திளைத்த நாரராஜு மகன்

---

1 புகழ்—நிலவுக்கு உவமை.

2 இக்காவியத்தின் புரவலன், சமர்ப்பணம் பெற்ற மன்னன் இவனே.

நரசிங்கராஜுவின் குமாரனாகிய கிருஷ்ணமராஜு புலவர்கட்குப் பொன்மழை பொழிந்ததால் இனிய செய்யுளி லும் உரைநடையிலுமாகிய பலவிதக் காவியங்கள் ஆகிய ஆறுகள் பாய்ந்து மக்களை மகிழ்வித்தன.

நந்தியாலகிருஷ்ணமராஜனிடம் இரவலர் இரப்பர். எதிரிகள் இறப்பர். இரவலரிடம் மென்மையும் (ரகரம் மெல்லினம்) எதிரிகளிடம் வன்மையும் (றகரம் வல்லினம்) இயல்புதான்.[1]

போரில் கிருஷ்ணராஜு மிகுதிறனுடன் வீசியவாள் ஒளி மின்னல்கள், 'எதிரிகள் வாழ விரும்பினால் வாயிற் கொள்க இப்புல்லை''[2] என்று புல்லை விதைத்தாற்போன்று காண்பவர்கட்குத் தோன்றியது.

வலிமைமிக்க கிருஷ்ணமராஜமன்னன் வீசும் வாள் வீச்சுக்குப் பயந்தோடிய பகைமன்னர்கள் காட்டில் புளிஞர்தம் கன்னியரின் கடைக்கண் வீச்சுக்களை வாள் வீச்சென மருண்டு அஞ்சுவார்கள்.

ஸ்ரீவிஷ்ணுபக்தி சீலனும், வைதிகமத ரட்சகனும் வீரனும், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவற்றில் ஆசாரியனும் புகழை நாடுபவனும் சங்கீத சாஹித்தியங் களிலும் (இயலிசை) மற்றும் பலகலைகளிலும் புலமை பெற்றவனும் சிறந்த ரசிகனும் கொடையில் நிறைவளம் தருபவனும் நீதிநெறியறிந்து தீர்ப்புக் கூறுபவனும் கனவிலும் பொய்கூறாதவனும் தீரமும், ஈரமும், கம்பீரமும்

---

1 மூலத்தெலுங்குப் பாடலில் இரவலர்கட்கு தனம் (பொருள்) தருவான்; எதிரிகட்கு நிதனம் (இறப்பு) தருவான் என்றும் கூறப் பட்டதைத் தழுவித் தமிழ் மரபுக்கேற்ப மொழிமாற்றம் செய்யப் பட்டுள்ளது.

2 போரில் தோல்வியை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக வாயில்புல்லைக் கவ்வுவது பழங்கால மரபு.

உடையவனும் தகுதியறிந்து நடப்பவனும் சரணடைந்தவர்களைக் காப்பாற்றுபவனும் ஆகிய நந்தியாலகிருஷ்ண ராஜூவின் புகழை வருணிக்க இயலுமோ? இவ்வித குண நலன்கள் உடையவனும், வைதிகநெறிக் காவலனும் தற்காலத்து இராமனும் போரில் உருத்திரனும், திருமால் திருவடிகளை என்றும் சிந்தித்திருப்பவனும், வெற்றித் திருமகளை மணந்த வீரனும் ஆகிய நந்தியாலகிருஷ்ண ராஜனுக்கு இந்நூலைப் படைக்கிறேன்.

ஆத்திரேய கோத்திரத்தைச் சேர்ந்தவனும் விரோதிகளின் மதத்தை அறுக்கும் அரிவாள் போன்றவனும், கண் விருந்தளிக்கும் அழகுடையவனும், வெற்றித் திருவுலா வரும் விமலனும் கொண்டமாம்பா குமாரனும் புகழ்மிக்க திருமலதாதாச்சாரியரின் மரபினரான சுதர்சனாச்சாரியரின் குமாரன் ஸ்ரீனிவாச குருவின் திருவடிகளைப் பணிபவனும் இந்திரன் போன்ற வைபவமுடையவனும், வைஷ்ணவமத சீலனும் ஆகிய கிருஷ்ணமராஜு மாமன்னனுக்கு எல்லா நலன்களும் மரபு தழைக்கப்பெற்று, நீடித்த ஆயுளும் உடல் நலனும், செல்வச்செழிப்பும் உற்றுப் புகழுடன் திகழும்படியாக நான் இயற்றிய "களாபூரணோதயம்" எனும் மாபெரும் காவியத்தின் கதையைக் கூறுகின்றேன்.

களாபூரணோதயம்

முதல் அத்தியாயம்

திருவிற்குறைவிடமாய், கல்விக் களஞ்சியமாய், கண்ணனுக்கு விளையாடுமில்லமாய்த் திகழும் துவாரகையென்னும் நகரானது உலகிற் சிறந்து விளங்கிற்று. அந்நகரை மறிகடல் அலைக்கரங்களால் தழுவி அன்பு காட்டிற்று. சிறந்த செல்வத்தின் மிகையால் பெருமை பொருந்திய அந்நகரமானது. வானவருலகம் சிறந்ததா? தான் சிறந்ததா? என்ற விவாதத்தைத் தீர்த்துக் கொள்ள, பொன்மயமான மாட மாளிகைகளின் ஒளிக் கரங்களால் வானை எட்டி அங்குள மக்கள் தொகையின் சப்தத்தினால் இந்திரனுடைய அமராவதியை அழைக்கும் என்றால் அதன் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமா? முதலைகள் நிறைந்த கடல் போன்ற அகழி சூழ்ந்திருப்பக் கோட்டை கொத்தளங்கள் மலையொப்பக் கண்ணுக்கு விருந்தளிக்கும். நாற்பக்கமும் சுற்றூண்கள் போல மலைகளும், மேற்கூரை போல வானமும், சித்திர வேலைப் பாடுகள் போல மாளிகை மணிகளும் ஒளிவீச, அந்நகர் திருமகள் அமர்ந்திருக்கும் கொலுக் கூடம் போலப் பிரகாசித்தது. பூந்தோட்டங்களும், மாட மாளிகைகளும், தங்கச்சுவர்களும், பவளமும், மரகதமும் பதித்த திண்ணைகளும் உடையதாக அந்நகர் எழில்மிக இருந்தது. வண்டுகள் நீலமாகவும், புத்தம்புதிய இலைகள் மரகதமாகவும், தளிர்கள் பவளமாகவும், பலவிதமான மலர்கள் முத்துகளாகவும் மற்ற மணிகளைப்போல் பல்வேறு முகைகளும் உடைய வனங்கள் அங்குள சிறந்த

வீதிகளின் பிரதிபிம்பங்களாகத் தோன்றின. செந்தளிர்களும் முகைகளும் உடைய பூங்கொத்துகளும், பூந்தேனும், மகரந்தமும், பிஞ்சும், காயும், பழமும் எப்போதும் நிறைந்து அங்குள வனமானது எல்லா நலன்களுக்கும் உறைவிடமாய்த் திகழ்ந்தது.

அந்நகரத்து பிராமணர்கள் வேத வேதாங்கங்கள் ஓதியுணர்ந்தவர்கள். அங்குள்ள க்ஷத்திரியர்கள் போர்க்களங்களில் வெற்றி பெற்றவர்களாய், கொடையுள்ளம் உள்ளவர்களாய் வெற்றித் திருமகளின் நகக்குறி போன்ற வடுவமைந்த உடலுடையவர்களாய் மிளிர்ந்தார்கள். தங்கள் முன்னோர் சேமித்த செல்வமானது முன்னிருந்தபடியே இருப்ப,அளவற்ற செல்வத்தைத் தாமே சம்பாதித்து நவநிதிகளை வைத்துக்கொண்டு அங்குள்ள வணிகர்கள் குபேரனது நிதித் தலைமையை எள்ளி நகையாடுவார்கள். அந்தணர்களை வணங்கி, தமதில்லத்தில் எல்லாவிதச் செல்வமும் பொலிய இன்புடன் அங்குள மற்றோர் வாழ்வர்.

பிடிக்குளகப்படும் இடைகளும், களிற்றின் நடைகளும், வாழையொத்த தொடைகளும் உடையவராயும், நகை முகமும், முகைமுலையும், புகை சிகையும், மின்னொத்த கண்ணிணையும், இன்சொல்லுமுடையவராயும் திகழும் அந்நகர விலைமடந்தையர், காளையர் உள்ளமும் செல்வமும் கவர்ந்து கொள்வார்கள். தேவர்களின் விமானத்தைத் தடுக்கும் மாளிகையில் நிலா முற்றத்தில் விடர்களுடன் மன்மதக் கேளிக்கையிலீடுபட்டுள்ள வேசியரின் மிடற்றொலி கேட்டுப் பழகிய புறாக்களின் இன்னொலி மிகுந்த அந்த மேடைகள் புதியதோரழகூட்டும் தன்மை வாய்ந்ததாயிருந்தன. ஆயிரம் சொல்வானேன்? திருக்கண்ணபிரான் அங்கு பதினாறாயிரத்து நூற்றெட்டு மனைவியருடன் கூடிக் காதலின்பிற்களித்தான் என்றால் அதைவிட வேறென்ன வேண்டும்.

அவர் இவர் எனச்சுட்டிக்காட்ட இயலாமல் அங்குள்ள அனைவருமே அறநெறியில் ஒழுகுபவர்கள் தான். எல்லோருமே பக்தர்கள் தான். வேத விதியை மீறாத வர்கள் எல்லோரும் நல்லோர்கள் தான். எல்லோரும் தத்துவரான வித்தகச் செல்வர்கள் தான். எல்லோரும் கருணையுள்ளமுடைய புண்ணியவான்கள் தான். இது அது என்று செல்வானேன்? அந்தப் பட்டினத்திலுள்ள மக்கள் எல்லோருமே எக்குலத்தவராயினும் வணங்கத்தக்க வர்களே. அந்நகரைப் பற்றிக் கேள்விப்பட்டாலே எல்லாப் பாவங்களும் விலகியோடும்.

அத்தகைய பட்டினத்தில் ஒரு நடிகவேளின் அன்பு மகளான கலபாஷிணி என்ற பெயர் கொண்டவள் சிறு வயது முதற்கொண்டே நற்குண நற்செயல்களுடன் வளர்ந்து எழில் மிகுந்த இளமைப் பருவத்தையடைந்தாள். கலபாஷிணி (மழலை மொழியாள்) என்ற பெயர் முன்பு பொருந்திடினும் தற்போது தெளிவும் திறனுமுடைய அவளது சொற்களுக்கு அப்பெயர் பொருந்ாதன்றே. அத்தகைய இளம்பருவமடந்தை யான அவளின் புதுப்பொலிவையுடைய கடைக்கண் வீச்சுகள் இளைஞர்கள் உள்ளத்தை அலைக்கழித்தன. கூந்தல் முடிகூடு முன்பே, மென்முலைகள் குரும்பைக் குவமை கொள்ளுமுன்பே, நிதம்பங்கள் பருமையடையு முன்பே, மலரைங்கணைகளையுடைய மன்மதன் இளைஞர்கள் இதயத்தை அவள்பால் உருகச் செய்து துன்புறுத்தினான். தனது ஒளி பொருந்திய கன்னங்களைத் தீண்ட விடாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டும், முகை முலைகள் தொட்டதனால் கூச்சத்தைப் போக்க அடங்கியும், அச்சமும் நாணமும் பூண்டு இம், மான்வென்றகண்ணாள், என்று நம்மை இன்புறுத்துவாளோ என்று இளைஞர்கள் ஏக்கத்தால் உள்ளமழிவார்கள்.

இளவயதுடைய கட்டிளங்காளையரின் உள்ளத்தில் ஆசை வளர்ந்தாற் போன்றே அவளது இளமையும் ஒவ்வொரு கணமும் புதுப்புதுப் பொலிவுடன் திகழ்ந்தது.

முதலில் குணமுடையவள். அதோடு இளம்பருவப் புதுமையோடு கூடியவள். கணிகையர் குலத்தவள். அவளுடைய எழிலும், மிடுக்கும், பெண்மையும் புகழுந்தரமுடையதா ?

பளபளப்பான கண்ணாடி போன்ற கன்னங்கள், மதிவென்ற முகம், நிலவொத்த புன்னகை, வேல்வென்ற கடைக்கண் பார்வை. மன்மதனுக்குப் பயிற்றுவிக்கும் புருவ வில் கூட்டும் பொலிவு, குரும்பை முலைகள், மெல்லிடை, பல்லவமொத்த மெல்லடிகள், பொன் போன்ற மேனி, இவைகள் படைத்த அப்பெண்ணணங்கின் அழகை என்னென்பது ? அவளது ஒளி பொருந்திய கடைக்கண் வீச்சுகள் வாள் போல மின்னி இளைஞரின் இதயங்களிற் பாய்ந்து 'பூப் போன்ற பெண்கள் சிலசமயம் வாள் போன்றுமிருப்பார்கள்' என்ற சொல்லை மெய்ப்பித்தன. பண்ணொழுகுமின்னிசைப் பாடற் கலையிலும், நாட்டியக் கலையிலும் அபூர்வமான மன்மதனின் போர்களிலும் கைதேர்ந்த அவள் இளையோர் இதயமென்னும் பொருள்களைக் கவர்ந்துகொள்ளத் தொடங்கினாள்.

அவ்வனிதாமணி ஒரு நாள் மிதந்த செல்வச் செருக்குடன் தன் தோழியர் சூழ, இளவேனிற் காலத்தெழில் மிக்க பூங்காவை அடைந்தாள். அங்கே அவள் மல்லிகை, முல்லை, தெருச்செல்வோரின் இதயங்கவரும் மணமுடைய மருக்கொழுந்து, மனோரஞ்சிதம், தங்கம் போன்ற சம்பங்கி, மாதவி. தாழை முதலிய பூக்களைக் காட்டிக்கொண்டு சென்று "பூங்கொடியன்னாய் ! உராய்ந்துகொண்டு போகவே முந்தானையைப் பிடித்திழுக்கும் இந்த இளம்புன்னை மரத்தைக் கண்டாயா ? தனது பெயருக்கேற்ப (புன்னுகம்) ஆண்மையைக் காட்டிக்கொள்கிறது போலும். அந்த எலுமிச்சையும், அவளது முலைகளும் வாதாடுகின்ற அரவம் போல அங்குள கிளியும் அவளது காற்சிலம்பும் முழங்குகின்றதைக் கேட்டாயா ? முந்தானையின் ஓரத்தைக் கிளைகள் என்னும் கரங்களால் பற்றி அன்போடு வண்டுகளென்னும் பார்வைகள் வீசி

மாமரமானது உன்னை வேண்டுகிறதே! பூவோ, தழையோ கையுறையாகக் கொண்டாயா என்ன? ஏன் பயப் படுகிறாய்'' என்றிவ்வாறு ஒருவருக்கொருவர் சரச சல்லாபம் செய்துகொண்டு களித்தாடினார்கள்.

புத்தம் புதிய பூங்கொத்துகளால் கண்ணுக்கு விருந் தளிக்கும் அப்பூந்தோட்டத்தில் மேலும் உட்புகுந்து சிறிதவிழ்ந்த கூந்தலிலுள்ள பூக்களின் மணத்திற்குத் தனது உயிர்ப்பு மனமும் கலந்திருக்க, மெல்லிய நடைக்கு மேலும் பாரமாக முலைக்குடங்களமைய, கைவளைய லொலியும், காற்சிலம்பொலியும், ஒருங்குகூடி முழங்க, பேரரவத்துடன் சிரித்துக்கொண்டும், பொழுதுபோக ஏதாவதாடிக்கொண்டும், பூப்பறித்துக் கொண்டிருந்தனர். பின்னர் ஊசலாடத் தொடங்கினர்.

அப்போது வான்வழியில் கண்ணபிரானைச் சேவித்து விட்டுப் போக வேண்டுமென்ற விருப்புடன் வந்து கொண்டிருந்த நாரத முனிவனுடன் அவனது சீடனாய மணிகந்தரன் என்னும் கந்தருவன் இசைக்கலை நுட்பங் களை யுணர்தற் பொருட்டுக் கூடவே வந்துகொண்டு இருந்தான். மணிகந்தரன், பூங்காவிலுள்ள இவ்விள மடந்தையரின் செல்வச் செருக்கையும் பெருமையையும் கண்டு வியப்புடனே நாரதனைப் பார்த்து இவ்வாறு கூறினான்.

"பூங்கொடி யூசலில் ஊசலாடும் அந்த இளவயதுக் கன்னியரின் பாதங்கள் நேராக விண்ணை நோக்கிச் செல்லும் ஒய்யாரத்தைப் பார்த்ீர்களா! தேவ முனிவரே! வானக மகளிரின் மீது சண்டைக்கு வரக் காலிடுவது போலத் தோன்றுகிறதல்லவா?"

இதைக் கேட்ட நாரதன், "சபாஷ்! நல்ல கவிஞன் ஆவாய்! உண்மையை உணர்ந்தே கூறினாய். நீ சொன்ன அவ்விளங் கன்னியரின் எழிலை யான் எங்கும் கண்ட தில்லை. அவர்களது ஊஞ்சலாடுவதால் அசைந்து உயர்ந்த அந்தப் பாதங்கள் வானுலக மடந்தையரின் தலையை மிதிப்பச் செல்வது போலிருக்கிறது என்று சொன்னால் அதில் தப்பென்ன? சரிதானே" என்று கூறினான்.

அப்போது அருகில் ரம்பையும் அவளது காதற் கொழுநன் நளகூபரனும் மேகங்களின் மறைவில் தேவ விமானத்திற் சென்று கொண்டிருந்ததால் இச்சொற்கள் அரம்பையின் காதில் தெளிவாக விழுந்தன. கேட்டதும் அவள் சினந்து மனம் ஒருவாறு மாறவே அப்படிச் சொன்னது நாரதன் என்பதறிந்து, தன் மன வேறுபாடு தெரியவிடாமல் அடக்கிக்கொண்டு, தன் கணவனது முகத்தைப் பார்த்துக் "கேட்டீர்களா! இந்தச் சொற்களின் ஒப்பைப் பார்த்தால் கலக முனிவனான நாரதனாகத் தோன்றுகிறது. நாம் அவனைக் கண்டு சிறிது பேசிவிட்டுப் போகலாம்" என்றாள்.

நாரதனும். அவர்களது பேச்சுக் கேட்கும் திசையை நோக்கி "யாரோ பேசிக்கொண்டு வருவதாகத் தோன்று கிறது" என்று உற்றுக் கவனிக்கும்போது அவர்களது விமானமும் முகில் மறைவிலிருந்து நீங்கி மலை மறைவில் இருந்து உதிக்கின்ற இளஞாயிறு போலத் தோன்றியது. ரம்பையும். நளகூபரனும் அப்போது நாரத முனிவனுடைய காலடியில் தங்கள் விமானத்தைச் செலுத்தினார்கள். தங்களது தலையிற் சூடிய பாரிசாத மலரின் மணம் நாரத முனிவனுடைய பாதங்கட்கும் மணமூட்டுமாறு அவனது பாதங்களை வணங்கினார்கள். அந்த தேவமுனிவனும் "நீங்கள் இருவரும் இடைவிடாத காதலுடன் இன்புற்றுத் திகழ்வீர்களாக" என்று ஆசிர்வதித்தான்.

அப்போது ரம்பை நாரதனைப் பார்த்துப் புன்னகையுடன் "முனிசிரேஷ்டரே! தங்களது ஆசிர்வாதத்தால் என்னிடம் காதல் சிறிது கெடாமல் இருக்குமோ என்னவோ. ஆனாலும் இனிமேல் மண்ணக மடந்தையரின் கண் வீச்சுக்கு இலக்காகி இவர் மயங்காமலிருப்பாரா?" என்று தன் மனத்திலுள்ள பொறாமையை அடக்கிக் கொள்ள இயலாமல், பேச்சுவாக்கில் கூறினாள்.

அம்மொழி கேட்ட முனிவன் ஐயுற்று "இதென்ன சொல்கிறாய்! விவரமாகக் கூறு" என்று கேட்கவும், "தேவரீரின் தற்போதைய பயணத்திற்குத் தடையாகாமல் இருந்தால் தயை செய்து எமது விமானத்திற்கு வர அருளுங்கள். எல்லாம் விவரமாகச் சொல்லிச் செல்கிறேன். பெரியோர்களைச் சிறிது நேரமாயினும் பணிவிடை செய்து வருவது பாக்கியமல்லவா" என்று ரம்பை கூறிச் சீடனையும் அவனையும் ஏற்றிக்கொண்டு இரண்டு சாமரைகளைக் கொண்டு தானும் தன் கணவனுமாக இரு பக்கங்களிலும் இருந்துகொண்டு மெல்ல மெல்ல வீசிக் கொண்டே "முனிவரரே! இப்போது நீங்கள் ஊஞ்சலாடும் மடந்தையரைப் பற்றிப் பேசும்போது சிஷ்யனிடம் என்னவென்று கூறினீர்கள்! சொல்லியருளவேண்டும்" என்று கேட்டாள். அதற்கு நாரதன் புன்னகையோடு, "சபாஷ்! உண்மையை உணர்ந்தே கூறினாய். நீ சொன்ன அவ்விளங்கன்னியரைப்போல் எழிலுடையோரை யான் எங்கும் காணவில்லை. அவர்களது ஊஞ்சலாடுவதால் அசைந்து உயர்த்தப்பட்ட பாதங்கள் வானுலக மடந்தையரின் தலையை மிதிப்பச் செல்வதுபோல் உள்ளது என்று சொன்னால் தப்பென்ன சரிதானே! என்று சொன்னேன். இதில் ஏதாவது குறையிருந்தால் சொல்! மனச்சுமையை இனி மறைக்க வேண்டியதில்லை" என்று கூறினான்.

இப்படி நாரதன் கூறக்கேட்ட அப்பெண்கொடியாள் அவனைப் பார்த்து, "தாங்கள் பெரியவர்கள், மூவுலகும் வணங்கும் முனிவரர். நீங்கள் எது வேண்டுமானாலும்

சொல்லலாம். யார் தடுக்கப் போகிறார்கள். எதைக்கண்டு இப்படிச் சொன்னீர்கள் என்று கேட்டேன். கற்பனை செய்வார்களல்லவா! உயர்வு நவிற்சியாக வர்ணித்தல் உண்டல்லவா? அந்த விதமாக இப்படிச் சொல்லியிருப்பீர்கள் போலும். அவ்வளவேயன்றி எந்தப் பெண்ணும் எங்கட்கிணையாக முடியாதென்பதற்கு நிச்சயமாக இங்கு உள்ள இந்தக் கண்கவர் வனப்புடைய குபேரனுடைய மகனே சாட்சியாவான்” என்றாள். அதற்கு நாரதன் நகைத்துக்கொண்டே "மான் வென்ற கண்ணாய்! உன் காதற் கொழுநன் ஆராக்காதலுடன் அருகிருப்ப நீ என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். எனினும் எப்போதும் இப்படியே இருக்க முடியுமா? பின்னர் எந்த வகையில் உனக்குச் சக்களத்தி வருவாளோ யோசித்தாயா? உன்னைப்போன்ற பெண் உனக்கும், இவனைப் போன்ற ஆண் இவனுக்கும் எங்கேனும் தோன்றி வருத்துவார்களோ என்னவோ! இப்படிப் பெருமகிழ்ச்சியால் செருக்கடைவது தகாது" என்று கூறினான்.

அதற்கு ரம்பை "ஏதோ விளையாட்டுக்குச் சொன்னேன். தங்கள் சொல் பலித்துவிடுமோ என்னவோ? இப்படிப்பட்ட சொற்களைக் கேட்க என்னால் இயலாது. விட்டுவிடுங்கள். என்பால் அருள் கூறுங்கள்" என்று சொல்லி வணங்கினாள். அப்போது அம்முனீந்திரனின் கட்டளைப்படியே அவ்விமானம் கலபாஷிணி விளையாடிக் கொண்டிருந்த பூங்காவில் இறங்கியது. பின் ரம்பையும் நளகூபரனும் விநயத்தோடு முனிவனை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, எதிரே தோன்றிய கண்ணன் அரண்மனை உப்பரிகையைத்தொழுது, தங்கள் விமானத்தில் தங்கள் வழியே சென்றார்கள். கலபாஷிணியும் அதற்கு முன்பே சிறிது தூரத்தில் கேட்கும் அவர்களது சம்பாஷணையைக் கேட்டும், பின்னர் திசைகளெல்லாம் ஒளிர மின்னி வரும் விமானத்தைக் கண்டு வியப்புற்றும் அப்போது விடைபெற்றுச் செல்லும் நலகூபரனின் உருவ

அழகைக்கண்டு மிகவும் பாராட்டி அப்பார்வையில் திருப்தி அடையாமல் கொஞ்ச தூரம் அவ்விமானத்தின் கீழே புதர்களின் மறைவிலேயே அவர்களது சல்லாபங்களைக் கேட்டுக் கொண்டு சென்று அதற்குள் அது மிகவும் தூரமாகப் போகவும் திரும்பி வந்து மனத்தில் 'இத்தகைய அழகுடையவனைத் தன்வசம் செய்துகொண்டு தடையிலாச் செருக்குடன் விளங்கும் பாக்கியவதியாகிய அப்பெண் யாரோ? அப்படி வாழ வேண்டாமோ? தன் கணவன் குபேரன் மகன் என்று கூறியது கேட்டேன். ஆதலால் அவள் ரம்பையாகத்தான் இருக்கவேண்டும். இப்போதிதை நிச்சயமாகத் தெரியவேண்டுமானால் நாரத முனிவனைக் கேட்கவேண்டும். தெய்வ முனிவராகையால் தவறாமல் சொல்வான். மேலும் அடிக்கடி இங்கே கண்ணபிரானைக் காண வருவான்' என்று சிந்தித்தவாறு அம்மங்கை தான் ஒருத்தி மட்டும் தனித்து வந்து அருகேயே பேரொளி படைத்த நாரத முனிவனைக் கண்டுகொண்டு வினயமுடன் வணங்கினாள்.

வணங்கி எழுந்து கைகூப்பி, "முனிவரரே. இப்போது விமானத்தில் சென்றவர்கள் ரம்பையும் நளகூபரனும் தாமோ?" என்று கேட்ப, 'ஆம்! நீ எப்படித் தெரிந்து கொண்டாய்' என்று நாரதன் வினவினான். அதற்குத் 'தாங்கள் பேசிக்கொண்ட பேச்சுகளிலிருந்து எனக்குத் தோன்றியது' என்று கூறினாள். நாரதன் 'வான் வழியில் பேசிய பேச்சுகளைக் கேட்டாயோ' என்று கேட்டார். 'ஆம், கேட்டேன். மிகுந்த அழகுடைய தான் தனது கணவனைத் தன் கைவசம் வைத்துக்கொண்ட பெருமையால் தன் செல்வாக்கைக் காட்டிப் பேசினாள். அவளது சொற்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை என உங்கள் பேச்சில் இருந்து புலப்பட்டது' என்று கலபாஷிணி கூறினாள்.

அதற்கு நாரதன் "பெண்ணே! தகாத கருவத்தினால் கண் தெரியாமல் தகுதியற்ற சொற்களைச் சொன்னால் யாரானாலும் எப்படிப் பொறுத்து கொள்ள முடியும்.

யாராயினும் தன்னைப் பற்றித் தானே பெருமை பேசிக் கொள்வது தகுந்ததாகுமா? அவனுக்குச் சக்களத்திச் சண்டை விரைவில் வரத்தான் போகிறது. சக்களத்தி என வேறொருத்தியைத் தேடுவானேன்? நீயே போதாதா? விதி மட்டும் கொஞ்சம் உதவினால் முடியும்" என்றாள். அப்போது கலாபாஷிணி "அப்படிப்பட்ட உருவும், திருவும் உடையவர்கட்கன்றி எங்களைப் போன்றவர்கட்கு அந்த விதியின் உதவி கிடைக்குமா? நாங்கள் எத்துணை முயன்றாலும் அந்த பாக்கியம் கிட்டுமோ?" என்றாள்.

அது கேட்ட நாரதன், "அதற்கென்ன? ரம்பை முதலிய எந்த அப்சரப் பெண்ணுக்கும் குறைந்தவளா நீ? உன் அழகு அவர்களைவிட அதிகந்தான். அதிருக்கட்டும், உன்னைப் பார்த்த ஞாபகமிருக்கிறது. நீ கண்ண பெருமானின் கொலுக் கூடத்திற்கு வருவாயா?" என்று கேட்டான். அதற்கு "வருவேன். உங்களையும் பார்ப்பேன்" என்று அம்மடந்தை கூறினாள். முனிவனும் 'ஆம் ஆம்; உன்னையறிவேன். நினைவிற்கு வந்தது. என் சிஷ்யனான மணிகந்தரன் சில நாட்களுக்கு முன்பு புதிதாகக் கண்ணபெருமானைக் காண வந்து சண்டகமாகப் புகழ்ப்பாமாலை சூட்ட ஒரே தடவை கேட்டே அதை மனப்பாடமாகத் திருப்பிச் சொன்ன திறமைசாலி நீயல்லவா? என் பெயர் கலபாஷிணியல்லவா? எனக்கந்தப் பாட்டு மனப்பாடமாக இருக்கிறதா? படிக்க இயலுமா?" என்று கேட்க, அதற்கு அவள் "இயலாமல் என்ன?" எனக் கூறி இனிய கம்பீரமான குரலில் இவ்வாறு படிக்கத் தொடங்கினாள். "திருமகள் வெட்கும் உருவுடையாய்! கருணைக்கடலே; உலகு புகழ் நலம் தரும் உன்னதனே? பிறவிக்கடல் கடக்கும் புணையே; எல்லாம் ஆன இறைவா; உன்னைச் சரஸ்வதியும், ஈசனும் கூட உனது தெய்வீகச் சரிதத்தைக் கூறி முடியாதென்றறிந்தும் எங்கள் உலக இயல்பின்படி உன்முன்னர் புகழ்தற்கு மன்னிக்கவும். வாசுதேவ! சதானந்த! கோவிந்த! உன்னைக் காண வேதமுணர்ந்து தவம் செய்வார்க்கும் இயலாத போது

உன்னைக் கண்ணாற் கண்ட எங்கள் பாக்கியம் என்னென்பது? பிரம்மாண்டங்களெல்லாம் உன் மயிர்க் காலில் தரித்துக் கொள்வாய் என்பதை எண்ணும்போது கோவர்த்தன கிரியை விரலில் தாங்கினாய் என்றும், உலகைச் சுமந்தாய் என்றும், ஈரடியால் உலகளந்தாய் என்றும் புகழ்வது தகுந்ததாமோ? எல்லா வேதங்களும் எல்லா வாதங்களும் எல்லா யோகங்களும் எல்லா யாகங்களும் காணின் உன்னடியார்க்கடியாரின் அடிகட்குப் பணிவிடை செய்யும் சேவைக்குக் கோடியிலொரு பங்குகூட இணையாகாது என்பர். நாங்கள் உன் பெயரை மட்டும் நாவில் உச்சரிப்பதன்றி வேறொன்றறியோம். எங்களைக் கடைக்கணித்தருள்வாயாக வணக்கம்! வணக்கம்! வணக்கம்."

இவ்விதமாகப் படித்துக் "கண்ணபிரான் இந்தத் தண்டகத்திற்கு உளமகிழ்ந்து கொடுத்ததல்லவா சிஷ்யனது கழுத்தில் ஒளியுடன் திகழும் அந்த மணிமாலை" என்று கூறி மேலும் அப்பூங்கொடியாள், முத்துகளைக் கோத்தாற் போல நல்ல சொற்களைச் சேர்த்துப் பொருள், தொனி முதலிய வேறுபாடுகள் உணர்ந்து, குற்றமற்றதாகச் செய்து, ரசங்களுக்கேற்ற நடையில் அமைத்து, பத்தழகும் ஒத்தடைய, உவமை முதலிய பொருளணியும், யமகம் முதலிய சொல்லணிகளும் இணைத்து, அழகாகக் கவிதை சொல்ல வல்ல கவிஞனுக்கு விரும்பிய பொருள் கொடுக்காதவர்களும் உண்டோ? குளிர்ந்த வெண்ணிலவுக்கு நறுமணம் வாய்த்தாலும், நறுமணமும் தண்மையும் உடைய கற்பூரத்திற்கு மென்மையும் கூடினாலும், நறுமணமும் தண்மையும், மென்மையும் கூடி மக்கட்கின்பளிக்கும் இளந்தென்றற் காற்றுக்கு இன் சுவையும் ஏற்பட்டாலும் நிலவு புகழ்க் கவிஞனுடைய சொல்லின்பத்திற்கிணையென்று ஒருவேளை சொல்லலாம். ஆதலால் சும்மா உங்கள் போன்றோரருகில் இருக்கும் பாக்கியம் பெற்றாலே எல்லா விருப்பங்களும் நிறைவேறும். தங்களது வீணையைச் சுமந்துகொண்டு பணிவிடை

புரியவேண்டுமென்று என்றும் விரும்புகிறேன். மேலும் முனிவரரே! இதற்கு முன் கண்ணபிரானுடைய அந்தப் புரத்திற்குப் போகும்போது தங்கள் சீடன் மணிகந்தரனை வாயிலில் நிறுத்தித் தங்கள் வீணையைத் தாங்களே சுமந்துகொண்டு போவதைப் பார்த்து, "அதை நான் வாங்கிக்கொண்டு பணிவிடை புரிவோமோ?" என்று அஞ்சிச் சும்மா இருப்பேன். என்பால் கருணைகொண்டு இந்த அளவாவது ஊழியம் செய்ய உதவுங்கள்" என்று கைகூப்பி மிகுந்த வினயத்துடன் அம்மடந்தை கேட்டுக் கொண்டாள். அவரும் 'சரி அப்படியே செய்' என அனுமதித்தார். அனுமதித்ததும் "இம்மகாத்மாவின் அருள் இந்த அளவு கிடைத்தது. இதைக்கொண்டு என் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வேனாகவும்" என்று மகிழ்ந்து, ரம்பா நளகூபரர்கள் மூலமாகக் கடைசியில் கேட்கப்பட்ட ஒரு சொல்லை நினைவுகூர்ந்து, அதை அறிந்துகொள்ள, கைகூப்பியவாறு வினயத்துடன், அப் போது மணிகந்தரனும் அப்பாற் சென்றிருந்தமையால் அம்முனிவரனிடம் இப்படிக் கூறினாள்.

"மகாத்மாவே! நீங்கள் இவ்விடத்தில் இருக்க கவுரவ பாவத்தால் போலும் மிக்க உயரத்திற் போகாமல் பூமிக்கு அருகிலேயே சிறிது தாழச் சென்ற அந்தத் தம்பதிகளைச் சபலத்தால் சிறிது தூரம் அவர்களறியாமற் பின்தொடர்ந்த நான் ஒரு செய்தி கேட்டேன். நளகூபரன், ரம்பையை நோக்கி 'மடந்தாய்! இந்நாரதனைப் பற்றிய பேச்சிடையே வந்துவிட்டது. அந்தக் களாபூரணன் செய்தி என்ன வாயிற்று என முடிவு கூறவில்லையே! சொல்லு' என்று கேட்கவும், ரம்பை 'இப்போது சொல்லவில்லையா? உனக்குச் சொல்லக்கூடாத நிலையிலிருக்கிறேன் என்றே னல்லவா! இந்தக் கதைகூட என் மேலாணையாக எங்கும் எப்போதும் வெளிப்படுத்தக்கூடாது' என்றாள். அந்தக் கதையை நான் அறிய மிக்க வேட்கையுடன் இருக்கிறேன். தபோதனரே! அந்தக் களாபூரணன் என்பது யார்? அவனது செய்தி யாது? எதைச் சொல்லக்கூடாதென ரம்பை

சொன்னாள்? அது முழுதும் அடியேனுக்கு அறிவித்து அருள்பாலிக்க வேண்டும்'' என்றுகூற நாரதன் வியப்பு அடைந்து "இது எல்லாம் மிக்க விந்தையானது. இதைத் தெரிந்து கொள்கிறேன்'' என்று சிறிது நேரம் நிச்சலனாக நின்று, உலக மூன்றினும் உள்ள முக்காலத்துமுள்ள செய்திகளை ஆராய்ந்து, அதன் இயல்பை உணர்ந்து கலபாஷிணியைப் பார்த்து, "அந்த ரம்பை தன் காதலனுக்குச் சொல்லத்தகாதென்ற கதை மிக்க அபூர்வமானது. எனக்கும் சொல்லத்தகுந்ததன்று'' என்றுகூறத் "தூய மாமுனியே! சொல்லக்கூடாத கதாம்சமிருந்தால் அதை விடுத்து நளகூபரனுக்கு ரம்பை எதனால் அக்கதையைச் சொன்னாள் என்பதாவது கூறுங்கள்'' என்று கோர, முனிவனும் கூறத் தொடங்கினான்.

"அந்த ரம்பையும் நளகூபரனும் எப்போதும் காதல் இன்பத்திற் களித்தவர்களாக ஒருவரோடொருவர் சிரித்து விளையாடிக் கொண்டும், எதற்கெடுத்தாலும் காதன் மிகுதியைப் புலப்படுத்தி ஒருவரைக் கண்டொருவர் சொக்கிப் போவார்கள். இது ஒருவிதமான காதல் துறை. ஆதலால் இன்று யாம் அவர்களைக் காண்பதற்கு முன், ரம்பை, சூரியனருகே தூய வெண்முகில்கோடு படிதல் கண்டு சிரித்தவாறே பிரம்ம தேவனுடன் கூடிய கலைமகளுக்கு உவமித்துக் கூற, அது கேட்ட குபேர புத்திரன், காதன் மிகுதியினால் அவளது இதழில் முத்த மிட்டான். முத்தமிடவும், எங்குமில்லாத புதுவிதமாக, இன்குரல் மெல்லொலியொன்று அவளது கண்டத்திலுதய மாயிற்று. எங்கும் என்றும் காணாத இன்பத்தைத் தரும் அக்குரலினிமையானது மிகுந்த குதூகலத்தையும் வியப்பையும் விளைவிக்கவே, "எங்கே! எங்கே! இது மிகவும் புதுமையாயுள்ளது. இன்னுமொரு தடவை அவ்வொலி எழுப்பு'' என நளகூபரன் வேண்டினான். "என்னால் இனி இயலாது'' என்று ரம்பைகூற "இயலாவிட்டால் உன்னை

விடமாட்டேன்'' என்று நளகூபரன் கூறி, சரசசல்லாபத் தோடிருந்து மகிழ்ந்தனர். பின் அவள் தன் காதலனின் மகிழ்வுக்காக அவனது கோரிக்கையை நிறைவேற்றினாள்.

அப்போதவன் 'இதற்குமுன் இதை என்றும் கேட்டதில்லை. இப்போதெப்படி உண்டாயிற்று சொல்' என்று குடைந்து குடைந்து கேட்கவே, 'இது இன்று தெரிந்ததல்ல. முன்பே அறிந்ததுதான். ஒரு காரணத்தால் இது தெரிவிக்காமல் மறைத்திருந்தும் இன்று உன் துடுக்குத்தனத்தால் வெளிப்படுத்திவிட்டேன்' என்று சொல்ல, அதற்கு அவன் 'என்ன காரணத்தால் இத்தனை நாள் மறைத்தாய்? சொல்' என்று கேட்ப, 'அதைச்சொல்ல நேர்ந்தால் களாபூரணன் கதை சொல்ல வேண்டிவருமோ' எனும் எண்ணத்தால் மறைத்து வைத்தேன்' என்று ரம்பை கூறினாள். மேலும் 'ஓ! ஆண் சிங்கமே, அக்கதை சொன்னால் என்ன என்று கேட்கலாம், அக்கதையைச் சொன்னவரும், கேட்டவரும் பூலோகத்தில் மக்கட் பேற்றுடன் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ்வர்' என்ற நியதியொன்று ஆதியில் உள்ளது. ஆதலின் உனக்கதைச் சொன்னால், அதற்காக மண்ணுலகில் பிறக்கவேண்டி வரும். அது உன் மெய்யோடிணைந்த எனக்கு விருப்பமாமோ? அதை நீ கேட்டாயல்லவா? என்று கூறலாம். ஆனால் நான் கேட்ட பின்னர்தான் அந்த நியதியை ஒரு பெரியோன் கூறியதால் அதை நான் இனிச் சொல்லக் கூடாது. இனிக் கேட்கவும் கூடாது' என்று கூறினாள். இவ்வாறு நடந்த கதையைக் கூறிய நாரதன் 'பெண்ணே! ரம்பைக்கு உள்ள பயம் எனக்கும் உண்டு. ஆதலின் நானும் உனக்குச் சொல்லக்கூடாது. சொன்னால் நானும் பிறக்க வேண்டி நேரும். ஆனாலும்கூட இக்கதை பூவுலகில் பரவும். பரவும் வழிகளும் உண்டாகும். அதுசரி, ரம்பா நளகூபரர்கள் அவ்விதம் சல்லாபம் செய்துகொண்டு வந்தபின் அந்த விமானம் எம் அருகில் வரவும் உங்களுடைய ஊஞ்சலைப் பற்றிய பேச்சு வந்தது' என்று கலபாஷிணிக்குச் சொல்லி, அப்போது அவ்வழகிய பூங்காவின் எழில்காண அப்பாற்

சென்ற மணிசுந்தரனை அழைத்துக் 'கண்ணபிரானின் கொலுவுக்குக் காலா காலத்தில் போய்ச் சேரவேண்டும் வா' என்று கூறி அழைத்துக்கொண்டு போனார்.

கலபாஷிணியும் தன்னையடைந்த பாங்கியருடன் தனது இல்லத்துக்கேகி. விரைவாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு கண்ணபிரான் அரண்மனைக்குச் சென்றாள்.

குறிப்பு: இங்குக் களாபூரணன் யார்? அவன் கதை என்ன? என்ற ஆர்வம் தூண்டப்பெறுகிறது. கதை தேவலோகத்தில் நடந்தது. அதைத் தேவர்கள் சொல்லமாட்டார்கள். சொன்னால் மண்ணுலகில் நீடூழி இன்பமுடன் மக்கட்பேற்றுடன் வாழ வேண்டும். அதற்கஞ்சித்தான், ரம்பை, நாரதர்கள் கதை கூற மறுத்தார்கள். மனிதர்கள்தான் இக்கதை கேட்டாலும் சொன்னாலும் நன்மையுண்டு! தேவர்கள் சொல்லாமல் தேவலோக ரகசியம் மனிதர்கட்கு எட்டுவது எப்படி நாரதன் கூற்றுப்படி? இந்தக்கதை பூவுலகில் பரவும் என்று தெரிகிறது! இந்தக் காரியத்தைக் கவிஞன் எப்படிச் சாதுரியமாக முடிக்கிறான் என்பதைப் பின்னர்க் காண்போம். (நான் முன்கூட்டிச் சொன்னால் கதையின் சுவாரசியம் கெட்டுவிடுமல்லவா?) 'நூற்பயன்' எனும் பல சுருதியைக் கவிஞன் எப்படித் தன் கதையில் உயிர்நாடியாக அமைத்துள்ளான் என்று வியப்புற்று, சாதுரியத்தைக் கண்டு பாராட்டுகின்றோம். இது போலப் பல அரிய சாதுரியங்களைக் கவிஞன் படைத்துள்ளான்,

இரண்டாம் அத்தியாயம்

இவ்விதமாகக் கலபாஷிணியுடன் சம்பாஷித்துவிட்டுச் சென்ற நாரதன் தன் மனத்துள் "என் மனச்சுமை கொஞ்சம் குறைந்தது. செல்வச் செருக்குடைய ரம்பைக்குச் சக்களத்திச் சண்டை மூட்டக் காலூன்றியாகிவிட்டது. எல்லாம் முடிந்தாற்போல்தான். இந்தப் பெண்ணே போதும். இவளுக்கும் பொறாமை இருப்பதாக அவள் பேச்சிலிருந்து புலப்படுகிறது. என் பிரயாணத்துக்குச் சிறிது சுற்றானாலும் கூடத் தகுந்ததுதான். யாரையாவது சண்டைக்கிழுக்காவிட்டால் எனக்குப் பொழுதே போகாதே" என்று சிந்தித்தவாறு சிஷ்யனும் தானுமாகப் பட்டண வாயில் வழியில் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது அவனைக் கண்ட மக்கள், 'தொலைவிலேயே இறங்கி இன்று நடந்து வருகிறான். என்ன காரணமோ?' என்றும், 'சண்டை மூட்ட வழிகிடைக்குமா என்று தேடிக்கொண்டு வருகிறானோ' என்றும், 'பிறவி நீக்கும் அடித்துகளினாலே நம்மைக்காக்க வருகிறானோ' என்றும், 'இந்த நிலம் என்ன புண்ணியம் செய்ததோ? பயன் தராமல் போகுமா?' என்றும், கூறிக்கொண்டார்கள். தன்னையறிந்தவர்கள் வெகு தொலைவிலேயே எழுந்து இரு கரம் கூப்பி வணங்க, அருகிற் கண்டவர்கள் நிலத்தில் வீழ்ந்து பணியவுமாக இருந்தார்கள். பல்லக்கு, குதிரை, யானை முதலிய வாகனங்களிலிருந்து விரைந்து பரபரப்புடன் இறங்கி வந்து வணங்கிச் சிலர் பின்தொடர்ந்து வந்தனர். நாரதன் சிலரைக் கடைக்கண்ணாலும், சிலரை

நிறைந்த பார்வையாலும், சிலரைப் புன்னகையாலும், சிலரை வாழ்த்துரையாலும், சிலரைத் தோளோடு சேர்த்தும், சிலரைக் கைகொடுத்து எழுந்திருக்கச் செய்தும், இப்படியாக அவர்களை ஆதரித்தான். இவ்விதமாக எல்லா மக்களையும் ஆசீர்வதித்தவாறு சிஷ்யனும் தானுமாகத் துவாரகாபட்டணத்தையடைந்தார்கள்.

அலைகள் ஒன்றோடொன்று மோதித் தாளம் போடுகின்றதும், அன்னம், சக்கரவாகம் முதலிய பறவைகளின் கோலாகலமான ஒலியை உடையதும், மென் நுரைகளால் வெண்ணகையை விளைவிப்பதும் அருகிலுள்ள கடலைக் கேலி செய்வதுமாயுள்ள பெரும் அகழி அப்பட்டணத்தைச் சுற்றியிருந்தது, அகழியின் அலைகள் தூவும் மென்துகள்களாய துளிகள் படும் வைரத்தாலான பிராகாரங்களையுடையதும், மாணிக்கம் மரகதங்களால் அமைக்கப்பட்ட மாபெரும் மாளிகைகளையுடையதும் இருமருங்கும் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சுவர்களையுடைய மாபெரும் மாளிகைகள் நிறைந்த ராஜபாட்டையையுடையதும், அழகிய பூங்காக்களும் அணிமிகு இல்லங்களும் உடையதுமாய அந்தத் துவாரகை மிகுந்த செல்வச் செழிப்புடனும் சீரும் சிறப்புடனும் திகழ்ந்தது.

அந்நகரிற் புகுந்த நாரதனும், சீடனும் அழகிய கோமேதக, மாணிக்கங்களினாலும், தளிர்களின் எழிலைக் காட்டுவதும், மரகத மணிகளினால் இலைகளின் அழகைக் காட்டுவதும், தூய முத்துகளினால் மலர்களின் வனப்பைக் காட்டுவதும், நீல மணிகளால் வண்டுகளின் சோபையைக் காட்டுவதும், தனது கனக கும்பங்களினால் பழங்களைக் காட்டுவதுமாக வானக் கற்பக மரத்தைப் பழித்த அழகிய கண்ணனின் அத்தாணி மண்டபத்தைக் கண்டார்கள். கண்டு நாரதன் மணிகந்தரனிடம் "எத்தனையோ காலமாகப் பார்த்தாலும்கூட இது தினமும் ஒரு புத்தழகுடன் பிரகாசித்தலைக் கண்டாயா? அந்த வைகுண்டத்தைப்

பார்த்தாற்போல மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் இந்தச் சபா மண்டபத்தின் பொலிவானது என் உள்ளத்தில் இன்பப் பெருக்கையூட்டுகிறது. இவ்வுலகத்திலுள்ள மேன்மை இது ஒன்றுதான் என்று சொல்லலாம்" என்று பேசிக்கொண்டு அருகே செல்ல இவர்களது வருகையைக் கண்ட வெளியே யுள்ள ஏவலர்கள் கண்ணபிரானுக்கு உடனே தெரிவித்தார்கள்.

தங்கச் சங்கிலியும், பவளக் கால்களுடையதும் நவரத்தினத்தாற் செய்த கிளி, அன்னம் முதலிய சிற்பப் பிரதிமைகளை உடையதும், பொற் பூ வேலைகளின் எழில் உடையதும், பட்டு நூற் பின்னல் வேலைகள் உடையதும் பட்டுத் தலையணைகள் உள்ளதும், குங்குமப்பூ பரப்பியது மாகிய ஒளிவீசுகின்ற தந்தத்தாலான ஊஞ்சற் கட்டிலில் அந்தப்புர மனைவியர் ஊழியம் செய்ய இன்புடன் இருந்த கண்ணன் இச்செய்தி கேள்விப்பட்ட உடனே திக்கென எழுந்து "என்ன? என்ன? அம் மாமுனிவன் வந்துள்ளானா? எப்போதும் வான்வழி நின்று நேராக வருபவன் இன்று இப்படி வருவது மிகுந்த வியப்பாக இருக்கின்றது என்ன காரணமோ?" என்று சிந்தித்தவாறு நாரதனை எதிர் கொண்டழைக்க விரைந்து வந்தான்.

ஊஞ்சலிலாடும்போது சிறிது சிதைந்த கூந்தல் முடி அப்படியே இருப்ப, மெல்லடை தரும் மடந்தை தந்த வெற்றிலைச் சுருள் கையிலேயே இருப்ப, மணிபதித்த பாதுகைகள் நழுவ, சாமரை வீசும் கன்னியர் கூடவே வந்து தாமாகவே பின்தங்க, தனக்குக் கைலாகு கொடுத்த கன்னியரின் கரங்களை விடமறந்து தொடர்ந்து பற்ற, கண்டோர் எல்லாம் ஒதுங்கிச்செல்லக் கண்ணன் நாரதனை எதிர்நோக்கிச் சென்றான். சென்று வணங்கி மன மகிழ்ச்சி யுடன் கை கொடுத்தழைத்துக் கொண்டு அந்தப்புரத்தருகில் உள்ள மணிமயமான சபாமண்டபத்தை அடைந்தான், மாமுனிவனுக்கு அஞ்சலிகள் செய்து உபசரித்துப் புதிதாக வந்தவரைப் போல ஆதரவுடன் கௌரவித்தான். அற

நெறிச் செல்லும் அறிஞர்கள் வணங்கத் தகுந்தவர்கள். எத்தனைமுறை வந்தாலும் கூடப் புதிதாக வந்தவாறே மிகுந்த மரியாதை செய்வார்கள், அது போன்றே கண்ணனும் உபசரித்து மகிழ்ந்தான்.

அப்போது அச்சபாமண்டபத்திற்கு வரத் தகுந்தவர்கள் எப்போதும் போல வெளியே இருந்து சொல்லியனுப்பக் கண்ணன் அம்முனிவன் விடைபெறுமளவும் வரச் சொல்லுவதற்குத் தயங்கிக் கவனிக்காதவாறு முனிவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அதையுணர்ந்த நாரதன் "எமக்கு ஒரு பெருமை தந்து, அரசியல் நடவடிக்கைகள் நடத்தத் தயங்கினால் நன்றாயிருக்காது; என்னைப் போகச் சொல்வதே தக்கதாகும். அப்படியின்றி என்னை உன் குழுவிற் சேர்த்துக்கொண்டால் அவர்களை வரவழைப்பாயாக" என்றான். கண்ணனும் அப்போது விரைந்து சபையை முடித்துக்கொண்டு முனிவனுடன் அந்தப்புரத்திற்குச் சென்றான்.

நாரதன் தன் சிஷ்யனை வெளியே நிறுத்தி வைத்துவிட்டுத் தன் வீணையை வாங்கிக் கொண்டான். அப்போது அவன் கையிலிருந்த அந்த வீணையைப் பய பக்தியுடன் கூட வந்து அடக்கத்துடன் கலபாஷிணி வாங்கிக்கொண்டாள். கண்ணன் அதைக்கண்டு புன்னகை புரிந்தவாறே 'என்ன? இந்த முனிவரிடம் சிஷ்யத்துவம் அடைந்து தொண்டு புரிய விரும்பினையோ?' என்று கேட்க அவள் 'அதொன்றுமில்லை' என அடக்கமுடன் கூறி ஒதுங்கிக் கொண்டாள், ஒதுங்கவும் கண்ணன் 'ஓ! பிணை போலும் கண்ணாய்! உன் எண்ணம் நல்லதுதான். இப்படிப்பட்ட பெரியோரை அணுகித் தொண்டு புரியும் உள்ளம் யாருக்கிருக்கிறது? ஆயிரம் சொல்வானேன்! இம் முனிவனுக்குத் தொண்டு செய்க! உய்வாய்! உன் அறிவும், பாடல் திறனும் மென்மதுர நல்லிசையின்பமும் கண்டு என்மனதில் 'இப்பெண் நாரதனிடம் சிஷ்யையாக இருந்தால் இசைக்கலையில் மேதையாவாள்' எனச் சொல்லிக்கொள்வேன்' என்றான்.

இவ்வாறியம்பிய கண்ணன் தன் காதன் மனையாளாகிய ஜாம்பவதியின் இல்லத்திற்கு முனிவனுடன் சென்று 'உனக்கொரு சிஷ்யையை அழைத்து வந்திருக்கிறேன், இவளை ஏற்றுக்கொண்டு கற்பிப்பாயாக!' என்று நகைத்தவாறு கூறினான். ஜாம்பவதியும் 'எனக்குமுன் நீங்கள் சொன்ன அந்தக் கலபாஷிணியா இவள்?' என்று கூறி முனிவனுக்கு உபசாரங்களைச் செய்தாள். அதற்குள் கண்ணன் ஜாம்பவதியைப் பார்த்து, 'தாமரை போலும் கண்ணாய்! இம்முனிவன் கற்கவந்து எத்தனையோ நாளாகிவிட்டதே. என்னென்ன கற்பித்தாய்? எல்லாம் தெரியும்படியாகச் சொல். இசைத்திறனில் தான் சிறந்த மேதையாக இருந்தும் தும்புருவை ஜெயிக்கவேண்டி எப்படியும் கற்றுத்தீருவேன் என என்னையடைந்தான். நான் உன்னிடம் நீ கற்றதெல்லாம் கற்பிக்கும்படி ஒப்புவித்தேன்! இப்போது கல்வி எந்த நிலையிலிருக்கிறது?' என்றான். அதற்கு ஜாம்பவதி 'நீங்கள் சொன்னபடியே என்றும் நடந்து வருகின்றேன். இப்போது நீங்கள் என் குற்றங் குணங்களை ஆராயவேண்டும், ஒரு சிறிது என் இசையைக் கேளுங்கள்' என்று கூறி, தங்கத் தந்திகளோடு கூடிய வீணையை வாங்கி, அழகாக மென் குரலில் தேன் மழை பொழிந்தாற்போல் இசையமுதச் சிந்தி வழியப் பாடினாள். 'சரிகமபதநி' சுரங்களைச் சுதிக்கிரமங்களறிந்து இசை நுட்பமுணர்ந்து, பண் வேறுபாடுகளைத் தெளிந்து லயதாள சுத்தியுடன் மந்திர மத்திம, தாரங்கள் விளங்க, காதற் சுவை தோன்றித் தோன்றிக் காதுகட்கு இன்பமும் தண்மையும் பரவச் செய்ய ஜாம்பவதி பாடிய தன் புகழ்க் கீதங்களைக் கேட்ட கண்ணன் 'நன்று நன்று! குறையொன்றுமில்லை. இம்முனிவனுக்குக் கற்பித்திடுக' என்று கூறிச் சென்றான்

ஜாம்பவதியும் ஒரு வருட காலம் இசைக் கலையை முனிவனுக்குக் கற்பித்தாள். பின் முறையே கண்ணன் கட்டளையால் ருக்மிணியும் சத்யபாமையும் ஒவ்வோராண்டு கற்பித்தனர். கண்ணனும் தானே ஓராண்டு இசைக்கலை

நுட்பங்களைக் கற்பித்தான். அப்போது மணிகந்தரன் கலபாஷிணியைப் போல் அந்தப்புர அரசியர் கற்பித்தது கிடைக்காவிடினும்கூட கண்ணனருளால் சங்கீதக் கலையின் சகல மர்மங்களையும் உணர்ந்து நாரத கலபாஷிணியைப் போன்றே சிறந்து விளங்கினான், இம் மூவருக்கும் கண்ணன் இவ்விதம் எல்லாம் கற்பித்து 'உங்கள் சங்கீதத்திற்கிணை இனி மூவுலகத்தும் இல்லை' என்று கூறி மகிழ்வித்தான். அந்தப்புரத்திற்குச் சென்றபோதும் கண்ணன் மனைவியர் முனிவனிடம் 'உன் இசைக்கலைக்கீடு இல்லை' என்று ஆதரவுடன் சொன்னார்கள். இப்படியிருப்ப ஒரு நாள் நாரத முனிவன் கண்ணனிடம் விடைபெற்று உலகைச் சுற்றச் செல்லும் போது கூட வந்த கலபாஷிணி மணிகந்தரனிடம் பேசிக்கொண்டிருக்கும் போது அந்தப்புர மடந்தையர் புகழ்ந்ததைப் பற்றிய பேச்சு வந்தது.

அதற்கு நாரதன் தன் சீடர்களிடம் இவ்விதம் கூறினான். 'இப்படியாகக் கண்ணன் மனைவியர் மூவரும் பல தடவை என் இசைத்திறமை அதியற்புதமானதென்றும் இத்திறன் யாருக்கும் கிடையாதென்றும் சொல்வார்கள். அது தங்கள் உள்ளத்தில் உள்ள உண்மையோ? அல்லது என் உள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்க வேண்டிக் கூறியதோ தெரியாது. சான்றோர் பிறர் மனத்திற்கு எப்படியும் இன்பம் விளைக்க வேண்டியது தலையாய அறம் எனக் கருதுவர். ஆதலின் இப்படிப்பட்ட புகழ்ச்சிகளை நம்பிவிட முடியாது. தங்கள் தோழிகளுடன் ஏகாந்தத்தில் என்னைப்பற்றி என்ன அபிப்பிராயம் கூறுகின்றார்களோ அதுவே உண்மை. ஆதலின் அவ்வுண்மை தெரியும் வரை என்னுள்ளத்தின் ஐயம் தீராது'.

நாரதனின் இச்சொற்கேட்ட கலபாஷிணி இப்படிக் கூறினாள். 'உங்களுடன் வரப்போக இருப்பதால் நகர் மக்கள் என்னை நன்கறிவர். கண்ணன் மனைவியரிடம் செல்லமுடியும். இப்படிச் சென்று அவர்களது தோழியருடன் கலந்து பேசும் பேச்சுகளைக் கேட்கக் கூடுமாயினும்

நான் தங்கள் சிஷ்யை என்பதனால் உங்கள் இசை சம்பந்தமான பேச்சுகளைப் பேசினும் குறைகளைக் கூற மாட்டார்கள் என்று கருதுகிறேன். எனக்கு விரும்பிய பெண் உருவம் அடையும் திறமையிருந்தால் அம்மடந்தையர்களின் தோழியர் உருவம்கொண்டு சமயமறிந்து பேசி அவர்தம் உள்ளப்போக்கைப் புரிந்துகொள்வேன். இச்சொற்கேட்ட நாரதன் 'இவள் இந்தச் சாக்கில் குபேரன் மகனை ரம்பை உருக்கொண்டு உறவாட விரும்புகிறாள். என் காரியமும் கைகூடுமாகலின் இது தக்கதே' என்று மனம் மகிழ்ந்து கலபாஷிணியைப் பார்த்துப். 'பெண்ணே உனக்கு அத்தகைய திறமை வாய்க்கும்படி வரம் தந்தேன். நீ விரும்பிய பெண்ணின் உருவமுற்றுக் கண்ணபிரானின் மனைவியர் தம் எண்ணத்தை அறிந்து வா' என்று அனுப்பினான்.

கலபாஷிணியும் கண்ணன் மனைவியரிடம் சென்று அவர்களது தோழியர் உருவம்பூண்டு அவர்களில்லாத சமயம் பார்த்துப் போய்ப் பேச்சுக் கொடுத்து 'நாரதனின் சங்கீதத் திறமை யாருக்கும் இல்லாத தனித் திறமைதான்' என்று அவர்கள் சொல்ல உறுதியாகத் தெளிந்து கொண்டு முனிவனிடம் கூறி மகிழ்வித்தாள். நாரதனும் அவளை நோக்கி 'ஜாம்பவதி, சத்யபாமை, கண்ணன் முதலியோர் குருக்களாக இசைக்கலை முழுவதும் திருட்டுத்தனமாகவே கற்றுவிட்டாயல்லவா?' என்றுகூறி, 'மடந்தாய்! நீ முன் விரும்பிய ரம்பை யுளங்கவர் உருவனைக் கலந்தின்புறுவாய். நம்பிக்கையுடன் இனி உன் இல்லம் செல்வாயாக!' என்று கூறினார். கலபாஷிணியை அனுப்பிவிட்டு நாரதன் தன் சீடன் மணிகந்தரனுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு தன் வழியே சென்றான். மணிகந்தரனும் குருவின் கட்டளைப்படி தீர்த்த யாத்திரைக்குச் சென்றான்.

நாரதனைப் பிரிந்துவந்த கலபாஷிணி தன் வீட்டிற்கு வந்த பின் இசைப் பயிற்சி குன்றியதாலும் முன்போல் நகரப் போக்குவரத்து குறைந்தமையாலும், மென் மெலத்

தன்னுள்ளம் நளகூபரன் வசமாகவே அவனையடையும் வழி தெரியாமல் வெகு நாட்களைப் போக்கி, காலம் போவது கடினமானதால் ஒருநாள் தான் ஒருத்தி மட்டும் தனித்து வீணையைக் கையிற் கொண்டு இல்லப் பூங்காவிற் சென்று அமர்ந்திருந்தாள். அப்போது உடம்பெல்லாம் திருநீறு பூசியும், யோக தண்டமும், கக்கத்தில் இடுக்கிய பையும், மருத்துவ நூலும், நாகப் பிரம்பும், வீணையும், கஞ்சாவும் உடையவனாகியும், செஞ்சடையுடைய ஒரு சித்தன் சிங்கவாஹனத்தில் ஏறி வான வழி வந்து கலபாஷிணி யிருக்கிற பூந்தோட்டத்தில் இறங்கினான். அவனைக் கண்ட அவளும் வியப்புடன் மரியாதை செய்து விருந்தோம்பினாள். அவன் 'ஓ! கலபாஷிணி, உனது குருவாகிய கண்ணனைக் காணச் செல்வாயா? சங்கீத சாஸ்திரம் சம்பூரணமாகக் கற்றாயா? சங்கீத சாஸ்திரம் கற்க தேவ முனிவனாகிய நாரதன் இப்போது வருவதில்லை யல்லவா? ஆகையால் உன் மனம் பிற நினைவுகளை விடுத்து அந்த நளகூபரனையே நாடுகின்றதல்லவா? அன்று கடைசி நாளில் உனக்கு நாரதன் விடையளித்தபோது உன் மனோரதம் சித்தியாகும் என வாழ்த்தினானல்லவா? அம்முனிவனின் வாக்கு என்றும் பொய்க்காது. உன் மனதைத் திடமாக வைத்திரு. நீ சோர்வுற்றால் உன் தோழிகள் பார்த்துக் கொண்டிருப்பார்களா? தூரத்தில் சென்று தவம் செய்யச் சென்றதால் மணிகந்தரன் பாடுவதை விட்டு விட்டதால் விரதமிருந்து, சோர்வுதீர இயலாமல் என் காதுகள் தூர்ந்து போயுள்ளன. இன்றாவது நீ வீணை வாசிப்பாயாக. காதாரக் கேட்டு மகிழ்கின்றேன். இவ்வுலகில் உங்கள் இருவருடைய சங்கீதமன்றிப் பிறருடைய சங்கீதம் எனக்கு இன்பம் தருவதில்லை'. இச் சொல் கேட்ட கலபாஷிணி ஒவ்வொரு சொல்லுக்கும் வியப்புற்றவளாகக் கர கமலங்களைக் குவித்து அஞ்சலித்து வினயமுடன் இப்படிக் கூறினாள்.

'ஓ! சித்தனே! நீ தேவனா? யோகமறிந்த கபிலர் முதலிய சித்தர்களில் ஒருவனா? உனது திறன் வியப்பளிக்

கின்றது. உன் பெயர் என்ன என்று சொல்வாயாக!' அதற்கு அவன் "மடந்தாய்! என் பெயர் மணிஸ்தம்பன். நீ சொன்ன யாருமில்லை. நான் ஒரு சித்தன்" என்றான். அதற்குக் கலபாஷிணி 'ஓ! மகிமை நிறைந்த சித்தரே! உங்கள் சொற்கள் ஒவ்வொன்றும் எனக்கு மிக்க வியப்பைத் தருகின்றன. நீங்கள் எப்படி உள்ளதை உளளபடியே எல்லாம் சொல்கிறீர்கள்? உங்களால் ஆகாததொன்று மில்லையென்றே தோன்றுகிறது. இப்போது மணிகந்தரன் தவம் செய்வதாகச் சொன்னீர்களல்லவா? அது மட்டும் சொல்லுங்கள்' என்றாள். அவனும் அவளைப் பார்த்து, 'மடந்தாய்! எனக்குத் தூரதிருஷ்டி (தொலைக்காட்சி) தூர சிரவணம் (தொலைக்கேள்வி) எனும் சக்திகள் உண்டு. அதனால் நான் இருக்குமிடத்திலிருந்தே எல்லாம் பார்க்கவும், கேட்கவும் முடியும். இப்போது நான் சொன்ன தெல்லாம் சரிதானல்லவா? இனி நீ விரும்பிய பிரகாரம் நீ விடைபெற்ற மணிகந்தரன், நாரதன் இருவரின் உரையாடலும் தவம் வரையுமுள்ள செய்திகளைச் சொல்கிறேன், கேள்' என்று கூறிச் சொல்லத் தொடங்கினான்.

அதன்பின் நாரதன் சங்கீத சிட்சை பூர்த்தியடைந்த பின்னர் உன்னை உன் வீட்டிற்கு அனுப்பிவிட்டுப் பிறகு மணிகந்தரனைப் பார்த்து 'உன் சங்கீதத் திறமையினால் பயனுறும் வகையில் திருமாலையும் பரமேசுவரனையும் பக்தியுடன் எப்போதும் பாடித் துதித்துக் கொண்டிருப்பாயாக. அப்பெருமானுக்கு இன்பம் தருவதாயும் பாவங்களை அழிப்பதாயுமுள்ள இப்பாடல்களை வீணை கைக்கொண்டு பாடிக்கொண்டிருப்பேன். 'பிருஹதி' எனும் வீணையைக் கைக்கொண்டு விசுவாவசுவும் 'களாவதி' எனும் வீணையைக்கொண்டு தும்புருவும் 'மஹதி' எனும் வீணையைக்கொண்டு நானும் 'கச்சபி' எனும் வீணையைக் கொண்டு சரஸ்வதியும் விடாது எப்போதும் கைக்கொண்டின்புறும் விதத்தைப் பார்த்தால் கலைகளிலேயே சிறந்தது சங்கீதக் கலையல்லவா? இதைத் திருமாலுக்கு அர்ப்பணமாகச் செய்வது மிகவும் புகழத்தக்கதன்றோ?

உனது பாக்கியத்தை என்னவென்று சொல்வது? தவம் முயன்றும் காணற்கரிய உலகுக்கிறைவனாகிய கண்ண பிரானை அடைய முடியுமா? அவனால் சங்கீதக் கலையும் குருவாக அடைந்து கற்றிருக்கிறாய். ஆதலின் இக் கலையை என்றும் கண்ணனுக்கு அர்ப்பணமாகச் செய்து எல்லா இன்பங்களும் பெற்று உய்வாயாக. நானும் விரைந்து சென்று நான் பட்ட பாடெல்லாம் தீரும்படியாக சுவர்க்கத்திலோ, பிரம்மலோகத்திலோ, வைகுண்டத் திலோ, கைலாயத்திலோ என் சங்கீதப் பாண்டித்தியத் தைக் காட்டி. வாதிட்டுத் தும்புருவை வெல்வேன்' எனக் கூறக் கேட்ட மணிசுந்தரன் அம்முனிவனை வணங்கி இப்படிக் கூறினான்.

"தாங்கள் சங்கீதத்தில் தும்புருவை வெல்ல வேண்டும் எனும் பரபரப்பை இப்போது கூறியதிலிருந்து உணர் கின்றேன். அவரிடம் இவ்வளவு போட்டி ஏன் பிறந்தது? அவரை வெல்ல என்ன பாடுபட்டீர்கள்! எனக்கு எல்லாம் சொல்ல வேண்டும்".

இச்சொற்கேட்ட நாரதன் கூறினான். 'வைகுண்டத் தில் ஒரு நாள் விஷ்ணுவானவர், பிரம்மா முதலிட்ட தேவகணங்கள் சேவிக்கவும், யோகிகள் வேதங்களைப் பாடிப் போற்றவும், திருவோலக்கத்தில் அமர்ந்திருந்தார். அப்போது, கௌண்டின்யர், அத்ரி, மரீசி, தக்ஷர், கபிலர், அகஸ்தியர், அக்ஷபாதர், ஆங்கீரசர், சாண்டில்யர், கிரது, கண்வர், குத்சர், பிருகு, விஸ்வாமித்ரர், மைத்திரேயர், மார்க்கண்டேயர், ஆசுரி, வாமதேவர், கபி, துர்வாசர், உபசர், வியாக்கிரபாதர், மாண்டில்யர் முதலிய மகா முனிவர்கள் அவரைச் சேவிக்கப் பக்தியுடன் சென்றார்கள்.

அப்போது நானும், தும்புருவும், விஸ்வாவசுவும் வீணையுடன் சிலருடன் வரச் சேவிக்கச் சென்றோம்.

இப்படித் தேவர்களும், முனிவர்களும் கூட்டமாக வந்து சேவிக்க விஷ்வக்சேனர், பிரம்பை வைத்துக் கொண்டு கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். தேவலோகத்து நாட்டியக்காரிகளின் நடனத்தைக் கண்டு களித்துக்கொண்டு விஷ்ணுவானவர் கொலுவிருக்கும் போது முகில் நிரைகளிலிருந்து வெளிப்படும் மின்னற் கொடிகள் போலத் தோழிகளுடன் கூடத் திருமகள் அங்கு வந்தாள். அவள் வந்தாளோ இல்லையோ உடனே காவற்காரர்கள் எங்கிருந்தோ வந்து கூட்டத்தைச் சமாளிக்கத் தடபுடல் செய்தார்கள். அப்போது எங்களைப் போன்றவர்களின் கதையைச் சொல்லவேண்டுமா என்ன? திருமாலும் அவளருகே சென்றார். அப்போது காவற்காரர் 'ஓ! தும்புருவே' எனப் பெரிய சத்தமிட்டு அழைத்துப் பின் அவரைக் கூட்டிக்கொண்டு விரைந்து சென்றனர். இப்படி அழைத்துக்கொண்டு போனதும் பார்த்துத் தமக்குள் 'இவனை ஏன் மீண்டும் அழைத்தார்' என்றும், 'சங்கீத சம்பந்தத்தில் இவரைவிடச் சிறந்தவர்கள் இங்கில்லையா' என்றும் மனதில் ஐயமுடன் பேசிக் கொண்டார்கள். அப்போது நான் ' இவனை அழைத்ததேன்? ' என ஐயுற்று நிற்கும்போது 'பெருமான் தன் துணைவியுடன் தும்புருவின் கீதத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறான்' என அங்குச் செல்வோர் சொல்லைக் கேள்விப்பட்டேன். எங்களை எல்லாம் வெளியேற்றிவிட்டுத் திருமகள் கேள்வன் அவனை மட்டும் அழைத்துப் பாடச் செய்ததைக் கேட்டு என் உள்ளம் எரிய நான் ஒருபக்கம் ஒதுங்கி இருந்தேன். சிறிது நேரம் கழிந்ததும் தும்புரு வெளியே வந்தான். 'அனுப்பியாயிற்றா? என்ன தந்தார்' என்று பரபரப்புடன் சூழ்வோரும், 'சர்வேஸ்வரன் திருமகளுடன் கானம் கேட்டால் சொல்லவாவேண்டும்?' என்பாரும், ' அவன் அருளை இவனது முக ஒளியே காட்டுகிறதே' என்பாரும், 'நீ மட்டும்தானா? வேறு யாராவது அங்கிருந்தார்களா?' என்று கேட்பாருமாக அமரர்களும், முனிவர்களும் வியப்பு எய்தினார்கள்.

தும்புரு கனகாபிஷேகம் செய்விக்கும் பதக்கமும் பொன்னாடையும் பெற்றுப் பொலிவுடன் இருந்தான். தகதகவென்னும் பதக்கமும், பளபளவென்னும் பொன்னாடையும், கமகமவென்றும் பரிமளப் பூச்சும் என்னுளத்தைச் சடசடவெனச் சுட்டெரித்தது. 'அவனை மீண்டும் கூப்பிடும் போது என்னைக் கேட்காமல் எப்படிப் போனான்? சரி போனால் போகட்டும். என்னையும் அழைக்காமல் தான் மட்டும் பெரிய மனிதன் போலப் போய்ப் பாடுவதெப்படி? சரி பாடினாலும் பெருமான் தந்த செல்வங்களை எனக்குக் காட்டாமல் தானாகப் போவதெப்படி? திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல யாரிடமும் சொல்லாமலாவது பேசாமல் போகக்கூடாதா? எல்லோருக்கும் விளம்பரம் செய்துகொண்டு போகிறான். ஊம்! சரியான ஆள் இல்லை. அடப்பாவி தும்புருவே' என்று பற்களைக் கடித்துக்கொண்டு உள்ளூரப் பொருமிக்கொண்டு கொஞ்ச நேரம் இருந்தேன். 'என்னைவிட அவன் பெரியவனா? என்னவானாலும் சரி, யார் பெரியவர் என்று தெரியும்வரை நான் அவனைச் சும்மா விடமாட்டேன்' என்று சினந்து, 'அவனுடன் எங்காவது வாதிட்டு அவமானப்படுத்தி இணையற்ற என் சங்கீத சாமர்த்தியத்தை வெளிப்படுத்தி என் திறமை திருமகள் கேள்வனுக்கு எட்டும்படியாகச் செய்கிறேன்' என நினைத்தவாறு, பின்னர் 'இந்தப் பொறாமையை உள்ளூர அடக்கி எப்போதும் போல நட்பாடி அவனிடம் போக்குவரவு வைத்துக்கொண்டு அவன் பாடலிலுள்ள குணதோஷங்களை நன்கறிந்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வெற்றிபெற முடியாதல்லவா?' எனத் தெளிந்தேன். பின் ஒருநாள் அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அவன் பாடுவதற்குத் தயாராக வீணையைச் சுதி கூட்டி வைத்து விட்டு உள்ளே சென்றிருந்தான். நானும் 'தும்புரு எங்கே? வீட்டிலிருந்தானோ'' என அங்குள்ளோரிடம் கேட்டுக் கொண்டே, 'வீணையை இங்கே வைத்துவிட்டு வீட்டுக் குள்ளே போனான்' என்றவர்கள் சொல்லவே, 'இந்த

வீணை யாருடையதோ?' என்றிருந்து 'அவனுடையது தான் பார்ப்போம்' என்று ஆவலுடன் மெல்ல எடுத்து விரலால் மீட்டிப் பார்த்தேன். சுதிகள் சுத்தமாகவும், தோஷமின்றி இழையற்ற இன்னோசையுடன் திகழவே மிகவும் வியப்புற்று அதை அங்கேயே வைத்துவிட்டு மிகுந்த வெட்கத்துடன் திரும்பி வந்தேன்.

'மிகுந்த பாண்டித்தியமுடையவன் இவனானால் இசைக்கலையில் புகழ்பெற்ற எனக்கு ஏன் தெரியவில்லை? இதுவரைக்கும் தும்புரு மிகச்சிறந்த இசை வல்லுநன் என்பது புரியவில்லையல்லவா?' எனக் குழம்பிய சிந்தனையோடு 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலிருப்பான்' என்பது உண்மையென நினைத்தேன். அதற்குமுன் நானும் தும்புருவும் நட்புடனே கூடிப் பிரம்மா முதலிய தேவர்கள் முன்பு கலந்து பாடுவதுண்டு. அப்போதெல்லாம் தனக்கு இத்துணை இசைக்கலைப் புலமை இருக்கிறதென்பதைக் காட்டிக் கொள்ளமாட்டான். விருப்பத்துடன் விஷ்ணு பகவான் கூப்பிடும்வரை இவன் பாண்டித்தியம் புரிந்து கொள்ளப்படவில்லை. தனது புலமையை யார் எந்த அளவு புரிந்துகொள்வார்களோ அந்த அளவுக்குத்தான் அவரிடம் தன் புலமையைப் பெரியோர்கள் வெளிப்படுத்துவார்கள். பெரியோர் தம் பெருமை நீரளவு கொண்ட தாமரையைப் போன்றதாகும். இதன்றிக் கேட்போரின் சக்திக்கு அதிகமாகத் தன் புலமையைக் காட்டுவது பயனற்றதுதானே. அது செவிடன் காதில் ஊதிய சங்கு போல் வீணாகுமன்றோ? அதிருக்க நான் அன்று முதல் எங்கு எங்கு இசைக்கலை மேதாவிகள் உளரோ அங்கங்கு சென்று ஓர்ந்து நெடுநாள் பாடுபட்டு முடிவில் என் விருப்பம் முற்றறிவனாகிய தாமரைக் கண்ணனின் பேரருளால் அன்றி நிறைவேறாது என உறுதிபூண்டு அப்பெருமானைக் குறித்து நெடுங்காலம் தவம் செய்தேன்.

அப்போது அஞ்சன மலையை வென்ற நீலவண்ணக் கோலமேனியுடன் செந்தாமரை மலர்களை வென்று எழில்

சிந்தும் நீண்ட ஒளிபொருந்திய கண்களுடனும், செஞ்சுடர் ஒளியை விஞ்சும் புகழ் மிக மகர குண்டலங்களுடனும், திருமகள் விளையாடத் துணையாயமைந்து மார்பிலணிந்த மணியுடனும் சங்கு சக்கரங்களுடன் கூடியவனாய், இந்திராதி தேவர்கள் சேவை செய்யக் கருடன் மேலமர்ந்து அருள்பூண்ட நெஞ்சினனாய்த் திருமால் காட்சியளித்தார். காட்சியளித்து 'என்ன வரம் வேண்டும் கேள்' என, நான் என்னால் முடிந்த அளவு துதித்து 'இசைக் கலையில் தும்புருவை வெல்லவேண்டும்' என்றேன். என்றதும் என்னைப் பார்த்துத் திருமால் அருளோடு 'நான் துவாபர யுகத்தில் வசுதேவ புத்திரனாக அவதரித்து நல்லோரைக் காத்து அல்லோரை அழித்துத் துவாரகையில் இருந்து உலகு புரக்கும்போது நீ வருக. அப்போது உன் விருப்பம் ஈடேற்றுவேன்' என்றுகூறி மறைந்தார்.

பின் நெடுநாள் காத்திருந்து முடிவில் கண்ணனிடம் இணையற்ற இசை வல்லுநன் ஆனேன்" என்று நாரதன் கூறி மீண்டும் கூறுகிறான். "நான் இத்துணைப் பாடுபட்டு இந்த இசை நுட்பத்தையறிந்தேன். நீயும் கலபாஷிணி யும் உடல் வியர்க்காமல் யாதொரு சிரமமும் இன்றிக் கண்ணனருளால் இக்கலையை அறிந்தீர்கள்' என்றிவ்வாறு கூற, 'தபோதனரே! தங்களை அண்டியதற்கு இது அரிதாகுமோ? பூவொடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல நானும் அருள்பெற்றேன். அதிருக்க ஒரு நாள் அழைத்துத் தும்புருவின் பாடலைக் கேட்டதே மிகச்சிறந்த பேறானால், என்றும் வைகுண்டத்தில் இருந்து விஷ்ணுவுக் குத் தொண்டு செய்யும் மகாபாக்கியம் எப்படிக் கிடைக் கும்' என்று மணிகந்தரன் கேட்டான்.

அதற்கு நாரதன் மனமகிழ்ந்து 'நன்று நன்று; இத் தகையது நற்சிந்தனையாயிருக்கின்றது. பாப புண்ணியங் கள், நன்மை, தீமைகள், சுவர்க்க நரகங்களைப் பற்றி எண்ணாவிட்டாலும் தன்னலம் பேணும் இன்சொல் கேளா ருண்டோ? சளைக்காமல் வேத சாத்திரங்களை இடை

விடாது கற்றுச் சிறிது அறிவும் புகழும் பெற்றுமே சிலர் 'படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்' என்றாற்போல முன்வினைப் பயனால் தீவினை செய்து திரிவர். சுந்தருவமைந்த! மணிசுந்தர! கேள்! 'பூவுலகில் உயிர்கள் சிறந்தவை. உயிர்களுள் அறிவுடைய உயிர்கள் சிறந்தவை. அறிவுடை உயிர்களில் மனிதர்கள் சிறந்தவர்கள். மனிதருள்ளும் அந்தணர்கள் சிறந்தவர்கள். அந்தணருள்ளும் வித்துவான்கள் சிறந்தவர்கள். வித்துவான்களிலும் அறநெறிப்படி நடக்கும் உள்ளத்தினர் சிறந்தவர்கள். அவர்களினும் செயல்வீரர்கள் சிறந்தவர்கள். அவர்களிலும் பிரமஞானமுணர்ந்தோர் சிறந்தவர்கள். அவர்க்கு மேலானதொன்றில்லை.' இவ்விதம் முன்பொரு தடவை அறநெறி பற்றிய பேச்சு வரும்போது மனுவானவர் குறிப்பிட்டார். இதை ஆராயின் இப்போது அறிந்த நன்னெறியில் முன்னேறியுள்ளாய் என்பது உண்மை. கண்ணனின் சன்னிதிப் பெருமையை உணர்ந்து அப்பேறடைய விரும்பினாய் ஆதலின் நீ சிறப்புறுவாய் என்பதில் ஐயமில்லை. ஆகையால் அப்பரந்தாமனது சன்னிதியை அடையப் பெரியோர்களால் நரன் கேட்ட வழியை உனக்குத் தெரிவிப்பேன். தகுதியற்றவனுக்குப் பெரும் பதவிகளைச் சொல்வதால் உண்டாகும் பாவமானது தகுந்தவனுக்கு அப்பெரும் பதவியைச் சொல்லாததாலும் உண்டாகிறது'' என்று நாரதன் கூறி மேலும் சொன்னான்.

தன் சக்திக் கேற்ப நற்செயல்களை, பலனை விரும்பாது பகவதர்ப்பணமாகச் செய்தல், தீய செயல்களை ஒழித்துக் கடவுளிடம் பக்தியை நிலைநிறுத்தல், பக்தியுடைய பெரியோரைத் துணைகோடல், தீயோருள்ள வழியே செல்லாமை, பரந்தாமனின் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப்போதல், பிரம்மச்சரியம், தவம், வைராக்கிய குணம், முதலிய குணங்கள் மோட்சத்தைக் கோருவோருக்கெல்லாம் வேண்டும். இவற்றில் 'சிலவற்றைக் கடைபிடிப்பினும் வீண் போகாது. அஃது முறைப்படியே

வைகுண்டத்தை அடைவிக்கும்' என்று கூறி 'நீ உன் சக்திக்கேற்ப இதில் நடப்பாயாக! கண்ணன் அருளால் கிடைத்த பிறர்க்கரியதும் பெறுதற்கரியதுமான இசைக் கலையை வீணாக்கிவிடாமல் திருவரங்கம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்கட்குச் சென்று முகுந்தனின் சன்னிதியில் அவனது தெய்விகப் புகழையும் நாம சங்கீர்த்தனத்தையும் பாடிக்கொண்டிருப்பாயாக! அது எல்லா நன்மைகளும் தருவதாகும்' என்று கூறிப் பரவசமான உள்ளத்துடன் கண்ணன் திருஉருவை ஆத்மாவாற் கண்டு வணங்கியும் புளகாங்கிதமுற்றும், வியந்தும் நயந்தும், ஆடியும் பாடியும், பக்திப்பெருக்கால் கண்ணன் புகழை இசை பாடித் தன் வழியே சென்றான்.

மணிகந்தரனும் இவ்வரலாறுகளைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாக 'இவர் எத்துணைப் பெருமைக்குரியவர்' என்று போற்றியவனாக நாரதன் தன் பார்வையில் தோன்றும்வரை பார்த்துக்கொண்டே யிருந்து முடிவில் தன் பார்வையை மீட்டு நின்றான்.

இவ்விதம் தனது குருவானவர் சென்றபின் அவர் கூறியபடி நற்செயல் பல புரிந்த வண்ணம் கண்ணனை உள்ளத்திலிருத்தித் தீர்த்த யாத்திரை செய்து வந்தான். அவற்றுள் பேரலைகளுடன் கருமேகம் ... ... போலுள்ள நீரையுடையதும், தாமரை, ஆம்பல் முதலிய மலர்களாலும், இசை முரலும் வண்டுகளுடனும், அன்னங்களும், சக்கிரவாகப்புட்களும் விளையாடுவதும், புண்ணியம் மிகுந்ததுமான யமுனை நதியைக் கண்டான். அந்நதியின் இருமருங்கும் நுரைகள் பாம்பணை போல் விளங்க, பீதாம்பரம் போலத் தாமரைத் தண்தாது எழிலுடன் திகழச் செங்கதிரோனின் புதல்வியான யமுனை விஷ்ணுவின் கிடந்த கோலக் காட்சி போலத் திகழ்ந்தது. வீணையேந்திய மணிகந்தரன் ஆங்காங்கு ஸ்ரீதரனின் குணங்களை யாழிசைப் புலமை தோன்றப் பாடினான்.

வடமதுரையைச் சேவித்துவிட்டு ஹரித்துவாரம், சாலக்கிராம பர்வதம், பதரிகாசிரமம், நைமிசாரண்யம் குருக்ஷேத்திரம், பிரயாகை, காசி, அயோத்யை, கங்கையும் கடலும் கூடும் துறை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் குளித்தும், தானமளித்தும், கடவுளைத் தரிசித்தும், கடற் கரையில் நீலாசல சன்னிதியடைந்து 'இதுவே சாக்ஷாத் வைகுண்டமாகும். இது எல்லாத் தவங்களின் பயனாகும். மேலானதும் சரணமாயதும் செல்வங்கட்குப் பிறப்பிட மாயதும் இதுவே' என்று துதித்து 'இந்திரதுயும்னம்' என்ற பொய்கையிற் குளித்து 'ரோஹிணி குண்டத்தில்' தீர்த்த மாடிப் பூரி ஜகந்நாதரை வணங்கினான்.

இவ்விதம் ஸ்ரீ ஜகந்நாதரைச் சேவித்து ஸ்ரீகூர்ம நாதரின் பாதாரவிந்தங்கள் தனது கண்ணெனும் கமலங் கட்கு விருந்து செய்ய மகிழ்ந்து, சிம்மாசல ஈசரைப் போற்றி, அஹோபில ஸ்வாமிகளை வணங்கி, வேங்கடவன் பாதங்களைப் பணிந்து யாழிசை பாடிப் பரவசமாகச் சென்றான். ஸ்வாமி புஷ்கரணி எனும் பொய்கையில் புனித நீராடி வராக மூர்த்தியை வணங்கினான்.

மணிமயமான கோபுரத்தின் ஒளியால் தீக்கும், நதி யலை கரச்சாமரை விசிறிகளால் வாயுவுக்கும், பக்தர்களின் திருவடிப் பூழ்தியினால் பூமிக்கும், வாத்திய ஒலிகளால் வானிற்கும், அகிற்புகையால் முகிற்படலம் சூழ நீருக்கும், புனிதத்துவம் தரும் வேங்கடவன் திருநகர் சேர்ந்து பணிந்தான்.

முன்பாக உள்ள பரிவார தேவதைகளைச் சேவித்துத் தூய பக்தியுடன் உடல் புளகமுற உட்சென்று தன் முன்பு உள்ள, மென்மையான தாயனரத் திருவடிகளும், மின்னொளிர் சிலம்பும், பொன்னிற ஆடையும், மணிமேகலையும், உந்தியிருந்த மாணிக்கமும், வைஜயந்தி யும், மார்பிலமர்ந்த மகாலட்சுமியும், வாழ்த்தும் கரமும், இடையில் தாங்கிய கையும், சங்கு சக்கரங்களை ஏந்திய

கரமும், பன்னிற மாலைகளும், அழகிய கழுத்தும் புன்முறு வலின் எழிலும், மகர குண்டலங்களும், கமலங்களை வென்ற கண்களும், எழிலார்ந்த நாசியும், விற்புருவங்களும், முத்துடைய நாமமும், இரத்தினங்களுடைய கிரீடமும் திகழ உள்ள ஸ்ரீ வேங்கடேசப் பெருமானைத் தரிசித்தான்.

பகவானின் திருமேனியின் ஒவ்வோரங்கமும் நீடு நினைந்து நினைந்துருகி, எழில் கண்டு மிகவும் உள்ளக் கிளர்ச்சியுற்று வியப்படைந்து. செய்வதொன்றறியாத பரவச நிலையில் சிறிதிருந்து மீண்டும் மகிழ்வுடன் இவ்விதம் தனது அனுபவத்தை யிசைக்கலானான், 'பாத கமலங்களில் சிக்குண்டு மீளாத என் பார்வையை எவ்விதம் பொன்னாடையைக் காணக் கொணர்வேன்? பொன்னா டையிற் பொருந்தி அசையாதுள்ள என் பார்வையை எவ்விதம் வயிற்றினழகைக் காணக் கொணர்வேன்? வயிற்றழகைக் கண்டு ஆழ்ந்துள்ள என் பார்வையை எவ்விதம் மார்பிலமர்ந்த மறுவினைக் காணக் கொணர் வேன். மார்பின் மறுவில் மன்னிய என் பார்வையை எவ்விதம் மலர்க்கைகளிணைக் காணக் கொணர்வேன். கரங்களையும் கழுத்தழகையும், இதழ்களையும், மகர குண்டலங்களையும், கன்னங்களையும், நாசியையும், கண்ணிணையையும், புருவங்களையும், சுரிகுழலையும் எதைக்காணினும் அதனிலிருந்து விடுபட இயலாதவனாக உள்ளேன்! என்னென்பேன்' என்று பரமானந்தமடைந்து, புற உலகை மறந்து, சிறிது நேரம் பார்த்துவிட்டுப்பின், நிலத்தில் வீழ்ந்து வணங்கி, யாழின் இன்னிசையுடன் தன் குரலிசையிணைய, உலகோர் கேட்டு மெய்மறந்து நிற்ப, அப்பெருமானின் திவ்விய மங்கள குணங்களைப் பாடினான்.

இவ்விதமாக மூன்று நாளிரவும் பகலும் இருந்து சேவித்துவிட்டு, திருப்பதி மலையை விட்டு இறங்கிச் சென்று, காஞ்சீபுரத்தை அடைந்தான். ஏகம்ப நாதனின் உறைவிடமாயும், காமாட்சியின் தவம் பலித்த இடமாயும்,

சரசுவதியைப் பணிந்து அந்தணர்கள் வாழிடமாயும், வரதராஜப் பெருமானின் சன்னிதியுடைய பெருமையை யுடையதுமான, புண்ணிய மிகுந்த ஏழு நகரங்களில் ஒன்றாகிய, காஞ்சியைக் கண்டு, மகிழ்ந்து, ஏகம்ப நாதனையும், காமாட்சியையும், பிற தேவதைகளையும் வணங்கிவிட்டு, 'கரிகிரீந்திர' மென்னும் தலத்திற்குச் செல்லும் வழியே முன்னமைந்த வரதராஜரை வணங்கினான். பின்னர், பாக்குத் தோட்டங்களையும், புன்னைப் பூந்தேனையும் தாதையும் அளாவிய இளந்தென்றற் காற்று விளையாடும் நெல் வயல்கள் சூழ்ந்த சோழ தேசத்தின் கிராமங்களைப் பார்த்தவாறே சென்றான். கரும்பையும், செந்நெல் வயல்களையும், நெருங்கிய கமுகுகளையும், பூந்தோட்டங்களையும், தாமரைப் பொய்கைகளையும், உளத்தில் உவகை பூத்தவனாக வியப்புடன் கண்டான். புண்ணிய நதிகளில் நானே சிறந்தவள் எனக்கருதும் வானகங்கையுடன் போட்டியாக அலைக்கரம் நீட்டி விளாதிக்க அழைப்பதும், வானகத்தைத் தன்னகத்தே அடக்கியதும், பாவங்களைப் போக்குவதுமான காவேரி நதியைக் கண்டான்.

கண்டு பக்திப் பரவசமாகிப் 'புனிதமான இந்நதிக்கு எதுதான் இணையாகும்? இதனை யாரால் புகழ முடியும்? இந்த நதி இருபிரிவான வெள்ளப் பெருக்கெனும் கரங்களால் திருவரங்கநாதனைத் தழுவியதாகும். இந்த நதி எல்லா மனிதர்களின் மனமாசுகளையும் களையும் புனித நீருடையது. இந்த நதி எல்லா நதிகட்கும் அறிவு தரும் தன்மையுடையது. புனிதமும் நலனுமுடையதும், வீடளிப்பதும் இந்நதியேயாகும். இந்நதியில் மூழ்கியவர்கட்குப் பரமபதம் கிடைப்பது உறுதியாகும்' என்று புகழ்ந்துரைத்தான்.

தாமரை, ஆம்பல், கழுநீர் முதலிய மலர்களின் மணந் தழுவி வந்த இளந்தென்றல் எதிர்கொண்டழைப்ப, அன்னம், வாத்து, கிரௌஞ்சம் முதலிய பறவைகள்

நல்வரவு கூற, அலைக்கரங்கள் நீட்டித் தழுவ வருவது போல் தோற்ற, வெண்ணுரைகள் வெள்ளிப் பீடம் போல் அமைய, தமது நண்பர்கள் போல் அங்கு வந்த பக்த கோடிகள் மகிழச்சியுடன் முகமன் கூற, வரவேற்பளிக்கும் காவேரியில் நீராடி, அங்குள்ள சக்கரவாகப் பறவையின் செருக்கையடக்கும் துகில் நீங்கிய வட்டமான மென் முலைக்குவடுகளுடன் வாதாடும்படியாகச் சேர்ந்த பொற் குடங்களை இடையிடு தாங்கி நீராடுந்துறையில் ஒய்யார மாக உள்ள தமிழ் நாட்டு நங்கையரின், இணையற்ற சாதுரியத்தைக் காட்டும் மெல்லிய இனிய மழலை மொழிப் பேச்சைக் கேட்கும் வேட்கையுடன் தெரிந்தும் தெரியாதது போல் வழி கேட்கும் வழிப்போக்கர்களுடன் கூட நகர் போந்து வேதமோதும் ஓசையுடன் ஆறு சமயங்களைப் பற்றிய வியாக்கியானம் செய்யும் போதெழும் முழக்கங் களுடன் விருந்தினருடனுறையும் அந்தணரில்லங்களைக் கடந்து மணிமயமான தீபங்களால் சூரியனொளியுடன் மாறு கொள்ளுமாறு பிரகாசித்து அழகு பெற்றுள்ள கோபுரங்களைப் பார்த்து மகிழ்ந்து கோயிலுட்புகுந்து திருவரங்கப் பெருமானைத் தரிசித்துத் திருகோல அழகைக் கண்டு வியந்து பாராட்டிப் பரசையமாகப் பாடி நின்றான்.

ஆசு கவிதையாகச் சில பாடல்கள் இயற்றிப் பாடி வணங்கினான். பின் அக்கந்தருவன் அவ்விடம் நீங்கிக் கிழக்கே சென்று மேடைகளில் வைரக்கற்களின் ஒளி வீச்சால், யமுனா கங்கை வெள்ளத்தில் திரியும் கெண்டை மீன்களை நினைவூட்டுவதும், மேடைமேலுள்ள அழகிய மடந்தையரின் கண் வீச்சுகளை நினைவூட்டுவதுமான கும்பகோணத்தையடைந்தான், அங்குள்ள ஒளிவெள்ளம் பரந்து இரையிருளெனும் சேற்றைக் கழுவும் மணிகள் பொதிந்த கோபுரங்களையுடைய கோயிலுட் புகுந்து மென் காற்றுப் பஞ்சு பொதிந்தாற் போன்றுள்ள குளிர்ந்த படுக்கையில் படுத்துக்கொண்டும், பட்டுத் தலையணை போன்றுள்ள திருமகளின் மென் முலைகளில் பாதங்களைச் சேர்த்து, அழகாக ஒரு கையைத் தலையணையாகக்

கொண்டு, பொன்னாடை தரித்த இடையில் ஒரு கை வைத்துக் கொண்டு, மற்றிருகைகளிலும் சங்கு சக்கரங்களைத் தாங்கி, காட்சிக்கினியனாகத் திகழும் சாரங்கபாணியைத் தொழுதான். மேலும் அங்குக் கும்பேசனைத் தொழுது தருப்பசயனத்திற்குச் சென்று அங்கு ராமபத்திர சுவாமியைத் தொழுது, வீணை மீட்டி இசைப்புலமை மிக இவ்விதம் துதித்தான்.

"தசரதனின் தவப்பயனாய்த் தரணியினிற் பிறந்தவனே!
கசடறவே தாடகையைக் குடிதொழித்துச் சிறந்தவனே !

வஞ்சகரைக் கொன்றுமுனி வரன் வேள்வி காத்தவனே !
அஞ்சிலையைப் பெண்ணாக்கும் அடித்துகள் தான்
பூத்தவனே !

கரும்பொப்ப அரன்வில்லைக் கடிதினிலே ஒடித்தவனே !
விரும்பிவந்த சீதையினை வெற்றிமணம் முடித்தவனே !

பரசுராமன் செருக்கொழித்த பார்புகழும் கண்ணியனே !
அரசிழந்து தந்தைசொல் ஆதரித்த புண்ணியனே !

அடிபணிந்த குகனிடத்திற் கன்புடனே வந்தவனே !
படிபுகழும் பரதனுக்குப் பாதுகைகள் தந்தவனே !

வஞ்சியென வருமரக்கு வடிவுதனைக் குலைத்தவனே !
மிஞ்சுவலிக் கரன்படைகள் வெருண்டோட அலைத்தவனே !

மானெனவே வந்தகொடு மாரீசன் தனைக்கொன்றோய் !
ஊனியைந்த மலைக்கவந்தன் உடல்வெட்டிப் பகை
வென்றோய் !

சாலஇனித் திடுகனிகள் சபரிதர உண்டவனே !
வாலிதனைக் கொன்றிடவே மறைவழிகள் கண்டவனே !

அலைகடலின் செருக்கழித்து அணைகட்டிச் சென்றவனே !
தலைபத்தும் நிலையற்றுத் தரணிவிழ வென்றவனே !

சீதைதுயர் தீர்த்தருளித் திக்கெட்டும் ஆண்டவனே !
ஏதமிலா தெமையாண்டு இன்பருள வேண்டுவனே !"

இவ்வாறு பலவாறு துதித்து அவ்விடத்தை விட்டு நீங்கி, சேது பந்தனத்திற்குச் சென்று அங்கு ராமேசுவர சுவாமி யைத் தொழுது அங்கிருந்து அனந்தசயனத்துக்குச் சென்று பத்மநாப சுவாமியைத் துதித்து அவர் சன்னிதியில் சின்னாள்கள் இசைப்பாடல்கள் யாழ்மீட்டிப் பாடிக் கொண்டிருந்தான். நான் இசைப் பிரியன் ஆதலினால் காது கொடுத்து அங்கங்கே பாடும் பாடல்களைக் கேட்டுக் கொண்டு, பார்வையைச் செலுத்தி இவையாவும் அறிந்து கொண்டேன். இவ்விதமாக அனந்த பத்மநாபன் சன்னிதி யிலிருந்து மேற்றிசை நோக்கிச் சென்று அடர்ந்த சோலை யொன்றில் தங்கித் திருமாலை நோக்கித் தவம் செய்யத் தொடங்கி விட்டான். அதனால் அது முதற்கொண்டு அந்த இசை வல்லுநனின் மெல்லிசையமுதத்தை என் காதுகள் பருக இயலாது போயிற்று" என்று கூறி அந்தத் திசையில் தன் பார்வையைச் செலுத்தி 'அதோ! பத்மாசனத்தில் அமர்ந்து திடமான யோகத்தில் லயித்துள்ளான்' என்றான், என்று கூறவும் அப்பூங்கொடியாள், 'அதியற்புதம்! இதெல்லாம் தங்கள் கண்கட்குப் புலப்படுகின்றனவா ?' என்று கேட்கச் 'செந்தாமரை போன்ற முகமுடையவளே! சந்தேகமிருந்தால் இப்போது உன் தோழிகளைத் தூர அனுப்பிவை. அங்கு நடப்பவை யாவும் தெரிவிக்கின்றேன்' என்றான். எனவும் 'ஓ! மகாத்மா, தங்களைப் பரிட்சிக்கும் தகுதி எனக்குண்டா ? தங்கள் சொல்லுக்கு ஐயமுண்டோ ?' என்றாள்.

அதற்குச் சித்தபுருஷன் "அதனால் என்ன ? இதில் என்ன தப்பிருக்கிறது" என்று கூற, தோழிகளைத் தூர அனுப்பிவைத்துவிட்டுப் "பெண்ணே! அவனது தீர்த்த யாத்திரையும் தவமும் உனக்கு நிதர்சனமாகக் காட்டித் தெளிவித்தாலல்லவா உன் மனத்தின் குறை தீரும்? தொலைவு பற்றி எண்ணலாம்! ஆனால் தொலை தூரம் செல்வதன்றி வேறுவிதமாகத் தெளிவிக்கும் உபாயமில்லை"

என்றான். இதைக்கேட்டு அருகிலிருந்த மரத்திலிருந்த கிளி "புண்ணியாத்மாவே! உன் சொற்களில் எங்கேனும் ஐயமேற்படுமோ? நீ சொன்னவை யாவும் உண்மை என்று தெளிந்து கொண்டேன்" என்றது.

அந்தக் கிளியைக் கண்டு அதிசயமுடன் கலபாஷிணி "கிளியே! எப்படி உண்மையெனத் தெளிந்தாய்? மெய்ம்மை கூறுவாயாக! முன்பெங்கிருந்தாய்! திறன் மிகுந்த அறிவொளியாகக் காணப்படுகிறாய்" என்றாள். அதற்குக் கிளி இப்படிக் கூறிற்று. "ஏ பெண்ணே! என் வாசஸ்தலம் நந்தனவனம் ஆகும். கண்ணபிரான் முன்பு விண்ணுலகிலிருந்து பாரிசாத மரத்தைக் கொண்டு வந்த போது பிற பறவைகள் பறந்து விண்ணுக்கேக, என் மனைவி பிரசவ காலமாதலின் பறக்க இயலாமல் "எப்படியாயினும் ஆகுக! இங்கே தான் இருப்பேன்" என்று ஒரு பொந்தில் மறைந்திருந்தாள். என்னுடன் அழைத்துச் செல்ல இயலாததால் குஞ்சுகள் இறக்கை முளைத்து வளரும் வரையும் வந்து போய்க்கொண்டிருக்கும்படி என மனைவி கூறினாள். இந்த உத்தியான வனத்தைவிட நந்தவனம் சிறப்பல்லவே? ஏன்? அங்குப் போய்க்கொண்டிருக்கிறாய்" என்பாள். "நீ சொல்லுவதுண்மைதான்! எனினும் விண்ணகத்து பந்துக்களின்மேல் பாசம் விடாததால் அவர்களைப் பிரிந்திருக்க இயலாதென்று" கூறி விண்ணுலகுக்கும் மண்ணகத்திற்கும் வந்து போய்க்கொண்டிருப்பேன். இத்தகைய நான் இப்போது விண்வெளியில் பறந்து செல்லும்போது 'மணிகந்தரன் என நீங்கள் பேசுகின்ற சொல் காதிற்பட்டது. அவனைப் பற்றிப் பேசக் காரணம் யாது? என்று அறியச் சிறிது நின்றேன். இந்தச் சித்தபுருஷன் உனக்குச் சொன்ன மணிகந்தரனின் தீர்த்த யாத்திரையும், தவம் செய்யும் செய்தியையும் உண்மையாக நானறிந்த விதத்தில் விவரித்துச் சொல்கிறேன். கேள், இந்திரன் சசியுடன் கூடி நந்தவனத்திற்கு வந்திருந்தபோது ஓர் ஒற்றன் வந்து 'தேவா! நான் இருந்த வனத்திற்குத் தீர்த்த யாத்திரை செய்யும் ஒருவன் சில நாட்களுக்கு

முன்னர் வந்து தவம் செய்யத்தொடங்கினான். அவன் தவத்தினளவு தெரிந்து கொள்வதற்காக இத்தனை நாட்கள் அங்கேயே தாமதித்து இருந்தேன். அவன் தவ வலிமை நாளுக்கு நாள் அதிகமாவதால் சொல்ல வந்தேன். அவன் காசி, கயை, பிரயாகை, புருஷோத்தமம், அஹோபிலம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களும் தீர்த்தா ஸ்தலங்களும் பார்த்துவிட்டு வந்தானாம். நான் கேட்டதற்கு முன்பொருநாள் இதைச் சொன்னான். அவனது தினமும் குளித்த செஞ்சடையிற் பொலிந்த சிரசில் தவ வலிமையால் ஏற்பட்ட தீக்கொழுந்துகள் சுட்டெரிக்கின்றன. தேவாதிபனே! 'எட்டு மாதங்கட்கு முன் இங்கு யார் வந்து தவஞ் செய்யினும் எனக்குச் சொல்க! வெனக் கூறி அவ்வனத்திற்கு என்னை அனுப்பினாய்' என்று கூற, இந்திரனும் 'ஆமாம்! உன்னிடம் அப்படிச் சொல்லி அனுப்பினேன்' என்று கூறி ஒற்றனை அனுப்பி வைத்தான்.

பின் ரம்பையை வரவழைத்து ரம்பை வந்ததும் ஒற்றன் கூறியபடி தவம் செய்யும் துறவியைப் பற்றிக் கூறி 'மெல்லிடையுடைய பெண்ணே! அவன் இத்தகைய கடும் தவம் செய்வது என் இந்திர பதவியை அடைவதற்காகத் தான் இருக்கும். இதற்கு இப்போதே ஓர் உபாயம் செய்து தவிர்த்தாக வேண்டும். இதைப்பற்றி ஆராயாமல் சிறிது மெத்தனமாக (தாமதமாக) இருந்தால் என்ன ஆகுமோ? தினையளவு தாமதத்தால் பனையளவு பயன் தப்பிவிடும் என்று சொல்லக் கேட்டதில்லையா? ஆதலின் இத்தகைய வேலைகட்குத் துணை புரியும் திறன் உன்னிடம் இருப்பதை அறிவேன். கடைக்கண் வீச்சுகளின் புத்தொளியாகிய வளைகளாலும், இளநகை என்னும் வெண்ணுரையலைகளாகிய திரைகளாலும் விற்புருவத்தினின்றும் விடும் பார்வைகள் எனும் அம்புகளாலும், தேன் சிந்தும் மழலைத் தீஞ்சொற்கள் எனும் வாய் கட்டும் மந்திரத்தாலும், நீ முயன்று முனிவனாகிய வேங்கையை யகப்படுத்தித் தவவலிமை கெடுத்து, அவனை விளையாட்டு மிருகமாக்கிக் காதல் வலையில் விழச் செய்வாயாக!' என்றான்.

அதைக்கேட்ட ரம்பையும் இந்திரனை நோக்கி 'அம் முனிவன் யாரென நினைத்தீர்களோ? அவன் நாரத முனிவனின் சீடனாகிய மணிசுந்தரன் என்று கேள்விப்பட்டேன். அவனை இதற்கு முன்பே பார்த்திருக்கிறேன். எமது ஒய்யாரங்களையெல்லாம் ஒரு நாளும் பொருட்படுத்தியது இல்லை. இன்றோ தவம் செய்யும் முயற்சியில் முனைந்துள்ளான். ஆதலின் தேவரீர் செயலை நிச்சயமாக முடிப்பேன் என்று உறுதிகூற முடியாது' என்று கூறவும், இந்திரன் அவ்வொட்கண் நங்கையைக் கண்டு 'உனக்கு முன்னைவிட அதிகம் இளமையும் உருவ எழிலும் தரும் வரம் கொடுத்துள்ளேன், ஐயமின்றிச் செல்க. காரியம் நிச்சயம் கைகூடும். உன் திறமை முழுவதும் காட்டுவாயாக' என்று சொல்லி அவளை உற்சாகப்படுத்தி அனுப்பினான். அவளும் மிகுந்த உற்சாகத்துடன் ஆடை அணிகள் பூண்டு எழில்கொழிக்கும் உடல் ஒளிமிகத் தோழியருடன் கூடிப் பூமிக்குப் பயணமானாள்' என்று கூறி, 'இதனால், பூங்கொம்பன்னாய்! இந்த மகாத்மாவின் சொற்கள் யாவும் உண்மைதான் என்பதில் ஐயமில்லை' என்று கூறி, மேலும் இவ்வாறு கூறிற்று. 'பெண்ணணங்கே! நான் அந்த நந்தவனத்தில் இருந்து புறப்பட்டுவரும்போது ரம்பையும் தோழிகளும் தலைமியற்றும் மணிசுந்தரனிடம் சென்று கொண்டிருப்பதை அறிந்தேன். இப்போதைக்கெல்லாம் அங்கு அடைந்திருப்பார்கள்' என்றிவ்வாறு சொன்ன கிளியின் பேச்சுத்திறனைக் கண்டு சித்தம் மகிழ்ந்த அச் சேயிழையாள் கிளியைப் பலவாறு பாராட்டிக் 'கிளியே! உன் இன் சொற்கள் காதுகட்கு அமுதவெள்ளம் பாய்ச்சியது போலிருக்கின்றன. உன் திறனை இவ்வளவென்று அளவிட்டுரைக்க எனக்கென்ன தகுதியிருக்கிறது. ஆதலின் உன்னைப் பிரிய எனக்கு மனமில்லை. ஆனால் உன் மனைவியிடம் செல்ல வேண்டியிருக்கிறதல்லவா? சென்று வருக' என்று கூறிக் கிளியை அனுப்பி வைத்தாள்.

மூன்றாம் அத்தியாயம்

அவ்வளவில் சித்தன் அந்த மெல்லியல் மடந்தையை நோக்கி 'நான் உன்னிடம் வந்தது என் செவிக்கின்னமுதப் பாடலிசை கேட்பதற்கன்றோ? ஆதலின் யாழ் கைக் கைக்கொண்டு நீ சிறிது பாடி மகிழ்விப்பாயாக' என்றான். எனவே 'அப்படியே ஆகட்டும்' என்று கூறி இசைக் கலையில் அந்நாள் முழுதும் கழிப்பித்தாள். இவ்விதமாகக் கலபாஷிணி தன் இசைத் திறமையால் அவனது பொழுது போக்கி மகிழ்வித்தாள். இதற்கிடையில் ரம்பையும் தோழிகளும் மணிசுந்தரனின் தபோவனத்திற்கருகில் சென்று நிலத்திலிறங்கினார்கள்.

முகிற்படலங்களுடன் சினந்து கூடிவரும் மின்னற் கொடிகளோ என வரும் பூங்கொடி போன்ற உடல்கள் தோன்ற, மின்னலைப் பிரிந்த பிரிவுத் துயர் தாங்காது பின்வரும் முகில்களோ எனும்படியாகக் கூந்தல் திகழ அவ்வர மகளிர்கள் நில மக்கட்குத் தோன்றினார்கள்.

தளிர்க் கரங்களும், பாதங்களும், செவ்வொளி காட்டி அந்தி நேரத்தழகுதனை அகாலத்தே காட்ட, அவர்தம் நகங்களின் வெள்ளொளி விண்மீன்களின் பொலிவைத் தோற்றுவிக்க, அவர்களது முகமலர்களின் எழில், பற்பல சந்திரர்கள் உதித்தாற் போன்ற பாங்கினை விளைப்ப மண்ணுலகோர்க்கு மருட்கையும் மகிழ்ச்சியும் உண்டாக்கினார்கள்.

பூமியில் இறங்கி வான் அரமகளிர்கள் மணிகந்தரனின் தபோவனத்திற்குச் சென்றார்கள். அவர்களது பார்வை நீலமலர்த் தோரணம் கட்டியதுபோலத் திகழச் சுற்றிப் பார்த்தார்கள். அவ்வளவில், பூக்களது மகரந்தப்பொடி சிந்தி மஞ்சள் வண்ணச் சேலைபோல் திகழ, திரிதரு வண்டினங்கள் கூந்தல்போல் அசைந்தாட, பறவைக் கூட்டம் அணிகலன்கள் போல் ஒலிப்ப வனலட்சுமி அன்புடன் எதிர்கொண்டழைக்க எழுந்தனளோ எனத் தோன்றிற்று. வண்டினமும், சுரிகுழலும், பூங்கொடிகளும் மெல்லிடைகளும், பூங்கொத்துகளும், வீங்கிள முலைகளும் மலர்க்கூட்டமும், மணிமுறுவலும், ஒன்றோடொன்று தடுமாறி நிற்ப, வான் மகளிர்கள் வனந்தனிலே பாலும் நீரும் போலக் கலந்திணைந்து எழிலூட்டினார்; பசுக்கள் நக்குவதால் அறிதுயில் கொண்ட புலிகளும், புலிகள் முலைக்காம்பிற் பால் குடிக்கச் செல்லும் மான் குட்டிகளும் மான் மறிகள் துள்ளலைக் கண்டின்புறும் சிங்கங்களும் சிங்கங்கள் நகத்தால் சொறிய இன்புறும் களிறுகளும் களிறுகளின் காலடிகளில் ஆடும் பாம்புகளும், பாம்புப்பட நிழலில் உறங்கும் தவளைகளும், தவளைகளை விட்டுப் பிரியாத எலிகளும், எலிகளை வளர்க்கும் பூனைகளும் உடையதாகி அந்தத் தபோவனம் அவ்வான் அரமகளிர்கட்கு வியப்பை உண்டாக்கிற்று.

கண்ணாற்கண்ட புனிதத்துவமோ, குவிந்துள புண்ணியமோ, உருவுடைய சாந்தமோ, வடிவு பெற்ற தவமோ, ஒன்று திரண்ட அமைதியோ, திரண்டு கிடக்கும் வைராக்கியமோ, கை கால்களையுடைய யோகமோ, உடல் பெற்ற தத்துவ ஞானமோ எனும் படியாகத் திகழ்கின்ற அந்த முனிவனைக் கண்டார்கள். அவனது நகங்கள் எனும் மதி நிலவிற் குவிந்த எழிலாரும் கரகமலங்களைச் சூழ்ந்த தும்பிகளோடும் கூடி அவர்கள் நின்றார்கள். அசைவற்ற உறுதியான சமாதி நிலையிலுள்ள அம்முனிவனைக்கண்டு அவன் பார்வைக்கு எதிர் செல்ல அஞ்சிப் பின்வாங்கிய அடியுடன் வான் மகளிர்கள் மருண்டனர். அப்போது

ரம்பை, மிகுந்த பயத்துடன், 'இந்த முனிவரன்றன் உக்கிரமான உருவத்தைக் கண்டால் என் உடம்பு புல்லரிக்கின்றது. தேவர்கோன் கட்டளை எவ்விதம் நிறைவேறுமோ? ஆராய்ந்து பாராமல் சம்மதித்துவிட்டேன் என்செய்வது" என்று மனங்கலங்கினாள். பின்னர் மீண்டும் வானவர்கோன் கட்டளை என்பதால், தைரியம் கொண்டு உறுதியான அறிவுடன் தெம்புகொண்டு தோழிகளுடன் அந்த வனத்தில் அம்முனிவனுக்கருகிலே விளையாடத் தொடங்கினாள்.

அந்த வனத்தில் ஒருவரை ஒருவர் நாடியும், மணமிகு பூம்புதர்களில் கூடியும், தேன் மழையில் நனைந்து, ஒருத்தி பறிக்கும் பூவிற்கு ஓடியும், யாழிசை மிழற்றிப் பாடியும், ஒருவரை ஒருவர் கையால் இழுத்து விளையாடியும் திரிந்து கொண்டிருந்தனர். 'தளிர் மென்மேனியுடைய தையால்! இத்தளிரின் அழகுக்கிணை வேறெங்குளது? ஏன் திரும்புகிறாய்' என்றும், 'அந்தத் தாமரைக் கண்ணாளுடன் பூசலேனோ? விளையாட வேறிடமில்லையா?' என்றும், 'மல்லிகைப் பூக்கட்காக வருந்துவதேன்! இந்த ஆண்டு முழுவதற்கும் போதுமன்றோ?' என்றும், கூறிக்கொண்டு, வசந்த இந்தோள ராகங்களில் அணிகலன்கள் ஓசையிட, வானர மகளிர் கானனம் எதிரொலிப்ப, பானலங்கனிந்த இசை பாடியும், ஓடியாடியும் திரிந்துகொண்டிருந்தனர்.

எழிலுடைய ரம்பை முனிவனுக்கு எதிரிலேயே மிகுந்த ஒய்யாரமுடனும், மயிலொத்த சாயலுடன் பயிலு மன்னத்தின் மென்னடைப் பாங்குடனும், குயிலிசை வென்ற குரலுடனும், விரிந்தலையும் கூந்தலுடனும், சிறிதே தளர்ந்த முந்தாணியுடனும், அசைந்தாடு மாலைகளையுடைய பொங்கிள வனமுலைகளுடனும், திரிந்துகொண்டிருந்தாள்.

அப்போது கடவுளை வேண்டிக் கண் மூடித் தியானத்திலிருக்கும் முனிவன் அம்மடந்தையரின் ஓசை கேட்டுக்

கண்ணிமைகள் திறந்து எதிரிலுள்ள பூங்கொடியாளைக் கண்டுகொண்டு அவளது எழில் மனத்தில் கலக்கமூட்ட உறுதியுடன் கண்களை மீண்டும் மூடிக் கடவுளை நினைந்து தியானம் செய்யத் தொடங்கினான். பூங்கொடியொத்த பொற்பாவையின் எழில் கண்ட கண்கள் மீண்டும் காண்டு மென மனத்தைத் தூண்ட, கண் திறக்க வேண்டுமெனச் சிறிது இமைகள் திறந்து மீண்டும் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று கண்களை மூடிக்கொண்டும், மீண்டும் விழி திறந்தும் மீண்டும் மீண்டும் மூடியும், காதலும் உறுதியும் கலந்து போராட மனக்குழப்பத்தையுற்றான்.

அவ்வளவில் எதிர்கால நிகழ்ச்சிகளை இயற்றும் விதி வலியால், மன்மதன், முனைந்து அம்முனிவனின் (மணிசந்தரனின்) மனது ரம்பையிடம் செல்லுமாறு அவனுடைய உறுதியெனும் கடினமான சங்கிலியைப் பூவம்புகளால் அறுத்து எறிந்தான்.

கடுமையான தவமெனும் தீயில் வெந்த அவனது உள்ளம் அத்தளிர்போன்ற மேனியுடைய ரம்பையின் அழகென்னும் அமுதக் குளத்தில் திளைத்து மீண்டுவர இயலாது நின்றது. இவ்விதம் மையல் கொண்ட மணிசந்தரன் பிடி நடையாளின் எழில்மிகு தோற்றத்தைக் கண்டு 'இவள் ரம்பை தானா? இளமைப் பொலிவும், மிக்க எழில் கொண்ட உருவத்தழகும், என்றும் இத்துணை யளவு கண்டேனில்லை. இவ்வற்புத அழகு எங்ஙன மமைந்ததோ?' என் நினைந்த அச்செவ்விதழாளின் இன் சொல்லையும் அரவணைப்பையும் வேட்டு, அவளது நடையுடை பாவனைகளை ஆர்வத்துடன் பார்த்துத் தன் மனதிற்குள் 'மகிழமரம் அவள் உறவால் மகிழ்ச்சி கொண்டது. பாலை நிகர்த்த இன்சொற் பாவையின் நட்பால் பாலைமரம் பாங்குடன் பூத்தது. பாதிரிமரம் பனி மொழியின் நிந்தனையினாலே பயன்பெற்றது. முகைவென்ற பல்லினாள் முறுவலிப்ப முல்லை மலர்ந்தது. குராமரமோ மென்கொடிபோன்ற நங்கையின் அணைப்பால் கோலங்

கொண்டது. அழகிய அசோக மரமோ அவளது அடிகள் உதைத்ததும் அலர்ந்தெழில் கொண்டது. கோமளவல்லி பாடியதால் குருகத்தி மலர்ந்தது. கவின்மிகு மாமரமோ கண்டதுமே பூத்துத் தீண்டியின்புற்றுப் பொலிகின்றது. அவள் உயிர்த்தலும் சண்பகம் சந்தமிகப் பூத்தெழிலுற்றது. இம்மடந்தையின் புணர்ச்சியில்லாது சுவர்க்க பதவி கிடைப்பதைவிட இவளது உறவால் இன்புற்று மலரும் மரங்களாக இருப்பதே பெரும் பேறாகும். துறவியின் கடமைகட்கிது வெகுதூரமென்று மக்கள் சிரித்தால் சிரிக்கட்டுமே! சிறந்த அரிதிற் பெற்ற தவவலிமை சிதைந்தால் சிதையட்டுமே! தத்துவ ஞானத்தின் பயன் மாய்ந்தால் மாயட்டுமே! இம்மடந்தை நல்லாளை மருவாமல் என் ஆசை அடங்காது. என் வேட்கையை அடக்கவும் முடியாது' என்று துணிவுடன் சந்தேகத்தைப் போக்கி, அவ்விடத்தை விட்டகன்று ரம்பையின் அருகடைய அவளிருக்குமிடத்திற்குச் சென்றான்.

சென்று 'இளநங்காய்! இந்த வனத்திற்கு எங்கிருந்து தோழிகளுடன் வந்தாய்? வரக்காரணம் யாதோ? என் காது குளிரச் சொல்வாயாக' என்றான். அதற்கவள் 'விளையாட வந்தேன்' எனவும், கேட்டு 'அதெல்லாம் பொய்! என் தவத்தின் பயனாக வந்தாய்' என்றான். அவளோ மென்முறுவல் காட்டிக் கடைக்கண் வீச்சுடன் தலைகுனிந்து நின்றாள். கொடியிடையாள் தனது விருப்பத்திற்கிணங்குதல் அறிந்து மணிகந்தரன் துணிந்து அவளது முந்தானையைப் பிடித்திழுத்தான்.

அவள் 'தாங்கள் எத்தகைய பெரியவர்! பக்கத்துள்ள தோழிகளைச் சிறிதும் கவனிக்க மாட்டீர்கள் அல்லவா?' என்று கூறி முந்தானையை மார்புடன் கையால் அணைத்துப் பிடித்துப் பிணங்கினாள். அவ்விடத்தில் இங்குமங்கும் பூப்பறித்துக் கொண்டிருந்து பூங்கொடியார்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டு 'அடாடா!

ஐயாவுக்குக் காதலுணர்வுண்டாகிவிட்டது' என்று கூறி 'ரம்பையின் எழிலுக்கு மயங்காதாரும் உண்டோ?' என்று சிரித்துக்கொண்டு தூரமாகச் சென்றார்கள்.

தவமுனிவனும் மேன்மேலும் பெருகும் வேட்கைப் பெருக்கால் அடக்க முடியாத உணர்ச்சி வசத்தனாகி நங்கையை அணைத்துக்கொண்டு, கன்னத்துடன் கன்னம் பின்னிப் பொலிய, நடை தடுமாற இளந்தளிர்ப் பந்தருடைய பூம்புதரில்லத்திற்கு அழைத்துச் சென்றான். இங்ஙனம் அழைத்துச் சென்று, கொழுத்துப் பூசலிடும் வண்டுகளின் உராய்வினால் உதிர்ந்து நிறைந்து கிடக்கும் பூக்களும் இலைகளும் விரித்த படுக்கையாக விளங்கி இன்புறுத்தும் அப்பூம்புதரில்லத்தில் அவ்விருவரும் இன்பத்தில் திளைத்து விளையாடினார்கள்.

இடையீடற்ற நெருக்கமான அரவணைப்புகளால் பிணைந்தும், இணைந்தும், ஆசைபோல் வளரும் மென் முலைகளை வருடியும், தடையின்றிப் பதித்த நகக்குறி பற்குறிகளுடனும், காமபோகத்தில் திளைத்த துறவியைக் கண்டு ரம்பை, 'சாது மிரண்டால் காடு கொள்ளா தென்பது சரியாகிவிட்டதென்று' சொல்லிச் சிரித்தவாறு, செயலுக்கு எதிர்ச்செயல் செய்து இன்பூட்டினாள். அப்போது, அதற்குமுன், துவாரகை நகரத்தில் உள்ள கலபாஷிணியின் இசை கேட்டுக் கொண்டிருந்த சித்த புருஷன் பேச்சுவாக்கில் மணிகந்தரனின் பேச்சை பிரஸ்தாபிக்கவே, நினைத்துக்கொண்டு கலபாஷிணியும் சித்தரைப் பார்த்து 'இந்திரன் ஏவலால் வந்த ரம்பையின் கதை என்னவாயிற்று? மணிகந்தரனின் தவம் எப்படியிருக்கிறது? நீங்கள் அங்கே பார்வை செலுத்திக் கண்டு கூறுங்கள்' என்றாள். சித்தனும் தனது திவ்விய திருஷ்டியினால் பார்த்துச் சிரித்துக்கொண்டு, 'இனிமேலெங்கே தவம்? மணிகந்தரன் அம்மடந்தையுடன் பூம்புதரில்லத்தில் புது மண மதுவின் தேறலுண்டு களிக்கிறான்' என்றான்.

அதைக்கேட்ட கலபாஷிணி அந்த மணிஸ்தம்பன் எனும் சித்தனின் மகிமை கண்டு வியந்து பலவாறு புகழ்ந்து ஓ! மஹாத்மா' ஓரிரு நாட்கள் என் இல்லத்தில் இருந்து விட்டு நான் செய்யும் மரியாதைகளை ஏற்க வேண்டும்' என்றாள், அதற்கவன் 'இசை கேட்கும் நசையால் உன் இல்லத்திற்கு வந்தேனன்றி. பிற சாமியார்களைப்போல் நகரங்களில் இருந்துகொண்டு மந்திர தந்திரங்களைக் காட்டிக்கொண்டு இருப்பவனல்ல. ரகசியமாக வைத்திருந்தால் நீ செய்யும் உபசாரங்களை ஏற்றுக்கொள்கிறேன்' என்றான். எனவும் 'அப்படியே செய்கிறேன்' என்று கூறித் தனது வீட்டுப் பூங்காவில் இருத்தி ரகசியமாக அந்தச் சித்தனுக்கு விருப்பமான உணவு வகைகளைத் தந்து மகிழ்வித்து அங்கு யாரும் போகவிடாமல் தானே மரியாதைகள் செய்து இரண்டு மூன்று நாள்கள் அவன் உள்ளத்தைத் திருப்தி செய்து, தன் மனத்துள் நளகூபரனை அடையும் விருப்பம் இருந்ததனால். அவன் காதலியான ரம்பையின் நிலையறியப் பேச்செடுத்து இவ்விதம் கூறினாள். 'நல்லோய்! மணிசந்தரன் தனது தவத்தைக் கெடுத்துக் கொண்டதற்கு அஞ்சுகிறேன். தற்போது மீண்டும் தவ முயற்சியிலீடு பட்டுள்ளானா? ரம்பையுடன்தான் இருக்கின்றானா? தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.'

அதற்குச் சித்தன் அப்பக்கம் தன் பார்வை செலுத்திச் சிரித்தவாறு 'பெண்ணே! இனி தவம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இதோ! ரம்பையின் அரவணைப்பில் தான் அப்பெரியோன் இருக்கின்றான்' என்றான். எனவும் அவர்கள் அவ்விடம் விட்டுப் போவார்களா? அங்கே தானிருப்பார்களா? ஐயமின்றி மீண்டும் பார்த்துச் சொல்லுங்கள்' என்றாள். சித்தனும் 'எனக்கையமில்லை! எத்தனை தடவை வேண்டுமானாலும் பார்க்கிறேன். கற்சிலையை அடித்தால் வலிக்குமா? எனது உறுதிக்குத் தளர்வில்லை' என்று சொல்லி மணிசந்தரனின் திசையை நோக்கிப் பார்வை செலுத்தி ஒரு கையால் பேசாமலிருக்குமாறு சைகை காட்டி அசையாது

சிறிது நேரம் இருந்து கேட்டு 'அடடா! விலைமகளிர் தன்மையே இதுதான்' என்று கூறிச் சிரித்தான்.

அதற்குக் கலாபாஷிணி 'அதென்ன தெரிவிக்கவும்' என்று மீண்டும் மீண்டும் கேட்க 'உனக்கெப்படிச் சொல்வேன்! அடக்க முடியாமல் சிரிப்பு வருகிறது' தவவலிமை மிக்க துறவியான மணிகந்தரனின் விரதத்தைக் கெடுத்த ரம்பை முடிவிற் செய்த அநியாயத்தைக் கேள். கலை நிலையறிந்து கடித்து மெய்மறந்தின்புறும் முனிவனின் மனம் 'சீ'யென்று போகும்படியாக 'நளகூபர! விடு! விடு! களைத்துள்ளேன்' என்று ரம்பை கூறினாள். இவ்வாறு சித்தன் கூறவும் அவனைப் பார்த்துக் கலபாஷிணி 'மகாத்மா' இத்துணை நகைப்பெதற்கு? அத்தாமரைக் கண்ணாள் என் செய்வாள்? எழிலும் இளமையும் பொருளும் உடைய குபேரகுமாரன் தன்னைக் கொண்டவனாதலினால் அவள் மனம் பிறனிடம் செல்லுமா? நளகூபரன் அவளைப் பிரிந்து தொலைவில் எங்கிருக்கிறானோ? அவனை ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்றாள்.

சித்தனும் சிரித்து 'உனக்கிதுதானே முக்கியம்' என்று கூறி, நாற்புறமும் பார்த்து அவனிருக்குமிடம் கண்டு கலபாஷிணிக்கு இப்படிக் கூறினான். 'தான் பிரியாதிருந்தால் அவன் மையலில் சிக்கி, ரம்பை தவத்தைக் கெடுக்க முடியாது. இந்திரனின் சினத்துக்கு ஆளாக நேரிடும். ஆதலின் தேவகாரியங்கட்குத் தடையின்றித் தனித்திருப்பது இன்றியமையாத கடமையாதலின் நளகூபரன் பிரிவாற்றாமையுடன் மணிகந்தரனின் தபோவனத்திற்கருகிலேயே குயில் பயில் மாமரச் சோலையிலே தளிர்களும் பூக்களும் குலுங்கும் மரத்தடியில் இருக்கிறான்' என்று கூறி மேலும் இப்படிக் கூறினான். 'பெண்ணே! இப்போது அவன்மேற் சிந்தை வைத்து இசையமுதம் பொழியும் பாடல்களைப் பாடுதல் ஒழிந்தாய்! நான் போய் வருகிறேன். வேறொரு வேலையிங்கில்லையல்லவா? விடை கொடுத்தால் போய் வருகிறேன்.''

இவ்விதம் கூறியதும் கலபாஷிணி 'மகாத்மா! தங்களை நான் என் குலதெய்வமாக நம்பியிருக்கிறேன். என் வாழ்க்கையை எவ்விதம் செய்வீர்களோ' என்றதும் 'என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இப்போது வந்தாற்போல் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருப்பேன்' என்று சித்தன் கூறினான். அதற்கவள் 'ஆகா! நன்றாகச் சொன்னீர்கள்! இன்னொரு நாள் வந்து என்னைக் காப்பாற்றவா? என் உள்ளத்தில் உள்ளவற்றைச் சொல்லிவிடுகிறேன் கேட்பீர்களாக' என்றாள். மேலும் 'இப்போதே என்னை அவரிடம் எவ்விதத்தாயினும் சேர்க்கவேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை. பெண்களின் பொறுமை கணமேனும் நிலையற்றதன்றோ? எனைக்காக்க இஃதொன்றே வழியாகும். தங்களைத் தவிர இத்தகு செயற்கருஞ் செயல் செய்து உய்விப்பார் யாருமில்லை' என்று கூறினாள்.

இவ்விதம் கலபாஷிணி கூறவே சித்தன் இப்படிக் கூறினான். 'கமலத்தை வென்ற கண்ணாய்! உன்னை இன்றே அவனிடம் சேர்க்கும் உபாயம் இருந்தால் அதை மறைக்கமாட்டேன். உடனே செய்துமுடிப்பேன். சொல்லக் கூடாதுதான். எனினும் சொல்லவேண்டியுள்ளது. உன் பாட்டைக் கேட்கும் விருப்புடைய நான் உன்னை உன் காதலனிடம் சேர்த்து உன்னை உய்விக்கவேண்டி என் மனம் என்ன பாடுபடுகின்றதோ தெரியுமா? நீயே யோசித்துப்பார். திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள நளகூபரனெங்கே? துவாரகையிலுள்ள ஒருவர் இன்றே அடைவதெங்கே? எனினும் எனது குருவானவர் கற்பித்தபடி இந்தச் சிங்க வாஹனத்தில் ஏறிச்சென்றால் நான்கு நாழிகையில் போய்ச்சேரலாம். அதனாலென்ன, இதற்கு மலைப்பானேன். உன்னை இதில் வைத்துக்கொண்டு போகலாமென்றால், ஏ பூங்கொடி போன்றவளே! மற்றச் சித்தர்கள் வேறேதாவது நினைத்துக்கொள்வார்கள். எவர் உள்ளம் எப்படிப்பட்டதோ யாரறிவார்? அது மட்டுமின்றி உன்னைப் போன்றவர்களைத் தொடுவது

என் போன்றவர்கட்குத் தகுதியன்று. இனி வேறு வழியுமில்லை. எனக்குள்ள தொலைக்காட்சி, தொலைக் கேள்வித் திறமைகள் ஒன்றும் இதற்குப் பயன்படாது. இனி நீ சொன்னபடியே செய்கிறேன். சொல்.'

இவ்வாறு கூறவும் அந்தச் சித்தனை நோக்கிக் கலபாஷிணி கூறலுற்றாள். "ஓ! சித்த புருஷ! நீங்கள் எப்படிக் கொண்டுபோனாலென்ன? இதில் சந்தேகமெதற்கு? தங்களுடைய பெருமையை உணராத மூடர்கள் என்ன சொல்லினும் என்ன? பெரியோர்கள் கண்டால் சிறிதும் வேறுவிதமாக நினைக்கமாட்டார்கள். எம்மைத் தொடவே கூடாதெனப் பலவாறு பேசிப் பயமென்ன? இனி என்தோழிகீழி வந்து இடையூறு செய்வார்கள். ஆகையால் உன் பின்னே வைத்துக்கொண்டு என்னை என் காதலனருகிற் கொண்டுசெல்வாயாக!" இப்படிக் கூறவும் சித்தனும் சம்மதித்து, புலித்தோற் சேணமும் பொன்னாலான மிதியும், சங்குமாலையுடனும், கடிவாளத்துடனிணைந்த வசியக்கொடியுடனும், ஒரு பக்கம் கரடித் தோலுறையிலிட்ட வாளுடனும், திகழும் சிங்கவாகனத்தில் தான் முதலில் ஏறி 'என்னைத் தொடாமல் இந்த வாகனத்தின் பின் பகுதியிலேறி, சேணத்திலுற்ற பிடியை ஊன்றிப் பிடித்துக்கொண்டு வரமுடியுமா?' என்ன, அவள் கேட்டுத் 'தாங்கள் இவ்வளவு தயவு செய்யும்போது இனி வராமலிருப்பேனா' எனக் கூறிக்கொண்டே, தனக்கனுகூலமாகச் சிங்கத்தை நிறுத்த, ஏறிக்கொண்டாள்.

ஏறியதும் 'சித்தனே! யாரும் அறியாமல் எப்படிக் கொண்டு போவீர்களோ' என, 'ஐயமெதற்கு? மாடும் வண்டியும் ஒத்திருந்தால் மலைமேலும் போகுமல்லவா?' என்று சித்தன் கூறிக்கொண்டே 'ஹே' என்று அதட்டிச் சிங்கத்தை வானில் செல்ல விட்டான். அடிக்கடி திரும்பிப் பார்த்து 'ஜாக்கிரதை' என்று எச்சரித்துக் கொண்டே விரைந்து சென்றான். மதிற்சுவர், மரஞ்செடிகள், புகைப் படலங்கள் முதலியனவற்றைத் தனக்கு மறைவாக்கிக்

கொண்டு இரகசியமாகக் கலபாஷிணியைக் கொண்டு சென்றான்.

நெடுந்தூரம் சென்றபோதோரிடத்தில், தாங்கள் பாடிய மேகரஞ்சனி எனும் பண்ணிசையால் கூடிய முகிற் படலத்திலிருந்து எதிர் வந்த சில மங்கையரை வியப்புடன் கண்டார்கள். அவர்களது புலமை மிகு பாடலினால் சாரல் பெய்ய நனைந்த வெண் துகிலாடைகளுடனும், கமகமவென மணம் பரப்பியும் அவர்கள் ஒரு தனியின்பந் தந்தார்கள். இப்படி இன்பந்தந்து எதிர்வந்த அவர்களது சொல்லாடலிலிருந்து ரம்பையின் தோழிகள் என உணர்ந்த சித்தன் அவர்களை நோக்கி 'என்ன நீங்கள் எல்லோரும் உங்கள் உயிர்த் தோழியை விட்டுவிட்டு வந்துவிட்டீர்களே! அம்மடந்தை மணிகந்தரனுடன் கலந்துறவாடி இன்னும் சில நாள் அந்த வனத்திலேயே இருப்பாளோ ?' என்றதும் சிரித்துக்கொண்டே அவர்கள் இவ்விதம் கூறினர். 'மணிகந்தரனெங்கே இருக்கிறானோ ? யாருக்குத் தெரியும். இப்போது ரம்பை நளகூபரனுடன் இணைந்தின்புற்றிருக்கின்றாள். 'காதலனின் அரவணைப்பிற் களித்தின்புறும் ரம்பையை அவள் விருப்பத்திற்கு இடையூறுண்டாக்க விரும்பாமல் அங்கேயே விடுத்து நாங்கள் மட்டும் போகிறோம்' என்று கூறிவிட்டுப் போய்க்கொண்டே, 'சிக்குடைய கொடிகளும், கந்தலுடையும், தோலும், சடாமுடியுமுடையவனாகி எப்படி இவன் இந்தச் சிங்க வாகனத்தை நடத்தும் திறமை படைத்தானோ ? இந்த யோகிக்கு இவ்வழகிய இளமங்கை எங்கே கிடைத்தாளோ ? இவள் வானுலகில் ஒருகணமிருந்தாலே போதும். அங்குள்ள ஆடவர்களைத் தன் வலைக்குள் போட்டுவிடுவாள்' என்று சொல்லிக் கொண்டனர்.

அவ்வளவில், நளகூபரன் ரம்பையுடன் கலந்திணைந்திருப்பதைக்கேட்ட கலபாஷிணியின் உளம் வேறுபட்டு இருப்பதையுணர்ந்த சித்தன், திரும்பிப் பார்த்துக்கொண்டு 'இந்தச் செய்தி இவளை மிகவும் கலக்கிவிட்டது' என்று

மனத்துட் கூறிக்கொண்டே சிரித்து, 'ஓ! மடந்தாய்! இப்போது சிறிதும் வருந்தவேண்டாம்! கொஞ்ச நேரம் அறிவைத் திடப்படுத்தித் தைரியமாக இரு. அதற்குள் உன் மனோவேதனை எல்லாமே போக்கிவிடுகிறேன்! என் சொற்கள் தவறாது' என்றான். பின்னர் சித்தன் 'ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கக் கூடாதா' 'சாப்பிடப் போகும்போது ருசியைப்பற்றிக் கேட்பானேன்' என்றான். அவ்விடத்தில் திடீரென இதுவரை தடங்கல் இன்றி வந்த சிங்கம் கழுத்தை நிமிர்த்திப்பார்த்து அசையாமல் நின்றுவிட்டது.

அப்போது 'ஹை ஹை' என்று சத்தமிட்டுச் சாட்டையால் அடித்தும், முன்னே கவளம் காட்டியும், கடிவாளத்தை இழுத்துப்பிடித்தும், நாகப்பிரம்பால் அடித்தும் பலவிதமாக முயன்றும் அச்சிங்கம் முன்னே அடி எடுத்து வைக்காமல் வாலை முறுக்கிக்கொண்டு, கர்ஜித்தவாறு பின்வாங்கியது. அப்போது மிகவும் அஞ்சியவளாகக் கலபாஷிணி 'என்ன? என்ன? இப்போதேனிப்படி நிற்கிறது' என்று கேட்டு, உடல் வியர்த்து, கூந்தல் முடியவிழ மேலாடை சரிந்துவிழ நிலைகுலைந்து சேணத்திலுள்ள பிடியை இறுகப் பற்றி இருந்தாள்.

சித்தன் அவ்வாஹனத்தின் போக்கு தடைபட்ட காரணத்தை ஆராய்ந்து தெளிந்து அந்தப் பெண்ணணங்கைப் பார்த்துப் 'பெண்ணே! பயப்படாதே. சேணப் பிடியை நன்கு பிடித்துக்கொள். பேச்சுவாக்கில் முக்கியமான செய்தி ஒன்று மறந்துவிட்டேன்' என்றுகூறித் தனது வாகனத்தைச் சில அடிகள் பின்வாங்கச் செய்து தரையில் இறக்கி, வாஹனத்தை ஓய்வுகொளச்செய்து 'ஏ மடந்தாய்! இந்தக் கோயிலுக்கருகில் 'மிருகேந்திர வாஹினி! என்ற சக்தி இருக்கிறது. இக்கோயிலுக்கருகில் கீழே மேலே சுற்றுப்புறத்தில் சிங்கங்கள் போகப் பயப்படும். இதை மறந்து நான் எவ்வளவு ஓட்டியும் நம் வாகனம் முன்னே செல்ல மறுத்துவிட்டது. ஆகையால் நாம் அம்மகா

சக்தியை வாழ்த்தி வணங்கிச் சென்றால் போகும் காரியமும் நிறைவேறும், வா போவோம்' என்று கூறி கரடித் தோலுறையிலிட்ட வாளைக் கையிலெடுத்துக்கொண்டு சிங்க வாஹனத்தின் சேணத்தை ஒரு பக்கம் மறைவில் வைத்துவிட்டு, கலபாஷிணியை அழைத்துக்கொண்டு கோயிலினுட்புகுந்து, வெளிப் பிராகாரத்தில் நிறுத்தி 'இத்தேவி பூஜைக்காக மலர்கள் கொண்டுவருகிறேன்' என்று கூறிவிட்டுப் பூந்தோட்டத்திற்குச் சென்றான்.

பசுமை நீங்கி வற்றிய வைக்கோல் கூடையைப்போல நரைத்த முடியுடனும், சிக்கலுற்ற சிலந்தி நூல் போன்ற புருவமுடனும், பொன் கரைசல் போன்ற திரை கொண்ட உடலுடனும், இற்றுவிழும் மரத்துண்டுபோல் தொங்கும் மார்பகங்களுடனும் ஆந்தையின் குரல்போல இருமிக் கொண்டும், மதனன் சென்றுவிட்டதால் பாழடைந்த கோயில் போல விளங்கும் ஒரு கிழவி கலபாஷிணியின் அருகில் வந்து 'பெண்ணே! எங்கிருந்து வந்து சேர்ந்தாய்? அடடா? கொடிய கடுவன் பூனையின் கைப்பட்ட கிளி போல வஞ்சகனாகிய இந்தச் சித்தனிடம் எப்படி அகப்பட்டாய்? எங்குமில்லாத பேரழகுடன் இந்த வனத்துக்கே அலங்காரமாகத் திகழும் உன்னைப் பார்த்ததுமே 'அடடா இந்தக் கருணையில்லாத கொடியவன் கையில் உலகுக்கு ஓரணியாகும் இவளை ஒப்புவித்த தெய்வத்தை என்னென்பது?' என மனங்கலங்கினேன். அந்தக் கொடியவன் வருமுன்னரே திரும்பி வந்த வழியே ஓடிச்சென்று விடுவாயாக! உன் எழில் மிகுந்த இளமைததும்பும் உடல் வாளுக்கிரையாவதை இந்தப் பாழும் கண்ணால் காணச்சகியேன். இன்னும் சிறிது மட்டும் கேள். உன்னைப் பார்த்ததும் உன் ஊர் பேர் முதலியவற்றைக் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டுமென ஆவலுடன் இருப்பினும்கூட இப்போதைக்கு அவன் வருமுன் விரைந்து போய்விடுவதையே விரும்புகிறேன், உனக்கு வேண்டியவனோ? தந்தையோ, உடன் பிறந்தானோ? உன் காரியத்தை நிறைவேற்ற எங்கேனும் அழைத்துச் செல்கின்றானோ? என்றெல்லாம் ஆராயாமல்

இப்படிச் சொல்லக்கூடாதென்பதை உணர்ந்தும் இப்படி வலியுறுத்திச் சொல்லுவதற்கு நான் பைத்தியக்காரியல்ல! இவன் செயல்களை முன்பே நான் நன்குணர்ந்தமையால் தான் துணிந்து கூறுகின்றேன்' என்று கூறினாள்.

இப்பேச்சுகளை முழுதும் கேட்ட கலபாஷிணி தன் மனத்திற்குள் 'இந்தப் பாட்டி கூறுவதெல்லாம் பொருத்த மாகத்தானிருக்கிறது. இந்தச் சித்தன் மாயாவியாகத் தான் இருக்கவேண்டும். அவன் சொன்ன ஒரு சொல்லை ஆராய்ந்து பார்த்தால் இது உறுதிப்படுகின்றது. இங்கு வரும்போது 'சிறிது நேரத்தில் உன் மனோவேதனை யெல்லாமே போக்கிவிடுகிறேன்' என்று கூறியது, இந்த அம்மைக் கூறியது போலச் சக்திக்குப் பலியிடுவதைத்தான் என்பதில் ஐயமில்லை. மக்கள் எல்லோருக்கும் துயர் தீர்த்தருளும் கண்ணனுடைய திருநகரில் பிறந்தும், வேசி குலத்துதித்தும், கற்பொழுக்கத்தால் சான்றோர்களால் மதிக்கப்பட்டு வளர்ந்தும், மூவுலகுக்கும் குருவான நாரத முனிவரின் சிஷ்யையாக அருள்பாலிக்கப்பட்டு மகிழ்ந்தும், கண்ணபிரானின் அந்தப்புரத்தில் ராணிகள் கற்பிக்கச் சங்கீதக் கலையை உணர்ந்தும், கடைசியில் எவனோ ஒரு வஞ்சகச் சித்தன் செய்யும் சக்தி பூஜைக்குப் பலியாக இருக்கிறேன். யாரானாலும் விதியின் எழுத்தை மாற்ற முடியுமா?' என்று கூறி வருந்திப் புலம்பி, தன்னுயிர்த் தோழிகட்குத் தெரியாமல் ஏமாற்றிவிட்டு வந்ததை நினைத்துக்கொண்டு 'பட வேண்டியதெல்லாம் பட்டுத் தானே ஆகவேண்டும்' என்று கலங்கியவாறு துயருடன் புலம்பி நைந்தாள்.

அதன்பின், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு உறுதி கொண்டு, குரல் தடுமாறுவதைச் சமாளித்து அந்தக் கிழவியிடம் இப்படிக் கூறினாள். 'அம்மா! நீ சொல்லுவ தெல்லாம் உண்மை என இப்போது தெரிகிறது. இந்த மாயாவியின் வஞ்சகத்தை உணராமல் இப்படியாகுமெனத் தெரியாமல் 'இவன் மூலம் ஒரு பொருள் அடையலாம்'

என்ற நம்பிக்கையில், இப்படித் துணிந்து வந்துவிட்டேன், இனித் தப்பிப் பிழைக்கும் வழியுமில்லை. எங்கே ஓடிவிட முடியும்? இவனுக்கு விரைந்து வரும் வாஹனமும் உள்ளது. தொலைக்காட்சியும் தெரியும். எங்கிருந்தாலும் கண்டு விடுவான்' என்றாள்.

அது கேட்ட கிழவி 'ஏ! பேதாய்! உனக்கும் இவனது தொலைக்காட்சி மகிமை தெரியுமா?' என்று கேட்க, கலபாஷிணி 'அதனால் தானே என்னை மயக்கி இவ்விதம் இங்குக் கொண்டு வந்து விட்டான்' என்று கூறி அவன் தன்னை முதல்நாள் கண்டது முதலாக அதுவரை நடந்ததெல்லாம் சொல்லி, பேச்சுவாக்கில் தன் பெயர், குலம், கல்வி, தனது கோரிக்கை யாவையும் கூறி, 'எனது கோரிக்கை நிறைவேறும் வழியைப் பற்றிய சிந்தனையன்றி வேறு சிந்தனை இல்லாமல், வந்து தொலைந்தேன். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதை போலானது' என்றாள்.

அது கேட்ட கிழவி "ஆம்! அப்படித்தானாயிற்று. உனக்கு அப்படி ஆசை காட்டிக் கூட்டிக்கொண்டு வந்து தனது கோரிக்கையை நிறைவேற்ற முனைந்துள்ளான். இந்தப் பழிக்கஞ்சாப் பாவியிடமிருந்து மனித முயற்சியால் தப்ப முடியாது. தொலைக்காட்சித் திறனாலும் இவன் பேச்சை ஆராய்ந்தாலும் இவனிடமிருந்து தப்பிப் பிழைப்பதரிதுதான். 'இவ்வளவு பாடுபட்டுச் சம்பாதித்த இந்த அற்புதமான மகிமைகள் இருந்தும் அதற்கேற்ப அரசவை போகம் கிடைத்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்' என்று நான் கேட்கும்படியாக அடிக்கடி சொல்லி மனப்பால் குடித்துக் கொண்டிருப்பான். இந்தக் கோரிக்கை நிறைவேற 'உலகிற் சிறந்த பேரழகியும், உலகிற் சிறந்த பாடகியுமான ஒரு பெண் வேசியர் குலத்தில் இருப்பாளா' என்று தொலைக்காட்சியால் தேடிப் பார்ப்பான். தானும் தம்புரா ஒன்றைப் பேரின்புடன் மீட்டிக்கொண்டு தொலைக்

கேள்வியினால் உலகிலுள்ள சிறந்த இசைகளைக் கேட்டுக் கொண்டிருப்பான்' என்று கூறினாள்.

இவ்விதம் கூறிய கிழவியைப் பார்த்துக் கலபாஷிணி இப்படிக் கூறினாள். 'முன் இங்குதான் தொலைக்காட்சி, தொலைக்கேள்வி மகிமைகளை இவ்வஞ்சகன் பெற்றானோ? அதற்காக எத்தனை எத்தனை பேர் கழுத்துகளை அறுத்துக் கெடுத்தானோ? அது கொஞ்சம் தெரிந்தால் சொல்! பொழுதுபோகக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். அதன்பின் வரும் நன்மை தீமைகளை யாரும் கடக்க முடியாதென்பது என்னவோ உறுதியாகும். 'இனி அவன் வந்து என்னென்ன செய்வானோ? எப்படிச் சாவது' என்ற கவலையில் துன்புறுவானேன்? அகில உலக நாயகியாகிய அந்தச் சக்திதேவி எப்படி வழி வகுத்தாளோ அப்படியே நடக்கட்டும்'.

இது கேட்ட கிழவியும் கலபாஷிணியின் தைரியத்தைப் பாராட்டித் 'தைரியமுடைய பெண்ணணங்கு நீ. நன்று! நன்று! நீ சொன்னபடியே நடந்தது சொல்கிறேன் கேள்' என்று கூறிவிட்டு இப்படிக் கூறலானாள். 'பெண்ணே! தொலைக்காட்சியும் தொலைக் கேள்வியும் அடையும் வழி வேறாகும். கொடுமையாகப் பிறரைத் துன்புறுத்தியடைவதன்று. துணிவினால் பெறப்படுவதாகும். இரும்புக் குறடுகள் கொண்டு கண்ணைப் பிடுங்கி எறிதலும், காதுகளில் நாராசத்தை ஊற்றிக்கொள்வதும் ஆகும்' என்று கூறிவிட்டு அம்மண்டபத்தின் முன்புள்ள மிருகேந்திர வாஹனத்தருகே உள்ள ஒற்றை எழுத்து வரிசையில் செதுக்கப்பட்ட கல்தூணும் அதில் தொங்க விடப்பட்டுள்ள கருவிகளையும், சந்தனம், பூ முதலியவைகளால் பூசிக்கப்பட்ட வாளையும் கோடரியையும் காட்டி மீண்டும் இப்படிக் கூறினாள். 'அதோ அந்தக் கல்தூணில், எந்த எந்தக் கோரிக்கைகள் நிறைவேற எந்தெந்தச் சாதனங்கள் உள்ளதென்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. உனக்கு அந்த எழுத்து தெரிந்தால் படி.'

இவ்விதம் கூறக்கேட்ட கலபாஷிணி அதிலுள்ளதைப் படித்து இவ்விதம் பொருள் கூறலானாள். 'இங்கு இரண்டு வருஷம் புலனடக்கத்துடன் புவனேசுவரி மந்திரத்தை ஜபித்தால் எல்லாக் கோரிக்கைகளும் நிறைவேறும். உடனே பலன்பெற வேண்டின் தொலைக்காட்சி வேண்டுவோர் இங்குள்ள குறடு கொண்டு கண்களைப் பிடுங்கியும் தொலைக்கேள்வி வேண்டுவோர் காதுகளில் நாராசம் விட்டுக்கொண்டும், நாவன்மையும் இலக்கியத் திறமையும் வேண்டுவோர் இங்குள்ள கத்தியினால் நாக்கை அறுத்தும் இங்குள்ள மகாசக்தியின் அருள் பெற்றுப் பலன் பெறலாம். இந்த ஒளி வீசும் வாளினால் தன் தலையை அரிந்து கொள்பவன், தன்னைக் கொல்ல முயல்பவனைக் கொல்வான். தூய எழிலும் இசைத் திறனுமுடைய வேசியைப் பலியிட்டால் எதிரில்லாத மகாராஜாவாக அரசயோகம் கிடைக்கும்' என்று படித்து, அதன் மூலம் தான் இறப்பதைப் பற்றிய ஐயம் ஒழிந்தவளாக, மிகவும் கலங்கி, சலிக்கின்ற தனது தைரியத்தை மீட்டு, உறுதியோடு மேலும் இப்படிப் படித்தாள். 'இந்த விதிகள் எதையும் செய்யச் சக்தியற்ற முதியவர்கள் இந்த தேவதையிடம், அச்சமின்றி உடலைத் துறந்தால், உடல் துறக்கும் போது எண்ணியதெல்லாம் கைகூடி இளமையும் அழகுமுடைய புதிய உடலும் புதுப் பொலிவும் பெறுவார்கள்' என்றிவ்வாறு படிக்கவும், அதில் கடைசியிலுள்ள விதிமுறையைக் கேட்டு முதுமகள் மகிழ்ச்சியுடன் சிரித்து 'இதைக் கேட்டுத்தான் நான் என்றும் இங்கேயே இருக்கிறேன். தாமரை போன்ற முகமுடையவளே! என் பெயர் 'சுமுகாசக்தி' என்பார்கள். காஷ்மீரத்தில் புகழ் பெற்ற சாரதாபீட சரசுவதியை வணங்கிப் பூசை செய்யும் பூசாரியான பிராமணனின் மகள் நான்' என்று கூறும் பொழுது, சித்தனும் பூசைக்குரிய சந்தனம், பூ முதலியவைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து அம்முதியவளைப் பார்த்து 'என்ன பாட்டி! சௌகரியமாக இருக்கிறாயா? மனித சஞ்சாரமில்லாத இந்தக் காளிகோயிலில் நெடுங்காலமாகத் தவமியற்றுகின்றாய்' என்று கூறிக் கலபாஷிணியை

அழைத்து 'ஏ! பெண்ணே! நாம் நெடுந்தூரம் போக வேண்டுமல்லவா? பொழுது போய்க் கொண்டிருக்கிறது. சக்தியைப் பூசித்துவிட்டுப் போவோம். இந்தப் பாட்டியிடம் சொல்லிவிட்டு வா' என்று சொன்னான்.

அதைக்கேட்ட அவள் அஞ்சிய உளத்தினளாகக் கிழவியைப் பார்த்து 'நான் தனியே உள்ளே போகப் பயமாக இருக்கிறது, நீயும் என் கூட வரமாட்டாயா?' என்றாள். உடனே சித்தன் 'நானிருக்கும்போது பிறர் எதற்கு' என்று கூறி அழைத்தான். அவளது அஞ்சிய தோற்றத்தைக் கண்டு 'இந்தக் கிழடு ஏதாவது சொல்லி எனது கருத்தை உணர்ந்துகொண்டாள் போலிருக்கிறது. காலதாமதமானால் என் கருத்துக்கு இடையூறு உண்டாகலாம்' என்று சித்தன் விரைந்து பரபரப்புடன் "அடி! பேதாய்! இந்தக்கிழடு உனக்குத் துணை செய்யவா? சரி பார்ப்போம்' என்று கூறி அத்துனிர் பேணியாளின் கூந்தலைப் பிடித்திழுக்கவும் அவள் நிலை குலைந்து கலங்கி 'அம்மா! நானும் உன் குழந்தையல்லவா? என்னைக் காப்பாற்ற மாட்டாயா? எனக்குத் துணைவராயா? என்று கூறி அக்கிழவியின் பக்கம் ஒதுங்கினாள். அக்கிழவியும் இரங்கிய உள்ளத்துடன் கலபாஷிணியைத் தன் பின்புறம் மறைத்துக்கொண்டு 'காப்பாற்று! காப்பாற்று!' என்று கூறி அவனது கைகளைப் பிடித்தாள்.

சித்தன் 'உள்ளே வராமல் தானே தடுப்பாய்! அவ்வளவுதானே! அந்த தேவிக்கு இந்த இடமும் முன்னிலைதானே' என்றுகூறிக் கிழவியின் கைகளை உதறித் தள்ளிவிட்டு வலிவோடு கலபாஷிணியின் கூந்தலை ஒரு கையிற் பற்றி, மற்றொரு கையால் கத்தியை உருவி 'இவளை உனக்குக் காணிக்கையாக்குகிறேன்' என்று கூறிச் சக்திதேவியை பக்தியுடனே வணங்கி, பலி கொடுக்க முனையவும், 'இவளைக் காவு கொடுப்பாயோ? இந்தச் சக்தியின் மேலாணை' என்று இரக்கத்துடன் கூறியவாறே அக்கிழவி தனது கழுத்தை அவள் கழுத்துக்கு மேல் வைத்துத் தடுத்து நின்றாள்,

இவ்விதம் கலபாஷிணியின் கழுத்துக்குத் தன் கழுத்தைக் குறுக்கே வைத்து வெட்டு விழாமல் தன் இரு கைகளாலும் அவளைத் தழுவி மறைத்துக்கொண்டு அக்கிழவி 'ஓ! சித்தா! உன் காரியம் நிறைவேறாதப்பா, இந்தத் தேவியின் மேலாணையிட்டுள்ளேன். அதை மீறி ஒன்றும் பலிக்காது' என்று கூறி 'மகாசக்தியே! என் வாக்கைப் பலிக்கச் செய்வாயாக!' என்று சொல்லி இருக்கும்போது, சித்தன் மிக்க சினத்துடன் முதலில் கிழவியின் கழுத்தை வெட்டிவிட்டு, மின்னல் வேகத்தில் கலபாஷிணியின் கூந்தல் தொட்டேர்த்துக் கத்தியை ஓங்கி வெட்டக்கை எடுத்ததும் அக்கணமே எடுத்த கையைப் பிடித்தழுத்த, சக்திதேவி, தன் மேல் ஆணை மீறிய துணிசெயற் குற்றத்தையுடைய அவனை மிகு தொலைவில் வீசி எறிந்தாள்.

சுமுகாசக்தியும் கத்தி வீச்சினால் தன் முதுமையுடல் நீங்கியதுமே, நிறைமதியை நகை செய்யும் முகத்துடனும், இருள் பரப்பும் கூந்தலுடனும், காதளவோடிய கண்களுடனும், பளபளக்கும் கண்ணாடிக் கன்னங்களுடனும், ஓங்கிவளர்ந்த மென்முலைகளுடனும், எழில்மிகுந்த தோள்களுடனும், அசைந்தாடும் கொடியிடையுடனும், புதிய மயிரொழுங்குடனும், பொன் மணற்பரப்பொத்து மிளிரும் கடிதடத்துடனும், எல்லா உறுப்புகளும் எழில் கொண்டிலங்கும் பேரழகுடைய இளவயது மங்கையாக மாறினாள். மாறி, அந்த மலர்ந்த குவளையிதழ் போன்ற கண்ணினாள், சக்தியினால் எறியப்பட்ட ஒருகையிற் கத்தியும், ஒரு கையில் கலபாஷிணியை விடாமற் பிடித்துக்கொண்டும் செல்லும் சித்தனை வானகத்தே கண்டாள். இவ்விதம் பார்த்த அவள், அந்தக் கலாபாஷிணியின் நிலைமைக்கிரங்கி, தனது நெடுநாள் தவம் பலித்ததென்னும் இன்பத்தையும் கருதாது வருத்தமுற்றாள்.

பின், சிறிது நேரத்தில் உலக இயற்கைப் போக்கினை உணர்ந்தவளாக, கவலையை அடக்கிக்கொண்டு தனக்குத்

தானே உலக இன்பவேட்கையை விடுத்து, தேவியினரு ளால் கிடைத்த இளமையை வீணாக்காமல், யோக முறை யில் பயனுடைய முறையில் கழிக்க வேண்டுமெனக் கருதி யமநியமங்களுடன், ஆசனங்களைப் பயின்று ஆர்வமுடன் தேவியையே குருவாக மனத்திலிருத்தி யோக முறை பயிலத் தொடங்கினாள்.

அவ்வளவில் கலாபாஷிணி அங்கு வந்து சேர்ந்து அம்மடந்தையைக் கண்டு, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்" என்று கேட்கவும் அம்மடந்தை "நான் முன்பு உன்னைக் காப்பாற்ற முன்வந்து சித்தனுடைய உடைவாளுக்கு இரை யான சுமுகாசத்தி என்ற கிழவிதான்! மீண்டும் இம்மகா சக்தியின் கருணையினால் இத்தகைய இளவயதில் எழில் பெற்றுள்ளேன்" என்று கூறி, "ஓ கலாபாஷிணி! அவ்வித மாகச் சித்தனுடன் இம்மகா சக்தியினால் தொலைவில் எறியப்பட்டு எங்கே வீழ்ந்தாய்? எங்கும் சிறிதும் துன்ப மில்லாமல இவ்விதம் திரும்பி வந்தது மிகுந்த வியப்பளிக் கின்றது" என்றாள்.

அதற்குக் கலபாஷிணி "தாயே! தருமகுணத்தினால் இந்த மகாசக்தியின் அருள்பெற்று இவ்விதம் நீ மீண்டும் இளமை பெற்றதே வியப்பன்றி, இத்தகைய அருளுள்ள முடைய உன் கருணையைப் பெற்ற நான் திரும்பி வந்ததில் என்ன வியப்பிருக்கிறது? என் கதை முழுவதும் சொல் கின்றேன்" என்று கூறும் பொழுது, யாழோடு கூடிய தோளும், ரத்தினமாலையணிந்த சடாமுடியும் கூடிய மணிகந்தரன் கம்பீர நடையுடன் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான்.

மணிகந்தரனைக் கண்டு மிகு மகிழ்ச்சியும் வியப்பும் கொண்டு கலபாஷிணி கை கூப்பி வணங்கினாள். அவனும் அவளைக் கண்டு மகிழ்ச்சியும் வியப்பும் கொண்டு மலர்ந்த முகத்துடனே 'ஓ ஹோ ஹோ எனது சுற்றத்தார் எல்லோரும் வந்தாற் போல், இன்று உன்னைக் காண்பதில் எனதுள்ளம் மகிழ்ச்சியுறுகின்றது. மீன் வென்ற

கண்ணாய், என்னை நீ நினைத்துக்கொள்கிறாயா? இங்கெப்படி வந்தாய்? துவாரகாபுரியைவிட்டு வர உன் மனம் இசைந்தது மிக்க வியப்பளிக்கின்றது! இதற்கு முன்னெங்கேனும் போனதில்லையல்லவா! உன் தோழிகள், மணிமாளிகைகள், செல்வம் எல்லாம் முன்போன்றே இருக்கிறதல்லவா? அதன் பிறகு எப்போதாவது கண்ணனைச் சேவிக்கச் சென்றாயா? உலகுக்கிறைவனான அப்பிரான் வைரமணி மண்டபத்தில்தான் கொலுவீற்றிருக்கிறானா? இந்திரன் நிறுவிவந்த மரகத மாளிகை முற்றுப் பெற்றதா? நமது வீணையை அடக்கிக் கொண்டு மயக்குகின்ற நீலமணி மேடைக்கு நீ போவதுண்டோ? அதிகமாகிக் கொண்டு போகும் கண்ணனது புத்திரர்கட்காகப் போதாதென நினைத்து மீண்டும் கட்டி வந்த தங்க உப்பரிகைகளும் அப்படியே இருக்கிறதல்லவா? தளிர்புரை மேனியாய்! நினைவிருக்கிறதா? வட்டாடுமண்டபத்திற்கு நீ அழைத்துச் சென்று காண்பித்தபோது அங்குள்ள கிளிகள் இரண்டு, மூன்று, பன்னிரண்டு, நான்கு என்று மிழற்றுவதைக் கேட்டவாறு புது மண்டபத்திற்கு, கண்ணபிரான் தேவியர் இருப்பார்களோ என்ற ஐயத்துடனும் அச்சத்துடனும் வந்தேனல்லவா? தாழ் குழலுடையோய்! விரைந்து நான் சென்று எதிரே கொலுமண்டபம் இருப்பதைப் பார்த்து, எதிரே படிகச்சுவர் இருப்பதையறியாமல் அதில் தெரிந்த கண்ணனைக் கைகூப்பித் தொழவும் பின்னாலிருந்த சபையோர் 'இப்பக்கம், இப்பக்கம்' என்று கூறிச் சிரித்தனரல்லவா? நினைவிருக்கிறதா? அந்த மணிச்சுவர் இருக்கிறதல்லவா?' என்று கேட்டான்.

கேட்கவும் 'எல்லாம் நன்றாகச் சிறப்போடிருக்கின்றன! இந்திரனின் பணியும் நிறைவேறிற்று' என்று அவள் கூறினாள். இது கேட்ட மணிகந்தரன் 'சங்கீதக் கலை சம்பந்தமாகப் பேசும் போதாவது என்னைப்பற்றி நினைத்துக் கொள்கிறாயா? கண்ணபிரான் மீது நான் பாடிய தண்டகத்தை வேறெங்காவது பாடிப் பரவச்

செய்தாயா? நாரத முனிவரன் அவ்வப்போது கண்ணனை வணங்க வருகிறானா? உலகத் தலைவனான அவனது மனைவியர் ஆய்ந்துதந்த வீணையை இங்குகூடக் கொண்டு வரவில்லையே? என்னலாயிற்று? முன்பு ஏதோ ஒரு வேட்கை உன் மனத்திலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவ்வேட்கை வளர்ந்ததால் வீணைமேல் பற்றும் விட்டு விட்டாயா?' என்று கேட்டதும் நாணத்தால் தலை சிறிது சிறிதாகக் கவிழ்த்தியவாறே 'என்னவென்று சொல்வேன்? அதனால்தானே எனது உறவினரையெல்லாம் நீத்து இக் கொடிய காட்டில் வந்து துன்புற்று வருந்துகிறேன்' என்று கூறித் தன் சங்கீதப் பயிற்சி முடிந்த பின்னர் தான் இருந்த இடத்திற்கு மணிஸ்தம்பன் எனும் சித்தன் வந்தவாறும் அவன் தொலைக்காட்சி தொலைக்கேள்வி ஞானத்தால் தனக்குப் பலவாறு கூறித் தன்னை அவன் மிருகேந்திர வாகனத்திற் கொண்டு வந்தவாறும் தன்னை அவன் பலியிட முனைந்ததும், சுமுகாசத்தி தன்னைக் காத்ததும் விவரித்து 'அந்தப் புண்ணியவதி இவள்தான்' என்று அவளைக் காட்டி, அவள் குலம், இடம் முதலிய விவரங்களைக் கூறி 'மணிகந்தர! இனி எனக்கு உன் வரலாறு கேட்க விருப்பமாயுள்ளது. நீ அவ்விதம் ரம்பையினால் தவம் கெடுக்கப்பட்டதை அந்த மணிஸ்தம்பனால் கேட்ட விவரத்தை நீயறிவாயல்லவா! அதன் பிறகு நடந்ததென்ன! நடந்ததைச் சொல்வாயாக' என்று சொல்லும் போது மணிஸ்தம்பனும் அங்கு வந்து சேர்ந்தான்.

அவனைப் பார்த்து 'நான் இப்போது சொன்ன சித்தன் இவன்தான்' என்று காட்டவும் 'இவனா' என்று சிறிது முறுவல் காட்டி மலர்ந்த முகத்துடன் மணிகந்தரன் அவனைத் தகுமுறையில் வரவேற்றான். அவனும் அவர்களது வருகைக்கு வியப்பெய்தி 'மிக்க வியப்புத்தான்! நீங்கள் எங்கிருந்து இங்கு வந்தீர்கள்' என்று அடக்கத்துடன் வினாவினான், வினாவி அதற்குள் கலபாஷிணியைப் பார்த்து 'ஓ! மடந்தாய்! உன்னை எல்லா

இடத்திலும் தேடினேன். எங்கும் காணப்படாததால், வியப்பெய்தினேன். அப்போது எங்கிருந்தாய்? இங்கு எப்படி வந்தாய்?'' என்று கேட்டுவிட்டுச் சுமுகாசத்தியைக் கண்டு 'எங்கிருந்து வருகிறாய்? உன் பெயரென்ன?' என்று கேட்டான். அதற்குச் சுமுகாசத்தி தன் வரலாறு கூறிவிட்டு வியப்புடன் 'ஓ! சித்தனே! நீயும் கலபாஷிணி யும் சத்தியின் திறத்தால் விரைந்து வீசி எறியப்பட்டீர் களே! எங்கே விழுந்தீர்கள்? நீங்கள் யாதொரு துன்பமும் இன்றித் திரும்பி வந்துள்ளது மிக்க வியப்பளிக்கின்றது. எனக்கு எல்லா விவரமும் கூற வேண்டும்' என்று கேட்டுக் கொண்டாள்.

அது கேட்ட மணிசித்தன் 'ஓ! தாமரை முகத்தோய்! உனக்கு அப்படியே சொல்லுகிறேன். கேள்! அது மட்டு மின்றி இன்னும் பல அற்புதங்களைக் கண்டு வந்திருக்கி றேன். அவற்றையெல்லாம் யாரிடமாவது சொல்லும்வரை என் நெஞ்சம் துடித்துக்கொண்டிருக்கிறது. எல்லா விதத்தும் சிறந்தவளான உன்னிடம் சொல்கிறேன்' என்று கூறிவிட்டுப் பின்வருமாறு கூறலானான். 'உன்னை மீறி மிகுந்த செருக்குடன் அறிவிழந்து தேவி மேலிட்ட ஆணை யையும் மதிக்காமல் இந்தக் கலபாஷிணியின் கூந்தலைப் பற்றி, வெட்டுவதற்கு வாள் எடுத்ததும் எடுத்த கையைத் தேவி ஏற்று வீசி எறியவே வெகு தொலைவில் நானும் இவளும் வானிற் சென்றோம்' என்று கூறும்போது 'நீ இது சொல்ல வேண்டியதில்லை அதற்கு முன்பே நான் இவ் வுருவை அடைந்து இவளைப் பிடித்த கையுடனும் வாளை ஓங்கிய கையுடனும் விண்ணில் விரைந்து போவதைப் பார்த்தேன். அதன் பிறகு என்ன நடந்ததென்று கூறவும்' என்று சுமுகாசத்தி கேட்டாள்.

சித்தன் தொடர்ந்து கூறலானான். 'அப்படி விரைந் தேகி மணிகந்தரனின் தபோவனத்துக்கருகில் புத்தம் புதிய தளிர்களால் அமைந்த மென்மையான படுக்கையில் நானும் இவளும் வீழ்ந்தோம். சக்தி கிருபையால்தான் போலும்

சாகாமல் நோகாமல் விழுந்தோம். பின் அச்சத்தால் மெய் மறந்த நிலையில் கைவாளையும் கலபாஷிணியின் கருங்கூந்தலையும் கைவிடாமல் பற்றியவாறே இருந்த என்னைக்கண்ட இம்மடந்தை அச்சத்தால் நடுநடுங்கினாள். அமுது ததும்பியது போல விளர்த்து நின்ற முகமதியுடனும் காதளவோடிக் கலங்கிய கண்களுடனும், வியர்த்து நின்ற இளங்கன்னங்களைத் தொட்ட கருங்கூந்தலுடனும், இளமென் முலைகள் குலுங்க அசையும் முந்தானையுடனும் அச்சம் கூடத் தனிபேரழகு செய்யப் புத்தெழிலுடன் திகழ்ந்த இம்மடந்தையைக் கண்டு காதல் மீறக் கட்டி யணைக்க முயன்றேன்! மதிமுகத்தோய்! நான் செய்த பாவத்தையும் சொல்லத்தானே வேண்டும். அதைப் பொறுக்காத இம்மடந்தை கூக்குரலிட்டு 'என்னை இந்தப் பாவி பலாத்காரமாகப் பிடிக்கிறான். தயவு செய்து என்னைக் காப்பாற்றமாட்டீர்களா? இரக்க சித்தமுடைய நல்லோர் யாருமிங்கில்லையா? ஆபத்துக்குதவுங்கள்! உங்கள் அடைக்கலம்' என்று பெருங்குரலிற் கூறினாள். அப்போது அம்முறையீட்டைக் கேட்டு விண்முட்டும் பெருமுழக்கமிட்டு 'அஞ்சாதே! அஞ்சாதே' என்று, 'இதோ நான் விரைந்தோடி வருகிறேன் பெண்ணே! அஞ்சாதே' என்று கூறிக்கொண்டே 'யாரடா பயமின்றி இவ்விதம் பெண்ணைத் துன்புறுத்துபவன்! எங்கோடி ஒளிந்தாலும் பிடித்துத் தலையை நரம்புகளோடு கிள்ளி எறிகிறேன்' என்று முழக்கமிட்டவாறு ஒரு புதரில்லத்தி னின்றும் நளகூபரன் வெளிவந்தான்.

அது கண்ட நான் அஞ்சியவாறு இவளை விட்டுவிட்டு ஓடிப்போனேன். சினத்துடன் அவனும் என்னைப் பின் தொடர்ந்து வந்து பற்றினான். அப்படி என்னைப் பிடித்துக்கொண்டு 'அடே! நீ யார்? செருக்குடன் பித்துப்பிடித்தவனாக இப்போது எந்தப் பெண்ணைத் துன்புறுத்தினாய்? என்னிடம் உன் குறும்பைக் காட்டாதே! வா. அவளை முதலில் காண்பி. அதன் பிறகு உனக்குத் தகுந்த தண்டனையளிக்கிறேன்' என்று கூறிச் சினத்துடன்

என்னை அழைத்துக் கொண்டு சென்றான். அவ்வளவில், நன்கு முடியாததால் கலைந்த கூந்தலை ஒரு கையால் முடித்துக்கொண்டும் மென் துகில் மேலாடையை இணை முலைகளில் நிறுத்திப் புறங்கையால் சரிப்படுத்திக் கொண்டும், நுதலில் சிதறி வீழ்ந்த சுரிகுழலைச் சரிசெய்து கொண்டும், அடிக்கடி நழுவுகின்ற காதில் வைத்த குவளைப் பூவை அவ்வப்போது தோளினால் தாங்கிக்கொண்டும், வியர்வையால் ஒட்டிக் கொண்டுள்ள படுக்கையிலிருந்த தளிரின் துகள்களை இடையிடையே நகக்குறிகளோ எனும் ஐயத்தால் ஆராய்ந்து பார்த்துக்கொண்டும் பரபரப்புடன் ரம்பை காதலனைப் பின் தொடர்ந்து வந்தாள்.

இவ்விதம் வந்து 'அடடா! உன்னை என்னவென்று சொல்வது? கையில் ஆயுதமொன்றுமில்லாமல் இப்படித் தொலைதூரம் வருவார்களா? நான் சிரமத்தால் களைத்துப் போனேன். போதும்! போதும்! என்னுயிர்த் தலைவா! உன் நடவடிக்கை மிகவும் மெச்சத்தக்கதுதான். என்று தன் காதலனைப் பார்த்துக் கூறிவிட்டு என்னைப் பார்த்துக்கொண்டு அவனிடம் 'இத்தகைய நெறியற்ற செயல் செய்த புண்ணியாத்மா, இவன்தானா? மன்மதன் யாரைத்தான் விட்டு வைத்தான். ஆமாம்! அந்தப்பெண் எங்கே போனாள்?' என்று கேட்டாள்.

'அவளைக் காட்டுமாறு சொல்லித்தானே இந்த ஐயாவைக் கூட்டிக்கொண்டு போகிறேன்' என்று நளகூபரன் கூறினான். அதற்கு ரம்பை 'அவளைக் காட்டாமல் இவன் எங்கு போய்விடுவான்' என்றும் கைவிடுமாறு வேண்டியும் என்னை விடுவித்தாள். நான் அவர்களோடு கலபாஷிணி இருக்குமிடம் தேடி முன்பு விழுந்ததளிர்ப் படுக்கைக்கு வந்து பார்த்தோம். அங்கே இவள் காணப்படவில்லை. அவ்விடத்தைக் காட்டவும் நளகூபரன் தன் காதலியுடன் 'இவன்கூட நமது முன்னைய தளிர்ப்படுக்கையில் அப்பெண்ணைச் சேர்த்துக்கொள்ள நினைத்தான் போலிருக்கிறது. சித்தனல்லவா? சித்தம்

மயங்கும் சித்தமான படுக்கைக்குத் தகுதியுடையவன்தான்' என்று நகைத்தவாறு கூறி எனது பட்டத்துவாளை எடுத்துக்கொண்டு 'இது வேறா? இந்த யோகி பெரிய வீரன் போலிருக்கிறதே' என்று கூறி நகைத்தான். 'வீரனில்லாவிட்டால் இந்த வாளை இங்கே போட்டுவிட்டு ஓடுவானா?' என்று கேலியாகச் சிரித்தாள் ரம்பை. 'அதெல்லாம் சரி! அந்தப் பெண்ணை எங்கே ஒளித்தாய்?' என்று அதட்டிக் கேட்டான் நளகூபரன்.

அவன் இப்படி என்னைக் கோபமாக அதட்டிக் கேட்கவும் அவனுடன் ரம்பை 'இவனோடேன் தகராறு? விட்டுத் தொலை, இவன் அவளை விட்டு ஓடி வந்ததும் இதுதான் சமயமென்று அவள் ஒளிந்து கொண்டிருந்து விட்டு எங்கே போனாளோ? இவன் எப்படிக்காட்டுவான்?' என்று கூறி என்னை விடுவித்துவிட்டு நாம் தேடுவோம், என்று கூறி அவர்கள் முன் நான் ஓடிச்சென்ற பாதை வழியே சென்றார்கள். காதலனின் தோளில் பூங்கொத்தை ஒத்த மென்முலை உராய மற்றொரு தோளில் தன் மென் மலர்க்கையை அணைத்தவாறு ஒவ்வோரடிக்கும் புளகாங்கிதமுற்றவளாக ரம்பை சென்றாள்.

நான் பெறற்கரியதும், எனது குருவின் மகிமையாற் பெற்றதுமான அந்தப் பட்டத்து வாளை விட மனமின்றி இவர்கள் எங்கேனும் காதலின்பிற்களித்து எனது 'பட்டாக் கத்தியை விட்டுவிடுவார்கள் எடுத்துக்கொள்ளலாம்' என்ற நம்பிக்கையுடன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். அதுமட்டுமின்றி அக்காடு முழுதும் சாவதானமாக எனது தொலைக்காட்சித் திறனால் தேடிப்பார்த்தும் எங்கும் காணப்படாததால் மிக வியப்படைந்து 'என்ன மாயமோ? ஒருவேளையில் இவர்களுக்காவது தெரியுமா பார்ப்போம்' என்று சென்றேன். அவ்வளவில், அவ்விருவரும் காதலுணர்வால் மனங்கரைந்து, கலவியின்பத்திற் களிப்புறலானார்கள்.

நான் தூரத்தில் மறைந்திருந்தவாறு பின் தொடர்ந்தேன். அவர்கள் களிப்பில் திளைத்தபின் ஒருவரையொருவர் இன்புடன் அணிகள் திருத்தியவாறு இருந்தனர். அப்போது வியப்பெய்துமாறு வேறொரு ரம்பை அவர்களது காலடிச்சுவடை அறிந்து வந்தாள். வந்து அவள் வியப்புடன் முகஞ்சுளித்தாள். அவள் வரவைக்கண்ட நளகூபரனும் வியப்புற்றான். அவர்களைக்கண்ட நானும் வியப்புற்றேன். அப்போது நளகூபரன் அங்கு வந்த அம்மடந்தையின் உருவத்தையும், தன் மனையாளின் உருவத்தையும் சிறிது நேரம் மாறி மாறிப் பார்த்தான். அவ்விருவருக்கும் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாததைக்கண்டு அதிசயித்து நின்றான்.

இவ்விதம் மாறி மாறிப் பார்த்ததைக்கண்ட அவனது மடந்தை 'என்னையும் அவளையும் இப்படி மாறி மாறிப் பார்ப்பதேன்? என்ன காரணம் சொல்' என்றாள். அதற்கவன் 'உனது பிரதிபிம்பம் இவளா? அவளது பிரதிபிம்பம் நீயா? தளிர்மேனியாய்! என்னவென்று சொல்வது? யார் அசல்? யார் நகல் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆதலால்தான் உங்களைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறேன். முடிவாக என்ன சொல்வது? என்னை விட்டு நீ நீங்கினால் உன்னையும் அவளையும் பிரித்தறிய முடியாது' என்றான். அதற்கு அவளது காதலி மனக்கலக்கமுற்று 'அப்படியானால் உன்னை அரவணைப்பினின்றும் நழுவவிடேன். இந்த மாயக்காரி இந்த உருவங்கொண்டு நம்மைப் பிரிக்கவந்தாள் போலிருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் ஓர் அசுரகுல மடந்தை ராமனிடமிருந்து சீதையைப் பிரிக்க வந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால் இவளை இங்கே இருக்க இடம் கொடுத்தால் மோசம் வந்து சேரும். ஆதலால் தயவு தாட்சண்ணியமில்லாமல் அதட்டி வெளியேற்றவும். அடடா! அவளை விரட்டுவதற்காக என்னை விட்டு நீங்கி விடாதே. இங்கிருந்தவாறே அவளை விரட்டவேண்டும்'

என்று கூறிப் பரபரப்புடன் காதலனின் கழுத்தைக் கட்டியணைத்துக்கொண்டாள்.

புதிதாக வந்த ரம்பையும் இதெல்லாவற்றையும் பார்த்து மூக்கில் விரலை வைத்தவாறு தலையசைத்துக் கொண்டு பெருமூச்செறிந்தாள். அந்த நங்கையைக் கண்ட நளகூபரன் 'பெண்ணே! நீ எங்கிருந்து வருகிறாய்? ஏன் பெருமூச்செறிகின்றாய்? என் காதலியின் உருவை எவ் விதம் அடைந்தாய்? ராட்சசியா? பேய் மகளா? மிக்க வியப்பாயிருக்கிறது! உண்மையைச் சொல்?' என்றான். அதற்கந்த நங்கை 'நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? வாய் திறக்க வழியில்லையே! உண்மை தெரியும் வழி காணும் வரை நீங்கள் சொன்னதெல்லாம் கேட்டுத்தானே ஆகவேண்டும்! ராட்சசி என்று சொன்னால் இல்லை என்று மறுக்க முடியுமா? பேய் கூட ஆவேன். என்னுடைய உருவத்தை அடைய எங்கே கற்றாளோ? இப்படி வந்து ஒண்டிக் கொண்ட இந்த அழகிய மடந்தை ராட்சசியா பேயா என்று உலகறிய உணரும் வரையும் நான் மவுனமாகத்தான் இருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடு தானாகவே நடக்கும். மக்களுக்குச் சத்தியம் என்றும் கடவுள் என்றும் இல்லாவிட்டால் உலகம் எப்படி நடைபெறும்? கடவுள் என எனக்கு உன்னைத் தவிர யாரிருக்கிறார்கள்! என் தெய்வம் நீதான். நீ ஓர் ஏற்பாடு செய்து யார் உண்மையானவர் என்பதைத் தெரிந்துகொள்வாயாக. சிறிது முன்பு ஓரிடத்தில் குளிர்ந்த சுரபுன்னை மர நிழலில் தளிர்ப் படுக்கையமைத்துக் களிப்புடன் படுத்திருக்கும்போது மேல் திசையில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டதும் நீ திடுக்கிட்டெழுந்து அத்திசை நோக்கிச் சென்றாய். உன்னைப் பின்தொடர்ந்து நான் வரும்போது ஒரு புள்ளிமான் இடப்புறம் போகவே பார்த்துச் சிறிது நேரம் நின்றேன். அதற்குள் எப்படிப் பார்த்து வந்தாளோ எப்படி வந்து ஒண்டினாளோ? தெரியவில்லை. அவசரப்படாமல் ஆராய்ந்து நீயே பார். உண்மை பொய்களை உணர முடியும்' என்றாள்.

என்றதும் குபேரகுமாரனாகிய நளகூபரனது முகத்தைப் பார்த்து அவனது காதலி ஒரு கையில் அவனது கழுத்தை அரவணைத்த புன்முறுவலுடன் இப்படிக் கூறினாள். 'நமது சரித்திரத்தை முழுதும் குறி சொல்பவள் கூறுவது போல் உள்ளது உள்ளவாறே கூறினாள். இந்நங்கை எங்கிருந்து பார்த்தாளோ? அங்கு அப்போது உன்னுடன் கலந்திருந்து இன்புற்றவள் போலவும் நீ சென்றதும் பின் தொடர்ந்து வந்தவள் போலவும் பொருத்தமாகப் பேச எங்கே கற்றாளோ? பெண்ணல்ல இவள்! பெரிய மாயப் பிசாசுதான். இப்படி என்னுருவந் தரித்து உன்னையும் என்னையும் பிரித்து வைக்க எப்படியும் இந்த மாயக்காரி முயல்வாள். இத்தகையவள் வாய் தவறாமல் பொருத்தமாக எவ்வளவு வேண்டுமானாலும் பேசுவாள். கண்ணிருக்கும்போதே கண்விழியைப் பிடுங்கும் திறனுடைய மாயக்காரி இவள். நாம் இங்கிருக்கக்கூடாது. ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால் பின்னர் சரிப்படுத்த முடியுமா?' என்று கூறியவாறு தன் கணவனை விரைந்து வேறிடத்திற்கு அழைத்துச் செல்ல முயல்வதைக் கண்ட புதிய ரம்பை வயிறெரியப் பொறுக்க முடியாத சினத்துடன் அவளை மறுத்து இவ்வாறு கூறினாள்.

'ஏன் துள்ளுகிறாய்! நில். நில். வீடு மெழுகியதும் விழா ஆகிவிடுமா? அதற்குள் கணவனுக்கிசைந்த கற்புக்கரசியாகிவிட்டாயோ? நான் அயலாள் போல விரட்ட ஆரம்பித்து விட்டாயோ? கணவன் அந்த வாளால் தலை கீழே உருளும்படி வெட்டினாலும் வெட்டட்டும். எனது இன்பக்களஞ்சியத்தை உனக்கு விட்டுவிட்டுப் போவேனோ? இவ்விதம் என் கணவனை அரவணைத்துக் கொண்டிருப்பதைக் காணச் சகியேன். இப்பக்கம் வா! வா! உன்னுடைய வஞ்சகம் இங்கே செல்லாது. உனக்குத்தான் சத்தியம், சர்க்கரைப்பொங்கலாயிற்றே! கதிகெட்ட பேயான உன் பேச்சை நம்புவேனோ?' என்றதும் அம்மங்கை பொறுக்காமல் சினத்துடன் சிறு சொல் கூற ஆரம்பித்தாள்.

'அதற்குள் துள்ளாதே' என, அவளும், 'அதற்குள் துள்ளாதே', என்றும் 'உன் தெம்பை அடக்குகிறேன்' என, அவளும் 'உன் தெம்பை அடக்குகிறேன்' என்றும், 'கள்ளத் தனத்தால் என்ன பயன்' என, அவளும் 'கள்ளத்தனத்தால் என்ன பயன்' என்றும், 'உன் பந்தயத்தைப் பார்ப்போம்' என, 'உன் பந்தயத்தைப் பார்ப்போம்' என்றும், 'ஆணை யிட்டுச் சொல்கிறேன்' என, 'ஆணையிட்டுச் சொல்கிறேன்' என்றும் 'என்ன என்ன' என, 'என்ன என்ன' என்றும் 'ஆகட்டும் பார்ப்போம்' என, 'ஆகட்டும் பார்ப்போம்' என்றும் 'அடியே போடி' என 'அடியே போடி' என்றும் 'ஆமாம் அப்படித்தான் சொல்வேன்' என்றும் 'மறந்து விடாதே' என்றும், 'நீ என்ன பெரியவளா' என்றும் 'ஒருத்தி கணவனை விரும்புவது ஒப்புமா' என்றும் ஒருவருக் கொருவர் ஏசிகொண்டு இரண்டு ரம்பையரும் சண்டை யிட்டனர்.

முதல் ரம்பை, கணவன் நிறுத்து என்று கூறினும் நிறுத்தாமல் பதிலுக்குப் பதில் ஏசினாள். கலகங்களை உணவு போல விரும்புபவனாகிய நாரத முனிவன் சடாமுடி தரித்து மயிற் பீலி வீசிக்கொண்டு, வீணை மீட்டிக் கொண்டு இம்மடந்தையரின் சண்டையை மனதாரப் பாராட்டியவாறு அவ்விடத்திற்கு விரைந்து வந்து சேர்ந்தான். வரவும் நளகூபரனும் அம்மடந்தையரிருவரும் எதிர்கொண்டழைத்து வணங்கினர்.

முனிவனும் புன்முறுவல் பூத்து 'நளகூபர! இவர்களில் யார் உன் மனைவி? சொல்லையாக! அது தெரியாமல் 'நீவீரிருவரும் நெடுநாள் இணைபிரியாதின்புற்று வாழ்க' என்று வாழ்த்த முடியாதல்லவா?' 'தன்னைவிட அழகியும் உன் அன்புக்குரியவளும் வேறொருத்தி இல்லை' என்று கர்வத்துடன் இருக்கும் ரம்பையின் செருக்கை அடக்கத் தான் இப்படி வேறொரு பெண்ணைச் சிருஷ்டித்தாயா? அல்லது அவள்தான் உன்னுடன் கலந்தின்புற ஒருடல் போதாதென்று ஈருடல் கொண்டு இன்புற வந்தாளா?

எதுவாயினும் என்ன ? இவ்விருவரிடமும் சமமான அன்புடன் இருக்கிறாயா ? இல்லையா ? என்று சொல்! இவ்விருவரையும் வெகு நேரமாகப் போராட வைத்து விட்டாய். ஆகாயத்திலிருந்து இந்தக் கண்கொள்ளாக் காட்சியை மனங்குளிரப் பார்த்துக் கொண்டிருந்தேன்' என்றான்.

என்றதும் 'நானாவது? சண்டையிட வைத்ததாவது ? எனக்கும் இவர்களுடைய உருவவொற்றுமையும் போரும் வியப்பளிக்கின்றது' என்றான். எனக்கூறி முன் தான் இவர்களில் ஒரு ரம்பையுடன் களித்துக் கொண்டிருந்ததும் கொஞ்சந் தொலைவில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டதும் இரக்கத்தால் அத்திசை நோக்கி ஓடிச் சென்றதும், அவ்வளவில் ஓடிக்கொண்டிருந்த என்னைத் துரத்திப் பிடித்ததும் சிறிது தூரம் சென்றதும் தன் மனைவி வந்ததும், அவள் வேண்ட என்னை விட்டு விட்டதும், இருவரும் இன்புடன் குலவியதும் இவ்வளவில் இரண்டாவது ரம்பை வந்ததும் அவள் சொன்ன வகையும் போர் முறைகளையும் விவரித்து அந்த நளகூபரன் அந்த இரண்டு ரம்பைகளில் '' அப்போதுதான் திருத்திய கஸ்தூரிப் பொட்டுடனும், இளந் தாழம்பூவிதழின் நுனியைக் காட்டும் மையுண்ட கண்களுடனும், பொன்னின் ஒளியும் மின்னலொளியும் மகரந்தத் துகளும் இணையென நின்ற நுதலழகுடனும், புன்னை மலர்களும் மல்லிகையும் சமமாகக் கோத்த மாலை மார்பினிலணிந்த எழிலுடனும், திகழும் ஒருத்தியைக் காட்டி 'இந்தக் கமலக்கண்ணினாளும் யானும் இருக்குங்கால் சிறிது நேரத்திற்கு முன்பாக அந்தப் பெண் வந்தாள்' என்று கூறி இரண்டாவது பெண்ணைக் காட்டினான்.

காட்டவும் அம்மடந்தை நாரதனைக் கைக்கூப்பி வணங்கி 'ஓ ! மகா தபஸ்வியே ! அன்றொரு நாள் எம்மைத் துவாரகைக்கருகில் சொன்ன உங்களுடைய சொல் இன்றிவ்

விதம் பலித்தது' என்று கூறப் போட்டியாக வந்த மற்றவளும் அவ்விதமே கூற முனிவனும் அம்மங்கையரிருவரையும் கண்டு 'உண்மை கூறினீர்கள்' என்று சொல்லி நகைத்தவாறே 'அந்தச் சொற்கள் சரியாகப் பலித்ததால் தான் எமக்கு இந்தக் கண் கொள்ளாக் காட்சியைக் காண முடிந்தது. இனி நான் போய்வருகிறேன்' என்றான். எனலும் நளகூபரன் 'தவமுனிவ ! இருவருமே உண்மை கூறியதாகச் சொன்னீர்களே ? அதெப்படி ? தெளிவாகப் புரியும்படி சொல்லுங்கள்' என்றான். அதற்கு நாரதன் விவரமாக இவ்விதம் கூறினான். 'அன்றொரு நாள் உன்னுடன் ரம்பை வான்வழிவரும்போது தன்னழகில் செருக்குற்றவளாகப் பேசிய பேச்சுகளைக் கேட்டு மனம் பொறாத நான் உனக்குச் சக்களத்திச்சண்டை எப்படியாவது பின்னால் வரும் என்று கூறினேன். அதை மனத்திற் கொண்டு 'அந்தச் சொல் பலித்ததாக' ஒருத்தி கூறினாள். ஒருத்தி ரம்பை உருவம் தரித்து உன்னுடன் இன்புற விழைந்து ஒரு சமயம் வேண்டிய உருவம் எடுக்கும் வரத்தைப் பெற்றாள், அதை நினைத்து 'அந்தச் சொல் பலித்ததெ'ன மற்றவளும் சொன்னாள். இரண்டுமே உண்மைதான்.' இதைக் கேட்ட நளகூபரன் 'இவ்விருவரில் யார் உண்மையான ரம்பை ? யார் போலி என்பதைத் தாங்களே கூற வேண்டும்' என்றான்.

எனவும் 'உண்மை பொய் விவகாரம் உனக்கேதற்கு? எது உண்மையெனக் காண்பதற்கியலுமா? இந்த உலகத்தில் உண்மைக்கெங்கே இடமிருக்கிறது? ஒருத்தியைக் காட்டி ஒருத்தியின் செருக்கையடக்கி விரும்பியவிதமாக இருவரையும் அனுபவிப்பாயாக! உன் புண்ணியம் இன்று இருமடங்காகப் பொலிகிறது' என்று நாரதன் கூறினான், என்னவும் நளகூபரன் 'ஓ! மகாத்மா! பெருந்தகையீராகிய தங்களை வெகுநேரமாக நிற்க வைத்துவிட்டேன். மன்னிக்கவும்!' என்றான், நாரதனும் மெல்ல நகைத்தவாறே போய் வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவ்வளவில் குபேரகுமாரனாகிய நளகூபரன் தன் அருகிலிருந்த நங்கையைக் கைப்பிடித்து 'இது போன்ற இடையூறுகளை எல்லாம் லட்சியம் செய்யக்கூடாது. நாம் போவோம்' என்று கூறி இரண்டாவது வந்த ரம்பையைப் பார்த்து 'நீ எவ்வளவு படித்து வந்தாலும் உன் மாயம் எமக்குப் புலப்படாமல் போகாது. ஆகையால் உன் உண்மையை நிரூபிக்கத் தகுந்த சாட்சியை அழைத்துவா! போ' என்று வெறுத்தாற்போல் கூறினான். காதலின்பிற் களிக்கும் விருப்புடன் எங்கேனும் செல்ல விரைந்தான். அந்த மடந்தையைக் கண்டு முதல் ரம்பை, மிகுந்த பொறாமையுடன் 'உனக்குக் கொஞ்சம்கூட வெட்கம் இல்லையா? இரு காதலர்கள் தனித்திருக்கும் இடத்திற்கு வருவது தவறல்லவா? இத்தகைய தவறான ஆசைப் படலாமா' என்றாள்.

அந்த ரம்பையின் பேச்சுகளைக் கேட்டதும் மிகுந்த சினத்தால் சிவந்த கண்களுடன் இரண்டாவது வந்த ரம்பை 'அடியே! உன் அறியாமையால் செருக்கடையாதே! காதல் போதையில் கணவன் என்னை ஏதேனும் சொன்னாலும் கூடக் குபேரனில்லையா? இந்திரன் இல்லையா? பிரம்மா இல்லையா? தருமமில்லையா? சத்தியத்தை நிலை நிறுத்த இவர்களெல்லாம் இருக்கும்போது ஏன் துள்ளுகிறாய்?' என்றாள். அதைக்கேட்ட முதல் ரம்பை கணவனாதரவில் இருக்கிறோமென்று கருவத்துடன் அவள் பேச்சை லட்சியம் செய்யாமல் 'கத்துவதை விட்டுப் போ! போ! உன் உள்ளங்கையில் பல் முளைக்கும்போது எங்களைக் கடிக்கவா. தகுந்த இடத்தில் போய் முறையிடு! அதை எந்தத் தேவர்கள் கேட்கிறார்களோ பார்ப்போம்' என்றாள். என்றதும் 'ஆகட்டும்! ஆத்திரப்படாதே! உன் தலையில்தான் பொழுது விடிந்தாற்போல் பேசாதே. இதோ என்னுடைய உண்மையை மெய்ப்பித்து உனக்குத் தண்டனை வழங்குகிறேன்' என்று கூறி அவ்விடத்தை விட்டுச் சில அடிகள் பெயர்ந்து அதற்குள் சினம் மிகுந்தும்

காதலனின் பிரிவுத் துயருக்காற்றாமலும் கைவளை கழன்றோடக் கவலையுற்றவளாக நின்று ஓர் உபாயத்தை ஆராய்ந்து திரும்பி வந்து இவ்விதம் கூறினாள். "நீ இங்கே செருக்குடன் உல்லாசமாக இருக்க உனக்குப் பயந்துபோய் நான் ஏன் நாலு பேரிடம் சென்று முறையிட்டழ வேண்டும்? நீயும் வா! இப்போதே வா! தேவ சபைக்குச் செல்வோம்' என்று கூறி அம்மடந்தையை அணுகி விரைந்து அவளுடைய முந்தாணியைப் பிடித்து இழுத்தாள்.

இழுக்கவும் முதல் ரம்பை 'பார்த்தீர்களா! தங்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பயமில்லாமல் எத்தகைய காரியம் செய்கிறாள்? இந்த வாயாடி பெரிய ராட்சசியல்லாமல் மண்ணுலக மடந்தையல்ல! முதலில் செய்த தவறுதான் இத்தனைக்கும் இடம் தருகிறது! முதலில் விரட்டுங்கள்' என்று மிகுந்த பதட்டத்துடன் கூறினாள். கூறவும் 'நமக்கென்ன! தேவசபையில் அவளது துடுக்குத்தனத்தையெல்லாம் தெரிவித்துத் தகுந்த தண்டனை வழங்கலாம்! சினந்து இப்போது பதட்டமடைவானேன்?' என்று நளகூபரன் சொன்னான்.

அவ்வளவில் இரண்டாவது ரம்பை உன் மனத்தில் இவ்வளவு தெம்பிருந்தால் உண்மையை மெய்ப்பிக்க வேண்டும். மாட்டேன் என்றாலும் விடமாட்டேன்! தேவ சபைக்கு வா' என்று அவளை அழைத்துக்கொண்டு போக நகர்ந்தாள். அப்போது முதல் ரம்பை சிறிது சிந்தித்துக் கணவனை நோக்கி இவ்விதம் கூறினாள். "அப்சர ஸ்திரீகளில் தலைமை பெற்று, புகழ் பெற்று, ஊர்வசி, மேனகை போன்ற உத்தம மங்கையரால் 'வா அம்மா! போ அம்மா' என்று கௌரவிக்கப்பட்டு, என்றும் எவ்விடத்தும், எவராலும் விரலாற் சுட்டிக் காட்டப் படாதவாறு விறப்புடனிருந்தும் நளகூபரனால் பாராட்டப் பெற்றுச் சிறப்புடனிருக்கும் என்னோடு இந்தப் பிசாசும் சரிசமமாக வந்து 'நீ நான்' என்று எவ்வாறு போரிடச் சொல்கிறாய்? நீயே

சிந்தித்துப்பார். கோபமானது பாபத்துக்கு இடமளிக்கும். இந்தப் பெருஞ் சண்டையில் ஒருவரை ஒருவர் வைது கொண்டு என்னாவோமோ? பெண்களுக்கு இதுவும் ஒரு பிழைப்பா? அது மட்டுமன்றி ரம்பைக்குப் போட்டியாக மற்றொரு ரம்பை வந்து வழக்காட இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள்' என்று வானகத்து வாலிபர்கள் சிரித்துக் கேலி செய்வர். என் நடத்தைக்கு இப்போது நடந்த கலகமே தகுந்ததல்ல! என் வாழ்க்கை எப்படியாயினும் சரி, உன் மேலாணையாகச் சொல்கிறேன். இனி இந்த உலகத்தை விட்டு வானுலகிற்கு ஓரெட்டுக்கூட எடுத்து வைக்க மாட்டேன். இந்தக் கலகமே இப்போதைக்கு வானகத்தில் கேள்விப்பட்டிருப்பர். தேவர்களுக்கு முன்னர் எவ்விதம் தலை நிமிர்ந்து நடப்பேன். உன்னை இங்கேயே இருக்கச் செய்ய முடியாமலோ, நான் வானகம் வராமல் இருக்கும் நிலையாலோ என் வாழ்க்கையே பாழானாலும் பாழாகட்டும்.'

இதைக்கேட்ட இரண்டாவது ரம்பை நளகூபரனைப் பார்த்து "ஓ! காதல! இந்த நங்கையின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா? தேவர்களிடம் சென்றால் தனது மாயம் வெளிப்பட்டுவிடுமென்றஞ்சி வரமாட்டாத வகையில் 'தேவர்கள் முகத்தை எவ்விதம் காண்பேன்" என்று கூறி வானுலகப் பயணத்தைத் தடை செய்துகொண்டாள். இவ்வுலகைவிட்டு வானுலகுக்கு அடி எடுத்து வைக்க மாட்டேன் என்று உன்மீது ஆணையிட்டுக் கூறியதனால் வான்வெளிப் பயணம் செய்ய இயலாத மண்ணுலக மடந்தை என்று நிச்சயமாகிறது! இவ்வளவு நேரம் நீ காதலியென்று எவ்வாறு நம்பினாய்?" என்றாள்.

நளகூபரன் இதைக்கேட்டு அறிவுக்குகந்ததென்று தெளிந்து இதற்குப் பதில் கூறாமல் முதலாம் ரம்பை இருப்பதை ஓர்ந்து, தன்னருகில் இருக்கவிடாமல் "அடியே! நீ மாயக்காரியல்லவா?" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளவும் அதுவே சாக்காகக்கொண்டு இரண்டாம் ரம்பை

அவளைப் பார்த்து "இத்தகைய துடுக்குத் தனத்தால் கணவனைப் பிரிந்து விரக வேதனையுண்டாக்கிய நீ வாள் வீச்சால் உயிர் பிரியக்கடவாயாக" என்று சபித்தாள்.

நளகூபரனும் வேறொன்றும் ஆராயாமல் இந்தச் சாபம் தகுந்ததுதான் என்று கூறி "அடியே! உன் பெயர் என்ன? யார் நீ?" என்று கேட்டான். அதற்கு இரண்டாம் ரம்பை "இதுவரையும் உன்னுடன் சேர ஒட்டாமல் என்னை விரக வேதனைக்குட்படுத்தியது போதாதா? வீணாக அவளை என்ன கேட்கிறாய்? போதும்! வா போகலாம்" என்று கூறி, அவளை விரட்டினாள். நளகூபரனும் உடன்பட்டு இரண்டாவது ரம்பையான உண்மையான காதலியுடன் அப்புறம் சென்றான். போலி ரம்பையும் விரைந்தவ்விடம் விட்டு நகர்ந்தாள்" என்று கூறி முடித்தான் அந்தச் சித்த புருஷன்.

பின் அந்தச் சுமுகாசக்தியை நோக்கி இவ்வாறு கூறினான். "நளகூபரன் இரண்டாவது ரம்பையை நம்பி முதல் ரம்பையை விரட்டி விட்டான். உண்மை போலியைக் கூட ஆராயவில்லை. காமுகர்கள் புதியவர்களைக்கண்டு காதலிப்பது இயல்புதான் அல்லவா?" இதுகேட்ட சுமுகாசக்தி "நீ அவர்களில் யார் உண்மையான ரம்பை என்று அறிந்தாய்? அவ்விதம் அமைமானமுற்றுச் சத்தம் போடாமல் சென்ற முதல் ரம்பைதான் போலியாக இருக்க வேண்டும். அவ்விதம் தள்ளவும் பேசாமலிருந்ததும் அதற்கு முன் அவள் பேசிய பேச்சுத் திறமையும் தெரிந்துதான் நளகூபரன் முதலாமவளை அலட்சியம் செய்தான். அதிருக்கட்டும், அதன் பிறகு என்ன நடந்தது சொல். இதற்கு முன்பு இப்படிக் கண்டதுமில்லை, கேட்டது மில்லை. அற்புதமான இதைக் கேட்க விரும்புகிறோம்" என்றாள்.

சித்தன் மீண்டும் கூறத் தொடங்கினான். அதன் பிறகு மற்றொரு விந்தையைக் கேட்பாயாக! அம்மடந்தை அவ்விதம் வெகுதூரம் போனபின் ரம்பை தன் காதற்

கொழுநனைப் பார்த்து, 'ஆண்களின் காதலே இப்படித் தான். உங்களை எப்படி நம்பமுடியும் பிராணநாயக! சிறிதே பிரிந்ததுமே எப்படி அந்தக் கொடியவளைச் சம்பாதித்துக்கொண்டாய்? உன்னைச் சொல்ல என்ன இருக்கின்றது. மானமின்றி உன்னுடன் கூடியுள்ள என்னைத்தான் நொந்துகொள்ள வேண்டும். எனக்குமா இத்தனை கஷ்டங்கள்?' என்று கூறி மடந்தை வருத்தத் துடன் கண்ணீர் விட்டவாறு அழுதாள். அது கண்ட நளகூபரன் அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்து 'என்மீது குற்றம் எள்ளளவேனும் உள்ளதா என்று எண்ணிப்பார். அவளை நீதான் என்ற மயக்கத்தால்தான் சேர்ந்திருந்தேன். உண்மை வெளிப்பட்டதும் அவளை விட்டொழித்தேன், இதைக் குற்றமாகக் கருதாதே'' என்று கூறி அவளை மார்போடணைத்துக்கொண்டு வருத்தத்தை ஆற்றுவித்துப் பூம்புதரில்லத்திற்குச் சென்று காதலின்பிற் களிக்க அழைத்துச் செல்ல; அவ்வளவில் வேறொரு நளகூபரன் அங்கு வந்து 'என்னுருவம் பூண்டு வஞ்சகமாக யார் என் மனைவியைச் சேர்ந்திருக்கிறான்' என்று கூறியவாறு விரைந்து வந்தான். இப்படி வருவதைக் கண்டதும் என் உள்ளத்தில் மிகுந்த வியப்புற்று 'ஒன்றுக்குப் பின் ஒன்றாக மாயங்கள் நடைபெறுகிறதே. இந்த மண் விசேஷம் தானோ? இன்னும் என்னென்ன நடக்குமோ' என்று குழப்பமடைந்தேன். அப்படிச் செல்லும்போது புதிதாக வந்தவனைக் கண்டு ரம்பை வியப்பும் பயமும் கொண்டு கணவனை நோக்கி இவ்வாறு கூறினாள்.

''தலைவ! இதுவொரு மாயா பிரபஞ்சம் போலும். அற்புதத்தைப்பார். உன் உருவம் பூண்டு வேறுபாடு சிறிதுமில்லாமல் தோற்றுகின்ற இவன் 'அவன் உருவத்தை நீ தான் பூண்டதாகச் சொல்லியவாறு வருகிறான். இவனை வெல்ல ஒரு யோசனை சொல். சிறிது நேரத் திற்கு முன்புதான் அவள் என்னுருவம் பூண்டு துன்பந் தந்தாள். அது கடந்ததென்று மகிழும்போதே வேறொரு சோதனையா? இப்போது இவன் உன் உருவில் விரைந்து

வருகிறான். அவன் வரும் வீர நடையைப்பார். நமது இன்பக் களிப்பினைக் காணச் சகியாத யாரோ ஓர் அரக்கன் இத்தனை மாயங்களை வேண்டுமென்றே செய்கிறான்' என்று கூறிக்கொண்டிருக்க அவ்வளவில் அவனும் அருகே வந்து 'ஓ! பெண்ணே! என்னவென்று மயக்கத்தால் சொல்கிறாய்! உண்மை பொய்களை ஆராய்ந்து சொல். உன் கணவனாகிய என்னைக் கைக்கொள்! என் உருவம் பூண்டு எவனோ ஒருவன் பொருத்தமாக உன்னை வஞ்சித்திருக்கிறான். என்னை நம்பாவிட்டால் இனி எங்கள் இருவரையும் நீங்கி எட்டி நின்று பார். எனது கொடுவாளுக்கவனை இரையாக்குகிறேன். அதன் பிறகு உன் யுக்திகளைக் கொண்டு எனது மெய்மையைச் சோதித்துப் பார்ப்பாயாக!' என்று கூறினான். அது கேட்டு மிகுந்த கலக்கமுற்ற அவள் தன் நாயகனின் கழுத்தைத் தழுவிக் கொண்டு 'ஓ தேவர்களே! கருணை கூர்ந்து என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா? என் தலைவனுக்கு வாழ்வளிக்க மாட்டீர்களா? என்னிடம் ஒரு மாயராட்சசன் நிராயுத பாணியான என் கணவனைக் கோபத்துடன் கொல்ல வருகிறான்' என்று கூவியவாறு அழுதாள். அது கண்டு அவன் நகைத்து 'அடட! என்ன மடமை! பெண்ணே! என்னையே ராட்சசனாக்கி விட்டாயா? பயப்படாதே! நான் ஆயுதமில்லாதவனையும், புறமுதுகிட்டோடுகின்றவனையும் மயக்கத்தில் உள்ளவனையும் கொல்ல மாட்டேன். எதிர்த்து நிற்பவனாயிருந்தால் தன் ஆயுதத்தைக் கொண்டுவரச்சொல். மடந்தாய்! இவன்தான் உண்மையான நளகூபரன் என்று போரில் வெற்றி தோல்விகள் நாம் நினைத்தபடி வராது. இவனுக்கேதாவது சம்பவித்தால் நாம் எப்படி வாழ்வது' என்று கவலைப்படுவாயானால், இவனது உண்மைபொய் தெரியும் வரை நான் பொறுத்திருக்கிறேன். நீ எங்கள் இருவரையும் விசாரித்து நீயறிந்த முன்னைய ரகசியங்களைக் கேட்டும், மற்றும் உனக்குத் தெரிந்த முறையில் ஆய்ந்து எங்களுடைய பொய் மெய்களைத் தெரிந்துகொள்வாயாக. எனக்கு இனிய காதலியான நீ என்னெதிரிலேயே இப்படிப்

பிறனைத் தழுவிக்கொண்டிருப்பது மனத்தில் வெகுளியை விளைவிக்காமல் இருக்காது. பொங்கி எரியும் வெகுளி பொய் மெய்களை ஆராயும்வரை நிற்குமௌக்கூற முடியாது. ஆதலால் உன் நன்மையை விரும்பியாவது அவனை விடுத்து விலகி நின்று என் சொற்களைக் கேள்' என்றான். அதுகேட்டு அவள் தன்கணவனைக் காப்பாற்ற இதுவே வழி என்றறிந்து அவன் சொன்னபடியே விலகி நின்றாள். அருகிலிருந்த அவன் 'ஏ! மடந்தாய். இவ னுடைய கத்தி கித்திகளைக்கண்டு நானஞ்சமாட்டேன். பயப்படாதே என்றாலும் பயப்படுகிறாய்' என்று கூறி அவன் தருக்குடன் நின்றான். அவள் விலகி நின்று கணவனையும் புதிதாக வந்தவனையும் முறையே காதலுட னும், கடுஞ்சினத்துடனும் கடைக்கண்களாற் பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டாவது நளகூபரன் ரம்பையைப் பார்த்து இவ்விதம் கூறினான். "நங்காய்! நினைவிற் கொள். மணிகந்தரனின் தவவலிமையைக்கெடுக்க இந்திர னின் ஏவலால் வந்தாயல்லவா? அவனை எப்படிக் கெடுத் தாய்? இவன் எங்கிருந்து வந்து தொத்திக்கொண்டான். பொறுத்தற்கரிய விரகதாபத்தால் நீ வருவாய் வருவாய் என்று நானங்கு காத்திருந்தேன். தேவகாரியத்திற்குத் தடையாகக் கூடாதென்று அஞ்சியதால்தான் இந்த வினை வந்து முடிந்தது. பிறனொருவன் என்னை வஞ்சிக்க நான் உன் கணவன் என்று சத்தியம் செய்யவேண்டியுள்ளது. உன் பின்னால் வந்தால் என்மேற் காதலில் தவத்தைக் கெடுக்க முடியாமற்போய் இந்திரனின் சினத்துக்காளாக நேரிடும், உன் பின் வராயலிருந்தாலோ மன்மதனின் சினத்துக்காளாக நேரிடும். இவ்விரண்டு கவலைகளால் சிறிது நேரம் அலைக்கழிக்கப்பட்டேன். முடிவில் மார னம்புகளுக்காற்றாமல் 'எதுவாயினும் ஆகுக! இந்திர னின் கோபத்தைத் தாங்கிக்கொள்வேன்!' என்று துணிந்து சிறிது பின் தொடர்ந்தேன். பின்னும் இந்திரனை நினைத்துப் பின்வாங்கி நின்றேன். 'அந்த முனிவனின் தவத்தைக் கெடுத்துத் தேவகாரியத்தை நிறைவேற்றி நீ எப்போது வருவாய்! எப்போதுன்னைத் தழுவிக் கொள்

வேன்' என்று நான் அளவுகடந்த ஆசையுடன் இந்த வனத்துக்கருகேயே சிரமத்துடன் கத்தும் குயிலோசை காதிற்பட்டும் உயிர் தாங்கி இருந்தேன். இங்கே உன்னை எவனோ இவ்விதம் மோசஞ்செய்து, அருகணைய; அந்தோ நான் அங்கே இல்லாத பொல்லாததெல்லாம் நினைத்துக்கொண்டு இலவு காத்த கிளிபோல் பாழும் காவல் காத்துக்கொண்டிருந்தேன். அதற்குள் நாரத முனிவன் வந்து 'நீ இங்கே விரகதாபத்துடன் இருக்கிறாயே ஏன்? மயக்க உணர்வினனே! உன் உருவம் பூண்ட ஒருவன் ரம்பையைக் கூடிக் களித்துக் கொண்டிருக்கிறான்' என்றார். அது கேட்டு நான் ஓடோடி வந்தேன். மடந்தாய்! எப்போது எவ்விதமிவன் வந்து நுழைந்தான். இவன் வந்த விதத்தைச் சொல்'' என்றான்.

ரம்பை "என்னத்தைச் சொல்ல" என்று கூறி முதலாமவனின் முகத்தை நோக்கினாள். அதற்கு அவன், "எழிலார்ந்த பெண் கொடியே! என்ன பார்க்கிறாய்? நீ பட்டபாடெல்லாம் நானும் பட வேண்டாமா? முன்பு நாரதன் சொன்ன சொல் மறந்துவிட்டாயா?" அன்று நாரத முனிவன் உன்னிடம் 'உன் போன்ற பெண் உனக்கும், இவனைப் போன்றவன் இவனுக்கும் போட்டியாக வந்து கலங்கச் செய்யலாமல்லவா? இத்தகைய அளவுகடந்த செருக்கிருக்கலாமா?' என்று சொன்னான் அல்லவா? அது வீணாகுமா? எனினும் பெண்ணே! சந்தேகப் படாதே! என் வாளினால் எளிதில் இவனை முடிப்பேன். அந்த வாளை அப்போதங்கே பூப்புதரிடையே வைத்து வந்தேன். இதோ கொண்டு வருகிறேன்" என்று போக முயன்றான். அது கண்ட போட்டியாக வந்த நளகூபரன் "உனக்கிவ்வளவு வீரமிருந்தால் போர் செய்யாமல் தூரமாகப் போக முயல்வானேன்! ஆயுதமில்லையென்றால் பரவாயில்லை. நானும் ஆயுதத்தை இதோ விட்டொழித்தேன்" என்று கூறி ஆயுதத்தை எறிந்து விட்டுக் கையைப் பிடித்திழுத்து அடித்தான். மிகுந்த கோபாவேசமுடன்

அவனும் எதிர்க்க இருவரும் வீரமுடன் மல்யுத்தம் புரிந்தார்கள். அப்போதவ்விருவரும் தோளோடு தோளுரராயவும் தொடைகளைத் தட்டியும் செய்த முழக்கங்கள் மலைக் குகைகளில் எதிரொலித்துப் பிரளய கால மேகங்களின் இடி முழக்கத்தை வென்றன. தடையற்ற ஹுங்கரங்கள் செய்த ஒலி திசைச் சுவர்களைப் பிளவுறச் செய்தன. ஒருவரை ஒருவர் வீராவேசமுடன் தடுத்தும் விடுத்தும் மிடுக்குடனும் களிறுகள் பொருவதெனப் பொருதனர். எதிரியின் பிடியைத் தட்டியும், முட்டியால் குத்தியும், சினம் மிக்கு எச்சரிக்கைகள் செய்துகொண்டும், பிடி கொடுக்காமலும், கழுத்தில் முன் கையிட்டு வளைத்துக் கைகளை முறித்தும் கீழே தள்ளியும், கீழே தள்ளவும் விழாமல் எதிரியை வீழ்த்தப் பிடித்திழுத்தும், இழுத்தும் பிடி கொடாமல் ஆடாதசையாமல் மேல் விழுந்து அழுத்தியும், அழுத்தவும் இப்படியுமப்படியும் பிணங்கிப் பிடி தளர்த்திக் கையாற்புடைத்தும், எதிரியின் கைகளைத் தொடைகளால் இறுக்கித் துன்புறுத்தியும், முழங்காலை மார்பில் வைத்து மல்லாந்து வீழ்த்தித் துவைத்தும், மீண்டுமெழுந்து விரைந்து காலால் தட்டி வீழ்த்தியும், கண்மணிகள் வெளியே வருமாறு அழுத்தியும், ஒருகையால் கச்சையும் ஒரு கையால் தொடையையும் பிடித்திழுத்துக் கீழே வீழ்த்தியும், எழுந்து வா என்று முழக்கமிட்டும், ஆண்மையோடு முட்டி மோதிக்கொண்டும் அகன்றும் நெருங்கியும் பலவிதமாகச் சண்டையிட்டார்கள். அப்போது ரம்பை பச்சைப் பட்டாலான கச்சையணிந்ததால் தன் கணவனையும் செங்காவி நிறக்கச்சையால் இரண்டாவது வந்தவனையும் அடையாளம் கண்டாள். இவ்விதமாக இருவரும் சரிசமமாக வீரத்துடன் போராடிக் களைப்புற்றுச் சிறிது விலகி நின்றார்கள். ரம்பையும் அவர்களது உருவமும், போர்த் திறனும் சமமாக இருத்தலைக் கண்டு ஐயத்துடன் யாரையும் உறுதியாக நம்பாமல் "ஆஹா! நில்லுங்கள்! பரபரப்பைவிட்டு நில்லுங்கள்! நான் கேட்கும் முன்பு நடந்த ஒரு ரகசியம், செய்தியை இருவரிடமும் கேட்பேன். நீங்கள் பதில் சொல்லுங்கள். அதன் மூலம் உண்மை

பொய் தெரிந்துவிடும். அவரவர்கட் கேற்ற முறையில் தகுந்தபடி பின்னர் நடந்து கொள்ளலாம்' என்றாள். அவள் கூறியது கேட்டு அவ்விருவரும் ஒப்புக்கொள்ளவே இருவரையும் தனித்தனியே அழைத்து ஒருவன் கேட்காதவாறு ஒருவனிடம் "நமக்கு முன்பு களாபூரணையைப் பற்றிய பேச்சு எங்கே பிறந்தது? அது சம்பந்தமாக என்ன கேள்விப் பட்டாய்" என்று கேட்டதும், அதற்கு இரண்டாவது வந்த நளகூபரன் சரியாக விடை தந்தான். முதலிலிருந்தவன் வெலவெலத்துச் சும்மா இருந்தான். ரம்பையும் அவனைப் பார்த்து "அடடா! இதுவரை உன்னை என் உண்மையான கணவன் என்றிருந்தேன். நீதான் கபடமாக உருவம் பூண்டவன்" என்று வியப்பும், வெறுப்பும், அச்சமும் மேலோங்க அவனை நீங்கி இரண்டாவது வந்த நளகூபரனின் கையைப் பிடித்தாள். நளகூபரன் அந்த வஞ்சகனைப் பார்த்து "அற்பாயுளில் சாவாய்" என்று சாபமிட்டான். அப்போது ரம்பை அந்த வஞ்சகனைப் பார்த்து " நீயார்? எப்படி இந்த உருவம் பூண்டு என்னை மோசம் செய்தாய்" என்று கேட்டாள். அதற்கு உண்மையான நளகூபரன் "இதுவரையும் உன்னை என்னிடம் சேரவொட்டாமல் என்னைத் துன்புறுத்தியது போதாதென்று இன்னும் நிறுத்தி அவனை என்ன கேள்விகள் கேட்கிறாய்? யாராயிருந்தால் உனக்கென்ன? காக்கைக்கு எத்தனை பல் என்று ஆராய்ந்த கதையாக வல்லவா இருக்கிறது! போதும்! போதும்! என் விரக தாபத்தை எண்ணிப்பார்! வா! வா! போவோம்" என்று சொல்லி ரம்பையை அழைத்துக்கொண்டு முகமலர அகம்களிப்புற வான் வழியிற் சென்றான். அவ்வளவில் மற்றவனும் வருத்தத்துடன் சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு எளிமையுடன் ஒளியிழந்த முகத்துடன் மஙிகந்தரனின் தபோவனமுள்ள திசை நோக்கி மெல்ல மெல்ல அயர்வுடன் சென்றான். இவ்விடத்தில் முன்பவன் பூம் புதரிடையே வைத்த எனது பட்டாக்கத்தியை எடுத்துக் கொண்டு அந்த மகிழ்ச்சியால் பெருமிதத்துடன் இங்கே வந்தேன். இந்த வாளைத் தரும்போது என் குருநாதர்

என்னிடம் "இதனால் யாரைக் கொல்ல முயன்றாயோ அவரை நிச்சயம் கொன்றே தீரும்" என்று கூறியருளினார். நான் இந்த ஆயுதத்தைக் கலபாஷிணியின் கழுத்தில் வீச முயன்றதனால் இப்போது தப்பிவிட்டாலும் எப்போதாவது நிச்சயம் பலிக்காமற் போகாதென்று கூறி, அவ்வளவில் கலாபாஷிணியைப் பார்த்து மேலும் பேசாதொழிய அக்கலபாஷிணி சித்தனைப் பார்த்து "சங்கோசம் ஏன்? வருவது வந்துதானே ஆகும்? வருந்துவானேன்?" என்று கூற அவளது கூற்றைப் பாராட்டிச் சித்தன் "நீ அறிவிற் சிறந்த பெண்! ஆதலால் இவ்விதம் கூறினேன். இல்லாவிட்டால் நிச்சயமாகத் தெரிந்தாலும் இனிமேல் வரும் துன்பத்தைப் பற்றி முன்பே சொல்லலாமா? உள்ளதைச் சொன்னால் யாருக்கும் கசப்பாகத்தான் இருக்கும். அது சரி. நான் உன்னை வலிவொடுபற்றவும் முறையிடவே உன்னைவிட்டு ஓடி மீண்டும் வந்து பார்க்கும் போது உன்னை எங்கும் காணவில்லை. எங்கிருந்தாய்? எப்படி வந்தாய்! ஆதியோடந்தமாக உன் கதையைச் சொல்" என்றான்.

நான்காம் அத்தியாயம்

கலபாஷிணி நகைத்து "என் கதையை நீயே சொல்லி விட்டாயே! நான் என்ன சொல்ல? வலிமை மிகுந்த நளகூபரனால் பிடிபட்டு நீ என்னைக் காண்பிக்க வந்த போது எதிரே வந்த (முதல்) ரம்பை நானேதான். உன்னிடமிருந்து தப்பித்ததும் போய் அவ்விதம் உருவம் கொண்டு என் விருப்பத்தை ஈடேற்றிக்கொண்டேன். உண்மையான ரம்பை வந்து கணவனிடமிருந்து பிரித்துச் சாபமும் கொடுத்துப பட்டவன் நான்தான்" என்றாள்.

அதுகேட்ட அங்குள்ளோர் மிகுந்த வியப்புற்று 'எப்படி! எப்படி! எவ்விதம் ரம்பையின் உருவைத் தரிக்க முடிந்தது? நளகூபரனைச்சேர உனக்கு நெடு நாளாக விருப்பமுண்டென்பதையறிவேன், எப்படிச் சமயம் பார்த்து வந்து சேர்ந்தாய்?' என்று கேட்டனர்.

அப்பெண்மணி சித்தனைப் பார்த்து 'உன்னை அவ் விதம் நளகூபரன் விரட்டும்போது தன் கணவனுடன் பின் தொடர்ந்துவந்த ரப்பை அங்கோர் அழகிய புள்ளிமானைப் பார்த்துச் சிறிது நின்றாள். அதுகண்ட நான் இதுதான் சமயமென்று அவளுருவம் பூண்டு வந்தேன். உன்னைப் பிடித்துக்கொண்டு அவன் வரும்போது எதிரே வந்து சேர்ந்தேன். உருவ ஒற்றுமையால் அந்தக் கதையெல்லாம் நடந்தது. அவள் உருவத்தைப் பூணும் திறன் முன்பு நாரத முனிவனின் அருளால் கிடைத்தது. அதுவும் எமது சக்களத்திச் சண்டையின்போது நாரதன் தன் வாயிலேயே

சொல்லக் கேட்டாயல்லவா? அப்போது சொல்லியும் 'பொய் ரம்பை' என்று என்னை வெளிக்காட்டாமல் என்னைத் தெரிந்துகொண்டும் மன்னித்துக் கருணையால் விட்டுவிட்டார். அது எல்லாம் சொல்லி என்ன பயன்? முடிவில் இப்படி ஒரு சாபம் வந்து சேர்ந்ததற்குக் காரண மான அந்த உருவில் வெறுப்புற்று இந்தத் தேவியின் சன்னிதியிலிருந்து அந்தச் சாபத்தின் பலனை அனுபவித் தால் பிறருக்காவது உபகாரமாகுமென்று நினைத்து இங்கே வந்து சேர்ந்தேன்' என்று கூறிவிட்டு மீண்டும் சித்தனாகிய மணிஸ்தம்பனைப் பார்த்து 'உன் குருவின் வாக்குப் பிரகாரம் உனது கூரியவாள் என்னைக் கொல்வது உறுதி. எனக்குக் கிட்டிய சாபமும் பலிப்பதுறுதி. இரண் டும் சேர உன்னையும் என்னையும் மீண்டும் விதி ஒன்று சேர்த்திருக்கிறது. பாக்கியவதியானேன், உன் விருப் பத்தை நிறைவேற்றிக்கொள். அதிருக்கட்டும். நான் பட்ட பாட்டிற்குக் கடைசியில் விரும்பிய காதலனைக் கூடியதாக எண்ணி மகிழ்ந்திருந்தேன். ஆனால் நீ கூறியதிலிருந்து உண்மையான நளகூபரன் வேறொருவன் வந்து அவனைச் சபித்தான் என்று தெரிகிறது. முன்னிருந்த அந்த வஞ்சகன் யாரோ?' என்றாள்.

என்றதும் கேட்டு 'ஏதாவது அதிகமாக வைது விடாதே, அப்படியிருந்தவன் நானேதான்' என்று மணிகந்தரன் மெல்லச் சிரித்தவாறே கூறினான். இது கேட்டுக் கலபாஷிணி வியப்படைந்து 'நீ எப்போது அந்த உருவம் பூண்டாய்? சொல்க! உன் தவத்தைக் கெடுத்த பின் ரம்பையும் நளகூபரனும் கலந்திருப்பதாக அவனது தோழிகள் சொன்னார்கள்' என்றாள்.

மணிகந்தரன் கூறலானான், 'ரம்பையை அவ்விதம் கலந்திருந்தது யான்தான். அந்தக் கதையெல்லாம் கேள். ரம்பை என் தவத்தைக் கெடுத்து என்னுடன் சேர்ந்தின்புறுங்காலத்தில் அவள் மனம் நளகூபரனையே

நினைத்திருந்ததால் வெளிப்படையாக அவன் பெயரை மறந்து கூறவே நான் அவளை வெறுத்து 'எங்கேயாவது போகிறேன்' என்று கூறி விடைபெற்று வந்தேன். எனினும் அவளுடைய புணர்ச்சியின்பத்தில் வேட்கை தணியாமை யால் அவள் மனம் கலந்துறவாட வேண்டுமென்று என் தவ வலிமையைச் செலவிட்டு நளகூபரனுடைய உருவம் பூண்டு மீண்டும் வந்து தகுந்தவாறு பேசி ரம்பையுடன் கலந்தின் புற்றிருந்தேன் அவ்வளவில் நீயும் இடையே வரவே அவளது புண்ணியத்தில் உன்னையும் கலந்தின்புற்றேன். அந்த வஞ்சக உருவம் பூண்டதற்குப் பலனாக நளகூபரனின் சாபமும் பெற்றுப் புத்திதெளிந்து என் தபோவனத்திற்குப் போய் எல்லா மாயங்களையும் விட்டொழித்து எனது வீணையையும் ரத்ன மாலையையும் கைக்கொண்டு முன்பே இக்கோயிலின் மகிமையைக் கேள்விப் பட்டிருந்ததனால் இங்கு ஏதாவது விசேஷம் நடக்கலாம் என்று நினைத்த வாறு வந்து சேர்ந்தேன்."

இவ்விதம் மணிகந்தரன் கூறிவிட்டு நகைத்தவாறு மீண்டும் கூறலானான். 'மங்காய்! ரம்பையை அனுபவிக்கப் பலவாறு முயன்று இனிது முயங்க அது நீயாகி விட்டாய்! நீயும் மிக முயன்று நளகூபரனை வேட்டு என்னையே புணர்ந்தாய்! என்னென்றியம்புவது? எப்படியும் என் விருப்பத்திற்குக் கிடைத்துவிட்டாய்! தாமரை போலுங் கண்ணுடையவளே! நானும் நாம் இசைக் கலைப்பயிற்சியி லீடுபட்ட காலத்தில் உன் மேற் காதல் கொண்டிருந்தேன். எனினும் நாரத முனிவன் சபித்துவிடுவான் என்ற அச்சத் தால்தான் எங்கும் யாரும் அறியாதவாறு என் உள்ளத்துள் ளேயே அக்காதலைத் தைரியமாக அடக்கிக்கொண்டேன். என் பாக்கியத்தால் முடிவில் இவ்விதம் நாம் கலந்தின்புறும் பேறு பெற்றேன்'.

அதுகேட்டுக் கலபாஷிணி 'பேறு பெற்றேன். எந்த வஞ்சகன் என்னை வஞ்சித்துப் புணர்ந்தானோ?' என்று

வருந்தினேன். உன்னுடன் கலந்திருத்தலை யானும் விரும்பினேன். உனக்கு யான் இணையாக மாட்டேன் என்ற நினைவாலும், உன் உளப்பாங்கை யறியாததாலுமே என் காதலையும் உள்ள வேட்கையையும் அடக்கி வைத்திருந்தேன். உன் அழகிய திருமேனியின் நலனும், உன் இசைத் திறனும், குற்றமற்ற நல்ல குணங்களும் அப்போது என்னை எவ்வளவு மகிழ்வித்ததோ அதையெல்லாம் இப்போது சொல்வது வீணன்றோ? என் உள்ளம் மட்டுமே அறிந்த அவற்றை எப்படி நிருபிப்பது? முனிவனின் சாபத்துக்கஞ்சியே உன் மேலுள்ள காதலை உள்ளடக்கியிருந்த நான் உன் உருவத்தின் ஜாடை கொஞ்சமிருந்ததால் நளகூபரனை விரும்பினேன். எந்த வேளையில் அவனைப் பார்த்தேனோ இப்படி மோகமுற்றவளானேன். எனினும் முடிவில் உன்னையே கலந்தின்புற்றது என் பாக்கியந்தான்; என்னே விதியின் விளையாட்டு. கிணற்றில் விழப்போய் பூவமளியில் வீழ்ந்தது போலாயிற்று. எழில் மிகுந்த மணி கையிற் கிடைத்தபோது தூர எறிந்துவிட்டு, அதுபோலச் சிறிது ஒப்புமையுடைய கண்ணாடித் துண்டுக்காக வருந்தி முயன்ற என் அறிவின்மையை என்னென்று சொல்வது? முடிவில் அந்த மணியே கிடைத்தது. ஆனால் கிடைத்தும் அனுபவிக்கக் கொடுத்து வைக்காத என் தலைவிதியை நினைத்து வருந்துகின்றேன். இப்படியெல்லாம் நான் இப்போது சொல்வது தகுந்ததன்றுதான். கணிகையின் சொற்கள் இச்சகமென்று கருதுவார்களன்றி உண்மையென யார் நம்புவார்கள்? அதுமட்டுமல்ல! வேறொருவனை விரும்பியதைத் தெரிந்த பின்னும் நம்பமுடியுமா?" என்று கூறி வெட்கமும் சோகமும் அடைந்து தலைகவிழ்ந்து நின்றாள்.

கலபாஷிணியைக்கண்டு மணிகந்தரன் இவ்விதம் கூறினான். "நற்குண நங்காய்! உன்னைப் பிற கணிகையர் போலப் பொய் பேசுபவளாகக் கருத நான் என்ன அறிமுகமில்லாதவனா? நீ சொன்னதுபோல உனக்கு முன்பே என்மேல் காதல் உண்டென்று உணரும் ஓர் அடையாளம்

இருக்கிறது. அது என்னவென்றால் நாரதன் கடைசியில் உன்னை வீட்டுக்கனுப்பும்போது நான் கேட்க உன்னிடம் 'பாவாய்! உன் உள்ளத்தில் விரும்பிய காதலனை, ரம்பை யுளங்கவர் உருவினனைக் கலந்து இன்புறுவாய்! இனி உன் வீட்டுக்குப் போ!' என்றான். "நளகூபரனைக் கலந்தின் புறுவாய் என்றுகூறாமல் இப்படிக் கூறியதனால் பொய்யில் புலவனுடைவாக்கும், அதன் பலனும் காணும்போது நீ முன்பே என்னை விரும்பியது தெளிவாகிறது! அவ் விருப்பத்தை முனிவனின் சாபத்துக்கஞ்சி உள்ளடக்கிக் கொண்டதும் இயல்பே! பெண்ணே! உலகில் இத்தகைய தும் ஒரு சில எங்கேயாவது நடைபெறுவதும் உண்டு. ரம்பையோடிணைந் தின்புறும் எழிலுடையவனாகிய நளகூபரனின் உருவப் பொலிவினில் உள்ளம் பறிகொடுத்த உனக்கு மற்றதெல்லாம் இன்பம் அளிக்காது போவதில் வியப்பொன்றுமில்லை. ஆண்களிலும் சில சமயம் இத் தகைய மனோநிலை ஏற்படுவதுண்டு. அதை வெளிப் படுத்தும் ஒரு கதை உண்டு. புண்ணியம் மிகுந்த அக் கதையைக் கவனமாகக் கேள். ஆதியோடந்தமாகச் சொல்கிறேன்' என்று சொல்லி இவ்விதம் கூறத் தொடங்கி னான்.

"பெண்ணே! நான் முன்பு அனந்த தேவ விரதம் இருந்து திருவனந்தபுர பத்மநாப சுவாமி கோவிலுக்கு வந்திருந்தேன். அங்கு மிகுவியப்பளிக்கும் கவிதைகளைச் சொல்லும் நற்கவிஞர்களைக் கண்டு இத்தகு திறமை எப்படியுண்டாகும் என்று ஆர்வமுடன் அங்குள்ளவர் களை விசாரித்தறிந்து அங்கிருந்து சிறிது தொலைவிலிருக் கும் இந்த மிருகேந்திர வாஹனதேவியின் மகிமை அறிந்து இங்கு வந்து இங்குள்ள சுற்சாசனப்படி துணிவுடன் செய லாற்றி என் விருப்பம் ஈடேறப்பட்டவனாக மீண்டும் திருவனந்தபுரம் கோயிலை அடைந்தேன். இக்கோயிலின் முன் மண்டபத்தில் கௌதம கணாதர்களின் நியாய வைசேஷிகங்களும், பதஞ்சலி யோகசாஸ்திரமும் கபிலரின்

சாங்கியமும், ஜைமினியின் பூர்வ மீமாம்சையும் கேட்டு அவை என் மனதிற்கொவ்வாமையால் அவற்றில் ஈடுபாடு இன்றி இருந்தேன். அஷ்டாட்சர மந்திரத்தை ஓதிக் கொண்டிருப்பவர்களும் ஸ்ரீமந்நாராயணனையே தியானிப் பவர்களும் காமக் குரோதாதிகளை ஒழித்தவர்களும் சித் அசித் ஈஸ்வர தத்துவத்தை உணர்ந்தவர்களும் பேரறிவும் புனித ஒழுக்கமும் உடைய சான்றோரும் ஆகிய வைணவர்கள் ஓரிடத்தில் கூடியிருத்தலைக் கண்டேன். கண்டு நான் வணங்கி, என்னைப் பற்றித் தெரிவித்துக் கொண்டேன். 'அய்யா, பேரறிஞர்களே! நீங்கள் அனந்த சயனனைப் போன்றே எனக்குத் தென்படுகிறீர்கள். எனது கவிதையைப் பார்வையிடுக' என்று நான் கூறினேன்.

அவர்களும் கண்டு மகிழ்ந்து இவ்வாறு கூறினார்கள். 'உலகு உயிர்களிரண்டிலும் உள்ளும் புறமும் நிறைந்த பரிபூரணனாயும், ஆதியந்தமற்ற சோதியாயும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாயும், எல்லாமறிந்தவனாயும் எல்லா ஆற்றலும் படைத்தவனாயும் எல்லாவற்றுக்கும் இறைவனாயும், எல்லாமே தானாகத் திகழ்பவனாகவும், இருந்துகொண்டு தானும் திருமகளும், ஞாயிறும், செங் கதிரும் போலவும், வெண்மதியும் நிலவும் போலவும், ஆதி தெய்வத்தம்பதிகளாயுள்ள அந்தப் பரமபத நாதனாகிய ஸ்ரீமந்நாராயணனையே போற்றிக் கவிதைகள் படைப்பாயாக!' என்று கூறி என் கவிதைக்கு மெருகிட்டு இறைவன் கதைகளையும் கூறி அருளினர். மேலும் இந்தக் கவிதையால் இப்போதில்லாவிடினும் இன்னொரு பிறவியிலாவது தவறாமல் அந்த இறைவனருள் கிட்டும்' என்று கூறினர்.

'நானும் எனது கவிதைத் திறனைச் சாரதா பீடத்தில் உள்ளவர்கள் பாராட்டினாலன்றிச் சிறப்பில்லை எனக் கருதி அங்கே சென்றேன்' என்று கூறி 'இனிக் கூற வந்த கதையைச் சொல்லுகிறேன். கேட்பாயாக. அவ்விதம் சாரதா பீடத்திற்கு நான் போகும்போது அங்கே ஒரு குரு

குலத்தைக் கண்டேன். ருக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் எனும் நான்மறைகளை ஒரு பால் கற்றனர், வியாகரணம் (இலக்கணம்) கற்பதொரு பால்! வேதாந்தம் கற்பதொருபால்! இலக்கியம் கற்ப தொருபால்! சோதிட சித்தாந்தமொருபால்! அறநூல் ஆய்வுகள் ஒருபால்! யோகப்பயிற்சியொருபால்! கற்றுக் கொண்டிருந்தனர். எழுத்து சொற்களின் உச்சரிப்பை அழுத்தந் திருத்தமாகக் கற்பித்தும், ஓசை நயங்களைச் சைகைகள் கொண்டு கற்பித்தும், தவறாக உச்சரிப்பவர்க ளின் கன்னத்தைக் கிள்ளியும் கற்பித்துக் கொண்டிருக்கிற ஒரு ஆசிரியர் பிரம்மச்சாரிகளுக்கு ஆசார சீலமுடன் வேதங் கற்பிப்பதைக் கண்டேன்.

கண்டு, அருகில் செல்ல 'வருக! வருக! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்' என்றுகேட்டு அமர இடமளித்து என் பெயர் முதலியவற்றைக் கேட்டார். கேட்டபின் பெரியவர்கள் வந்தபோது கற்பிப்பதை நிறுத்தல் வேண்டும் என்று கூறிப் பிரம்மச்சாரிகளான மாணவர்களுக்குக் கற்பிப்பதை நிறுத்திவிட்டு என்னோடு வந்து என்னை உபசரித்தார். அப்போது பிரம்ம தேஜஸுடன் விளங்கும் அறிவொழுகும் முகமும், புள்ளிமான் தோலாடையும் ஒளிமிகு பூணூலும், திலகமும், கைக்கோலும், இளஞ்சிகை யும் உடைய ஒரு மாணவன் புத்தகத்தைக் கொண்டுவந்து பரபரப்புடன் வந்துநிற்க ஆசிரியர் அவனைக்கண்டு 'அடே! ஏன் இவ்வளவு தாமதித்தாய்?' என்று கேட்டார். அதற்கு அவன் 'நான் தாமதித்ததற்கு நிறையக் காரணம் இருக் கிறது. நீங்கள் ஒன்றும் கேள்விப்படவில்லை போலும்! கேளுங்கள் கேளுங்கள்' என்று கூறினான்.

பின் இவ்விதம் சொல்லலானான். 'அப்படி நீங்கள் அனுப்பவும் நான் போகும்போது சாலீனன் தனது பூந் தோட்டத்தில் ஒரு பூங்கொடியில்லத்தில் தனது அடிகளைச் சுகாத்திரி வேடிக்கையாகத் தொடையிலிட்டு வருடிக்

கொண்டிருக்கச் சல்லாபத்துடன் இருக்கும் போது என்னைப் பார்த்து நகைத்து 'உபாத்தியாயர் புஸ்தகம் கொண்டுவரச் சொன்னாரா! அதை இங்கேயே ஒளித்து வைத்திருக்கிறேன் கொண்டு போகலாம்! அங்கே கொஞ்ச நேரம் உட்கார்ந்துகொண்டு இரு' என்று கூறி எதிரே உள்ள அழகிய மேடையமைத்த இள மாமர நிழலைக் காட்டவும் நான் அங்கே உட்கார்ந்திருந்தேன். அவ்வள வில் அந்தப் பெருந்தகையோன் தன் மனைவியை நோக்கி 'அமுதம் பருகினாயோ?ஏதாவது சித்தரருளால் காயகல்பம் கிட்டியதா? நாளுக்கு நாள் புத்திளமைப் பொலிவுடன் திகழ்கின்றாயே! ஆண்களைவிட முன்னதாகப் பெண்க ளுக்கு இளமை தீரும் என்று கூறுவார்கள். ஆனால் நீ இளமைப் பொலிவில் மேன்மேலும் சிறப்புறுவதற்குக் காரணம் யாதோ?' என்று கேட்டான். அதற்கு அவள் புன்னகையுடன் அவனை நோக்கி 'எனக்கொன்றும் இதற்குக் காரணம் தெரியாது. அன்பின் மிகுதியாலும் இல்லாத இளமை இல்லாத பொலிவெல்லாம் உங்கள் கண்ணுக்குத் தோன்றலாமல்லவா?' என்றாள். அதற்கு அவன் 'மடந்தாய்! உனக்குத் தெரியாவிட்டால் நான் சொல்லுகிறேன். அதற்குக் காரணம் நானேதான்' என்று கூறிச் சாலீனன் சுகாத்திரியைத் தன் மேலுராயும்படி வளைத்துக் காதிலேதோ ஒன்று சிரித்தவாறு கூறினான். சொல்லவும் முகந்திருப்பி மிக வியப்புடன் கணவன் முகத்தை உற்றுப் பார்த்து 'நான் முன்பொரு வரம் கேட் டேன். அதற்குச் சம்மதித்தாள் அந்த உலகநாயகியான சாரதாதேவி, அந்த வரம் என்னவாகுமோ? அதைச் சொல்கிறேன் கேளுங்கள்'' என்று கூறி முகத்தைச் செவியு டன் சேர்த்து ஏதோ சொன்னாள். சொல்லவும் மிகுந்த சினத்துடன் அம்மங்கை பின்தொடர அருகிலிருந்த 'சததாளதக்னம்' எனும் ஏரியில் குதித்தான். மங்கையும் 'எனக்குக் கதி வேறுண்டா? உன் அடிச்சுவட்டைப்பின் பற்றுவதன்றி வேறறியேன். நீ என்னைப் பிரிந்தாலும் நானுன்னைப் பிரியமாட்டேன்' என்று கூறியவாறே அவன் குதித்த இடத்திலேயே தானும் குதித்தாள். மிகு தொலை

வாதலின் உங்கட்குச் சேதி எட்டவில்லை போலிருக்கிறது. ஊரிலுள்ளோர்களெல்லாம் விரைந்தேகி வலைபோட்டு அங்குமிங்குந் தேடிப் பயனின்றி வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்கள். நானும் திரும்பிவந்து சாலீனன் முன்பு காட்டிய இடத்திலிருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தேன்' என்று கூறினான்.

கேட்ட அந்த ஆசாரியன் வியப்பும் வருத்தமும் கவலையும் அடைந்து 'அந்த நல்ல தம்பதிகளுக்கும் இத் தகைய முடிவா ஏற்பட்டது' என்று சொல்லி மேலும் கூறலானான். 'அந்தச் சததாளதர்னத்தில் (நூறுபனை ஆழத்தேரி) குதித்தபின்பு வாழ்வுண்டா? யாராயினும் விதியின் பிடியிலிருந்து தப்ப முடியாது' என்று கூறி வருந்தினான்.

அது கேட்ட நான் அவனை நோக்கிச் 'சான்றோய்! அந்தச் சாலீனன் யார்? சுகாத்திரி யார்? சிறந்த தம்பதி கள் எனப் புகழ்கின்றீர்களே' அவர்கள் வரலாறு கேட்க விரும்புகிறேன்' என்றேன். அந்தப் புனிதனின் வரலாறு தானே இந்தப் புஸ்தகம்! அவர்களைப் பார்க்கும் புண்ணியம் போய்விட்டது. அவர் பெருமைகளைக் கேட்பதுதானே எமக்கு நலமாகும்' என்று கூறி அந்த மாணவன் கொண்டுவந்த நூலை வாங்கித் தலையில் வைத்துக் கண்ணில் ஒற்றித் திருப்பவும் அவனிடமே கொடுத்துப் 'படி' என்று கூறவும், அவனும் படித்தான். 'காஷ்மீர நாட்டின் திலகமெனத் திகழும் சாரதாபீடத்தில் சாரதாதேவியைப் பூசிக்கும் பூசாரியான ஒரு பிராமண னுக்கு சுகாத்திரி என்ற பெயருடைய ஒரு பெண் இருந் தாள். அவளது கணவன் சாலீனன் எனும் பெயருடை யோன் முறை மாப்பிள்ளையாக வீட்டோடிருந்தான். அவன் மனைவி தன்னிடம் முதலிரவன்று அணிகள் பூண்டு அலங்கரித்துக்கொண்டு வரவும் அணிகள் கண்டு மனம் சங்கோசமடைந்திருந்தான். தோழிகள் மறைவிலிருந்து பார்த்திருக்க அவன் உற்சாகமற்றிருப்பதைக் கண்டு வியப்

புற்றனர். அவள் முதலிரவன்று காத்திருந்திருந்து சலித்துப்போய்த் திரும்பிச் சென்றாள். நடந்ததைத் தோழிகள் அவளது தாயிடம் கூறி, 'உலகில் எங்கும் காணாத புதுமையிது! காரணமென்னவோ?' என்றும் 'நல்ல வாலிபன் கிடைத்தான்' என்றும் 'இன்றோடு போயிற்றா? நாளை மறுநாள் அவர்கள் கைவரிசை பார்க்க மாட்டோமா' என்றும் கூறிச் சிரித்தனர். அதற்கு அத் தாய், 'அவர் கேட்கும்படி ஏதாவது உளறாதீர்கள்! வாயாடிகளே! மானமுடையவர்களைக் கேலி செய்து ஏதாவது சொன்னால் வினையாகக்கொண்டு எல்லாமே துறந்து விடுவார்கள்! ஜாக்கிரதை' என்று கூறிவிட்டு முன்போலவே இரண்டு மூன்று நாட்கள் மகளை அலங்கரித்துக் கணவனிடம் அனுப்பினாள். அவனும் அவளிடம் முன்போலவே நடந்துகொண்டான். சும்மா வருவதும் போவதுமாக அம்மடந்தையுமிருந்தாள். நாணமிக்க அவளைக்கண்டு அவள் தாயின் அனுமதி பெற்ற தோழிகள் இவ்வாறு கூறலானார்கள்.

'பெண்ணே! கணவன் மனைவியரின் சல்லாபங்கள் நடந்த அறிகுறிகள் தெரியவில்லையே! தம்பதிகள் இருவருமே புத்திசாலிகள்தான்! ரொம்ப அழகாக இருக்கிறது உங்கள் தாம்பத்தியம்! கணவன் தகுந்த வகையில் நடந்துகொண்டால் மனைவி வெட்கப்படலாமன்றிக் கணவனே சங்கோசியாக இருந்து மனைவியும் அப்படியே இருந்தால் வாழ்க்கை எப்படி நடத்தமுடியும்? மலர்முக மடந்தாய்! 'அவன் ஒன்றும் கூறவில்லை' என்று இப்படிச் சும்மா இருக்கலாமா? அவனுக்கு வேண்டிய சேவைகள் செய்ய வேண்டாமா? இன்னும் நீ சிறுபிள்ளையா! ஆண்களுக்கென்ன பாக்கியவான்கள்! பெண்களுமப்படிப் பிகு பண்ண முடியுமா? நீயாகவே போய் ஏதாவது தொண்டுகள் செய்துவந்தால் அவன் உள்ளம் இறங்கும். காதலுடன் வரவழைத்துக் களிப்பிக்கவில்லை என்று உடனே திரும்பி வருவானேன்? கற்பூரத்தோடு வெற்றிலை மடித்துக் கொடுக்கக்கூடாதா? பைத்தியக்காரியாக

வன்றோ இருக்கிறாய். ஓ! பெண்ணே! போகக் கனியமுதம் பழுத்துக் குலுங்கும் இளவேனிற் காலமொத்த உன் தங்கமான இளமையை வெறும் படுக்கையிற் கழிப்பது தகுமா? இளமை இருக்கும்போதுதான் பெண்களுக்குக் கணவரின் புணர்வன்றி அந்த இளமை தீர்ந்த பின்னர் அச் செல்வம் மீண்டும் கிட்டுமா" என்று சொல்லக்கேட்டு 'இந்தப் பிதற்றல்களால் என்னை ஏன் கொல்கிறீர்கள்! கேட்கவே சகிக்கவில்லை' என்று நாணத்தாற் கூறிவிட்டு அன்று அவர்கள் கூற்றின்படியே நடக்க முயன்றாள். அப்படி நடந்தும் பயனின்றிக் கழியவே சுகாத்திரி 'இவரை இன்னும் வேறேதாவது முயற்சிகளில் உட்படுத்தினால் பிரிந்து சென்று விடுவாரன்றிப் பயனிராது! எனக்கும் தாலி பாக்கியம் இருப்பதே கோடானுகோடி கிடைத்தாற் போல்' என்று நினைத்துக்கொண்டு வேறு விதமாக இருக்காமல், அவன் நீடூழி வாழ வேண்டி ஆயுள் விருத்தியாமெனப் பல்வகையணிகளையும் பூண்டு அலங்கரித்துக் கொண்டு தனது தாய் அவனை ஏதொன்றும் பேசவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தாள்.

அவளது தாயும் மகளுக்காக வெகு நாள்வரை ஒன்றும் பேசாமல் பொறுமையோடிருந்து பார்த்துவிட்டுச் சலித்துப்போய், ஒரு நாள் மின்கொடி போன்ற தன் மகளை நோக்கி இவ்விதம் கூறலானாள். 'இப்படிப்பட்ட பயனற்றவனை எங்கும் கண்டிலேம். ஏதாவது சொன்னால் நீ கோபித்துக் கொள்கிறாய். என் செல்வத்திற்கு வாரிசாக ஆண் மகன் உனக்குப் பிறக்குமாவென ஏங்குதலெல்லாம் மலட்டுப் பசுவிடம் பால் விரும்பியது போலேயாம். பூந்தோட்டத்திற்காவது போய் வந்துகொண்டிருக்கட்டும்' என்று கூறி, மாப்பிள்ளையை மரியாதையுடன் அழைத்துச் சாதுரியமாகக் கூறிப் பூந்தோட்டத்திற்கு வேலை செய்ய அனுப்பி வைத்தாள். 'தேவர்கள் போற்றும் சாரதாதேவி பூசைக்குதவும் செயலிது' வென மகிழ்ந்து அவனும் பூந்தோட்டத்தில் பணி புரிந்தான். மதுவுண்ட

மயக்கத்தால் அலைந்தாடும் வண்டுகள் புடைசூழும் பூக்கள் மிகுந்து இன்புறுத்தும் பூந்தோட்டத்தைத் தினந் தோறும் கவனமுடன் வளர்த்தான்.

நீர் வார்க்கும் வேளைகளில் நீர் வார்த்தும், பாத்தி கட்குப் பொருத்தமாகக் கால்வாய்களை அமைத்தும், களை எடுத்தும், பெருமிதமின்றித் தானே எருவைக் கூடையில் கொண்டுவந்து எருவிட்டும், இளங்கொம்புகளை வளைத்து வளைத்துப் பக்குவமாக ஒட்டுகள் வைத்தும், நாற்று உண்டாக்கியும், கொம்புகள் நட்டும், சிறிதும் சலிப்பின்றி உற்சாகத்துடன் இன்பமாக வேலை செய்து வந்தான். உடல் சிரமம் பாராட்டாமல் இவ்விதம் முயன்று துளசி செங்கழுநீர், கைதை, சம்பகம், குரவகம், மல்லிகை, முல்லை, பாடலம், மந்தாரம் முதலிய உலகிலுள்ள பல விதமான பூச்செடிகளை நட்டு வளர்த்தான். செஞ் ஞாயிற்றின் ஒளிபுகாத நிழலுடையதும், பூந்தாதுகுத்த புலத்தில் பூந்தேன் மழை பொழிந்து சேறாகித் தண்மை யுற்ற அந்தப் பூந்தோட்டத்தின் செழிப்பைக்கண்டு அவ் வந்தணன் மனத்துள் மகிழ்ந்து பரவசமடைந்தான்.

இந்நிலையில் விடியுமுன்பே எழுந்திருந்து நித்தியக் கடன்களை ஆற்றிவிட்டுக் குரு பரம்பரையைச் சிந்தித்துத் தவமியற்றி நியமமுடன் பூக்கொய்து பல்வண்ண மாலை களும் பந்துகளும் இயற்றிச் சாரதாதேவிக்குச் சமர்ப்பித்து வந்தான். அப்போது சுகாத்திரி கற்பின் திறத்தால் தன் தாயின் கட்டளையில் தோட்டவேலை செய்துவரும் கணவனைக்கண்டு மனம் பொறாமல் 'நானும் அங்குச் சென்று துணையாக இருப்பேன்' என்று நினைத்துச்செல்ல முயன்றும் வெட்கத்தால் போகாதிருந்து விடுவாள். அப் பொழுதொரு நாள் சாலீனன் தோட்டத்திற்குச் சென்று வேலைசெய்து கொண்டிருந்தான். அவ்வமயம் முகில்கள் பளபளவென மின்னல் வெட்டி உருமிப் படீர் படீர் என இடிகள் நாற்புறமும் விழப் பெருமழை பொழிந்தது. பூமி

நடுங்கும்படியாகப் பேரிடிகளுடன் பயங்கரமாக மழை பொழிந்து சலசலவென வெள்ளம் பரந்து மலைகளிலுள்ள கற்களையும் உருட்டியவாறு நீர் பெருகிற்று. கடல் நீருடன் பருகிய வடவைக் கனலையுமிழ்கின்றதோ எனும் படியான மின்னற் கொடிகளுடையதும், இடிமுழக்கத்தால் தொளைபட்ட வான்முகட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட வெள்ளமுடையதும், பிரளயகால பைரவனின் உடுக்கை ஒலியையும் மிஞ்சிய இடையறாத உருமுகளுடையதும் மழைக்காற்றால் உராயப்பட்டுதிர்ந்த விண்மீன்களோ எனும்படியான ஆலங்கட்டிகளையுடையதுமான பெரு முகிற் கூட்டம் பெருமழை பொழிய மண்ணும் விண்ணும் இருளடைந்து அகில உலகெலாம் வெள்ளக் காடாயிற்று.

அதற்கு முன்பே முகில்கள் பருத்துச் சடசடவெனத் துறல் தூற்றும் போதிருந்தே தன் கணவன் நனைவானே, என்று சுகாத்திரி மிகவும் வருந்தி அவன் நலனை விரும்பிய வளாக இருந்தமையால் அப்பொழுது மனத்தில் அடிக்கடி கணவனை நினைந்து 'இந்தப் பேய் மழையில் எப்படி இருக்கிறாயோ? உனக்கேனிந்தப் பாழும் பூந்தோட்ட வேலை வந்து சேர்ந்தது?' என்று கூறியவாறு அடிக்கடி வானத்தை எட்டிப் பார்த்து 'ஓ சாரதா! அருள்மிகுந்த அம்மையே! என் கணவனைக் காப்பாற்றுவாயாக! உன்னை அடைக்கலமடைந்தேன்! வேறு கதியறியேன். இப்பிறப்பிலோ இதற்கு முன்பிறவிகளிலோ நோன்புகளா லும் கொடைகளாலும் உண்டான புண்ணியம் அனைத்தா லும் இந்த மழையாலான துன்பம் கணவனுக்கு நேராமல் விலக்குவாயாக. அத்துன்பமெல்லாம் என்னை வந்து அடையட்டும்' என்று தன் மனத்தில் தமது குலதெய்வமான கலைமகளை வேண்டி, அத்துடன் நிற்க இயலாமல் அம் மழையின் கோரத்தையும் பொருட்படுத்தாமல் மிக்க துணிவுடன் தாய்க்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளி யேறித் தன் கற்பின் திறத்தால் மழை மேலே விழாமல் விலகி நிற்க வெள்ளம் இரு பிளவாகப் பிளந்து வழிவிடத் தன் கணவன் உள்ள பூந்தோட்டத்திற்குச் சென்று ஒரு

பக்கமிருந்து ஆய்ந்து தன் பிரார்த்தனைக்கு இரங்கிய கலைமகளின் அருளால் காற்று மழையால் யாதொரு துன்பமும் இன்றி எப்போதும் போலுள்ள தன்கணவனைப் பார்த்து 'என் தாயே சரஸ்வதி! உன்னருளை வெளிப் படுத்தினாயா' என்று கூறி மகிழ்ந்து மீண்டும் கணவனுக் கும் தெரியாமல் வீட்டுக்கு வந்து, வந்ததும் போனதும் யாருக்கும் தெரிவிக்காமல் வெட்கத்தால் அடங்கி ஒடுங்கி எப்போதும்போல் இருந்தாள்.

அப்போது அப்பூந்தோட்டம் பெருங்காற்று மழை யால் சிறிதும் கேடுறாமல் இருத்தற்கண்டு மக்கள் வியப்பு அடைந்தனர். அந்தச் சுகாத்திரியும் சில நாட்கள் வெட்கத் தால் கணவன் படும் துன்பங்களைப் பொறுத்துப் பொறுத்து முடிவில் நாணம் நெகிழ்ந்தோட மிகுதியான பதிபக்தி இதயம் முழுதும் நிறைந்தமையால் தாயின் கூற்றையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் எப்போதும் போல் அணிகலன்களைப் பூண்டு மகிழ்ச்சியுடன் கணவன் உள்ள தோட்டத்திற்குச் சென்றாள்.

சென்ற கணவன் வேண்டாம் என்று தடுத்தும் கேட்கா மல் தன் அணிகலன்களையெல்லாம் துகிலில் முடிந்து ஒரு மரக்கிளையில் வைத்துவிட்டுக் கணவனின் பணிகட்குத் துணையாகப் பணி செய்ய முனைந்தாள். மென்முலைக் குவடுகள் அசைந்தாட மண்வெட்டியால் குழிகள் தோண்டி யும், பாரமான நிதம்பங்கள் அசைய அங்கிங்குமாக நடந் தும், சேற்றுத் துளிகள் கண்ணாடி போன்ற கன்னங்களில் படப் பாத்திகளுக்கு நீர் மாற்றி மாற்றி வார்த்தும், இடை யெனும் மென்கொடி இறுமென அஞ்சும்படியாகச் சுமைகள் சுமந்தும் சிறுவியர் வருப்பிய புத்தெழிலுடன் கூடிய இளமை ததும்பும் மேனியுடன் சுருங்குழலும் அசைய எதற் கும் தானே முன்சென்று ஓடியாடி எல்லா வேலைகளையும் களிப்புடன் செய்தாள்.

மங்கை இவ்விதம் பரபரப்புடன் வேலைசெய்ய நிதம்பமும் முலைகளும் கூந்தலும் அசையும் அழகைக்கண்டு

கற்றுக்கொண்டு விதத்தில் அவனது உள்ளத்தில் மன்மதன் மலரம்புகளை ஏவினான். அப்போது சாலீனன் மன்மதனின் பூவம்புகட்காற்றாமல் 'பைத்தியக்காரப் பெண்ணே! எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டாய் போலிருக்கிறது! அடடா! உனக்கும் தோட்டவேலைக்கும் எவ்வளவு தூரம்?' என்று கூறி தன் துண்டை எடுத்து அவளது நெற்றியிலுள்ள வியர்வைத் துளிகளை மென்மெலத் துடைத்தாள். துடைத்ததோடன்றி மன்மதனின் மகிமையால் அவளது நுதலில் மீண்டும் மீண்டும் அரும்பும் வியர்வைத் துளிகளைக்கண்டு அவளது களைப்பை காணச் சகியாதவனாக 'ஏனிப்படிக் கஷ்டப்பட்டு வருந்த வேண்டும்' என்று கூறி மிகுந்த ஆவலுடன் அவள் தலையைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டான். அதன் பின் மிக நெருக்கமாகச் செறிந்துள்ள தளிரிலைகளுடன் கூடிய எழிலார்ந்த பூப்புதரில்லத்திற்கு மனைவியை அழைத்துச்சென்று புதுமண மதுவின் தேறலை ஒக்க நின்றருந்தினான்.

அவன் காதலின்பிற் களித்து. விடாயல் மேன்மேலும் அணைத்தின்புறவே 'இது புதுமையாயிருக்கிறது. வீட்டுக்குப் போகவேண்டாமா?' என்று கூறி விடைபெற்றுக் கொண்டாள். வந்து தன் அணிகலன்களை அணிந்து கொண்டு கணவனின் செயல்கட்கு உளத்தில் மகிழ்ந்தவாறு வீட்டுக்குச் சென்றாள். இளவேனிற் காலத்து வெயிலால் வாடிய புத்திளம் பூங்கொடிபோல அந்நங்கை திகழ்ந்தாள்.

இவ்விதம் கணவனின் அன்பைப்பெற்று இலங்கிய சுகாத்திரி வீட்டுக்குச் சென்றதும் அவளது தோழிகள் அவளது முகவிலாசத்தைக் கண்டு அவளது கோரிக்கை ஈடேறியதாக உணர்ந்து குறிப்பாகப் பேசிக் கேலி செய்து விளையாடினர். அவள் தாயும் மகிழ்ந்தாள். அன்றிரவு அவளது தோழிகள் அவளுக்குக் குதூகலத்துடன் எப்போதையும்விட அதிகமாகவே அணிகலன்கள் பூட்டிக் கேளிக்கை வீட்டிலிருந்த கணவனிடத்திற்கு அனுப்பினர்.

பரபரப்புடன் ஓடியாடி வேலை செய்யும்போது அசைந்தாடும் இடையழகும், சிறிதே அழுக்குற்ற சீலையின் ஊடாக அசைந்தெழில் கொள்ளும் நிதம்பத்தழகும், துகில் போர்த்தமென் முலைகளின் அசைந்தாடுமழகும், வியர்வைத் துளிகளால் நுதலிலுள்ள கஸ்தூரித் திலகம் கலைந்த எழிலும், அடிக்கடி குலைந்தெழில் கொண்ட குழலழகும் தன்னை ஒரு வேலையும் செய்யவொட்டாமல் தானே முன் சென்று வேலை செய்யும் அவளது உருவத்தெழிலும் அவன் மனக்கண்ணில் தோற்றி மயக்கியமையால், அப்போது செயற்கையணிகளுடன் வந்த அவளது உருவத்தினைக் கண் திறந்து பாராமல் அலட்சியமாக எப்போதும்போல இருந்தான். அவளும் வெகுநேரம் இருந்து பார்த்துவிட்டு 'என்மேல் என்ன குற்றமுளதோ?' என்று வருந்தியவாறு இருந்தாள்.

ஆடம்பரமான அணிகலன்களை எளிய இயற்கை இன்பத்தில் தோய்ந்த சாலீனனின் இதயம் வெறுத்ததில் வியப்பு யாது? அப்படியிருக்க அம்மடந்தையும் திரும்பிப் போக முனைந்து 'திரும்பி அங்குச்சென்று என்ன பயன்? இங்கே சும்மா கிடந்தால் ஆவது ஆகட்டும்' என நினைந்து கதவருகிலேயே நின்றாள். அப்பூங்குழலாள் வெகுநேரம் அங்கிருந்து பார்த்துவிட்டுத் துணிவுகொண்டு 'மிகுந்த பணிகளால் களைத்திருக்கிறீர்கள் போலும் போகட்டுமா? தூங்குகிறீர்களா?' என்று கற்பூரம் கலந்த தாம்பூல மணம் பரவும்படியாக அவன் செவியருகிற் சென்று கூறினாள். அலட்சியமாக இருந்த சாலீனன் அவளை நோக்கி 'என்ன விரும்பி வந்தாய்' என்று கேட்க, அம்மடந்தை துயருடன் 'உலகிலுள்ளோர் கணவனிடம் எதை விரும்பி வருவார்கள்' என்று கூறி மறுகினாள். பின்னும் பொறுமையுடன் 'பிராணநாயக! மற்றதெல்லாம் இருக்கட்டும்! இந்த அளவாவது எதை விரும்பி வந்தாய் என என் மன வேட்கையை அறிய விரும்பிக் கேட்டீர்களே! அதுவே போதும். எனினும் என்னவென்று சொல்வது! விடியும் நேரமாகிவிட்டது. பாதங்களைப் பிடித்துவிடச் சொல்லி

வரவழைப்பதோ! அருகில் வருமாறு சொல்வதோ! கண் திறந்து குளிரப் பார்ப்பதோ சிறிதும் இல்லாமலிருக்கின் றீர்களே! இன்று பூந்தோட்டத்தில் என் பாக்கியத்தால் உங்களது அருள் பெற்றமையால் இவ்வளவு தூரம் சொல் கிறேனன்றிக் கற்புடைய மகளிரின் பண்பிதன்றென்பதை நான் நன்கறிவேன்' என்று கூறி இதயத்தில் காதல் நோய் மிகவே சிறிது சிந்தித்துக் 'கல்லானது சிறிது நன்று என்ன லாம், உங்கள் மனம் அதனினும் கடிதாகும் போலும்' என்று கூறி அவனது பாதங்களை மென்மெலப் பற்றினாள்.

பற்றி, கொஞ்சம் வருடிப் படுக்கையருகில் உட்கார்ந்து பட்டாடையணிந்த தன் தொடைகளின்மேல் வைத்துக் கொண்டு வருடி அவனது பாதங்களை முலைக்குவட்டிற் சேர்த்து, கண்களில் ஒற்றிக்கொண்டு கன்னத்தில் சேர்த்துத் தன் மிகுந்த காதல் வேட்கையைப் புலப்படுத்தினாள்.

இவ்வளவு செய்தும் அவன் அலட்சியமாகவே இருப்ப தைக்கண்டு 'இதென்னவோ?' என்று தன் மனதில் குழம்பி வருத்தமுடன் அவனிடம் மெதுவாகக் கூறலானாள், 'தங்கள் மனம் வேறொருத்தியிடம் சென்று திருப்ப இயலா மல் இருக்கிறீர்களா? அவளை அழைத்துக்கொள்ளுங்கள்! என்னால் இயலுமானால் சொல்லுங்கள்! நானே அழைத் துக்கொண்டு வருகிறேன். தங்கட்குப் போலவே அவளுக் கும் சேவை செய்கிறேன். குழப்பமெதற்கு? உங்கள் எண்ணம் ஈடேறினால் அதுவே போதும். என்னை விற்க நினைத்தாலும் வருகிறேன். விற்றுக்கொள்ளுங்கள். தங்கள் சிந்தனை யாதோ? தெரியப்படுத்துங்கள்' இவ்வாறு கூறிப் பாதங்களை வருடித் தொண்டாற்றியிருப்ப அவன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன் மனத்தில் அன்று தோட்டத்தில் கண்டபடி இயற்கையெழிலுடன் கூடிய அவளது உருவப் பொலிவையும் களைந்த கற்றையங் குழலி னழகும், பணிசெய்யும் விரைவும், அடக்கமும், அன்பும் இன்பக் காதற் புணர்வின் நலனும் எண்ணி எண்ணி மயங்கினான்.

அக்கற்புடை நங்கையும் சலிப்பின்றி அவனது பாதங் களை வருடியவாறு வேறொன்றும் கருதாமல் கணவன் நலனை நினைந்தவாறு அன்றிரவைக் கழித்தாள். பின் முதல் நாள் போலவே ஆர்வமுடன் பூந்தோட்டத்திற்குச் சென்று வேலைகள் செய்து கணவனின் இன்னருள் பெற்று 'இவனதுள்ளத்திற்கு இத்தகு எழில்கள் அன்றி அணிகலன் கள் இன்பந்தருமாறில்லை' என்று உணர்ந்து நாள்தோறும் சென்று பூந்தோட்ட வேலைகள் செய்து கணவனைக் காதலின்பப் புணர்வுகளில் மகிழ்வித்து வந்தாள். இதை அவளது தாயாரும் அறிந்தாள். அறிந்ததும் தன் மகள் தனிமையாக இருக்கும்போது இவ்வாறு கூறினாள். 'அம்மா! சரஸ்வதி தேவியின் வரத்தால் நீ பிறந்தாய். எல்லா நல்லறங்களும் அறிவாய். கலைமகளே என் கன வில் தோன்றி 'உன்னால் நமது குலமே புனிதமுறுமென்று கூறினாள். உனக்குச் சந்ததி வேண்டித் தவமிருக்கிறேன். உன் கணவன் உன்னைக் கைப்பிடிப்பதற்கு முன்பு நான் சில சமயம் கடிந்துகொண்டாலும் நீ பொறுக்காது கோபித் துக்கொள்வதை ஓர்ந்தால் சிறந்த கற்புக்கரசியாகத் திகழ்வதறிவேன். உன் கணவனை ஏதாவது சொல்லி விட்டால் நீ மிகவும் வருந்துவாய். பிறர் புகழ்ந்தால் மிகவும் மகிழ்வாய். பிற ஆடவரின் அழகைப் பற்றிப் பிறர் கூறினும் கேட்கச் சகியாய். கணவனின் நலனையே வேட்டுக் கடவுளை யிறைஞ்சிப் பதிபக்தியுடன் இருப்பாய். கணவன் மகிழ்ந்தால் மகிழ்வாய். வருந்தினால் வருந்து வாய். மெலிந்தாய் மெலிவாய்! கணவன் மிகுந்த அன்பு காட்டினும் செருக்குற மாட்டாய். சினந்தாலும் வருந்த மாட்டாய். நிறைகுடம்போல் எப்போதும் இருப்பாய். மின்போன்ற பாவாய்! கணவனைப் பிரிந்துள்ள காலத்தில் உன்னை அலங்கரித்துக்கொள்ள மாட்டாய்! உன் கற்பின் திறத்தாலன்றோ கலைமகளும் கருணையுடன் வந்துன்னு டன் பேசுவாள். இத்தகு சிறப்புடைய நின்னிடம் என் மனதிற்குத் தோன்றிய குறையைக்கூற விரும்புகிறேன். கேட்பாயாக. பகலில் புணர்ந்தால் நற்குணங்களில்லாத குமாரன் பிறப்பான் என்று சொல்கிறார்கள். அன்று

ஏதோ விதி வசத்தால் கோபத்தால் உன் கணவனைப் பூந்தோட்ட வேலைக்கு அனுப்பினேனேயன்றி நமக்குத் தோட்ட வேலை செய்யப் பணியாட்கள் இல்லையா? இனியேன் உன் கணவன் தோட்டவேலை செய்யவேண்டும்? மகளே! நீயேன் அங்குப் போகவேண்டும். கயற்கண்ணாய்! வயதிற் சிறியவளானாலும் அறிவில் பெரியவள் உனக்குத் தெரியாத நல்லது கெட்டது என்ன இருக்கிறது' என்று கூறினாள்.

அப்பொழுது புன்னகை முகத்தில் தவழத் தாயைப் பார்த்துச் சுகாத்திரி இவ்விதம் கூறினாள். 'கணவனுக்கு எது இன்பந்தருமோ அதுவே நல்வழி என்றும் எது இன்பந் தராதோ அதுவே தீயவழியென்றும் கருதுகின்றேன். என் இயல்பு மாற்ற முடியாதது. கடவுளும், வேதமும் குருவும் எல்லாமே கணவனாகக் கருதி அவர் ஆணைப்படி செய்வ தன்றி மற்ற நல்லது கெட்டது எதுவும் கைக்கொள்ள மாட்டேன். எதையும் நல்லது என்று செய்வதோ, தீதென்று விடுவதோ இல்லை. கணவன் விரும்பியதைச் செய்வேன். விரும்பாததைச் செய்யமாட்டேன்' என்று தாயிடம் இவ்விதம் கூற அவளது கற்பின் திறத்திற்கு வியந்து பாராட்டிய கலைமகள் கண்முன் தோன்றிக் கருணையுடனும் வாத்சல்யத்துடனும் பெருமை செய்து அவளது தாயைப் பார்த்து 'இக்கற்பின் செல்வியைப் புத்திமதி சொல்லித் திருத்த முயல வேண்டாம். இவளது கற்பின் திறத்தால் அவளது பாவம் மட்டுமின்றி, தன் குலத்துக்கும் கணவன் குலத்துக்கும் கூடப் புனிதம் சேர்த்தாள். இவளது புண்ணிய கதையை உலகினருக்கு நானே வெளிப்படுத்துவேன்' என்று அருள்பாலித்தாள்."

என்றிவ்வாறு அந்த மாணவன் படித்துச் சுவடியைக் காட்டினான். ஆசிரியன் என்னைக்கண்டு 'இதோ பார் அவர்கள் சரித்திரம் புனிதமானது' என்று கூறி இவ்விதம் கூறலானான். 'அந்தச் சுகாத்திரி சாலீனர்களின் மீது கலைமகளுக்கு எத்துணை கருணையோ அறியோம்.

எனக்கு அத்தேவிதான் கனவில் வந்து 'இந்த நூலைத் தினமும் காலையில் படிக்கவும்' என்று கூறித் தந்தாள். மேலும் இவ்வூரிலுள்ள எழுதப் படிக்கத் தெரிந்தவர்கட்கெல்லாம் அதே இரவில் அவ்விதமே தந்தாள். எல்லோரும் ஒருவருக்கொருவர் இதைக் கூறிக்கொண்டு வியப்புற்றனர். நேற்று நான் அந்தப் புண்ணிய தம்பதிகளைத் தரிசனம் செய்வதற்காக அந்தப் பூந்தோட்டத்திற்குச் சென்று அவர்களால் உபசரிக்கப்பட்டு அங்கேயே இந்தப் புஸ்தகத்தை மறத்து வைத்துவிட்டு வந்தேன். வந்து இன்று விடியற்காலையில் படிக்கச் சென்று நினைவுற்று அதைக் கொண்டு வரும்படி அனுப்பினேன் இப்போது இந்தக் கொடிய செய்தி வந்தது' என்று கூறி மீண்டும் அந்த உத்தம தம்பதியர்கள் மடுவில் விழுந்ததற்காகப் பல விதத்தும் வருந்தினான் நானும் அந்த ஆசிரியனிடம் விடை பெற்றுக்கொண்டு அப்போது அந்நகர் முழுதும் இதே பேச்சாக இருந்தமையால் என் கல்வியை ஆராய்ந்து பார்க்க இது தருணமல்ல என நினைந்து நாகலோகம் சென்று சிறிது காலத்தில் சங்கீதத்தை நன்கு பயிலும் வேட்கை மீதூர நாரத முனிவனை அணுகிக் கூடத்திரிந்து வந்தேன்' என்று மணிகந்தரன் சொல்லி 'ஓ! கலாபாஷிணி அவ்விதமாகச் சாலீனனின் உளம் கிராமிய பேதமைக் குறைபாட்டால் முன்னர் அற்புதமான உடையணிகளின் ஆடம்பரத்தால் திகழ்ந்த மனைவியை விழையாது அவள் பூந்தோட்டத்தில் ஊழியம் செய்யும் போதுள்ள எளிய தோற்றத்தில் ஈடுபட்டு முயங்குதலுற்றமை உனது மனப் பரிபாகத்திற்கு உதாரணமாம்' என்றுகூறிச் சுமுகாசத்தியை நோக்கி 'உன் குலம், பிறப்பிடம் செய்திகளை எண்ணிப் பார்த்தால் அந்தச் சுகாத்திரி சரித்திரம் உனக்குத் தெரியாமலெப்படி இருக்கும்?' என்று கேட்க, 'எனக்குத் தெரியாமலென்ன! அந்தச் சுகாத்திரியே நான்தானே' என்று கூறி அவள் சிரித்தாள்.

அக்கூற்றைக் கேட்டதும் அவர்களெல்லோரும் வியப்புற்று 'நீயா அந்தப் புண்ணியவதி! எப்படிப் பிழைத்தாய்?

ஏன் இந்த மாற்றுப் பெயர் பூண்டாய்' என்று கேட்ப அவள் கூறலானாள். 'சததாள தக்னம்' எனும் அப்பெரு மடுவில் நான் விழும்போது என் கணவன் திருவடிகளை மனத்தில் நினைந்து மற்றொன்றும் கருதாமல் மூழ்கும் போது இடையே பெருமுதலை விழுங்கியது. விழுங்கிய என்னை ஜீரணம் செய்துகொள்ள இயலாமல் மறுநாள் காலை கரையில் வந்து புரண்டவாறு வெளிக்குக் கக்கியது. அப்போது அங்கிருந்தோர் இதைச் சொன்னார்கள். எல்லோரும் வியப்புறவே நான் வீட்டுக்குத் திரும்பி வந்து கலைமகளைத் துதித்துக் கணவனைச் சேர்ப்பது உன் கடன் என்று கூறி இருந்தேன். கலைமகளை இவ்விதம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்போது நரை வந்து சேர்ந்தது. கணவனைத் தொண்டு செய்யும் பேறளிக்காது முதுமை வந்துற்றதால் ஆவதாகட்டும் என வைராக்கியம் உண்டாகி வேதாந்திகளுடன் சில போதும் யோகிகளுட னும் சில போதும் பொழுதைப்போக்கினேன். யோகத் திற்கு அங்கமான ஆசனங்கள் போடத்திறனுள்ள இளமை போயதால் வருந்தினேன். அப்போது பண்டிதர்களை அணுகி அளவளாவியதால் எனக்குச் சுமுகாசத்தி என்ற பெயர் உண்டாயிற்று. சுமுகர் என்றால் சாத்திரமறிந்த வர்கள் என்ற பொருள் உண்டு. இந்தப் பெயரால் பிரசித்தி அடைந்திருந்தேன். அதற்குள் எனது தாயும் என்னைப் பிரிந்து மறைந்துவிடவே தீர்த்த யாத்திரையாக உலகெங்கும் சுற்றிவந்து முடிவில் இந்தத் தேவியின் குணங் களைக் கேட்டு இங்கு வந்துற்றேன். மற்றதெல்லாம் நீங்கள் அறிந்ததுதான், இவ்விதமாகக் கற்பின் திறத்தால் புகழ் பெற்றும் இந்த நிலைமையை அடைந்தேன். மீண்டும் பிழைத்தும் பயனென்ன? அந்த மடுவில் குதித்த கணவன் என்னவானானோ அறியேன்' என்றதும் 'முதலை விழுங்கி யும் மறுநாள் அவ்விதம் ஊனமின்றி வந்த செல்வியாகிய உன் கற்பு உன் கணவனைக் காப்பாற்றாது இருக்குமா? மற்ற ஐயப்பாடுகளைத் தவிர்க! உன் கணவனைக் கலந்து மகிழுங்காலம் வந்துவிட்டது. அவன் நானேதான்' என்று மணிஸ்தம்பன் தன்னையே சுட்டிக் காட்டினான்.

காட்டி 'நான் பிழைத்த விதத்தைக் கூறுகிறேன் கேள். அவ்விதம் உன் சொற்கேட்டதும் மிகவும் சினந்து எந்த விதி வசத்தாலோ கோபாவேசத்தால் சென்று மடுவிற் குதித்தேனல்லவா? அதன் பிறகு குதித்த களைப்பால் மார்பு வலிக்க நொந்தவாறு எதிரே ஜலஸ்தம்பம் செய்து மறைந்திருக்கும் ஒரு சித்தனை, வீட்டில் இருப்பது போல இருந்த மகாத்மாவைக் கண்டேன். அவ்வளவில் அவன் என்னைக் கண் திறந்து பார்த்து நான் வணங்குதல் அறிந்து என்னை யார் எனக் கேட்க நான் நடந்ததெல்லாம் சொன்னேன். 'அடே இவ்வளவு பெரிய முன்கோபியா' என்று கூறிச் சிறிது நகைத்தான். பின் 'இது யாருமறியாத தனியிடம் என்றிருக்கிறேன். மற்றவர்களை ஒரு க்ஷணமும் இங்கு இருக்க அனுமதிப்பதில்லை' என்று கூறி என் முகத்தைக்கண்டு தாட்சண்ணியத்துடன் என்னை அன்றுமுழுதும் தன்னருகேயே வைத்துக்கொண்டான். எனது குரு பக்தியைக் கண்டு மகிழ்ந்த அவன் வயதை நிறுத்தி இளமை தரும் மணி ஒன்றும் தான் ஏறிச் செல்லும் சிங்கவாகனம் ஒன்றும் அதை வசீகரிக்கும் மந்திர ஞானமும் ரசவாதக் கலையும் இந்த வாளும் தந்து போகவிடுத்தான். அப்போது தான் 'இந்த வாளினால் யாரை வீச நினைக்கிறாயோ அவர்களை நிச்சயம் கொன்றே தீரும்' என்றும் கூறினான். அது கேட்டு மகிழ்ந்த நானும் அவரை வணங்கி விடை பெற்று அவர் அருளால் அங்கு வந்திருந்த சிங்க வாகனத்திலேறியதும் அந்தச் சிங்கம் விரைந்து ஆழமான மடுவில் இருந்து வெளிப்பட்டு வானவெளியிற் சென்றது. அது கண்டு பேரானந்தமுற்ற நான் உலகிலுள்ள எல்லா அற்புதங்களையும் காணவேண்டுமென்ற வேட்கையால் புறப்பட்டேன். மணியின் மகிமையால் வயதைத் தடுத்து இளமையை நிலையாகப் பெற்றதனால் எனக்கு 'மணிஸ்தம்பன்' என்ற பெயர் பெற்றேன். பெண்ணே! எனது குருவின் அனுமதியினால் இந்தச் சித்த வேஷத்திலேயே வேண்டிய இடங்கட்குச் சென்றுகொண்டிருக்கிறேன், அவ்விதமே இங்கும் வந்துசேர்ந்தேன். அதன்

பின் நான் வந்து போவதையெல்லாம் நீயும் அறிவாய்' என்று கூறினான்.

"அந்தச் சாலீனன் நீயேயானால் அன்று அவ்வளவு கோபமடையும்படி நான் என்ன சொன்னேன், எதைக் கேட்டாய்? என்ற விபரங்களைச் சொல்வாயாக!" என்று கூறிக் கலபாஷிணியைப் பார்த்து 'நீ இங்கே வா! உனக்கு அந்த ரகசியத்தை முன்னால் சொல்லிவிடுகிறேன். பின் அவரிடமும் கேட்டு உண்மை தெரியலாம்' என்று கூறி அவள் செவியருகே சொல்லச்சென்று, நின்று 'ஓகோ! இது உபாயமன்று! அவன் தொலைக்கேள்வி (தூரசிரவணம்) உள்ளவன். சொல்வதைக் கேட்டு மீண்டும் சொல்லி விடுவான். எழுதிக் காட்டலாம் என்றால் தொலைக்காட்சி (தூரதிருஷ்டி)யும் உடையவன். அதுவும் முடியாது என்று சொல்லி மணிகந்தரனைப் பார்த்து 'நீ முதலில் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள். பின்னர் நான் சொல்கிறேன்' என்றாள்.

அவனும் மணிஸ்தப்பனை மறைவிடத்திற்கு அழைத்துச்சென்று முன் அவனுடைய கோபத்திற்குக் காரணமும் அந்நாளைய இரகசிய வார்த்தைகளையும் கேட்டுக் கொண்டுவந்து சுமுகாசத்தியைப் பார்த்து 'இனி நீ என்ன கூறுவாயோ கூறு' என்றதும் அம்மடந்தை இவ்விதம் கூறத் தொடங்கினாள். 'அவ்விதம் சாலீனன் மடுவில் விழுவதற்கு முன்பு என்னுடன் தனியாக இருந்தபோது பேச்சுவாக்கில் 'அமுதம் பருகினாயோ? ஏதாவது சித்தரசம் கிடைத்ததோ? உன் இளமைப்பருவம் மிக்க எழிலும் இளமையும் பெற்றுப் பொலிவுடன் புதுப்புது வண்ணங்களைக் காட்டுகின்றது. ஆண்களைவிடப் பெண்களுக்குப் பருவம் முன்பாகவே தளரும் என்பார்கள்! கற்புடை நல்லாய்! உன் எழில் ஒவ்வொரு நாளும் மிகுந்து காணப்படுவதற்குக் காரணம் யாதோ? சொல்' என்று கேட்க, நான் 'எதுவும் எனக்குத் தெரியாது' என்று கூறவும் கணவன் 'சும்மா இப்படிச்

சொன்னேன்! நானே காரணத்தைக் கூறுகிறேன் கேள்!' என்று காதருகே வாய் வைத்து இவ்விதம் கூறினான். 'எந்நாளும் உன் இளமை எழில் உருவைக் கட்டியணைத்து இன்புறவேண்டி வேட்கையுடன் உனக்கு என்றும் கரு உண்டாகாதவாறு சாரதா தேவியை வரம் வேண்டினேன். அந்தத் தேவியும் அவ்விதமே வரம் தந்தாள். அதனால் தான் உன் மெய்யில் என்றும் எழில் கொழித்து மிகுந்த புத்திளம் பொலிவு காணப்படுகிறது' என்றிவ்வாறு கூறவும் நான் மிகு வியப்புற்று 'எனது புணர்வால் உனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று நான் வேண்ட அந்தச் சாரதா தேவியே வரம் ஈந்தாள்! இதுவும் அதுவும் அப்படிப் பொருந்துமோ?' என்று சொன்னேன். எனவும் 'எனது விருப்பத்துக்கு விரோதமாக அந்தத் தேவியை இவ்விதம் வரம் கேட்டாயோ?' என்று மிக்க சினத்துடன் அந்த மடுவில் குதித்தான்' எனக்கூறவும் மணிஸ்தம்பன் கூற்றும் அவள் கூற்றும் ஒன்றாயிருப்பதறிந்து மணிகந்தரன் 'ஓ! பெண்ணே! ஐயுறாதே! இவன் உன் கணவன்தான்' என்று கூறினான்.

அவளும் இயல்பாகப் பிறந்த நாணத்துடன் கூடிய பார்வையால் கணவனைக்கண்டு மகிழ்வும் பயபக்தியும் அடக்கமும் தோன்றத் தகுந்த முறையில் உபசரித்து 'இது வரை தங்களை அறியாமல் என்னென்ன கூறினேனோ' என்று கூறியவாறு வந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு 'தங்கள் நடை, பேச்சு, நகை முதலியவற்றில் முன்போலவே தோற்றி 'உலகத்தில் ஒருவரைப்போல் ஒருவர் இருப்பார்களல்லவா?' என்று விதி வசத்தால் இருந்துவிட்டேன். இப்போது இந்த அண்ணலினால் நமக்கு நற்காலம் கிட்டியது. நல்லோர் தொடர்பு இம்மைக்கும் மறுமைக்கும் நலம் தருமன்றோ?' என்று கூறி மணிகந்தரனைப் பார்த்து 'உன் இசையைத் தூரசிரவணத்தால் (தொலைக்கேள்வி) கேட்டு இவர் பாராட்டுவதை நான் அடிக்கடி கேட்பேன். பிறப்பில் கந்தருவன். எழில் மிகுந்த உருவம் உடையவன். இயலிசையில் இணையற்றவன். தவம் செய்தவன்.

கண்ணனின் பக்தன். இத்தகு சிறப்புடைய உனக்கு முடிவில் சாபம் ஒன்று வந்து சேர்ந்ததே என்று வருந்துகிறேன்' என்றாள்.

அதுகேட்ட கலபாஷிணி மணிகந்தரனைப் பார்த்து வருத்தத்துடன் 'முன்பு நளாபூரணன் கதையைக் கேட்கவில்லையா? நளகூபரனால் அப்படிச் சாபம் பெற்றதேன்?' என்றாள். அதற்கு அவன் நான் என்றும் அறிந்ததில்லை. நீ எங்குக் கேட்டாயோ தெரியாமல் சொல்கிறாய். எனக்கு எப்படித் தெரிய முடியும்' என அவள் சிறிது யோசித்து 'ஆமாம்! நீ சிறிது தொலைவு போயிருந்தபோதுதான் அதைப் பற்றிய பேச்சு வந்தது உண்மைதான்' என்று கூறி நாரதனை முதலில் சந்தித்ததும் அன்று களாபூரணன் கதையைப் பற்றிய பேச்சு வந்ததும் நாரதன் தானும் சொல்லக்கூடாது என்றதும் சொன்னவர்கள் புத்திர பௌத்திர சந்ததியுடன செல்வமாக உலகில் வாழ்வார்கள் என்ற காரணமும் ஒன்றுவிடாமல் மனோரிகோத்தாற்போலக் கேட்போர் வியப்பெய்துமாறு கூறினாள்.

அப்போது மலையாள பிராமணன் ஒருவன் அலகுவிரதன் (குறைவில்லா நோன்போன்) எனும் பெயருடையவன் அங்கு வந்து சேர்ந்தான். அவனும் அவள் கூறியதைக் கேட்டான். கேட்டு "அந்தக் களாபூரணன் எத்தகு சிறப்புடையவனோ? அவன் கதை முழுதும் கேட்கும் பேறு பெறுவதென்றோ? செல்வம் வேண்டி நோன்பிருக்க இங்கு வந்தேன். அதனால் என்ன பயன்? செல்வம் மட்டும் கிட்டுமன்றி அக்கதை கேட்ட புண்ணியம் கிட்டாது. ஆதலின் அக்கதை கேட்டாலோ அதன் மகத்துவத்தால் எல்லாச் செல்வமும் எய்தலோடு நீடித்த ஆயுளும் புத்திர பௌத்திர சந்ததியும் கிடைக்கும். ஆதலின் இதுவே சரியான வழியாகும் களாபூரணனின் கதையைத் தெரிந்து கொள்வதே என் விரதமாகக் கொள்வேன்" என்று அந்தக் கோயிலிலேயே தேவியின் திருவருள் வேண்டித் தவம் செய்யலானான்.

கலபாஷிணியும் தனது சாபத்தை நினைந்துகொண்டு "வீண்கால தாமதம் செய்தால் என்ன ஆகுமோ ?" என்று நினைத்துச் சித்தனைப் பார்த்து அவனது வாளையும் பார்த்து மிகுந்த தைரியத்துடன் "ஏன் இன்னும் தாமதிக்க வேண்டும். உன் வாளின் விதிப்படி எப்படியும் அது என்னைக் கொன்று தீர்க்கும். ரம்பையின் சாபமும் துணை செய்கிறது. ஆதலின் என்னைப் பலியிட்டு நீ முன் கருதியபடி சாம்ராஜ்யமும் பெற்று உய்வாயாக" என்றாள். மணிஸ்தம்பன் (சித்தன்) அது கேட்டு "மான் போன்ற கண்ணினாய் ! முன்பு உன்னைக் கொல்ல வாள் எடுத்த போது இந்தச் சுமுகாசக்தி உன்னைக் கொல்லவிடாமல் இடை வந்து தேவியின் மேல் ஆணையிட்டாள் அல்லவா ? ஆகையால் உன்னைக் கொல்ல நான் அஞ்சுகிறேன். முன்பு பட்ட பாடே போதும்" என்று கூறி மணிகந்தரனைக் கண்டு "எனது வாளைத் தருகிறேன். இந்தத் தாமரைக் கண்ணாள் சொல்வது போலச் செய்து சாம்ராஜ்யத்தை அடைவாயாக" என்றான்.

அவனது மனைவியும் "ஓ ! மணிகந்தர ! இது நல்ல செயலாகும் " என்றாள். பின் அவனிடம் மீண்டும் இவ்வாறு கூறினாள். "நளகூபரனின் சாபத்தை அனுப விக்கக் காத்திருக்கும் நிலையில் இக்கொடுஞ் செயலால் பெறும் அரசு எதற்கு? என்ன பயனும் புகழும் விளை விக்கும் என எண்ணாதே! கடத்தற்கரிய சாபத்தின் பலனை பரோபகாரத்தின் பொருட்டுப் பயன்படுத்த நினைத்தும், தானே முன் வந்து வேண்டுகின்ற கலபாஷிணி யைத் தேவிக்குப் படைத்தல் கொடுஞ்செயலன்று ஆதலின் இவள் கூறியபடி செய்" என்று பலவாறு வற்புறுத்தி உடன் படச் செய்தாள். முடிவில் மணிகந்தரனும் சம்மதித்து முறைப்படி அச்செயல் செய்ய முனைந்தான்.

கலபாஷிணியும் மணிஸ்தம்பனையும் அவன் மனைவி சுமுகாசத்தியையும் வணங்கிக்கண்ணீரை அடக்கிக்கொண்டு "இந்தக் கலக்கம் அச்சத்தாலன்று! தங்களை முதுபெருங்

குரவராக வணங்கிப் பணிவிடை செய்யும் பேறு பெற்றிலேனே எனும் வருத்தத்தால்தான்" என்று கூறவும் சுமுகாசத்தியும் "ஓ தாயே! நம்மிடையான உறவு அதற்குள் அழிந்துவிட்டதே! அந்தோ அடுத்த பிறவியிலேனும் நீயும் உன் கணவனும் எம்மை வணங்கிப் பணிவிடை செய்வீராக" என்று கூறக் கலபாஷிணி மீண்டும் மீண்டும் வணங்கிக் கூப்பிய கரங்களுடன் இவ்வாறு கூறினாள்.

"எனது செவிகள் புனிதமுற்றன! கற்புக்கரசியான இல்லக்கிழத்தியே! உன் பதிவிரதாமகத்துவத்தைக் கேட்டாலும் எவருக்கேனும் கருணையுடன் நீ ஈந்தாலும் அந்தக் கற்பாற்றல் கிட்டும். எனக்கு மறுபிறவியிலேனும் அத்தகு கற்பு அமைய வாழ்த்துவாயாக!" என்றாள். எனலும் சுமுகாசத்தி "பரம பதிவிரதா சிரோண்மணியாகத் திகழ்ந்து சகல ராஜ்ய வைபவங்களும் பெற்று நீயும் உன் கணவனும் எம்மைப் பேணுவீர்களாக!" என்று கூறி மீண்டும் கூறலானாள்.

"சிறிதும் நிலைகுலையாமல் தைரியமாக இரு என்று கூறவேண்டியதொன்றும் இல்லை. திருமணத்திற்குப் போவதுபோலக் காணப்படுகிறாய்! மிகுந்த முகமலர்ச்சியும் பெருமிதமும் காண உன்னைத் தெய்வீக மடந்தை என்று கூறவேண்டுமேயன்றி மானுடப்பெண் என்று கூறவொண்ணாது" இவ்வாறு கூறிச் சுமுகாசத்தியிடம் விடைபெற்றுச் சித்தனின் முகத்தைப்பார்த்து "என்னை அனுப்புங்கள். வாளைத் தருகிறீர்களா?" என்று கேட்டு அவனது வலிமை மிக்க வாளைப் பெற்றுக்கொண்டு அதை மணிகந்தரனின் கரத்தில் கொடுத்துச் சந்தனம் பூசி, மலர் மாலையணிந்து தெளிவுடன் தேவியின் எதிரே கரம் கூப்பிச் சிரம் வணங்கிப் பத்மாசனத்தில் அமர்ந்து முகம் எத்துணையோ மடங்கு பொலிவுறக் கம்பீரமாக இருந்தாள்.

பின் மணிகந்தரனைக் கண்டு "இனி நீ கலையின்றி என்னைத் தேவிக்கர்ப்பணம் செய்க. பகைவரின் கழுத்தைத் துண்டாக்கும் உன் வலக்கரத்தின் திறனைக் காண்பேனாக! போரில் எதிர்த்த பகை வீரரை அழித்தல் இயல்பே எனினும் உனக்கு இத்தகைய சந்தர்ப்பத்தில் கரம் நழுவாது திடமாக இருத்தலே சிறந்த வீரமாகும்" என்று கூறினாள். இவ்வாறு கூறிய கலாபாக்ஷிணியின் மனத் தெளிவு கண்டு வியப்புற்ற மணிகந்தரன், என்னவென்று கூறுவது? முடிவில் தன் மனதைத் திடப்படுத்தி அவள் சொற்படி நடந்தான்.

அப்போது மிருகேந்திரவாஹினியான தேவி அவனைப் பார்த்து "ஓ! மணிகந்தர! நீ அருள் நோக்கால் மனஞ் சலித்து இந்தப் பலியைப் படைக்கும்போது சிறிது காலம் தாழ்த்தினாய். ஆதலின் அடுத்த பிறவியில் கருவிலேயே இளமையுடன் பிறந்து பேரரசின் வளனெல்லாம் பெறுவாய்! கலபாக்ஷிணியும் உயிர் அச்சம் சிறிதுமின்றி என்பால் பக்தியும் தைரியமும் உடையவளாய் என்னை மிகவும் மகிழ்வித்ததால் என்னருட் கொடையால் இப்போது மீண்டும் உடலிணைந்த முகத்துடன் உயிர் பெற்றுத் தன்னகரை அடைந்து தன் உற்றாருடன் கலந்துறைவாள்" என்று ஆணையிட்டாள்.

கலபாஷிணியும் அப்படியே உயிர்பெற்றுக் கண் திறந்து நாற்றிசையும் பார்க்கும்போது அப்போது தானிருப்பது துவாரகை நகரில் தன் இல்லத்துப் பூங்கா என்பதறிந்து மிகு வியப்புற்று 'இது எல்லாம் மிருகேந்திர வாஹன மகாசக்தியின் பேரருள்தான் போலும்' என ஓர்ந்து அந்தத் தேவியை வணங்கித் தான் போனதும் வந்ததுமான கதையைத் தோழியர்க்குச் சொல்லி அவர்கட்கு வியப்பும் மகிழ்வும் விளைவித்தாள். இங்கு மணிகந்தரன் முதலானோர் அம்மெல்லியலின் உடல் துண்டுகள் மறைந்தது கண்டு மருட்கை கொண்டு அந்த ஆதிசக்தியின் வாக்கை ஓர்ந்து அஞ்சலித்தார்கள்.

அவ்வளவில் மணிகந்தரன் மிருகேந்திர வாஹினியான தேவிக்கு அஞ்சலித்துச் சுமுகாசத்தி, மணிஸ்தம்பர்கட்கு வணக்கம் செலுத்தி விடைபெற்றுத் தனது சாபத்தின் பலனை அனுபவிக்கும் காலத்தை எதிர்பார்த்தவனாக கண்ணனால் தரப்பட்ட தனது இரத்தின ஹாரத்தை அங்கே தவம் செய்துகொண்டிருந்த அலகு விரதனுக்கு ஈந்து, தனது வீணையை அக்கோயிலில் உள்ள சுவர்ப் பொந்தில் பிறர் அறியாவிடத்தில் மறைத்து வைத்துவிட்டுச் சாபத்தின் பலனை அனுபவிக்கச் சித்தமாகி ஸ்ரீசைலத்தில் மலைச்சிகரத்திலிருந்து வீழ்ந்து இறக்க முடிவுசெய்து அவ்விடம் நோக்கிச் சென்றான்.

மணிஸ்தம்பன் சுமுகாசத்தி தனக்குப் பணிவிடைகள் செய்ய அங்குச் சின்னாள் யோகத்திலிருந்தான். பின்னர் பல நாடுகளைக் காணும் பேராவல் உந்த வான் வழிப் பயணம் செய்ய முனைந்தான். மிகு விரைவிற் செல்லும் தனது சிங்க வாகனத்தில் அவனும் அனைத்து மனைவியும் அமர்ந்து விருப்பிய இடங்கட்குப் பயணமானார்கள்.

செல்லும் வழியில் பயங்கரமான திமிங்கிலங்களை உடையதும், தூங்காது எப்போதும் ஓவென்றிரைச்சலை உடையதுமான மாபெருங் கடலைக் கண்டான். கண்டு தன் மனைவிக்கு அதன் எழிலைக்காட்டி இவ்விதம் கூறலானான். 'தாமரை போலும் கண்ணுடையாய்! கண்டாயா நீர்த்துளிகள் செங்கதிரோன் ஒளியோடு கூடிப்பளபளக்கும் காட்சியானது நவரத்தின நிதியான கடல் தனது செல்வத்தை வெளிக்குக் காட்டுவது போலிருக்கிறது, கயற் கண்ணாய்! அதோ, அந்தத் திமிங்கிலம் தன் தலையில் உள்ள துளை வழியாக வெளிப்படுத்தும் நீர்த்தாரை பருகி, தன் கடலரசன் வான கங்கையான காதலியின்மேல் பீய்ச்சும் பீய்ச்சுக்குழல் நீரோ எனும்படியாக உள்ளது. பயங்கரமான திமிங்கிலத்தின் தலையிலுள்ள துளை வழி யாகப் பீய்ச்சும் நீர் கரையில் வீழ்தல், கடல் எனும் நாகம் புஸ் என்று படமெடுத்துள்ளது போலத் தோன்றுகிறது.

கடல் தன்னுள்ளே இருக்கும் வடவைக் கனல் எனும் விரகத்தீ தன்னை மிகவும் வருத்த அலைக் கரத்தால் மேல் நோக்கி வானகங்கையைக் கட்டியணைக்கத் தாவுவது போல் தோற்றுகின்றது.

மலர்ந்த தாமரை போன்ற முகமுடையவளே ! இக் கடலரசன் திங்களஞ் செல்வன் உதிக்கும்காலையில், எல்லா நதிகளாகிய எழின் மடந்தையர் தன்னையவாவிவர வானகங்கையை அணைத்து மகிழ முயல்கிறான். நீலக் கடலிது கண்ணனைப் போலப் படுத்திருக்க, நீருண்ட மேகமெனும் கருங்கூந்தலவிழ, மின் கொடியான மேனி துவள திருமகள் காதலின்பிற்களிப்பதாகத் தோற்று கின்றது" என்றிவ்வாறு கூறியது கேட்ட தன் மனைவி வெட்கத்தால் தலை குனிந்து புன்னகை புரிய அது கண்டு காதல் மீதூர அவளை நோக்கித் தன் குறிப்பை வெளிப் படுத்த, அவள் "தங்கள் விருப்பப்படியே செய்வதன்றி எனக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது" என்று கூற அந்தச் சித்தனும் யனம் மகிழ்ந்து தளிர்களும் மலர்களும் நிறைந்த வனங்களிலும் புதரில்லங்களில் காதலியுடன் கலந்தின் புற்றான்.

அலகுவிரதன் இரண்டாண்டுகள் அந்தக் கோவிலில் தேவி முன்பாகத் தவமிருந்து வந்தான்.

ஐந்தாம் அத்தியாயம்

இவ்விதம் அலகுவிரதன் புவனேசுவரி மந்திரத்தை இரண்டாண்டுகள் தவம் செய்து முழுமையுற்றதும், தேவி 'ஓ பிராமணா! உன் விருப்பம் வேறோரிடத்தில் நிறைவேறும்' என்றனள். அச்சொற் செவிகளில் படுமளவில் திடீரெனக் காற்றுத் தூக்கி எறியப்பட்டவனாக ஒரு நகரிடையே அரச சபையில் வீழ்ந்து ஒரு சிறிது குழம்பிப் பின் தேறி மூடிய கண்களைத் திறந்து நாற்றிசையும் பார்த்துத் தான் வீழ்ந்த முறைக்கு வியந்து சுற்றிலுமுள்ள அவையோர் சிலரையும், தன்னெதிரே இரண்டாவது இந்திரன் போலப் புதுமைப் பொலிவுடன் திகழும் ஒரு அரசனையும் அவன் எதிரே தங்கத் தொட்டிலில் உள்ள சிறு பெண் குழந்தையையும் பார்த்துச் சிறிது நேரம் பிரமிப்புடன் அசையாதிருந்து, பின் திடுமென எழுந்து மணிகந்தரன் தந்த ரத்தினமாலையை வாழ்த்தியவாறு அவ்வரசனுக்குத் தந்தான்.

அரசனும் பெருவிருப்புடன் கைக்கொண்டு அருகில் அமரச்செய்து அப்போதைக்கு அவன் பெயர் மாத்திரம் கேட்டுத் தெரிந்துகொண்டு 'இப்போது நீ வந்த முறை மிகு வியப்பளிக்கிறது. பின்னர்ச் சொல்வாயாக. இப்போது சிறிது நேரம் பேசாதிருக்கவும்' என்று கூறி 'இப்போதைய காணிக்கை எதுவாயினும் இக்குழந்தைக்குரியதாகும்' என்று கூறி அந்த ரத்தின மாலையைத் தன்னருகிருந்த குழந்தையின் கழுத்திலிட்டான்.

அக்குழந்தை அங்குமிங்கும் புரண்டு கழுத்து வளைத்து அம்மாலையைக் கண்டு கன்னங்குழிவிழ மெல்ல நகைத்தாள். நகைத்து இவ்விதம் கூறலானாள். 'மீண்டும் இரண்டாண்டுகள் கழித்து இந்த எழில்மிகு ரத்தின மாலையை என் கண்ணிணைகள் செய்த தவப்பயனால் காணப்பெற்றேன்' என்றதும் கேட்டு அங்குள்ளோர் அனைவரும் சித்திரத்தில் எழுதிய பதுமைகளென்ன அசைவற்று வியப்பிலாழ்ந்தனர்.

மிக்க வியப்புற்ற மன்னன் குழந்தையின் முகத்தைப் பார்த்து, இச்சொற்கள் மிக்க வியப்பளிக்கின்றன. இவள் தெய்வப் பெண்ணோ? அவதார மூர்த்தியோ? என்று நினைந்து இவளுடன் பேசிப் பார்க்கலாம் என எண்ணினான். 'ஏ! அற்புதக் குழந்தாய்! நீ பிறந்து இரண்டு மாத மாயிற்றோ இல்லையோ? அதற்குள் எவ்விதம் இவ்வாறு கூறலுற்றாய்! எங்கே இதை இரண்டாண்டு கட்குமுன் கண்டாய்?" என்று கேட்டான். அதுகேட்டு 'என் முற்பிறப்பில் இதைத் தெளிவாகக் கண்டிருந்தமையால் கூறினேன்' என்று கூறினாள்.

அம்மன்னனும் அக்குழந்தையை நோக்கி 'நீ அவதாரம் செய்தவளேயன்றிச் சாதாரணப் பெண் குழந்தையன்று. ஆதலின் உன்சரிதம் முழுதும் கேட்கும் வரைக்கும் என் உள்ளம் நிலைகொள்ளாது. உன் முற்பிறப்பு வரலாறு யாது? ஏன் இங்குப் பிறந்தாய்? தெரிவிப்பாயாக!' என்று வேண்டலும் அக்குழந்தை தனது பூர்வ ஜன்ம சரிதமும், அப்பிறப்பின் காரணமான நிகழ்ச்சிகளும், நினைவுக் கோவையைத் தொடர்புபடுத்தி அங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாக அவையோர் எல்லோரும் சாவதானமாகக் கேட்க அம்மன்னனுக்கு இவ்வாறு கூறலானாள்.

"புகழ்மிக்க மன்னனே! கேட்பாயாக! இதற்கு முன் பிறவிக்கும் முன்பு அமைந்த பிறப்பில் சரஸ்வதி தேவி வளர்த்த பைங்கிளி நான். எனக்கு அவள் தந்த சாபத்தின்

விளைவால் இரண்டாவது உடல் பெறவேண்டி வந்தது. அதன் காரணத்தை எல்லாம் நான் சொல்கிறேன் கேள். இதன்மூலம் ஓர் அபூர்வமான கதை, ரசனை மிக்கதும், ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வர்யம் தருவதும், புனிதமானதும் ஆன கதையை இப்போது என் நா செய்த புண்ணியத்தால் சொல்லத் தொடங்குகிறேன். நான்முகன் தேவியின் அந்தப்புரத்தில் நான் வசிக்கும் காலத்தில் ஒரு நாள் பிரம்மதேவன் நாமகளுடன் கூடி ஆடை அணிகலன்களுடன் ஆடம்பரமாகச் செல்வச் செருக்குடன் புத்தெழில் காட்டி இருந்தான். இல்லத்தமைந்த பூங்காவிற்கும் சென்று களிப்புடன் சரச சல்லாபத்துடன் இருந்து தென்றல் வந்து மெய்தழுவி இன்புறுத்த மகிழ்ந்திருந்தான். பளிங்கிற் செய்த அன்னப் பறவையின் சிற்பங்களுடன் கூடிய மாணிக்கக் கம்பம் உடையதும், தங்கத்தால் ஆன படிக்கட்டுகளை உடையதும் ஆன பொய்கையின் கீழ்க் கரையில் இளங் கற்பக மரநிழலில் தளிர்ப் படுக்கையில் அப்பொய்கைக்கெதிர்முகமாகச் சரஸ்வதி தேவி தனது பாத கமலங்களை வருடப்பிரம்மன் படுத்திருந்தான்.

அப்போது மேன்மேலும் இடையறாது பொங்கும் கடத்தற்கரிய காதலுணர்வால் மனைவியைப் படுக்கையிற் சேர்த்து அவள் இதழமுதம் பருகும் வேட்கையால் தன் முகம் நான்கும் ஒரே சமயத்தில் தடுமாற அவள் முகத்தைத் தன்வசம் திருப்பினான். அப்போது அந்தக் களியாட்டத்திற்கு நகைசெய்து 'நன்று நன்று! இது முறைதானா? உங்கள் முகம் நான்கும் இவ்விதம் அவசரப்பட்டால் ஒரே முகமுடைய நான் எப்படி சமாளிப்பேன்? இதை நிறுத்துவீர்களா? இல்லை வேறேதாவது உண்டா?' என்று கலைமகள் கழுத்தைத் திருப்பி இதழ்களுக்கிடையில் கரத்தை மறித்து, புன்முறுவலும் கோபமும் அழகொழுகும் ஒளிப் பார்வையில் கண்டிப்பும், வளைந்த புருவக் கோடுகளின் அசைவின் எழிலும் காட்டிக் கணவனின் உளத்தில் காதல்தீ மூளச் செய்தாள். அப்போது பிரம்மன் வாணியின் முக மலரை வலிவிற் பற்றி இதழை மறித்த கரங்களை விலக்கிப்

பற்குறி படும்படியாக இதழமுதம் பருக அவள் கலை நிலையாதலின் மிக்க இன்பம் விளைவிக்கவே சொக்கி நிற்க அவள் கழுத்தில் இனிய மெல்லோசையொன்று கிளைத்தது. அவ்வளவில் சொல்லின் கிழத்தி அவ்விதம் தன் கலை நிலை மர்மம் வெளிப்பட்ட நாணத்தால் அந் நிலையை மறைக்கவேண்டிக் கணவனின் களியாட்டத்தைத் தடுக்கவேண்டிப் பற்குறியைப் பொறுக்க இயலாத வகை யில் நடித்துப் புலவி கொண்டாற்போல் முகந்திருப்பிப் புரண்டாள்.

நான் அப்போது தொடை நெருக்கம், கடைக் கண் மூடல் முதலிய கலையிற் குறிப்பிட்ட இலக்கணத்தால் ஊகித்தேன். பிரம்மனும் அவள்பால் கொண்ட விரக தாபம் மிகினும் உளத்தில் பொய்யான உறுதி வரவழைத் துக்கொண்டு ஒன்றும் பேசாமல் எதிரே மரக்கிளையில் மணிக்கூண்டிலிருந்த என்னைப்பார்த்து 'ஓ! கிளிப் பெண்ணே! பொழுது போகவில்லை. ஒரு கதை சொல்ல மாட்டாயா?' எனலும் நான் 'ஓ! தேவ! தேவரீர் திரு முன்பு நான் எத்தகைய கதையும் சொல்லத் தகுதி உடையவளா? நீங்கள் சொன்னால் நான் வேண்டுமாயின் கேட்கிறேன்' எனவும் 'அப்படியாயின் கேள்! சொல்கிறேன்' எனக்கூறி இவ்விதம் கூறலானான். 'காசாரபுரம் எனும் பட்டணத்தில் செல்வச் செழிப்புடன் களாபூரணன் எனும் மன்னன் திகழ்ந்தான். இவ்வுலகிலுள்ள எல்லா அரசர் களையும் வென்ற மன்னர் மன்னன் ஆக மிளிர்ந்தான். அவன் பிறக்கும்போதே இளைஞனாகப் பிறந்து சுபாவன் எனும் சித்தனால் புதிய மணியும், நல்ல வில்லும், ஒளிமிகு அம்புகளும் பெற்றான். அம்மணிக்கல் இளஞ்சிவப்பு நிறத்தில் அற்புதமாயிருந்தது. ஒளிமிகும் அம்புகள் அழி விலாதன. வில் வெற்றிதரும் பெற்றியது. இவை பெற்ற அவன் கொடுத்தோர்க்கு மரியாதையின்பொருட்டு எப் போதும் அதைத் தரித்திருந்தான். அவ்வளவில் ஒருநாள் மதாசயன் என்னும் மன்னன் 'ரூபானுபூதி' எனும் தன் மனைவியுடன் கூடித் தன் அமைச்சன் தீரபாவனுடன்

வரவும் தன் அண்மையில் நெருங்கியதும் களாபூரணன் திடீரெனத் தனது வில் திறனால் தீரபாவனை வெகுதூரம் ஓட்டி மதாசயனைச் சரணடையச்செய்து அவன் மனைவி யுடன் தனக்கு ஊழியம் செய்துவரும் அடிமைகளாக்கி னான். அவர்களும் அவனது கட்டளைப்படி நடந்தனர்." என்று சொல்ல அச்சொற்கள் கேட்டுப் புருவங்கோட்டியும் கடைக்கண் ஓட்டியும் சிறிதே புன்முறுவல் கூட்டியும் வாணி என்னைப் பார்த்து 'அந்தக் களாபூரணன் பின் என்ன ஆனான்? அவனுடைய தாய் தந்தையர் யார்? கேள்' என்று கற்பிக்க நானும் அப்படியே கேட்கவும் அந்த நான் முகன் இவ்விதம் கூறினான்.

'அபிநவ கௌமுதி எனும் மடந்தையை அவன் மணம் முடித்தான். அவனுக்குச் 'சுமுகாசத்தி' என்பவள் தந்தை யாகவும், மணிஸ்தம்பன் என்பவன் தாயாகவும் திகழ்ந்த னர்' எனவும் வாணி நகைத்து விரைந்து மீண்டும் கணவ னைத் தழுவிக்கொண்டு 'இதற்குள் இத்துணை மயக்கமா? மயங்காதீர்கள்' என்று கணவன் முதுகில் நீவி 'எப்படி எப்படி! அந்த மன்னனுக்குத் தாய் ஆணும் தந்தை பெண் பயலுமா?' என்று மீண்டும் மிகுதியாகச் சிரித்துச் 'சொல் லுங்கள்! அதன் பிறகு அந்த மன்னன் என்னவானான்' என்றாள். எனலும் அந்தக் காதற்களியில் மிகுந்த மகிழ் வெய்திய நான்முகன் வாணியின் கழுத்தைத் தழுவிக் காதல் மிக்கு நான்கு முகத்தாலும் முறையே முத்தமிட்டு இதழமு தம் பருகிக் கன்னங்களைக் கிள்ளி மகிழ்ந்தான்.

. மடந்தையும் ஒரு முகத்தின் விளைத்த பற்குறியில் துன்புற்றவளாய் 'அளவொடு என்றும் இருக்க மாட்டீர்கள்' என்று கோபித்தும் 'போதும், மேலும் சொல்லுங்கள். நீங்கள் சொன்ன ராஜா என்னவானான்' என்று கேட்ட வாறு அரவணைப்பை விடுவித்து இருகரங்களாலும் முகங் களை விலக்கப் பிடித்தாள். பிடித்தலும் அதனால் வெளிப் பட்ட கனக முலைக் குடங்களின் எழிலும் இடையின் மெலிவும் கண்டு சொக்கி மீண்டும் இதழமுதம் பருகினான்.

'இதெல்லாம் நன்கு தெரிந்தவர்தான். அந்த மன்னன் என்னவானான்? கதையைச் சொல்லுங்கள்' என்று வாணி கேட்க நான்முகன் இவ்விதம் கூறலானான்.

"என்ன ஆவான்? அம்மாமன்னன் 'சத்வதாத்மன்' எனும் மந்திரி அங்க தேசத்தில் 'கமுககண்டோத்தரம்' எனும் பட்டணத்தில் பட்டம் கட்ட மிக்க வைபவத்துடன் சீரும் சிறப்புடனும் திகழ்ந்தான். அவன் நகருக்கு 'மதாசயன்' தங்கக்கோட்டை கட்டி அவன் அருளை மிகப் பெற்றான். மதாசயனும் அவன் மனைவியும் அபிநவ கௌமுதியுடன் கூடிய மாமன்னனைப்பிரியாது வாழ்ந்தனர். அந்த மணியின் மகிமையால் 'மதுரலாலசா' என்ற மகளைப் பெற்றனர். அந்த மணியின் குணத்தைப் புகழ்ந்து 'முதல் வேதன்' 'இரண்டாம் வேதன்' 'மூன்றாம் வேதன்', 'நான்காம் வேதன்' எனும் பெயருடன் புகழ் மிக்க நான்கு புரோஹிதர்கள் விரைந்து களாபூரணனைச் சேர்ந்து அவன் தரித்த மணியைத் தொட்டின்புற்று அதன் பரிசத்தால் மனநிறைவுற்றனர். மன்னனும் அவர்கள் தன்னை அண்டி வாழ்ந்து கவர்ச்சியுடையவர்களாக இருப்பதாலும் தன் உள்ளம் மகிழ்வுறலாலும் அவர்கள் செயலுக்கு உடன் பட்டிருந்தான். அவ்வளவில் ஒருவன் மிகுந்த சுதந்திரத்தால் அந்த மணியை மிகவும் அழுத்திப் பிடிக்கவும் களாபூரணன் கோபித்து அவர்களை விலக்கி வைத்து அக்குற்றத்தினால் அவர்களது தலைவனான மதாசயன் கட்டிய தங்கக்கோட்டையும் வேண்டாம் எனக் களைந்தான். அவனும் அதனால் மனம் வருந்தாமல் 'அதனால் என்ன? எப்படியும் தன்னவன்தானே. தனது தேசத்திலேயே எங்காவது வாழ்கிறேன்' என்று களாபூரணனின் சேவையை விடுத்துக் குடும்ப சகிதமாகக் 'கமுககண்டோத்தரபுரத்தை' விட்டுச் சிறிதுதூரம் சென்று கண்ணெதிரே பூரண கலசங்களிரண்டுடன் எழில் பெற்றோங்குதல் கண்டு இன்புற்றவாறே மத்தியதேசத்தை அடைந்து நிலைத்திருந்தான்.

கமுக கண்டோத்தரபுரத்தைவிட்டு நீங்கும்போது பயணச் சந்தடியால் இளைத்து மெலிந்த மதுரலாலசையை அவர்கள் கவனிக்கவில்லை. தங்கட்கு மேன்மேலும் இன்பங்கள் வருமென்றுணரும்போது தங்களைச் சார்ந்தோரின் துன்பங்களை யாரும் கருத மாட்டார்களன்றோ? 'கமுககண்டோத்தர புரத்திற்கே மீண்டும் மதாசயன் திரும்பி வந்தான். திரும்பி வந்தபின் மதுரலாலசை களாபூரணனைக் கண்டதால் மீண்டும் உடல்நலம் பெற்றான். மதாசயன் தன் மகளைக் காட்டி 'அவள் நாடு நீங்க மெலிந்தும் இங்கு வந்ததும் நலம் பெற்றதும் உன் பெருமையைக் காட்டி நின்றது.' எனப் புகழ்ந்துரைத்து மனைவி மக்களுடன் கூடி அந்த ஆஸ்தானத்திலே மகிழ்வுடன் இருந்தான்.

அவனது நான்கு புரோகிதர்களும் மீண்டும் வந்து அடக்கத்துடன் அவனை அணுகினார்கள். களாபூரணனும் அவர்களை ஆதரித்தான். மதுரலாலசையும் பெற்றோர்களால் நன்கு பேணப்பட்டு வளர்ந்து மடந்தையாகிக் களாபூரணனை மணந்து இளமை இன்பங்கள் துய்த்தாள்.' என்று சொல்லக்கேட்டு, காதல் மீதூரப் புன்னகை பூத்தும் பொய்க்கோபம் பூண்டு புருவம் நெரித்து வாணி கணவனிடம் 'அப்புறம் போங்கள்! எவ்வளவு பெரிய மனிதர் நீங்கள்! என்னிடமா உங்கள் சொற்றிறனையெல்லாம் காட்டுகிறீர்கள்? உலகைப் படைக்கும் வல்லோய்! தங்கள் கைவரிசையை என்னிடம் காட்டாதீர்கள்' என்ன, அதற்குப் பிரம்மன் சிரித்து 'மடந்தாய்! இப்போது என்ன கண்டு கொண்டாய்? இப்படிக் கோபத்துடன் கண்டதெதுவோ சொல்லேன்' என்றான்.

அதற்குச் சரஸ்வதி 'அடேயப்பா? தங்கள் தொண்டு செய்யும் எனக்கு இந்த அளவு கூடத் தெரியாமலா போய் விடும்? இத்தகைய சாதுரியப் பேச்சுகளும் கருத்துரைகளும் நான் தந்த வித்தைகள் தானே! இப்போது நம் இடையே நடந்த சம்பவங்களைத்தான் கதையாக முழுதும்

சொன்னீர்கள். கடை சியைா என்ன சொல்கிறீர்கள் என்று பார்ப்போம் என இதுவரை கேட்டுக்கொண்டு சும்மா இருந்தேன். எல்லாம் சொல்கிறேன். கேட்க விருப்பி னால் கேளுங்கள். பொய்கையைக் காசாரபுரமாகச் சொல்லி அதில் தோன்றும் என் முகத்தின் நிழல்கண்டு முழுமதியெனும் கருத்தில் களாபூரணன் என்ற அரசனாக உருவகித்தீர்கள். அந்த மன்னன் களாபூரணன் இணை அரசர்களையெல்லாம் எளிதில் வென்றான் என்பது என் முகப்பிரதிபிம்பமான மதி எல்லா முகமதிகளையும் வென்று உள்ளதென உயர்வு நவிற்சியாகக் கூறினீர்கள். இதெல் லாம் தெளிவாகத் தெரிந்ததுதான். மேலும் அம்மன்னன் 'சுபாவன்' எனும் சித்தனால் வில்லம்புகளையும் ஒரு செம் மணியையும் பெற்றான் என்றீர்களே அது புருவமும் கடைக் கண் வீச்சும் இதழ்களும் சுபாவமாகவே எழிலுடன் அமைந்தவை என்று விளக்கத்தான் என்பது யார்தான் அறிய முடியாது?

மதாசயன் என்பவன் ரூபானுபூதி எனும் மனைவி யுடன் தான் தீரபாவன் எனும் மந்திரியுடன் வந்துற்ற காலத்தில் களாபூரணன் அந்தத் தீரபாவனைத் தன் வில் ஆற்றலால் தோற்கடித்து மதாசயனையும் அவன் மனைவியையும் கூடத் தன் அடிமைகள் ஆக்கினான் என்பது அந்தப் பொய்கையில் உங்கள் இதயமும் பார்வையும் உறுதியுடன் சிறிது பதியவே அந்த முகப்பிரதி பிம்பமும் தன் புருவ விலாசத்தில் பார்வை கூடிக் கவர்ந்து, விடாது இருக்கிறது என்பதாகத் தோன்றுகிறது. அதற்குள் இச் சொற்கள் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது. அது அந்தப் பிரதி பிம்பத்தில் தோன்றவே அந்தச் சிரிப்பைப் பார்த்து நிலவுடன் உவமிக்கும் நினைவு தோன்றவே, வேறு பாடின்மை விளக்க 'அபிநவ கௌமுதி' என்று சொல் கூறி அது பெண்பாற் சொல் ஆதலின் பெண்ணாக உருவகித்து மதாசயன் மணந்தான் என்று கூறினீர்கள்.

அந்தக் களாபூரணனுக்குச் சுமுகாசத்தி என்பவள் தந்தையும் மணிஸ்தம்பன் என்பவன் தாயுமாவார்கள்

என்பது அந்தப்பிரதிபிம்பம் அழகிய முகத்தருகில் அமைந்த காரணத்தால் அந்தப் பொய்கை நடுவிலுள்ள மணிஸ்தம்பத்தினுள்ளே தோற்றியதாகக் கற்பித்தீர்கள். அதில் ஆண் பெண்மைகளை ஏதோ நினைவில் தடுமாறிக் கற்பித்துக் கூறவே நான் நகையும் விரைவும் கொண்டு அடக்க முடியா உணர்வுடன் உங்கட்கு எதிராக அமைந்து இருந்தமையால் பொய்கை நடுவிருந்த பிரதிபிம்பம் போய் என்முகம் தங்கள் எதிரில் தோன்றவே அது என் உடலில் கழுத்துக்கு மேல் பாகத்தில் தோற்றலின் அந்தக் களாபூரணன் அங்க தேசத்தில் கிரமுக கண்டோத்தர புரத்தில் தோன்றியதாகக் கற்பித்திருக்கிறீர்கள். அது என் உடமையாதலின் சத்வதாத்மன் எனும் மந்திரி பட்டம் கட்டியதாகச் சொன்னீர்கள்.

அதற்குள் தாங்கள் என் கழுத்தைத் தழுவியதால் அது தங்கள் உடமையானதாதலின் தங்கள் தோள்கள் தங்கத்தின் நிறம் அமைதலினால் கிரமுக கண்டோத்தரபுரத்திற்குத் தங்கள் கோட்டை கட்டியதாகச் சொன்னீர்கள். தங்கள் உள்ளமும் பார்வையும் ஆர்வ மிகுதியால் என் முகத்தை விடாதுநோக்கி இன்னிதழமுதம் வேட்டலை ஆராய்ந்து, மதாசயன் ரூபானுபூதியுடன் அந்தக் களாபூரணன் கொலுவில் இருந்து சேவை செய்து செம்மணியின் மகிமையால் மதுரலாலசை எனும் மகளைப் பெற்றான் என்றீர்கள்.

அப்படி மணியைத் தொட்டுப்பார்த்து அதன் ஊற்றின் பத்தால் பேரின்பமடைந்தனர் என்று சொன்னது முத்தமிட விரும்பியபின் தங்கள் முகங்கள் நான்கும் என் இதழமுதத்தால் இன்புற்றன என்பதுதானே! அந்த முகங்கள் ருக் யஜுர், சாம, அதர்வ வேதங்கள் பிறக்கக் காரணமாதலின் உங்கள் உடமையாதலினாலும். முதல் வேதன் இரண்டாம் வேதன் எனப்பெயரிட்டு மதாசயன் புரோகிதர்களாகக் கூறினீர்கள். அவ்வளவில் நான் தங்கள் குறும்பால் பற்குறியால் துன்புற்றுச் சினத்துடன் தங்கள் முகத்

ஹைதத் தடுத்து அரவணைப்பை விடுவித்தது களாபூரணன் தான் தரித்திருந்த மணியை அந்தப் பிராமணர்களில் ஒருவனால் அழுத்தப்பெற்றுச் சினந்து அவர்களை வெளியேற்றினான் என்றும், அவர்களது தலைவனான மதாசயனின் பொற்பிரகாரத்தை அழித்தான் என்றும் கூறினீர்கள்.

அவ்வளவில் தேவரீர் உள்ளமும், பார்வையும் என் முகத்தை விடுத்து இதர அவயவங்களில் பாய அக் களாபூரணனின் சேவையை விடுத்து அவனுடைய அனங்க தேசத்திற்குச் சென்றதாகச் சொன்னீர்கள். அப்படிப் போகும்போது எதிரே கண்ட பூரண கலசங்களிரண்டைக் கண்டு சுபநிமித்தமாகக் கருதி மகிழ்ந்து மத்ய தேசத்தில் நெடுநாள் வாழ்ந்தான் என்பது தங்கள் சிந்தையும் பார்வையும் இணைமுலைகளைக் கண்டின்புற்று இடைப் பகுதியைக் கண்ணுற்றுச் சிறிது நின்றதைக் குறிக்கும் அல்லவா? முகத்தை விடுத்தல் முதலான இதழ் வேட்கை அடங்கியதை, பயணக் களைப்பால் மதுரலாலசை மெலிந்ததாகக் கூறினீர்கள்.

அவ்வளவில் பார்வையுடன் தங்கள் உள்ளம் மீண்டும் என் முகத்திற்கு வரவும் அதனால் முத்தமிடும் வேட்கை மீண்டும் கிளைத்து இதழமுதுண்டு இன்புற்றதை முறையே மதாசயன் குடும்ப சகிதமாக மீண்டும் களாபூரணனிடம் வந்து சேவை செய்து வந்தான் என்றும், அதனால் மதுரலாலசை மெலிவு நீங்கினாள் என்றும், அவள் இளமையில் களாபூரணனின் அருள் பெற்றாள் என்றும் தங்கள் காதல் சேட்டைகளையே தகுந்த சொல் திறனால் சொன்னீர்கள்.

இது எல்லாம் இப்படி ஆகுமா? இல்லையா? திருவாய் மலர்ந்தருள்க எனவும், நான்முகனும் 'அப்படித்தான் தவறாது' என்று கூறி நகைத்தலும் அவனது சத்ய வாக்கிற்கு மனமகிழ்ந்த வாணி இப்படிக் கூறினாள். 'இன்பகரமான கேலிப் பேச்சினிலேயும் பொய்யிலாத

தங்கமளை ஈன்ற திருமாலின் உந்திக் கமலமாகிய வயிறு. என்றும் குளிர்ந்திருப்பதாக' என்று கூறியதும் தன் மனைவியின் சொற்கேட்டு மிக்க மகிழ்வுற்றுத் தழுவத் துடிக்கும் ஆர்வத்துடன் நான்முகன் இருந்தான். இவ்விதம் கூறிச் சரசுவதி பிரம்மாவின் மறைவிற் கூறிய கதையைக் கூறிக் கேட்போர் வியப்பெய்த அக்குழந்தை மேலும் இவ்விதம் கூறத் தொடங்கிற்று.

'தாம் காதற்களிப்பின் வேட்கையாலோ, அஃறிணை என்ற நினைவாலோ என்னை மதியாமல் அவ்விதம் கூறிக் கொண்டிருந்த கதைகளைக் கேட்டேன். அதற்கிடையே வெளியேற அஞ்சிக் கொண்டிருந்தேன். அவ்வளவில் கூண்டிலிருந்து வெளியேறி இப்படியுமப்படியுமாகத் துள்ளிக் குதித்தவாறு நாமுலி வரவும் அதைக் கண்ட வாணி "அடடா! இவ்வளவு நேரம் கிளி இருப்பதைக் கவனிக்கவில்லையே' என்று கூறிச் சினக்க, பிரமதேவன் "அதனாலென்ன" என்று கூறி நகைத்தான். அவ்வளவில் அவ்வப்போது பிரம்மனைச் சேவிக்க வரும் இந்திரனுடன் வரும் ரம்பையும் வந்து நான்முகனைச் சேவிக்க அந்தப்புரத்துள் புகுந்து கூண்டிலிருந்த என்னருகே வந்தாள் வாணியின் கலை நிலையிற் பிறந்த மெல்லோசை என் மனதைக் கவர்ந்ததாதலின் அந்த ஓசையையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருந்தேன் அது கவனித்த ரம்பை "என்ன புதுமையாக இருக்கிறதே அய்யாவைச் சேவிக்கும்போது அம்மா சொன்ன மொழியோ" என்று கேட்டாள். நானும் மறைக்கத்தெரியாமல் உள்ளதை உள்ளவாறே அந்த மெல்லோசை பிறந்த வரலாற்றைக் கூறினேன். அவளும் ஆர்வமுடன் மேன்மேலும் துடைந்து கேட்கவே அறிவிலாத சொன்னதைச் சொல்லும் கிளியாதலின் நானும் நடந்த கதை முழுதும் கூறினேன், அது கேட்ட ரம்பை மீண்டும் மீண்டும் தூண்டவே முனபோல இரண்டு மூன்று தடவை சொல்லவே அப்போது நான்முகன் தேவி அங்கே வந்தாள். இவ்விதம் வந்து புருவம் நெரித்து என்னை நோக்கி "அடியே! கொஞ்சமும் பயமின்றி என்ன கதையளக்கிறாய்?

நீ ஏதாவது உளறிக்கொட்டுவாய் என்பது தெரியாமல் போயிற்றே! சரி சரி. இதற்குத் தண்டனையாகப் பூமியில் வேசியாகப் பிறப்பாயாக" என்று கோபத்துடன் சபித்தாள்.

ரம்பையும் சரசுவதியின் சின மொழிகள் கேட்டு நடுங்கி மணிமயமான தூணின் நடுவே மறைந்துகொண்டாள். நான்முகன் வந்து "என்றுமில்லாத அளவு கோபத்துடன் சத்தம் போடுவதேன்" என்று கேட்க அவள் சினம்மிக்கு எழில்பெறும் புன்னகையுடன் "கேட்டீர்களா செய்தி! இந்தக் கிளி நமது சரச சல்லாபங்களையெல்லாம் ரம்பையிடம் சொல்லிக்கொண்டிருக்கிறது. நான் சுவர் மறைவிலிருந்து இப்போதுதான் வந்து கேட்டேன்" என்றாள். அதற்கு நான்முகன் சாபத்தால் மனங்கலங்கி நிற்கும் என்னைப் பார்த்து "இதற்கென்ன தெரியும். இரக்கமின்றி இப்படிச் சபிக்கலாமா?" என்று கூறி என்னிடம் "உன் அம்மையின் சாபத்தைத் தவிர்க்க யாராலியலும். அதை அப்படியே அனுபவித்துவிட்டு அடுத்த பிறவியில் மதாசயன் என்னும் மன்னனுக்கு 'மதுரலாலசை' என்னும் மகளாகப் பிறந்து 'களாபூரணன்' எனும் மன்னனின் மனைவியாக அமைந்து சகல செல்வங்களும் பெற்றுக் கற்பின் செல்வியாகத் திகழ்ந்து புகழ் பெறுவாயாக! கவலையுறாதே!' என்று கூறினான்.

அது கேட்ட சாரதை கணவனை நோக்கி "இதென்ன சுவாமி! மீண்டும் மீண்டும் மதாசயன் மதுரலாலசை களாபூரணன் என்று சொல்கிறீர்கள். தேவரீர் இன்னும் அதே மயக்கத்தில் இருக்கிறீர்களா?" என்று கூறிச் சிரிக்க அதற்கு நான்முகன் "உன் முகத்தைக் கண்டால் மயக்கம் வருவது இயல்பே. எனினும் இப்போது அப்படியல்ல. பூமியில் இனிக் களாபூரணன் என்ற அரசன் தோன்றுவான், அவனுக்கு இவள் மனைவியாவாள்" எனலும் "அந்த கதையைக் கேட்கவேண்டும் கூறுங்கள்" என்று வாணி கேட்க நான்முகன் இவ்விதம் கூறலானான்.

"பெண்ணே! முன் கேட்ட அதே கதைதான் இந்தக் கதையும். அக்கதையில் கேட்ட பெயர் ஜாதி குலம் முதலியன அப்படியே அமையும். ஒரு வித்தியாசம் என்ன வென்றால் இறந்த காலத்தில் சொன்ன வினைச் சொற்களை எதிர்காலமாக மாற்றிக்கொண்டால் போதும். இருந்தான் என்று கூறியதை இருப்பான் என்று மாற்றிக் கொள். கேட்போர் ரசனைக்கேற்பச் சிற்சில மாற்ற முடைய துணைக்கதைகளுடன் விரிவாக அமையும் எனினும் முக்கியமான கதை இவ்வளவுதான்."

இது கேட்ட வாணி வியப்பெய்திச் சிறிது சிந்தித்துக் கணவனைக் கண்டு "அந்த மன்னனுக்குச் சுமுகாசத்தி என்பவள் தந்தையாகவும், மணிஸ்தம்பன் என்பவன் தாயாகவும் அமைவரா?" எனக்கேட்ப 'அதில் சந்தேக மென்ன! அதுவும் உன் திருவருளாலேயே நடக்கும்' என்று பதில் கூறினான். சரஸ்வதியும் மிகவும் வியப்பெய்திப் பின் நகைத்து 'நீங்களோ சிருஷ்டிகர்த்தா! எப்படியும் செய்ய இயலும். உங்கட்குத் தோன்றியபடி செய்யுங்கள். ஊடே என் தலையை உருட்டுவானேன். இனி என்றாவது இக் கதை பிறந்த வரலாற்றைக் கூறாதீர்கள். ஒன்று நூறாகப் பரவி விடும். நாம் ஏகாந்தமாகச் சொன்ன இக்கதை இங்கே பிறந்தது. இதை உலகில் சொன்னால் 'இக்கதை முதலில் பிரம்மாவால் பிறந்தது' என்றும் 'அதற்கு மூல காரணமென்ன' என்று வினா வரும். 'சரஸ்வதி தேவி முகவர்ணனை' என்று வரும். 'எத்தகு நிலையில் வர்ணிக் கப்பட்டது' என்ற கேள்வி வரும்போது எனக்கு அவமான மாகும்படி என்னைக் கேலிக்குரியவளாக்கி விடாதீர்கள். உங்களால் என்னை நகைப்புக்கிடமாக்கிவிடாதீர்கள். என்னை மன்னித்து இனிமேலாவது யாரிடமும் சொல்லா திருந்தால் பிறர் அறியாதபடி மறைத்து விடலாம்' என்றதும் 'இது மேலுக்கு (ஒப்புக்கு)ச் சொல்வதேயன்றி உன் உள்ளத்தில் அப்படியிராது. யார்தான் தமது காதல் பிரதாபங்கள் புகழப்படுவதை விரும்பாதார்? உன் சொல் லும் மனமும் ஒன்றாயிருக்குமானால் நாக்கின் நுனியால்

மூக்கைத் தொடு பார்க்கலாம்' என்று கேலியாகப் பேசி நகுவித்தான்.

மிகு முயற்சியால் நகையையடக்கி வாணியும் 'நாத! என்ன சொன்னாலும் எனக்குக் கோபம்தான் வருகிறது. எனக்குச் சினமூட்டாதீர்கள். சிரித்தது போதும்' என்று கூறித் தனது கனகத் தனங்களுடன் இணங்கொண்ட பூங்கொத்தொன்று நான்முகன் மீது எறிந்தாள். நான்முகனும் அவ்விதமே ஆட, வாணி கன்னத்துடன் கன்னம் உராயத் தழுவி 'விளையாட்டுப் போதும்' என வேண்டினாள். அதற்கு அயன், 'ஏன் பிணங்குகிறாய்? என்னாயினும் சரி. இக்கதை உலகில் வெளிப்படத்தான் போகிறது. எல்லாப் பொருள்களும் சொல்லால் புகழ் பெறுகின்றன. அச்சொல் உன்னில் உண்டாயதன்றே. உன் இச்சையின்றி இக்கதை வெளிப்பட இயலுமா? உன் அடிமனத்தில் இக்கதை வெளிப்படுவதை விரும்பினும் மேலுக்கு மறுத்து மொழிகின்றாய். கணவர்தம் காதல் லீலைகளை வெளிப்படுத்த உள்மனம் விரும்பினும் அதை மறைப்பது பெண்களின் இயல்பேயாகும்' என்றான்.

அதுகேட்ட சரசுவதி தேவி "நீங்கள் இவ்வளவு பிடிவாதமாயிருந்தால் நான் ஏன் முரண்பட வேண்டும்? மேலும் அவ்வரசன் பிறப்பானாம், அரசாள்வானாம், அவன் கதை வெளிப்படுமாம்! இது உறுதியானால் என் இரகசியம் வெளிப்படுதல் தங்கட்கு முறையா?" என "இது முன்பும் அது பின்புமாக வெளியாகும்" என்று பிரம்மா கூறினான். வாணி "அப்படியானால் எப்படி வெளிப்படும் பார்ப்போம்" என்று கூறி 'தாங்கள் எவ்விடத்தும் கூறக் கூடாது' என்று கேட்க, பிரம்மனும் 'நான் என்றும் எங்கும் கூறேன்' என்ன, என்னைப் பார்த்து "இது இப்போது வேசியாகப் பிறக்க இருத்தலின் அப்போது இவ்வறிவு வாய்க்காது" என்று கூறி "ரம்பை இப்போதெங்கே போனாள். அவருக்குத் தகுந்த புத்தி கூற வேண்டும்" என்று கூற "ரம்பை நடுநடுங்கியவாறு தூண

மறைவிலிருந்து வெளிவந்து சரஸ்வதி தேவியின் காலில் வீழ்ந்து இறைஞ்ச "எழு! எழு! நீ இக்கதையை எங்கேனும் சொல்வாயானால் என் வலிவை அறிவாயல்லவா?" என்றாள்.

அதுகேட்ட பிரம்மதேவன் நகைத்தவாறு "உன் வலிவைப் பிறர் என்ன அறிவார்கள்? இக்கதையைச் சொன்னவர்களும் கேட்டவர்களும் பூவுலகில் புத்திர பாரம் பரியமுடன் பல்வகைச் செல்வமும் சீரும் சிறப்புமுற்று நீடுழி வாழ்வார்கள். இது என் உறுதியான வரமும் வாழ்த்து மாகும்" என்றான்.

அதுகேட்ட வாணி "தங்கள் பிடிவாதம் நடந்தால் போதும். நீங்கள் சொன்னபடியே தடையின்றி உலகில் பரவட்டும்" என்று சொல்லிச் சிரித்துவிட்டு அவ்விடம் விட்டகன்றாள். அவள் ஆணையால் நான் இவ்வுலகில் துவாரகாபுரியில் கணிகையர் குலத்தில் உதித்தேன்" என்று இவ்வாறு அந்த ஜன்மத்தில் உள்ள தன் சரிதத்தைக் கூறி அற்புதமான அறிவுடைய அக்குழந்தை அரசனுக்கு இப்படியேயும் கூறினாள். 'கலபாஷிணி என்னும் பெயருடன் திகழ்ந்து நான் வாணியின் சாபத்தின் பயனை அடைந்து இவ்விதம் பிரம்மன் அருளால் இப்பிறப்பை எய்தியுள்ளேன். அந்த முன் ஜன்மத்தில் சக்தி கோவிலில் எனக்கு இந்தத் தெய்வீக மணிமாலையைக் கண்ட பேறு கிடைத்ததால் அதை நினைந்து இப்போது இரண்டாண்டுகட்கு முன்னர்க் கண்டேன் என்று கூறினேன்" என்று கூறி முடித்தாள்.

இப்படிக் கூறி முடிக்கவும் மனமகிழ்ந்து வியப்பெய்தி அடக்க ஒடுக்கமாக எழுந்து அலகுவீரதன் அந்தக் குழந்தைக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்று இவை கூறினான். "முன் ஜன்மத்தில் கலபாஷிணி எனத் திகழ்ந்து நடத்திய உன் சரிதத்தில் ஒரு செய்தி என் உள்ளத்தில் சாட்சியமாகத் தோன்றுகிறது" என்று கூறவும் "உனக்குச் சாட்சியமாயதென்ன? கூறுக" என்று

அம்மன்னன் கேட்க, கலபாஷிணியின் மூலமாகக் களாபூரணனைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அதையறியத் தான் தவம் செய்ததும், இந்தச் சபைக்கு வந்தெய்தியதை யும் விவரித்துரைத்தான். பின், அவன் குழந்தையைக் கும்பிட்டு "உன் சொற்கள் எல்லாம் உண்மையாகும். தவறாது. நீ மதுரலாலசையானதறிந்தேன். உனக்குத் தலைவனான பெருந்தகையாளனான அம்மாமன்னனைக் காணும் பேறு பெறுவேனோ? சொல்வாயாக" என்றான்.

எனலும் 'அந்தண! நான் சொன்னால் நன்றாயிராது. அதையறிந்தவர்கள் இவர்கள் எல்லோரும் தான். இவர்கள் கூறக் கேட்பாயாக' என்று அக்குழந்தை கூறியது. அவனும் பேரார்வமுடன் அச்சபையின் தலைவனான மன்னனைக் கண்டு 'இக்குழந்தை சொன்னது கேட்டேன்! மன்ன! உங்கள் ஊரும் பேரும் எனக்குப் புரியும்படியாகச் சொல் லுங்கள். இது என்ன லோகமோ? எந்த ஊரோ? நீங்கள் யாரோ? இக்குழந்தை என்ன உறவோ? யாதும் புரியாமல் என் மனம் குழம்புகிறது. வியப்பால் மரம்போல் நின்ற நான் இக்கதை கேட்ட மும்முரத்தில் உங்களை யார் என உசாவ மறந்துவிட்டேன்" என்றான்.

அம்மன்னனும் 'எங்களுக்கும் அப்படியே இக்கதை கேட்ட வியப்பால் மனமயங்கி உன்னை யாரென அறிந்து கொள்ளவும் நேரமில்லாது போயிற்று. எனினும் உன் கதை சிறிது இடையே கேட்டோம். எம் நிலை சிறிது கூறு கிறோம்! கேள். நான்தான் களாபூரணன். இவை கபாலன் தந்த மணியும் வில்லும் அம்புகளும். இவர்கள் பிரதமாகமர் முதலாய நால்வர். அவர் சத்வதாத்மன். அவர் மதாசயன். ரூபானுபூதி அவள். அவள் குழந்தைதான் இந்த அற்புத மான குழவி. சிறிது நேரத்திற்கு முன்புதான் இக்குழவி யைத் தங்கத் தொட்டிலில் இட்டனர். இதன் பெயர் மதுரலாலசை' என்று கூறி அவரவர்களை இனங்காட்டி அறிமுகம் செய்வித்து, 'இது அங்கதேசம். இந்த ஊர் கமுககண்டோத்தரபுரம்'. நான் பிறந்தது காசாரபுரம்.

அது இதற்குச் சிறிது தூரத்திலிருக்கிறது. எல்லாம் சொல்வானேன். மொத்தத்தில் நான்முகன் சரஸ்வதி தேவிக்குச் சொன்ன கதையிலுள்ளவர்களின் பெயர்களும் செயல்களும் ஒன்று கூடத் தவறாமல் எங்களது பெயராக வும் செயலாகவும் அமைந்து மிக்க வியப்பளித்தன. வாணி யின் முகப்பிரதிபிம்ப வர்ணனையும் கற்பனையுடன் கேளிக்கைகளும் எப்படி எங்கள் வரலாற்றுடன் சிறிதும் பிசகாமல் ஒன்றுபட்டுள்ளது என்று சிந்தித்தாலும் கதைக்கு இடையூறு செய்ய விரும்பாமல் பேசாமல் இருந் தோம். அவ்வளவில் அக்கதையின் முடிவில் எங்கள் சந்தேகம் எல்லாம் தீர்ந்தது!' என்றான்.

அது கேட்ட அந்தணன் மன்னனிடம் வியப்புடன் "நான்முகன் சொன்ன கதையின்படி தங்கட்குத் தந்தை பெண்ணாகவும் தாய் ஆணாகவும் அமைந்ததெப்படி ? என் மனம் வியப்புறுகிறது ! தெரியச் சொல்வீராக" என்றான். எனலும் அம்மன்னன் "எனக்கும் அச்சொற்கள் வியப்பளித்தன. அக்குழந்தை அறியாததொன்றுமில்லை. அதனிடம்தான் கேட்க வேண்டும்" என்று கூறினான்.

அலகுவிரதனும் அக்குழந்தையை வணங்கி "எல்லாம் நீயறிவாய். இம்மன்னனின் பிறப்பு வரலாற்றைத் தயை கூர்ந்து சொல்வாயாக. முன்பு உன்னால்தான் களாபூரண னின் கதை கேட்பதால் கிடைக்கும் பெறற்கரிய பேற்றை அறிந்தேன். அதன்பின் என் தவத்தின் பயனால் அவன் கதை கேட்கும் பேறும் உன்னால்தான் கிட்டியது. அதோடன்றி இந்த நலம் பயக்கும் நல்லோனைக் கண்ணாரக் காணவும் பெற்றேன். இவன் பிறப்பு வரலாற்றையும் விவரமாகச் சொல்லி என்னை மகிழ்வித்து எனது நன்றியைப் பெறுவாயாக" என்றான்.

எனலும் அம்மதுரலாலனை இவ்விதம் கூறத் தொடங் கினாள். "அந்தணாள! நீ மிருகேந்திர வாஹனி கோயிலில் முன்னாளில் வந்திருந்த காலத்தில் 'மணிஸ்தம்பன்' எனும்

சித்தனும் 'சுமுகாசத்தி' என்னும் அவனது மனைவியும் என்னுடன் பேசிக்கொண்டிருந்ததை அறிவாயல்லவா? அவர்கள் யோகமுறையில் சக்தி கோயிலில் சின்னாள் புலனடக்கி இருந்ததுவும் உனக்குத் தெரியும். பின்னர் அவர்கள் அவ்விடம் விடுத்து ஒரு பூங்காவிற் சென்று களிப்புடன் இருந்து கலவி கூர்ந்தனர். அப்போது சித்தன் "பெண்ணே! நான் பெண்ணாகவும் நீ ஆணாகவும் மாறி இன்புற விழைகின்றேன்" என்று விபரீத ஆசை கொண்டு விளம்பினான். அம்மதிமுக மடந்தையும் இசைந்து "தாங்கள் பெண்ணாகுங்கள். நான் ஆணாகிறேன்" என்று கூறினாள். அவ்வளவில் அவர்கள் இருவரும் உருவம் மாறினர். அப்போது எப்படியோ சித்தனுக்குச் சிற்றிடையும் இணைமுலைகளும், எழிற்கமலக் கண்களும், அழகிய மதிமுகமும் தாழிருங் கூந்தலும் உடைய மெல்லுடல் அமையப் பெண்மை நலங்கள் வந்து சேர்ந்தன. மிக்க வியப்பமைய அம்மடந்தைக்குக் கணவனுருவம் அப்படியே அமைய அக்கணமே மீசை அரும்ப அழகிய ஆணுருக் கொண்டாள். இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர். ஒருவரை ஒருவர் கண்டு முன்பு போன்றே ஆர்வம் மீதூர நின்றனர். எங்கும் கருத்துத்தான் முதன்மையாமன்றி உருவம் ஆகாதன்றோ? அப்போது தத்தம் உருவேற்றுமையைப் பார்த்துக்கொண்டு பெருவியப்பெய்தி "இதென்ன மாயம்" என்று கருதினர்.

அவ்வளவில் சுமுகாசத்தி தன் மனத்தில் அதன் காரணத்தை யோர்ந்து தன் கணவன் முகம் நோக்கி "இப்போது நான் சொன்ன சொல்லின் பயன் இது. சக்தி கோயிலிலிருந்த போது 'என்னைச் சத்திவதியாகச் செய்' என்று வரம் கேட்டேன். சாசனத்தூணில் எழுதிய எழுத்து தவறாதன்றோ?" என்றாள்.

அது கேட்ட மணிஸ்தம்பன் "இன்னும் ஏதாவது சொல்லித் தொலைக்காதே. அப்படியே ஆய்விடப் போகிறது! ஏதாவது சொல்ல ஏதாவது ஆய்விட்டால்

என்ன செய்வது?" என்றான். மீண்டும் "உனக்குக் கரு உண்டாகாத வரத்தை எனக்கும் என்னால் குழந்தை பிறக்கும் எனும் வரம் உனக்கும் சரஸ்வதி வரமருளினாள் அல்லவா? அது எப்படிப் பலிக்கப்போகிறதோ? எதற்கும் அதிர்ச்சியுறக் கூடாது. மேலும் காதற்கேளிக்கையில் ஆண்களைவிடப் பெண்களுக்கு இன்பம் பெறும் நிலைகள் அதிகமாய். எனக்கு இதையும் அறிய விருப்பமாக உள்ளது. ஆதலின் இப்படியே சிலகாலம் இருக்க விழைகிறேன். நீயும் சின்னாள் ஆணாக இருக்கவேண்டும்" என்றான்.

இதைக் கேட்ட கமுகாசத்தி "ஓ புண்ணியா! நீ எவ்வுருவில் இருக்கச் சொன்னாலும் உன் சொல் எனக்கு வேத மொத்தது. ஆதலின் அப்படியே இருக்கிறேன்" என்று கூறி அவன் சொற்படியே ஆண் உருவில் இருந்தாள். மணிஸ்தம்பனும் பெண் உருவில் இருந்து மன்மத லீலைகள் புரிந்து இன்புற்றிருந்தனன்.

இவ்விதம் இருவரும் சிங்க வாஹனத்திலமர்ந்து கொண்டு பல இடங்களையும் கண்டுகளித்த வண்ணம் வான் வெளியில் சஞ்சரித்து மகிழ்ந்து இருந்தனர். அவ்வண்ணம் செல்லும் போது எதிரே ஒரு நகரைக் கண்டு கமுகாசத்தி தன் கணவனிடம் இவ்விதம் கூறினாள். 'அழகிய கோபுரமுடையதாய்க் கோட்டை எனும் திருமகளின் நூபுரம் (சிலம்பு) உடையதாய்ச் செல்வங்கட்கு இல்லமாய்த் திகழும் இந்நகரைக் கண்டாயா? அன்னங்களும், மகன்றில்களும் இன்னும் பலவித நீர்ப் பறவைகளும் கலகலவென இசைக்க, தாமரை, ஆம்பல் கழுநீர் போன்ற மலர்கள் மனத்திற்கின்பம் ஊட்ட அமைந்த ஆழ்கடல் போன்ற அகழியைப் பார்த்தாயா? இவ்வகழியின் நடுவே தாமரை மலர்போல் அமைந்திருப்பதால் இந்நகரைக் காசாரபுரம்' என்று புகழ்ந்துரைப்பார்கள். இந்நகரின் தோரணவாயில் வானவில் போல எழிலுடன் திகழ்கின்றது. இந்நகருக்கிணை எங்குமில்லை எனும்படி அழகுடன் மிளிர்கின்றது. பல்வகைச் செல்வங்களும்

மல்கிப் பொலிவுறலால் இரத்தினக் கற்களாலான மாளிகை மேடைகளிலே உலவும் இளமங்கையரின் கற்பூரம் கலந்த தாம்பூலம் உண்ட சுகந்தம் பரவிய தென்றற் காற்று மனத்திற்கு இன்பம் ஊட்டுகின்றது. இவ்விடத்திற்கு முன்பும் வந்திருக்கிறேன். இதன் செல்வச் செழிப்பு வியப்புக்குரியது. இங்கு வசிக்க எனக்கு விருப்பமாக உள்ளது. இவ்விதம் கூறி 'இங்கே இறங்குவோம்' என்று இருவரும் சிங்கவாஹனத்தை இறக்கிக் கீழிறங்கி நடந்தனர்.

அந்நகரையாளும் 'சத்வதாத்மன்' எனும் மன்னன் உலவச் சென்று திரும்பி வரும்போது அம்மலரன்னாளின் எழிலுருவங்கண்டு கண்கொட்டாது பார்த்துக் களிப் பெய்தித் தன் மனத்தில் "பல மன்னர்களின் திறையாக அழகிய பெண்களை அடைந்தேன். அவர்கள் அரண்மனை யிலுள்ளனர். அவர்கள் எல்லோரையும்விட அழகிய கண்ணிற்கு விருந்தளிக்கும் கவின்மிக்க இக் காரிகையைக் கண்ணுறேன். சொல்லக் கூடாது என்றாலும் என் அரண்மனையில் மட்டுமல்ல. இத்தகைய எழிற்செல்வி வானுலகிலும் இருக்க மாட்டாள். மற்றப் பெண்களைப் பற்றி இனை கூறுவானேன்? அந்தச் சித்தனுக்கு இந்த அழகுப்புதையலின் தொடர்பு எப்படி வந்ததோ? நாமாக ஏதாவது கற்பிப்பது குற்றமாகும். அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்" என்று சிந்தித்தான்.

இயல்பாக அம்மடந்தையும் அவனை அவ்வேளையிற் காணலும், அழகிய புரவியில் ஏறி அக்குதிரையின் துள்ளலுக்கேற்ப மின்னிடும் மகுட காந்தியுடன் பரி மீதமர்ந்தவண்ணம் அங்குமிங்கும் உலவித் தனது கைவிரல் தங்க மோதிர ஒளி வீசக் குதிரையை நிறுத்தி நின்றான். தோள் வளையங்கள் மின்னிட நண்பனின் முதுகில் கையால் நீவியும், மோதிர ஒளி வீசக் கையிலுள்ள தாமரை மலரை ஆட்டிக்கொண்டும், முல்லையம் பற்களின் ஒளி தளும்பத் தளபதியுடன் வெறும் பேச்சுகள் ரகசியம் பேசும் பாவனை யில் பேசியும் புன்னகை என்னும் முத்துதிர மந்திரியுடன்

சரசமாடியும், மணிமகுடத்தை எடுத்துத் திருத்தி மீண்டும் தலையில் வைத்துக்கொண்டும், ஒளிமிக்க நகங்களால் மீசையைத் தடவியும். அம்மடந்தை தன்னைக் காண்கிறாளா என்று ஆய்ந்து பார்த்தவாறே காதலுணர்வுகள் மீதூர நின்றான்.

இவ்விதம் காமாதுரனாக நிற்கும்போது ஒருவன் கொடுத்த பூப்பந்தைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு அம்மடந்தையைக் கண்டான் அதனால் அப்பெண்ணும் நாணமுற்று விலகிய முந்தானையை மார்புறச் சரிசெய்து கொண்டு முகங்கவிழ்ந்தாள். அவ்வளவில் மன்னன் குதிரையி லிருந்து இறங்கித் தான் மட்டும் தனியாக ஏகி அந்தச் சித்தனிடம் சென்று "ஓ! மஹாத்மா! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்! எங்கே செல்கின்றீர்கள். உங்கள் பெயர் என்ன? எந்த ஊர்? இப்பெண் உங்கட்கு என்ன உறவு?" என்று கேட்டான். அதற்குச் சித்தன் தான் வந்த விதத்தைக் கூறி "நான் மணிஸ்தம்பன் எனும் சித்தன். இம்மடந்தை சுமுகாசத்தி என்பவள்" என்று கூறி 'இவள் எம் மனைவி' என்றும் விளக்கினான்.

அம்மன்னன் தனக்குள் "இம்மான் விழியாள் எப்படியேனும் நமது சன்னிதியில் இருந்தால் போதும். அதன் பிறகு பாக்கிய வசத்தால் ஆவது ஆகட்டும்" என்று நினைத்துக்கொண்டு சித்தனை வினயமாக அஞ்சலி செய்து "சித்தசேகர! என் மனம் களிக்குமாறு தங்களைப் பக்தியுடன் உபசரிக்க விரும்புகிறேன். என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்" என்றான்.

எனலும் மணிஸ்தம்பனும் மடந்தையின் முகம் நோக்க "அப்படியே ஆகட்டும்." "எங்கிருந்தாலும் நமக்கென்ன?"

---

* மணிஸ்தம்பன் எனும் சித்தன் (ஆண்) பெண் உருவில் இருக்கிறான். அப்பெண்ணைக் கண்ட மன்னனின் மதனவிகாரங்களைக் கவிஞன் அழகுற எடுத்துக் காட்டுகிறான். இது நகைச் சுவையுடன் கூடிய சிங்கார ரசாபாசமாகத் திகழ்கின்றது.

என்று கணவனிடம் கூறிப் புன்னகை பூத்தாள். இவ்விதம் உடன்பட்டதும் அவர்களை அழைத்துக்கொண்டு பல்லக்கில் ஏற்றித் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். மணி மயமான இல்லத்தில் ஹம்ச தூலிகா மஞ்சங்களும், நகைகளும் பரிமள திரவியங்களும் சேடியர்களும் பணியாட்களும் மிகுதியாக அளித்து உபசரித்தான். இவ்விதம் உபசரித்து அடிக்கடி அங்கு வந்து அடக்கத்துடன் அளவளாவிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் தகுந்தவர்கள் மூலமாக அம்மடந்தையைத் தன்னிடம் வருமாறு கேட்பித்தான். அம்மடந்தையும் தனக்கப்போது கருச்சின்னங்கள் தோன்றியுள்ளதாயும், சித்தனின் குழந்தையைச் சித்தனிடம் தராமல் அன்னியருடன் கலவி கொள்ளேன்" என்று கூறிக் கடத்தினாள். அவ்வளவில் அத்தாமரை முகம் கொண்ட தையலாளுக்கு மசக்கை உண்டாயிற்று. உடல் மெலிந்தது. மண் தின்னும் ஆசை உண்டாயிற்று. கருச்சின்னங்கள் புலப்படலாயின. இடை மெலிந்த போது எல்லா அவயவங்களும் மெலிந்தன. பின் இடை பருத்தபோது எல்லா அவயவங்களும் பருத்தன. ஆனால் முலைகள் மட்டும் எவ்வித மாறுபாடும் உறாமல் வன்மையுற்று முகங்கறுத்துத் திகழ்ந்தன. முலைக் காம்புகள் கறுத்தும் முகம் மட்டும் மிக்க வெளுப்பை உற்றது. இடை பெருத்தது. கலவியாசை விட்டொழிந்தது. வயிற்று மடிப்புகள் விரிந்தன. ஆயாசம் மிக்கது. மாதமும் வந்தது. இந்த ராஜகுமாரன் (களாபூரணன்) அவ்வளவில் அம்மங்கைக்கு (மணிஸ்தம்பன் எனும் சித்தனே பெண் உருவில் உள்ளான்) ஐந்து கிரகங்கள் உச்சஸ்தானத்தில் இருக்கச் சுப லக்கினத்தில் அவதரித்தான்.

அப்போது சகல திக்குகளும் ஒளி மிக்கன. மணம் தழுவிய தென்றல் வீசியது. தேவர்கள் பூமழை சொரிந்தனர். துந்துபிகள் முழங்கின. வானவர்களின் ஜய கோஷம் முழங்கியது. சான்றோரின் இதயங்கள் சாந்த முற்றன. தீயோர் வலி குன்றியது. வீரமும் கப்பிரமும்

நெஞ்சத் தீரமும் அதிகாரமும் சுகுண சாரமும் மெய்ப் புகழும் பிரதாபமும் உடைய இம்மகாராஜா உதித்தபோது பிரபஞ்சமே புத்தொளி கொண்டு பொலிவுற்றது.

முன்பு பிரம்மதேவன் இவனது தாய் தந்தையரைத் தற்காலிகமாக அமைந்த பெண்மை, ஆண்மைகளை உத்தேசித்து இம்மன்னனது தாய் மணிஸ்தம்பன் என்றும், தந்தை சுமுகாசத்தி என்றும் கூறினான். அவன் கூற்றுக்குப் பொய்யும் உண்டோ? மணிஸ்தம்பன் மகன் பிறந்த பின்பு முன்பிருந்த ஆணுருவை மீண்டும் பெறவும், சுமுகாசத்திக்குப் பெண் உருவம் வருமாறும் வேண்டச்செய்து அவ்வாறே முன்னுருவங்களை மீண்டும் அடைந்தனர். சித்தனான மணிஸ்தம்பனும் காசரபுரத்திலேயே யோக மகிமைகளை உணர்ந்தவனாக இருந்தான். களாபூரணனாகிய இம் மன்னன் தாய் வயிற்றில் உதிக்கும்போதே வியப்புறுமாறு இளமையோடு பொலிவுற்றான். அவ்வேளையிலேயே ஒரு மணியும் வில்லும் அம்புகளும் சுபாவசித்தன் எனும் முனிவன் தந்தான். அச்சித்தன் இவனுக்குக் களாபூரணன் எனும் பெயரிட்டான். அப்போது அந்நகரத்தரசனான சத்வதாத்மன் பிறவியிலேயே இளமையோடு பிறந்த இவனை ஈன்றெடுத்த தாய் எத்தகைய மகிமை யுடையவளோ? இவளைச் சாதாரணப் பெண்ணாகக் கருதி இச்சித்துப் பாவம் செய்துவிட்டேன். எதாவது கொடுத்தாவது இப்பாவத்தை மறக்கச்செய்ய வேண்டும்' என்று நினைந்து அவ்வில்லைத்தரசியிடம் சென்று 'அம்மா! தங்களை அறியாது செய்து பிழைகட்கு மன்னிக்கவேண் டும்'. 'தங்கட்கு மனம்உவப்ப இம்மகனுக்கு (களாபூரணன்) என் அரசு முழுதும் ஈந்து நான் மந்திரியாகத் தொண்டு செய்கிறேன்' என்று கூறி அவ்விதமே இருந்தான்!''.

இது கேட்ட அலகுவிரதன் அக்குழந்தையைப் பார்த்துச் 'சுபாவன் எனும் சித்தன் யார்? எதற்காக அந்த மணியும் வில்லம்புகளும் கொண்டுவந்து இவனுக்குத்

தந்தான்?' என்று கேட்க அதற்கு அச்சிறுமி இவ்விதம் கூற லானாள். 'ஓ பிராமண! அந்தச் சுபாவாக்கிய சித்தன் சுமுகாசத்தியின் தந்தையாவான். அவன் தன் மகள் பிறந்த பின் மனைவியை விட்டுவிட்டுத் தேசாந்திரியாகத் திரிந்து 'மாகுரிபுரத்'திற்கு வந்தான். அங்கு 'தத்தாத்ரேயர்' எனும் யோகியைச் சேர்ந்து அவரருளால் யோக வித்தையைக் கற்றான். எப்போதும் தன் சுபாவத்தைத் (தன் இயல்பான உளப்போக்கை) தன்னிடமே அமைத்துக் கொண்டிருந்ததால் 'சுபாவாக்கியன்' எனும் பெயருற்றான்'.

இது கேட்ட அலகுவிரதன் 'எல்லா அறிவுகட்கும் நிதியாக அமைந்தவளே! நீ அறியாததொன்றில்லை. யோக ரகசியங்களைக் கூற வேண்டுகிறேன்' என்றான். அக்குழந்தை 'தூயமனமுடையவனே! கேள்! ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுவது யோகமாகும். அது எட்டு விதமாக அமையும். அவை 'யமம், நியமம், ஆசனம் பிராணாயாமம், ப்ரத்யாகாரம், தாரணை, தியானம் சமாதி என்னும் எட்டாகும். அவை ஒவ்வொன்றும் பல வேறுபாடுகளுடன் கூடியிருக்கும். அவற்றைக் கூறுகிறேன். கேள்.

யமம் என்பது, சத்தியம், தயை, பொறுமை, உறுதி, மிதாகாரம், ஆர்ஜவம், பிரம்மச்சரியம், திருடாமை, அஹிம்சை, சௌசம் எனப் பத்து விதமாய் அமையும். அவற்றுள் சத்தியம் என்பது பிறரைத் துன்புறுத்தாது பொய் சொல்லாதிருத்தலாகும். தயை என்பது பிறர் துன்பங் கண்டிரங்குதல். பொறுமை என்பது பிறர் குற்றங் காணின் சினவாது பொறுத்துக்கொள்ளுதல். உறுதி என்பது பணம், பந்துக்கள் முதலிய இழப்புகள் நேரினும் உள்ளங்கலங்காதிருத்தல். மிதாகாரமாவது, துறவிகட்கு எட்டுக் கவளமும், அதனின் இரட்டிப்பு வனவாசி (வானப் பிரஸ்தன்)க்கு, அதனின் இரட்டிப்பு இல்லறத்தானுக்கு,

பிறருக்குக் குறைந்த உண்டியும் ஆகும். ஆர்ஜவம் (நன்னடத்தை) என்பது விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாகி, மனமொழி மெய்களில் ஒன்றுபட்டிருத்தல் ஆகும். சன்னியாசி (துறவி) தவத்துறையும் வானப்பிரஸ்தன், பிரம்மச்சாரி இம்மூவரும் திரிகரண சுத்தியுடன் பெண் புணர்ச்சியை நீக்குவது பிரம்மச்சரியம். பிற பெண்டிரை நாடாமையும், பருவகாலங்களில் (மாதவிலக்கு, கருப்ப காலம்) கூடாமையும் இல்லறத்தானுக்கு பிரம்மச்சரியம் ஆகும். திருடாமை என்பது எங்கும் திருடாதிருத்தல். எப்போதும் எந்த உயிர்கட்கும் தீங்கு விளைவியாதிருத்தல் அஹிம்சை. சௌசம் (தூய்மை) என்பது இரண்டு விதமாயமையும். புறத்தூய்மை, அகத்தூய்மை என்பவையாம். புறத்தூய்மை மண்ணாலும் நீராலும் செய்யப்படும். அகத்தூய்மை என்பது அறநெறியாலும் தத்துவஞானத்தாலும் ஆகும்.

இனி நியமமாவது பத்துவிதமாகும். அவையாவன, தவம், மகிழ்ச்சி, ஆஸ்திகம், தானம், இறைவழிபாடு, சித்தாந்த சிரவணம், நாணம், மதி, ஜபம், விரதம் என்பன. விரதங்களால் உடலை வருத்தி முயற்சி செய்வது தவம். மகிழ்ச்சி என்பது எப்போது எது கிடைப்பினும் போதுமென்ற மனத்திருப்தியுடன் இருப்பதாகும். புண்ணிய பாவங்கள் உள்ளதெனும் நம்பிக்கை ஆஸ்திகமாகும். அறநெறியில் ஈட்டிய செல்வத்தைப் பிறருக் கீவது தானம் ஆகும். இறைவழிபாடென்பது 'இறைவனை வழிபடுவதும் பற்றறும் வாய்மையும் அஹிம்சையும் கூடியிருத்தல். வேதாந்த நூல்களைக் (தத்துவ நூல்களை) கற்பதும் கேட்பதும் சித்தாந்த சிரவணம் ஆகும். நூல் வழக்கிற்கும், உலக வழக்கிற்கும் மாறுபாடான இழிசெயல்கள் செய்வதில் நாணமுறுவது நாணம் ஆகும். நன்னெறியில் விழையும் சிரத்தையே மதி எனப்படும். வேத மந்திரங்களையும் தோத்திரங்களையும் மீண்டும் மீண்டும் சொல்வது ஜபம் ஆகும். அறம் முதலிய நற்பயன்களை நல்கும்

நோன்புகள் விரதம் எனப்படும். இந்த யம, நியமங்களை யுடைய அறிவுடைய நல்லோனே பிராணாயாமம் முதலிய பிற மோட்ச சாதனப் படிகளில் ஏறத்தகுந்தவனாவான்.

ஆசனமென்பது பலவிதமாகும். சுவஸ்திகம், கோமுகம் பத்மாசனம், வீராசனம், சிம்மாசனம், பத்திராசனம் முக்தாசனம், மயூராசனம் முதலியவையாகும். இந்த ஆசனங்கள் உடல் எளிமையுறவும், ஆரோக்கியமளிக்கவும் பாவங்களைத் தொலைக்கவும் ஆகும். தௌதி, நேதி கபாலபாதி, வஸ்தி, த்ராடகம், நௌலி முதலிய ஆறு யோக கருமங்கள் மூலம் உடல் தூய்மை பெற்று முன் கூறிய ஆசனங்களில் அமர்ந்து பூரகம், கும்பகம், ரேசகம் எனும் சிறப்புகளுடைய பிராணாயாமம் செய்யவேண்டும். இவ்விதம் செய்யின் காற்றையடக்கிக் கைவசப்படுத்தலாம். அதனால் நாடிகளையும் அடக்கியாளலாம். உடலில் எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகளுள. எண்ணத்தக்கவை நூறுள. அவற்றுள் பதினான்கு சிறப்புடையவை. அவற்றுள் மூன்று புகழ் பெற்றவை. அவற்றிலும் ஒன்று முக்கியமானது. பதினான்கு நாடிகளிலும் சரஸ்வதி முதலிய பதினொன்று நாடிகள், நாக்கு முதலிய கரணங்கள் தொழிற்பட ஏதுவானவையாகும். இடை, பிங்களை எனும் இருநாடிகள் மூக்குத்துவாரத்தின் வழி இடமும் வலமும் செல்லுவதாக பிராணாயாம சாதனமாகத் திகழும். சுழுமுனை நாடி பிரம்மநாடி எனும் பெயருடன் நாடி மூலத்திலிருந்து பிரம்யரந்திரம் வரை சஞ்சரிக்கும். அதில் காற்றைப் புகுத்துவதே சிறந்த யோகம் எனப்படும்.

இனிப் பிரத்தியாகாரம் என்பவை யாவை எனக் கேட்பாயாக. 'புலன்களைப் புறப் பொருட்களின் மேற்செலவொட்டாது தடுத்து உள்முகமாகத் திருப்புவது ஒன்று. புலன்கள் எங்கு செல்லினும் அஃதெல்லாம் ஆன்மாவாக மனதுட் காணுதல் ஒன்று. நித்திய கருமங்களெல்லாம் ஆன்மாவிலேயே மனத்தால் செய்தல் ஒன்று. உடலி

லுள்ள பதினெட்டு மருமஸ்தானங்களில் காற்றை நிறுத்துவது ஒன்று. இவைகளை யோகிகள் பிரத்யாகாரம் என்பர், பாதத்திலிருந்து முழங்கால்வரை மண், அதிலிருந்து இதயம் வரை தீ, அதிலிருந்து புருவம் வரை காற்று. அதிலிருந்து தலை உச்சி வரை வானம். இவ்விதம் ஐம்பெரும் பூதங்களை பாவித்து பிரம்மா, விஷ்ணு, ருத்ர, ஈஸ, சதாசிவ தெய்வங்களை மண் முதலிய தத்துவங்களோடு தாரணை செய்து பிரணவ மந்திரத்தை பிராணாயாம விதியில் தவஞ் செய்தல் வேண்டும். இதுவே தாரணையாகும். தியானம் சகுண தியானம், நிர்குண தியானம் என இருவகைப்படும். சகுணமென்பது உருவ வழிபாடு. நிர்குணமென்பது அருவ வழிபாடு. உருவ வழிபாடின்றி அருவ வழிபாடு அமைதல் அரிது. சமாதி என்பது இறைவனை உள்ளத்தில் இருத்திச் சிறிதும் அசையாத நிலையில் உறுதியுடன் இருத்தலாகும். இவை யோகவித்தை முறைகளாகும். இதன் மகிமையில் சிந்தையைத் தன் வயப்படுத்தி அந்தச் சித்தன் சுபாவன் எனப் பெயர் பெற்றுச் சிறந்தான்.

அச்சித்தன் நித்திய யோக சமாதிக்கு ஆள் நடமாட்டமில்லாத இடம் வேண்டிப் பல்வேறிடங்களிலும் அலைந்து திரிந்து தான் பிறந்த ஊருக்கே மீண்டும் வந்து 'சததாள தக்னமடு'வில் யாரும் வாராத இடமென்றிருந்தான் அப்படி அங்கே வசித்து யோக நிலையில் இருந்து வருங்கால், அவன் தன் மகளின் கணவனான (மாப்பிள்ளை) சாலீனன் தன் மனைவியிடம் கோபித்துக்கொண்டு மடுவில் வீழ்ந்து தன்னைச் சேரவும் 'வயஸ்தம்பமணி' முதலியவற்றைக் கொடுத்தனுப்பினான். எனினும் தன் உறவை வெளிப்படுத்தவில்லை. போன உறவை மீண்டும் புதுப்பிப்பானேன்? என்று கருதிச் சும்மா இருந்தான்.

பின்னர் நெடுநாட் சென்ற பின்னர் யோக நிஷ்டை விடுத்து மடுவினின்றும் வெளிப் போந்து சான்றோர் வணங்கும் 'ஸ்ரீசைலம்' எனும் புண்ணியதலத்திற்கு வந்தான்.

நீலமணிகளும், பத்மராகங்களும் ஒளியுமிழும் எழிலுடைய சாரலையுமுடையதும். தன்னையடைந்தோர்க்கு இன்பம் நல்கும் கற்பகத்தருக்களையுடையதும், வீடுபேறளிக்கும் நலமுடையதுமான ஸ்ரீசைலத்தைக் களிப்புடன் கண்டான். குபேரனது வெள்ளிமலை 'பிடுங்கப்பட்டது. மந்தரமலையோ கடையுங்கால் சுழன்று உழன்றது. மேருமலை வில்லாக வளைந்தது விந்தியமலையோ அகத்தியரால் குறுகியது. பனிமயமாகிய இமாலயம் சீர்குன்றியது. ஸ்ரீசைலம் எனும் இம்மலையோ சீர்பெற்றுத் திகழ்கின்றது. புதிதாகப் பூத்த மலர்களுடைய பூங்கா பல்வேறு மணிகள் பதித்த அங்கியின் (ரவிக்கை) எழில் காட்ட, சிந்தூரம் முதலிய தாதுக்கள் குங்குமப் பூச்சினைப் போன்றிருக்க வெள்ளிய அருவிகள் முத்துமாலைகளைப் போன்றொளிரச் செங்கதிரோன் மகுடமெனத் திகழ்விக்கும் நண்பகல் என்னும் திருமகன் பரிசாரிகையாகத் திகழ்ந்தான். சித்த மணிகளும், ஔஷதங்களும் சித்தரச மூலிகைகளும் உடையதும், பிற மலைகளை வென்ற சிறப்புடையதும் ஆன ஸ்ரீசைலத்தில் மிகுந்த பயபக்தியுடன் மேலேறி மல்லிகார்ஜுன மகாதேவர்களை வணங்கிச் சேவித்து விட்டுத் தன் விருப்பப்படி சுற்றித் திரிந்து வரும்போது அங்கே மலை மேலிருந்து கீழே வீழ்ந்திறக்க முயன்று கொண்டிருந்த மணிகந்தரனைப் பார்த்தான்.

கண்டு 'நீ யார்? இந்தத் துணிகர முயற்சிக்குக் காரணம் என்ன? சொல்வாயாக' என்று கேட்ப, அதற்கு மணிகந்தரன் தனது பேரும் ஊரும் கூறி மலை மீதிருந்து விழ முயற்சித்ததுவரையுள்ள தன் முற்கதையை முழுதும் கூறினான். அக்கதையில் கேட்ட தன் மகள் (சுமுகாசத்தி) மாப்பிள்ளை (மணிஸ்தம்பன்) முதலியோர் சரிதமும் வரக் கேட்டு மிகுந்த விருப்புடன் மீண்டும் விஸ்தாரமாகக் கேட்டறிந்தான்.

பின் தான் சுகாத்திரி (சுமுகாசத்தி)யின் தந்தை என்றும் கூறித் தன் நடவடிக்கைகளையும் விவரித்துச் சரஸ்வதி தேவி

அந்தச் சுகாத்திரி, சாலீனர்களுக்குத் தந்த முரண்பட்ட வரங்கள் எப்படிப் பலிக்குமோ ? என்று சிறிது சிந்தித்து, "அது எப்படியும் பலிக்காமற் போகாதன்றோ" என்று நிச்சயித்துப் பின் மணிகந்தரனிடம் இவ்விதம் கூறலானான். "நாரத முனிவன் அருளால் கண்ணபிரானிடம் சங்கீதம் கற்று அம்முனிவன் அருளால் சகல தீர்த்தங்களையும் தரிசித்துக் கந்தர்வ குலத்துதித்து, சிறப்புப் பெற்று, இடையே சாபமும் அரசயோகம் அடைவதற்காகும் என்பதும் காணும்போது நீ அடுத்த ஜன்மத்தில் சீரும் சிறப்புடனும் திகழ்வாய் என்பதில் ஐயமில்லை. புண்ணியப் பயன்கள் தவறாது கிடைத்தே தீரும். இத்தகு புண்ணியனாகிய நீ மலை மீதிருந்து வீழ்ந்திறக்க முயற்சிப்பானேன் ?" என்றான்.

அதற்கு மணிகந்தரன் "திருவும் தூய்மையுமுடையருமான தாய் தந்தையரை அடைய வேண்டும், எனும் சிந்தையால் தான்" என்றான். அது கேட்ட சுபாலன் "அப்படியானால் தூயசரித்திரமுடைய என் மகளும் மாப்பிள்ளையுமே உனக்குத் தகுந்தவர்கள் ஆவார்கள். அவர்களே உன் தாய் தந்தையராக அமைவராக. எனக்கும் இது விருப்பமாகும். உனக்கு வேண்டிய உதவிகள் செய்வேன்" என்று கூறி மீண்டும் இவ்விதம் கூறலானான். "முன்பொரு தடவை என் குருவிடம் என் தற்காப்புக்காக ஒரு பட்டாக் கத்தி ஒன்று வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியே தெய்வ அருளால் ஒன்று படைத்து எனக்களித்து 'இது தடையற்ற வலிவுடையது' என்று கூறி உன் வம்சம் இனிமேல் க்ஷத்திரிய வம்சம் ஆகும்" என்றும் ஆசீர்வதித்தார். அச் சொற்களை ஆராய்ந்தால் நீ என் மகளுக்கு மகனாகப் பிறப்பதற்குத் தகுந்த காரணம் உள்ளது. நீ அரசனாகி உலகம் முழுதும் ஆள்வாய். ஐயமில்லை. ஆதலின் என் சொற்படி கேட்பாயாக" என்றான்.

அதற்கு மணிகந்தரன் "அப்படியாயின் என் கருத்தையும் கேட்பாயாக. அப்படி நான் தூய பெற்றோர்கட்குப்

பிறந்து அரசபதவி எய்தும் விருப்புடன் இங்கு மலையி லிருந்து வீழ்ந்திறக்க முயன்றாலும் சிறிது மனச்சஞ்சலம் உள்ளது! ஏன் என்றால் எத்தகைய அரசனாக இருந் தாலும், எத்தகு தூய பெற்றோர்கட்கு உதித்தாலும் புற அகப்பகைகளைக் கடந்து என்றும் சிறப்புறுதல் அரிதா தலின் சிறிது வருத்தமுறுகின்றேன். மேலும் அரச பதவி எனும் மருள் கொண்டால் எத்தகைய நல்லோரும், இல்லாத குருடும் இல்லாத செவிடும் இல்லாத ஊமைத் தனமும் வந்து சேர்ந்துவிடும். தத்துவஞான முணர்ந்த சான்றோர் அவையால் அரச பதவியின் குற்றங்களை நீக்கலாம் என்றால் சான்றோர் யாதும் விரும்பமாட்டார் கள். ஆதலின் அவர்களை அவையில் அமர்த்துவது கடினம். மேலும், பெரியோர்களைச் சார்ந்தொழுகும் பண்பாடும் எத்துணை நாள் நிலைக்கும்! அத்தகு அறிவு நெடுநாள் முயற்சியால் கிடைப்பதாகும். இவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தால் எல்லாமே வெறுப் பளிக்கும். நீ எல்லாம் வல்ல சித்தன். ஆதலின் என் கவலை தீர்த்தற்கு ஒரு வழி காட்டுவாயாக'' என்றான்.

சுபாவாக்கிய சித்தன் அவன் கவலை தீர்க்கும் வழியில் இவ்விதம் கூறினான். "என்றும் வெற்றிதரும் வில்லும் அம்புகளும் உன் விருப்பிற்கேற்பப் படைக்கிறேன். தத்தாத்திரேய குருவின் அருளால் இயலாததொன்றுண்டா? இன்னும் ஒரு மணியைப் படைத்துத் தருகிறேன். அது தத்துவஞான வித்தகரைக் கவர்ந்து உன்பால் நிறுத்தும். அது தன்னைக் கண்டவர்க்குப் பார்வை மாத்திரத்திலேயே எல்லா நலனும் ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும் தரும்'' என்று கூறி ஒரு வில்லும் கூரிய ஒளி பொருந்திய அம்புகளும் செம்மணியும் படைத்தான். இப்படிப் படைத்து "இவற்றை நீ எப்போது உதிப்பாயோ அப்போதே நான் வந்து தருவேன். 'எப்போது கிடைக்குமோ?' எப்படிக் கிடைக்குமோ? என்று வருந்தாதே'' என்று கூறிக்கொண் டிருக்கும்போது அப்போது அருகினில் சென்றுகொண் டிருந்த மதாசயன் என்னும் மன்னன் அம்மொழிகளைக்

கேட்டு நின்றான். சிவராத்திரி புண்ணிய நாளில் மல்லிகார்ஜுன தேவனை வணங்க மனைவியுடனும் புரோகி தர்களுடன் வந்த அம்மன்னன் சித்தனைக்கண்டு அவன் பெயர் கேட்டறிந்து சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து 'மல்லிகார்ஜுன தேவனை வணங்கிய நற்பயன் பெற்றேன். உன்னைத்தேடித் தேடித் திரியும் எனக்கு உன் தரிசனம் கிடைத்தது. நான் மகாசயன் எனும் மன்னன், கேகய வம்சத் தைச்சார்ந்தவன். இவள் என் மனைவி, இவர்கள் புரோகி தர்கள். நான்கு வேதங்களையும் முற்றக்கற்ற சான்றோர் கள். சான்றோய்! சித்த! தத்தாத்திரேய மகாமுனிவனை 'மாகுரி புரத்தில்' நாங்கள் கண்டோம். சேவித்து வணங்கி னோம். கார்த்தவீரியார்ஜுனன் பெரும் சக்கரவர்த்தியாக இருந்தும் அந்த யோகியைச் சார்ந்து இருந்ததால்தானே சிறப்புற்றான். அம்மன்னனின் வம்சத்தில் பிறந்தவன் ஆதலினால் நானும் அம்முனிவனை வணங்கினேன். அந்தத் தத்தாத்திரேயர் என் கனவில் வந்து ''எனது பக்தன் சுபாவன் எனும் சித்தன் ஒருவன் உளன். அவன் மூலம் உன் விருப்பம் நிறைவேறும். அவனைத் தேடிக் காண்பா யாக' என்றார். தங்களை, இருக்குமிடம் தெரியாமல் பலவாறு தேடியும் காணாமல் தற்செயலாக இங்குத் திருவிழாவை ஒட்டி வந்து உங்கள் பேச்சில் 'தத்தாத்திரேயர்' பெயர் வந்ததால் நின்று விவரம் தெரியலாம் எனக் கருதி அருகில் வந்தேன். எனக்கும் நெடுநாள் விருப்பமான தங்களது தரிசனம் கிடைத்தது. இனி எங்கள் கோரிக்கைகள் நிறைவேறியது போலத்தான்' என்று கூறினான்.

சுபாவன் தன மனத்துள் தனது குருவின் அருளை நினைந்து அஞ்சலித்து அம்மன்னனை நோக்கி ''உன் விருப்பங்களை நிறைவேற்ற நான் யார்? எனினும் என் குருவின் ஆணை எனச் சொன்னமையால் அவரருளால் என்னால் ஆவதைச் செய்வேன். உன் விருப்பம் யாது?' எனக் கேட்டான். எனலும் மன்னன் ''வெற்றியும் பிள்ளைப் பேறும் என் விருப்பங்களாகும்'' என்றான்.

அதற்குச் சித்தன் "மன்னவ! இந்த மணிகந்தரனின் மறு பிறவியில் வெற்றி பெறும் பொருட்டு நான் இந்த வில்லும் அம்புகளும் ஏற்கெனவே படைத்துவிட்டேன். ஆதலின் இவனைத் தவிர்த்த பிற மன்னர்களை வெற்றி கொள்வாய்!" என்று கூற மன்னன் "அப்படியே ஆகுக! தங்கள் அருள் கிடைத்ததே போதும்; மற்றதை நானே பார்த்துக்கொள்கிறேன். மணிகந்தரனின் இந்த வில்லம்பு களும் அப்போதுள்ள வெற்றியும் பிறவும் அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று கருவத்துடன் கூறினான்.

அதுகேட்ட சித்தன் அவனது கருவமிக்க மொழிகட்குச் சினந்து "இந்தக் கருவிகளின் பெருமையால் அடுத்த பிறவியில் உன்னை நிச்சயம் இவன் வெல்வான். அப்படி வெற்றிபெற்றதோடு மட்டுமின்றி நீயும் உன் மனைவியும் அவனுக்கு ஊழியம் செய்வீர்கள்" என்று மன்னனிடம் கூறினான்.

அங்குள்ள புரோகிதர்கள் மிகுந்த அடக்கத்துடன் சித்தனை வணங்கி "ஓ! புண்ணிய! இவருக்கு என்ன தெரியும்? மூன்று பேச்சில் ஆறு தப்பு இருக்கும். நாங்கள் தங்கட்குச் சொல்ல என்ன இருக்கிறது? இவர் பேச்சுக் களை கணக்கிலெடுக்கலாமா? தங்கள் குருவின் அருளால் தங்களைத் தேடிவந்த இந்த மன்னன் விருப்பத்தை எப்படியும் ஈடேற்றுங்கள்" என்றனர். அவர்களைக் கண்டு சித்தன் "என் சொற்கள் பிரம்மாவின் எழுத்துக் களைப்போல் தவறாது. உலகிலுள்ள பிற மன்னர்களை உங்கள் மன்னன் வெல்வான். மணிகந்தரனை மட்டும் வெல்ல இயலாது. அவனுக்குச் சேவையும் செய்வான். உங்கள் மன்னன் மனத்துள் பிள்ளைப் பேற்றுக் கோரிக்கை யும் அப்படிச் சேவை செய்யும் காலத்தில் அத்தலைவன் அளித்த மணியின் விசேடத்தால் பெறுவான்" என்றான்.

அதுகேட்ட அவர்கள் சிறிது வருந்தி "எமது இன்பமே தன் இன்பமாகவும் எமது சொல்லே தன் சொல்லாகவும்

கொண்டு இம்மன்னன் எங்களைக் கௌரவமுடன் நடத்துகிறான். இத்தகு செல்வச் செழிப்புடன் இருக்கும் நாங்கள் இம்மன்னன் பிறனைச் சேவித்து இருக்கும் காலத்தில் நாங்கள் யாரிடம் இருப்போம்?'' என்று கேட்டனர்.

அதற்குச் சுபாவ சித்தன் "உங்கள் அரசனுடைய தலைவனே உங்கட்கும் தலைவனாவான். அவன் அணிந்துள்ள மணி உங்கட்கும் மிகுந்த களிப்பை நல்கும். அம்மணியின் தரிசனத்தால் உங்கள் முன்னைய பெருமைகளை மறந்து நீங்களும் உங்கள் அரசனும் அத்தலைவனைச் சேவித்து இன்புறுவீர்கள். ஆதலின் மணிகந்தரன் மாமன்னனாகப் பிறக்கும் வரைக்கும், தன் விருப்பப்படி உங்கள் அரசன் திகழ்வானாக. அதன் பிறகு என் சொற்படி அவனது சேவை செய்வான். நீங்களும் அந்த மணியின் ஸ்பரிசத்தால் பேரின்பம் அடைவீர்கள்'' என்று சொன்னான். அவர்களை எல்லோரையும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தானும் மணிகந்தரனை விட்டு நீங்கித் தன் வழியே சென்றான். அவன் சொற்படி மதாசயனும் பிற மன்னர்களை வெற்றி கொண்டு தேசுடன் திகழ்ந்தான்'' என்று அக்குழந்தை கூற, கேட்டின்புற்ற அலகுவிரதன் "மணிகந்தரன் அப்படிச் சித்தனை விட்டு நீங்கிய பின் என்ன செய்தான்? அவன் வரலாறு கேட்க விழைகின்றேன். சொல்வாயாக'' என்றான்.

ஆறாவது அத்தியாயம்

மதுரலாலசை அலகு விரதனைப் பார்த்து "நீ கேட்ட மணிகந்தரனின் வரலாறு முழுதும் சொல்கிறேன், கேட்பாயாக" என்று கூறி இவ்விதம் கூறலானாள்.

"அசையாத திட உறுதியுடன் மணிகந்தரன் சான்றோர் வாக்குப்படியே தகுந்த நியமங்களையாற்றி, சுத்தமாக இருந்து, மலை வரையருகே சென்று இருந்து கீழ் வீழ்ந்திட (வரைபாய்தல்) முயலும்போது திடீரெனப் பேரிரைச்சலுடன் மந்தரமலையிற் கடைந்த காலத்துப் பாற்கடல் சுழன்று பேரொலி கொண்டாற் போல் ஒரு பெருங்கூட்டம் ஓடிக்கொண்டிருந்தது. தாய் குழந்தையைத் தேடாமல் தான் பிழைத்தாற் போதுமெனத் தலை தெறிக்க ஓடும் அக்கூட்டத்தாரின் அவல நிலை கண்டு வியப்பெய்தினான். அவ்வளவில், பூங்கொத்தொத்த மென்முலைகள் மேலாடைக்குள் நடனமாட ஓடிவந்த பெண்ணொருத்தி "ஓ! கந்தருவ! வரை பாயும் புண்ணியத்தை இந்தப் பெருங்கூட்டத்தைக் காப்பதால் பெறலாம். இவர்களைக் காப்பாற்றுவாயாக!" என்று கூறித் தகதக வென ஒளிவீசும் வாள் ஒன்றை அவன் கையில் தந்தாள்.

அதன்பின், சுற்றிலுமுள்ள பெருமரங்கள் வேரோடும் பறந்து வந்து வீழவும், பெரும் பெரும் பாறைகள் விரைந்து வரும் வேக விசையால் செதில்களால் உதிர்ந்து மோதவும், யானை, புலி, சிங்கம் முதலிய விலங்குகள் அடிபட்டுப் பொடிப் பொடியாகவும், வானவெளியில் நெருக்கமாகப் பந்தல் போல அமைந்து பறப்பதாகவும் ஆகி, வெள்ளிக்

கடப்பாறைகளோ வெள்ளிப்பூண் கொண்ட இரும்புக் கடப்பாறைகளோ எனும்படியாகச் சித்திரை மழைபோல முள்ளம்பன்றியின் முள்கள் வீழ்ந்தன. மணிகந்தரன் அந்தப் பயங்கரமான முள் மழை புதிதெனக்கண்டு மிக வியப்புற்று அந்தப் பெண்ணைப் பார்த்து, "மடந்தாய் இந்த அபூர்வமான முள் மழை எப்படி உண்டாயிற்று? இந்தப் பெரும் வாளை எதற்காக என் கையில் தந்தாய்? நீ யார்? சொல்" என்று கேட்டான். அது கேட்டு அவள் "என்ன சொல்ல! போர்த்திறன் மிக்க வீர! உனக்கு முன்பு சிறிது தூரத்திலேயே ஓர் அரக்கன் வந்துகொண்டிருக்கிறான். அதனால் முள்மழை பொழிகிறது. நெருங்கி வந்து விடுவானோ என்னவோ? நீ இந்த வாள் கொண்டு விரைந்து எதிர் கொண்டெதிர்த்து வெட்டி வீழ்த்துவாயாக!" முள்ளம்பன்றி உருவத்தில் எதிர் வந்துகொண்டிருக்கும் அவ்வரக்கனை அடர்ந்து வருமுன் அழிப்பாயாக" என்று விரைவாக வேண்டினாள்.

அவளைப் பார்த்து மணிகந்தரன் "அந்த அரக்கனை இதோ கொன்றொழிப்பேன்! அஞ்சாதே! பயந்தவர் களையும் தேற்றுவாயாக! விரைந்து செல்! என்னை உறுதியாக நம்பு" என்று கூறிவிட்டுத் தோள் வலிமை காட்டி வாளைச் சுழற்றியபடியே அரக்கனை நோக்கிச் சென்றான்.

இவ்விதம் மிகுந்த உற்சாகத்துடனும் பரபரப்புடனும் சென்று முள்ளம் பன்றி முள்களைத் தன் திறனுடைய வாள் வீச்சினால் எதிர்த்துக் கொண்டே முன்னேறி, பல வண்ணப்பூக்களின் ஒளி படர்ந்த மாமலை போல் முள்கள் மெய் சிலிர்க்க நின்ற அம்முள்ளம்பன்றி உருவுடைய அரக்கனைக் கண்டான். கண்டதும் முள் மழையைத் தன் வாள் வீச்சின் விரைவால் தடுத்தவாறு அவ்வரக்கனைக் கண்டு "அடே அறிவிலா அரக்கனே! இவ்வுருவினால் என்ன பயன்? உன்னுடைய தீவினை உன்னை அழிக்காமல் விடுமா? அஷ்டதிக்கஜங்களும் நடுக்கிய

கஜாசுரன் என்னவானான்? முகில் மறைவிலிருந்து அம்பு மழை பொழிந்த இந்திரஜித் என்னவானான்? தேவர்களைச் சீரழித்த விருத்திராசுரன் என்னவானான்? பூமியைப் பாயாக்ச் சுருட்டி எடுத்த ஹிரண்யாட்சன் என்னவானான்? பலவித மாயங்களில் வல்ல சம்பரன் முதலியோரும் இரண்யஹசிபு முதலியோரும் என்னவானார்கள்? இந்தப் பயங்கர உருவம் என்ன செய்யும்? இதோ உன்னைக் கொல்கிறேன்'' என்று வீராவேசத்துடன் முழங்கினான். அது கேட்டு அரக்கன் நகைத்து ''அடாடா! யாரிந்தப் பயல்? முட்டாளா? பைத்தியக்காரனா? சித்தப் பிரமைகொண்டவனா? பிறப்பிலேயே கோட்டியா? அவன் தோள் வலி எங்கே? பிரம்மன் மறந்து போய்த் தலையிலேதாவது எழுதிவிட்டானா?'' என்று கூறி அவனைப் பார்த்து ''வாழ விரும்பா விட்டால் எதிரே வா? ஏன் இப்படி உளறுகிறாய்! பானைகளை உடைக்காத உலக்கை யுண்டோ? உன் கொழுப்பை அடக்குகிறேன்'' என்று கூறி மெய்விதிர்த்துக் கூரிய முள்களை உதிர்த்து மழையெனப் பொழிய அதை வாளால் வீழ்த்தியவாறே எதிர்த்து வந்த மணிகந்தரனும் நெருங்கி அவ்வரக்கன் கழுத்தை வெட்டிச் சாய்த்தான். அவ்வளவில் அரக்கனின் கொடு முள்கள் தன்னைத்தாக்கவே அவனும் அங்கேயே வீர மரணம் அடைந்தான்.''

இது கேட்ட அலகு விரதன் குதூகலத்துடன் ''அந்த அரக்கன் யார்? அவனை அவ்விதம் கொல்வித்த அந்தப் பெண்மணி யார்? தெரிய விரும்புகிறேன்'' என்று கேட்டான். அது கேட்ட அக்குழந்தை ''அவ்விருவர்தம் வரலாறும் கூறுகிறேன் கேள்'' எனச் சொல்லி இப்படிக் கூறத் தொடங்கினாள்.

''பெருந்தகையோய்! அவ்வரக்கன் மகிஷாசுரனின் மாமன் மகன். துர்க்கா தேவியினால் அவன் கொல்லப் பட்டதை அறிந்து துர்க்கையிடம் பகை பூண்டிருந்தான். அவன் பெயர் சல்யாசுரன். முள்ளம்பன்றி உருவில்

இருந்தமையால் அப்பெயர் வந்தது. கடப்பாரையைப் போன்ற முள்கள் இருந்தமையால் 'கனித்ர சலன்' என்ற பெயரும் உண்டு. மகிஷாசுரனைக் கொன்றதால் ஏற்பட்ட பழிவாங்கும் உணர்ச்சியால் துர்க்கை மேல் வெறுப்புடன் 'உலகிலுள்ள துர்க்கையின் பக்தர்களை எல்லாம் தேடிக் கொன்று ஒழிப்பதா? அவள் கோயில்களை எல்லாம் நாசமாக்குவதா? என் மனத்தில் எழும் சினத்தீயை எப்படித் தணிப்பது? நான் சினந்து இப்படிச் செய்தால் இந்திரன் என்ன செய்ய முடியும்? ஏழையின் கோபம் உதடுகளுக்குக் கேடுதானன்றிப் பிறரை என்ன செய்ய விட முடியும். சுக்கிராச்சாரியாரின் ஆசிகளைப் பெற்ற என் வலிமைக்கு முன் தேவர்கள் எம்மட்டு? துர்க்கையின் சக்திக்கு அஞ்சமாட்டேன். எனினும் திருமால் அரக்கர் குலத்தை அழித்து விடுவானோ எனும் ஐயம் மட்டும் உள்ளது. இதற்கு உபாயம் தேடும் வரை அமைதியாக அரக்கனாக இருந்தாலும் அமைதியானவன் என்று சொல்லும்படியாக இருக்க வேண்டும்'', என்று நினைத்த வாறு ஒரு வனத்தில் இருந்தான். இப்படி இருக்கும்போது விதி வசத்தால் அங்கே நிலவின் ஒளியில் பிறந்த அப்சர மங்கையான 'அபிநவ கௌமுதி' எனும் மங்கை அங்கு வந்தாள். வந்ததும் அவளது எழிலைக் கண்ட அவ்வரக்கன் வியப்புற்று முன்னைய சிந்தனைகளை மறந்து, காதல் நோய் கூர்ந்து அவளைப் பார்த்து இவ்விதம் கூறினான்.

'' மங்காய்! எனக்கு இவ்வுலகமே அடிவணங்கும். உன் விருப்பமெல்லாம் நிறைவேற்றும் திறமையுடையவன். உன் அழகிய உருவிற்கேற்ப என் உருவத்தையும் மாற்றிக் கொள்ளமுடியும். என்னை ஏற்றுக்கொள்'' எனலும் அம் மடந்தை சிறிதும் லட்சியம் செய்யாமல் அலட்சியப் பார்வை யுடன் விலகிப் போய்க்கொண்டிருந்தாள். அதைக் கண்டு சினமுற்ற அரக்கன் ''பெண்ணே! என்னை அலட்சியப் படுத்திச் செல்லும் உன்னை வேறோர் ஆடவன் மணக்கத் துணிவானா? என் காதலியை விரும்ப யாருக்கு எத்தனை நெஞ்சுகள் இருக்கின்றன?'' என்று அச்சுறுத்தினான்.

அதற்கு அவள் அஞ்சாமல் வெறுப்புடன் "உன்னைக் கொன்றவனைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன்! இது சத்தியம்" என்று சூளுரைத்தாள். அவளுடைய கொடிய மொழிகள் கேட்டு அவ்வரக்கன் மிகுந்த சினமுற்றாலும் அவளை ஒன்றும் செய்யாமல் போக விடுத்தான். எப்படியும் எவ்விதத்திலாவது தனக்கு இணங்க மாட்டாளா?" என்ற நப்பாசையின் காரணமாகக் கோபத்தை அடக்கிக் கொண்டான். அது முதற்கொண்டு அம்மங்கையும் அவ்வரக்கனைக் கொல்திறன் வாய்ந்தவன் யார்?" என்று ஆராய்ந்து வந்தாள். அவ்வரக்கனும் "தன்னைக் கொல்பவனைக் கொல்லும் வழி யாதென" ஆராய்ந்து வந்தான். அவ்வளவில் அவ்வரக்கன் ஒரு சமயம் தற்செயலாக மிருகேந்திரவாஹனியின் கோயிலைக்கண்டு அங்குள்ள தூணில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களைப் படித்தான்.

அதில் "இந்த வாளினால் தன் தலையை வெட்டிக் கொள்ளும் தைரியவானின் தலை மீண்டும் இணையும். தன்னைக் கொன்றவனையும் கொல்லும்" என்று இருப்பதைப் பார்த்துத் தன் விருப்பம் ஈடேறியது என மிகவும் மகிழ்ந்து அதில் கண்டபடியே செய்தான். பின் அதன் பலனையடைவோம் எனும் நம்பிக்கையில் எழுந்தவனாகத் தனக்கினி யாரும் எதிரி இல்லை எனக் கர்வித்து அம்மகா சக்தி கோயிலையே அழிக்க முனைந்தான். அபிநவ கௌமுதியும் சகல உலகும் தேடி அவ்வரக்கனைக் கொல்லும் திறன் வாய்ந்த வீரனைத் தேடி அந்த சக்தி கோயிலைக் கேள்விப்பட்டு அங்குச் சென்றால் ஏதாவது நலம் விளையுமெனக் கருதி வந்தாள்.

வந்தவள் அவ்விடத்தில் சல்யாசுரனைக் கண்டு "இவன் இங்கெப்படி வந்தான்? அருகே இருக்கிறானே! தூரமாகப் போகும் வழியில்லையோ?" என்று மனக் கலக்கம் அடைந்தாள். அவ்வளவில் அவனும் அம் மான் விழியாளைக் கண்டு "மலரன்னாய்! நான் வேண்டியும்

ஏற்காமல் கருவமுடன் அந்த வனத்திலிருந்து சென்றா யல்லவா ?'' என்றான். அவளும் வெறுப்பு மீதூர "ஆம்! உன்னைக் கொல்பவனையே மணப்பேன் என்றும் சூளுரைத் தேன். அதற்கென்ன இப்போது?'' என்றாள். அதற்கவன் நகைத்து "இதோ இந்தக் கல்தூணில் கண்ட வாசகங் களைப் பார். வாளால் கழுத்தை வெட்டிக் கொண்டும் மீண்டும் உயிர் வாழும் எனைக் காண்பாயாக! வீண் பேச்சுகள் எதற்கு ?'' என்றான்.

அது கேட்டு அவளும் கல்தூணிலுள்ள வாசகங்களும், அவனது கழுத்து ஒட்டப்பட்ட தடமும், குருதி தோய்ந்த நிலமும் கண்டு மிகுந்த அச்சங் கொண்டாள். இவ்விதம் வருத்தமுற்ற அம்மடந்தை "என் இதயத்தின் தாபத்தை அறிந்து களைவார் யாருமில்லை. இந்தத் தேவியின் அருள் ஒன்றுதான் காப்பாற்ற இயலும்'' என நினைந்து அக்கோயிலின் கருப்பகிருகத்திற் புகுந்து பகவதியின் பாதங்களை இறைஞ்சினாள்.

அவ்வரக்கன் அவள் வரவை எதிர்பார்த்து வெளியே நின்றுகொண்டிருந்தான். உட்சென்ற அபிநவகௌமுதி சக்திபாதங்களில் வீழ்ந்திறைஞ்சி எழாமல் தன் சபதமும் சல்யாசுரனின் தெம்பான மொழிகளையும் அதற்கான காரணமும் கூறி "ஓ! மகாதேவி! நான் முன்பின் அறியாமல் குழம்பிப் போயிருக்கிறேன். எனக்கெப்படியும் சபதம் நிறைவேறும் வழி காட்டிக் காப்பாற்றுவாயாக'' என்று வேண்டினாள். மிருகேந்திரவாஹனியும் அவ்வரக்கனின் இடையூறுகளைக் கடக்க இவள் வந்ததற்கு மகிழ்ந்து உடனே பிரசன்னமாகி இவ்வாறு கூறினாள். "பெண்ணே! இவ்வரக்கன் தன்னைக் கொல்ல முயல்பவனைக் கொல்வது உறுதி. இதைத் தவிர்க்க முடியாது. சொன்னபடி தன் தலையைக் கொய்த பயன் எய்தாமலிருக்க முடியுமா? உன் சபதமும் நிறைவேற வேண்டும். அதற்கு ஒரு வழி காண்பேன்'' என்று சிறிது சிந்தனை செய்து மீண்டும் அபிநவகௌமுதியைப் பார்த்து, "இவனது

துணிசெயலுக்குப் பயன் தன்னைக் கொல்ல முயல்பவனை அவனும் கொல்வான் என்பதேயன்றி, அவனால் தான் சாகாமல் இருப்பான் என்ற உறுதியில்லை. ஆதலின் மிகுந்த வீரமுடையவன் இவனைக் கொன்று தானும் சாவான். உன் சபதம் இவனைக் கொன்றவனை மணப்பது தானே! அவனது மறுபிறவியில் உன்னைக் கட்டாயம் மணப்பான். இனி அத்தகு வீரனை நிர்ணயிக்கவேண்டும்'' என்று கூறிச் சிறிது சிந்தித்து மகிழ்வுடன் மீண்டும் இவ்வாறு கூறினாள், ''மணிகந்தரன் எனும் குணவான் ஒருவன், கந்தருவன் உளன். ஒரு காரணத்தால் இங்கு என் சன்னதியில் ஒரு பெரும் வாள் வைத்துவிட்டுப் போனான்'' என்றுகூறி, அந்த வாளைக் காட்டி ''நீ இதைக் கொண்டுபோய் அவ்வீரனிடம் கொடுத்துக் கொல்விப்பா யாக! இவன் உன் உருவ அழகில் மயங்கி உன்னையே பின் தொடர்வான். இவனை ஏமாற்றி அவனிருக்குமிடத்திற்கு அழைத்துச் செல். எவ்வளவு வெறுப்படையச் செய்தாலும் உன் மீதுள்ள காதலால் இவன் உன்னை ஒன்றும் செய்ய மாட்டான். அஞ்சாமற் செல். இந்தப் பெரிய வாளை முன்பு தத்தாத்திரேயர் சுபாலன் எனும் சித்தனுக்குத் தந்தான். அவன் மணிஸ்தம்பன் எனும் தனது மாப்பிள்ளைக்குத் தந்தான். அவனும் இங்கு ஒரு பயன் கருதிக் கந்தருவனான மணிகந்தரனிடம் தந்தான். ஆதலின் இவ்வாள் மரபுவழி வந்து ஒரு செயற்பாட்டுக்கு உதவும். பிறருக்குப் பயன் படாது. ஆதலின் அவன் கைக்கு இதைத் தந்து பயன் படுத்து. அவன் இப்போது ஒரு சாபத்தினால் ஸ்ரீசைலம் சென்று 'வரைபாய்ந்து' உயிர் மாய்க்க எண்ணியுள்ளான். நீ விரைந்து சென்று வரைபாயும் பயன் இவ்வாளால் கிட்டு மென்று கூறி மலைமீதிருந்து வீழ்தலைத்தடுத்து இவ்வரக் கனைக் கொல்விப்பாயாக! அந்தக் கந்தருவன் மறு பிறவியில் களாபூரணன் ஆகப் பிறப்பான். காசாரபுரத் தில் பிறக்கும் அவனை மணந்து உன் சூளுரையை நிறை வேற்றிக்கொள்! செல்!'' என்று கூறி அனுப்பினாள். முந்தானையை இறுக்கி இடையிற் சுற்றிவளைத்துக் கட்டி, கூந்தலைத் திருகி முடித்து, அங்கிருந்த வாளைக் கையிற்

பூண்டு, சக்தி பெற்று வந்த வீரலட்சுமியோ எனும்படி வெளியே வந்தாள். இவ்விதம் வெளியேறி வந்தவளைக் கண்ட அசுரன் "தன்னைக் கொல்லத்தான் வருகிறாளோ?" என்றும், "அதனால் அவள் இறந்துபடுவாளோ?" என்றும் எண்ணி அச்சமுற்றான். அவன் அப்போது அந்த அழகிய முழு நிலவொத்த முகத்தினாளைக்கண்டு பரபரப்புற்று, மனங்குழம்பி இவ்வாறு கூறினான். "என்னைக் கொல்ல முயலாதே! உனது இஷ்ட தெய்வத்தின் மேலாணையாகச் சொல்கிறேன்! நான் எதற்கும் அஞ்சேன். என்னால் நீ அழிந்துபடுவாயோ என்று கலக்கமுறுகிறேன். அதுகேட்ட அம்மங்கை "ஓ! அசுரனே! நான் இறந்துபடுவேன் என்பதைப் பொறாமல் ஆணையிடும் உன்னைக்கொல்ல அந்தோ! நான் ஒன்றும் அறியாதவளல்ல! நான் உன் எண்ணப்படியே நடக்கிறேன்" என்று கூறி அவனைக் கடந்து செல்ல, அவள் கூறிய சொற்கள் தன் விருப்பத்திற் கிசைவாக இருப்பதாகத் தோன்றியதாலே அவ்வசுரனும் அவளைப் பின் தொடர்ந்து அங்குமிங்குமாக எங்கும் நிற்காமல் சென்றான். அவளும் அவனைப் பிரிந்துவிடாதவாறு ஏதாவதொரு சாக்குச் சொல்லி அங்கங்கு சிறிது தாமதித்து அவன் வரவும் ஏமாற்றி அழைத்துக்கொண்டு சென்றாள். அவனும் அப்பயணம் தனது காதல் வேட்கையாலே இன்பம் தரலால் ஸ்ரீசைலப் பகுதிக்குத் தூரம் என்பதை உணராமலே அவளைக் கண்டு கண்டு களிப்புற்றவாறே தொடர்ந்து வந்தான். காமமிக்கவன் எதைத்தான் உணரமுடியும்? இப்படித் தொடர்ந்து வந்தவன் சலிப்பையுற்று அவளை அழைத்து "என் விருப்பப்படி நடக்கிறேன்" என்று கூறினாய்! உன் செயல் ஒன்றும் புரியவில்லை! என்னை மோசம் செய்கிறாயா?" என்றான். அதற்கு அவள் "நான் உன் விருப்பப்படியன்றி அதை மீறி இப்போதுன்னைக் கொல்ல வருகின்றேனா? நான் கொல்ல வரும்போது நீ பயந்து என்னைக் கொல்ல வராதே என்று கேட்டுக் கொண்டதாலும் ஆணையிட்டதாலும் நான் உன் விருப்பப்படியே நடந்து கொள்கிறேன் என்றேன். அதை மீற மாட்டேன்" என்றாள்.

அது கேட்டு அவன் மிகவும் சினமுற்று "நான் உயிருக்குப்பயந்து உன்னைக் கெஞ்சினேனோ? உன்னைக் கொல்ல முடியாதென்று இவ்விதம் பின் தொடர்ந்து வந்ததால் எளிதாக நினைக்கிறாய் போலும்! யாருக்கும் எடுத்துக்காட்டினால்தானே தெரியும். என் வலிமையைக் காட்டுகிறேன் பார்" என்று கூறி அவள் மீது படாதவாறு கொடிய முள் மழையைப் பெய்வித்தான். உடல் விதிர்த்ததும் முள்கள் மலையிலும் மரங்களிலும் பதியவும் முறிந்து வீழ்ந்தன. பல்வேறுயிர்களையும் வீழ்த்தின.

இவ்விதம் தன் திறனைக் காட்டி "இனி என்னை மணக்காமல் செல்வாயோ! நீ செல்லும் இடமெல்லாம் என் வலிமையால் இடி வீழ்ந்து பாழ்நிலமானாற் போல் ஆக்குவேன். அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகட்கு நீயே பொறுப்பாவாய்! உன் வம்சத்தில் இல்லாத இப் பழியை நீ ஏற்கலாமா? இதை நினைத்தாவது என்னை மணந்து கொள்" என்று கூறினான். அது கேட்ட அவளும் இனித் தாமதித்தால் காரியம் கைகூடாதெனக் கருதி ஸ்ரீசைலத்திற்கு மிக விரைந்து சென்றாள். அவனும் பின் தொடர்ந்து முள்மழை பொழிந்தவாறேவந்தான். அவளும் மிகுந்த வேகத்துடன் சென்று, அப்போது அந்த மலையில் சிவராத்திரி உற்சவம், ஆதலினாலே எல்லா நாடுகளிலுமிருந்து வந்த மக்களை அசுரனின் வருகை தெரிவித்து எச்சரித்து 'நீங்கள் பிழைக்கும் வழியைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு மணிகந்தரன் இருக்குமிடம் தேடி மிகு விரைவுடன் சென்று அவனைக் கண்டு அவன் கையில் வாளைத் தந்து அவ்விதமாகச் சல்யாசுரனைக் கொல்வித்தாள். அவனால் மடிந்த மணிகந்தரனின் இரண்டாவது பிறப்பை எதிர் நோக்கி இருந்தாள்.

அதன்பின் அவன் களாபூரணனாக உதித்தபின் தகுந்த முறையில் சேர்ந்து தனது முன்கதையை விவரமாகச் சொல்லி, அவன் பணித்தபடி வாழ்க்கை முழுதும் இருக்க உடன்பட்டுக் கந்தருவ விதிப்படி மணந்தாள். அவ்வளவில்

மதாசயன் சுபாவ சித்தனின் வசனப்படி எல்லாப் பகைவர்களையும் வென்ற மதத்தால் எங்கும் தடையின்றிச் செல்வோன் காசாரபுரத்திற்கு வந்து இம்மாமன்னனிடம் தோற்றுத் தானும் தன் மனைவியும் ஊழியம் செய்து வந்தனர். அக்காலத்தில் இந்த மணியின் மகிமையால் அவர்கட்கு மகளாகப் பிறந்தேன். அவ்வளவில் என் தாய் தந்தையர் மன்னனின் உளத்திற்கு மாறுபட்டனர். அதன் வரலாறு சரஸ்வதி பிரம்மாவின் சல்லாபக் கதையிற் கேட்கப் பட்டதே. இப்படி மாறுபட்டு அவர்கள் கமுக கண்டோத்தரபுரத்திற்குப் போய்ப் பயணக் களைப்பால் இளைத்துத் தேறாமல் இருந்த என்னை மீண்டும் கொண்டு வந்து இன்று சிறிது முன்னர் அடைந்த இந்த மணியைக் கண்ட மகிமையால் நான் ஆரோக்கியமடைந்து மிகவும் களிப்புடன் திகழ்வதைக் கண்டு வியப்புற்று என் மெலிவும் தற்போதுற்ற வலிவும் கூறி மன்னனைப் புகழ்ந்தனர். அந்தப் புரோகிதர்களும் மணியின் மகிமையால் மயக்குற்று இம்மன்னனை மீண்டும் சேர்ந்துள்ளனர்" என்று கூறியதும் அக்குழந்தையைப் பார்த்துக் கை கூப்பியவாறு அலகுவிரதன் "ஓ! தெய்வீகக் குழந்தாய்! இந்தப் புரோகிதர்கள் யார்? அவர்கள் சரிதமும் விளக்க வேண்டும்" என்று கேட்ப, "அவர்கள் சரிதம் எனக்கு என்ன தெரியும்? அவர்கள் உன்னுடைய மக்கள்தானே! உன்னுடைய புண்ணிய வசத்தால் உன்னையும் இங்குச் சேர்த்தது" என்று புன்னகையுடன் அக்குழந்தை சொன்னது.

அச்சொற்கேட்டு மிகுந்த வியப்புற்ற மனத்துடன் அலகுவிரதன் அக்குழந்தையை நோக்கி 'அவர்கள் என் மக்கள் ஆவதெப்படி? சிரிக்காமல் சொல்' என்று கூறி மன்னனைப் பார்த்துச் 'சிரித்துத்தொட்டு விளையாடும் பருவம் சிறிது நடக்கும் முன்னே என் மனைவியரைத் தொலைத்துவிட்ட எனக்கு மக்கள் உள்ளனர் என்பது நகைப்பிற்கிடமாகுமன்றோ? அவர்கள் தொலைந்ததும் பிறவற்றைப் போலன்று. கடலில் வீழ்ந்து வீழ்ந்ததே சாக்காக மூழ்கிவிட்டனர்கள். நானும் அவர்களது திருவும்

அழகும் நினைந்து, பிற பெண்டிரை நாடாதொழிந்தேன். இப்படி இருக்க எனக்கு மக்கள் என்ற ஐயமாவது எழுமா? எனக்குப் பார்க்க இது நடக்க இயலாததொன்றாகும். இந்த விசித்திரக் கதைகளைச் சொல்லும் இத்தாய் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் எப்படி முடிச்சுப் போடுவாளோ?'' என்றான்.

அது கேட்ட மன்னன் 'அப்படித்தான் இருக்கிறது?' என்று கூறி நகைத்து மதுரலாலசையைப் பார்த்துக் 'குழந்தாய்! இந்தச் சந்தேகம் தீரும்படி இந்தப் பிராமணனின் பிறப்பு வளர்ப்பும் இவனுக்கு இந்தப் புரோகிதர்கள் மக்களான விதமும், அவர்கள் மதாசயனைச் சேர்ந்த விதமும் சொல்' என்று கூற அக்குழந்தையும் அவ்விதமே கூறத் தொடங்கினாள்.

'மன்ன! பாண்டிய நாட்டில் நாகப்பட்டினம் எனும் ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் சோமசர்மா. வேதமறிந்தவன். தவமுடையவன். செல்வந்தன். தத்துவங்களை உணர்ந்தவனாயினும் அடக்கத்துடன் இல்லற நெறிப்படியே உலகியல் நடத்தி வந்தான். இவற்றில் மிக முக்கியமாக அன்னதானமே உயர்ந்ததென்று, என்றும் அந்தணர்கட்கு அன்னமிட்டு வந்தான். அவனது மகன் யக்ஞசர்மா, யக்ஞசர்மாவிற்கு எவ்வளவு முயன்றும் வேதம் முதலிய கலை ஞானங்கள் கிட்டவில்லை. அந்த வருத்தத்தைப்போக்க வானர மகளிரை ஒத்த அழகிய கற்புடை மங்கையர் நால்வரை அவனுக்குத் தந்தை மணமுடித்து வைத்தான். மகன் மனம் மகிழும்படியாக மருமகளான நால்வருக்கும் நகை நட்டுகள், துணிமணிகள் குறைவின்றி இருக்கும்படி வசதிகள் செய்துவைத்தான். சோமசர்மா தனது இறுதி நாள்களில் மகனை அழைத்து அவனுடைய மனைவியர் கேட்கும்படியாக இவ்விதம் கூறினான். 'மகனே! எவ்விதத்தாயினும் அன்னதானத்தைக் கைவிடாமல் நடத்திவா. இதனால் நான்மறையின் அம்சமாக நான்கு புதல்வர்கள்

உனக்குப் பிறப்பார்கள். என்வாக்கு பொய்க்காது.' இவ்விதம் கூறவும் மகனும் அதற்கிசைந்தான்.

தந்தை காலமானதும் அவரது ஆணையைச் சிரமேற்கொண்டு பல ஆண்டுகள் தந்தையிடம் பக்திபூண்டு அந்தணர்கட்குச் செந்நெற்சோறும் நெய் தயிர் அப்பளம் வடை பாயசத்துடன் பழங்களும் வைத்து அமுது படைத்து வந்தான். இதனால் நாள்கள் செல்லவும் தானியங்கள், நகைநட்டுகள், தட்டுமுட்டுச் சாமான்கள் அடியாட்கள், ஆடுமாடுகள், தோட்டம் துரவுகள் முதலிய எல்லாச் செல்வமும் செலவாகிவிட்டன. எனினும் மனம் கலங்காமல் தன் மனைவியர் அணிந்துள்ள நகைகளை விற்க முடிவு செய்தான். இப்படி முயன்று கற்புக்கரசிகளான தன்மனைவியர் நால்வரையும் நினைந்து யாருடைய நகையை முதலில் வாங்குவது?' என்று வருந்தினான். அவனது உளப்பாங்கறிந்த அவர்களும் 'எனது நகையை முன்னே கொள்க! எனது நகையை முன்னே கொள்க!' என்று வேண்டவே மீண்டும் யாருடைய நகையை முதலில் வாங்குவது? என்று வருந்தினான். மங்கள சூத்திரம் (தாலி) ஒன்றைத் தவிர மற்ற நகைகள் எல்லாவற்றையும் குறைவிலா அன்புடன் களைந்து மகிழ்ச்சியுடன் கணவன் முன் வைத்த அம்மங்கையரின் அழகு முன்பைவிட அதிகமாகக் காதலன் உளத்தில் களிப்பை ஈந்தது. கற்புடைய மங்கையருக்குக் கணவனிடமுள்ள பக்தியை வெளிப்படுத்துவதே சிறந்த நகையாகுமன்றோ? செலவழிப்பதோ அன்னதானத்திற்கு, கேட்பவனோ காதற் கொழுநன், தாங்களோ கற்புடை மகளிர். ஆதலின் ஒருவரை முந்தி ஒருவர் இவ்விதம் நகைகளை அளிப்பதில் வியப்புளதோ? இது அணிகளைவிட அதிக இன்பம் அளிப்பதல்லவா?

'நகைகள் கேட்டு வாங்கிக்கொள்வதில், சக்களத்திகள் போட்டி பொறாமை கொள்வதுதான் உலகிற் கண்டதுண்டு, ஆனால் தங்களது நகைகளை எல்லாம் கணவனது செலவுக்காகக் கொடுப்பதில் ஒருவரை ஒருவர்

மிஞ்சும் புண்ணியவதிகளான பெண்மணிகள் இவர்கள் தான்' என மக்கள் யாவரும் அவர்களைப் புகழ்ந்தனர்.

இவ்விதமாகத் தத்தமது நகைகளையே முதலில் பெற வேண்டுமெனத் திரிகரண சுத்தியுடன் விழைந்து தன் மனைவியரைத் தடை கூற விரும்பாது அவர்களது நகைகள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் பெற்று விற்றுச் செல வழிக்கத் தொடங்கினான்.

தந்தை சொன்ன "நான்மறை அம்சயான புதல்வரைப் பெறுவாய்" என்ற சொல்லை மனதில் நினைந்து அந்த நம்பிக்கையால் படிப்பும் சந்தியாவந்தனமுமாக இருந்தான். அதற்குப் பலன் அப்போதொன்றும் தெரியாவிட்டாலும் "பெரியோர் சொற்படி எவ்விதமோ? யாரறிவார்" என்று தான் எப்போதும் போலவே அன்னதானம் செய்துவந் தான். மன்ன! அந்த யக்ஞசர்மாதான் இந்த அலகு விரதன். அன்னதான விரதத்தை விடாப்பிடியாக நடத்தி வந்தமையால் இப்பெயர் கிட்டியது. என்னவென்று சொல்வது? மனைவியர் நகைகள் தீர்ந்தவுடனே அன்பை எங்கே தொலைத்தானோ தன் மனைவியரையும் விற்றுத் தன்னுடைய விரதத்தை நிறைவேற்ற நிச்சயித்தான். இவ்விதம் தீர்மானித்ததும் அதை அவர்களிடம் சொல்லா மல் வஞ்சகமாக விற்கும் உபாயத்தை நினைந்து ஒருநாள் அம்மங்கையரிடம் இவ்விதம் கூறினான். 'தாமிரபரணித் துறைமுகத்தில் கப்பல்கள் வந்திறங்கியுள்ளனவாம். நான் ஒருவனுடன் கூட்டுச் சேர்ந்து கப்பல் வியாபாரத்திற்குப் போகிறேன். நிரந்தர அன்னதானம் செய்யும் செல்வம் ஈட்டுவதற்கு இதுவே வழியாகும்' எனவும் 'உன்னைப் பிரிந்து ஒரு கணமும் வீட்டிலிருக்கமாட்டோம். உன்னுடன் கூட நாங்களும் வருவோம். மகிழ்ச்சியுடன் அழைத்துச்செல்' என்று மனைவியர் கூற, அவனும் "நன்று" என்று கூறி அவர்களை இரகசியமாக வியாபாரி மூலம் விற்று, பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களை அங்கு அழைத் துச் சென்றான். இவ்விதம் கொண்டு சென்று நயமாக

ஒரு படகில் அவர்களை முதலில் ஏற்றி முடிவில் தனக்கிட மில்லை என்று கூறி, 'அடுத்து வருவேன்' என்று கூறவும் முன்னேற்பாட்டின்படி விரைந்து அப்படகும் சென்றது.

முப்பது கஜம் தூரம் கடந்து படகு சென்றதும் அவனது உறுதியாகிய மலையை சோகம் என்னும் பேரிடி தாக்கவே நிலை குலைந்து வாய்விட்டழுது விட்டான். "மிகக் கொடூரமான பணத்தாசையால் இவ்வளவு தூரம் செய்துவிட்டேனே ! கற்புக்கரசிகளே ! இப்படிக் கப்பல் வியாபாரியின் கைப்பட்டுக் கஷ்டப்படவா என் கைப் பிடித்தீர்கள் ? அந்தோ !" என்று மிக்க வருத்தத்துடன் அரற்றி அழுதான். அவ்வழுகை கேட்ட அவன் மனைவியர் "தங்களைக் கணவன் வஞ்சித்து இவ்விதம் கப்பல் வியாபாரிகள் கொண்டு செல்கிறார்களோ ?" என்று நினைத்து மிக்க பரபரப்புடன் எழுந்து வருத்தத்துடன் அலை மோதினர். அவ்வளவில் பிறர் தடுக்க முயன்றும் முடியாதவாறு ஆ ! ஆ ! என்று வருத்தத்துடன் பிறர் கூக்குரலிட கடலிற் குதித்துவிட்டனர். அவர்களைப் பிடிக்க முடியாமற் போனதற்காக ஒருவரை ஒருவர் வைது கொண்டும் திட்டியும் நீரில் வலைகள் விரைந்து போட்டும், நீச்சல்காரர்களைக் கடலில் தள்ளித் தேடச் செய்தும் முயன்று தேடினர்.

இவ்விதம் முயன்று தேடியும் மங்கையர் காணப்பட வில்லை. அவர்களை விலைக்கு வாங்கிய செட்டி அலகு விரதனை வற்புறுத்தி "நீ அழுதமையால்தானே இவ் வளவும் விளைந்தது" என்று கூறி அந்தப் பணத்தை மீண்டும் பிடுங்கிக்கொண்டு விட்டுவிட்டான். இவ்விதம் இத்தனை கஷ்டப்பட்ட இவன் தனக்குப் புதல்வர்கள் உளர் என்றால் எவ்விதம் நம்புவான் ? இவன் நம்பாதது இயல்பே. அந்த மங்கையரின் பின்வரலாறு கேட்பாயாக! அவர்கள் அவ்விதம் அவசர புத்தியுடன் நீரில் குதிக்கும் போது அங்கு திமிங்கிலமொன்று வாயால் நீர் குடித்த மையால் இப்பெண்கள் நால்வரும் அதன் வாயுள் நீருடன்

புகுந்து விட்டனர். அத்திமிங்கிலம் தூரமாகச் சென்று மங்கையருடன் கூடிய நீரைத் தலையிலுள்ள துவாரத்தின் மூலமாகப் பீய்ச்சவே அந்த நீர், வருணதேவனின் கொடி போல மிளிர்ந்தது. அம்மங்கையரோ கொடியில் எழுதிய பொற்கொடிகள் போலத் திகழ்ந்தனர். நிறைய நீர் குடித்த மேகங்களுடன் வானில் திரியும் மின்னற் கொடிகளோ எனும்படியும், ஆகாயகங்கை மீது காதலுற்ற கடலரசன், வசந்த காலத்தில் பீய்ச்சுங் குழலில் பீய்ச்சிய நீர் ஆகிய கைகளுடன் பொழிந்த குங்குமக் குழம்புச் சாறு போன்றும் மீனெண்ணெய் மேற்படவே புகையுடன் கனன்று எரியும் தீச்சுவாலைகளோ எனும்படியும், தனது காதலிகளான நதி மகளிரின் மேல் காதல் எவ்வளவு உளது என அறிதற் பொருட்டுக் கடலரசன் அக்காதலைப் பொன்னாக்கி அந்த நீர் வெள்ளத்தை உரைகல் ஆக்கிக் காதல் வரைகள் வரைந்தனனோ எனும்படியும் அத்திமிங்கிலத்தின் தலைத் துவாரத்திலிருந்து உமிழப்பட்டு மேற்போந்த அந்த வெள்ளத்திடையே பறந்த அம்மங்கையர்கள் காணப் பட்டனர். மிகவும் தூரமாக எறியப்பட்டு மேற் போந்த அந்த மங்கையர்கள் வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் ஒரு விமானத்தில் வீழ்ந்தனர்.

அவ்விமானத்திலிருந்த இளம் தம்பதிகள், சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டு வியப்புற்றனர். இவ்விதமாக அத்திவ்விய விமானத்தில் வீழ்ந்து சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து கண் திறந்து பார்த்த அம்மங்கையரின் நனைந்த ஆடைகளைக் கண்டு இரக்கமுற்ற அத்தேவ தம்பதிகள் புத்தாடைகள் அளித்து, ஆறுதல் கூறி "நீங்கள் யார்? எங்கிருந்து இங்கு வீழ்ந்தீர்கள்" என்று கேட்ப, அம்மங்கையர் கடகடவென நடுங்கியவாறு தடுமாறி வாய்குழறப் பதில்கூற முனைந்தனர்.

தாம்பூலச் செம்மை சிறிதே படர்ந்து அவர்களது பல் அழகு அந்தத் தேவ மங்கைக்கு மிக்க வியப்பளித்தது. முன்னர் அம்மங்கையரின் உருவ எழிலுக்குத் தன் கணவன்

உளம் என்னாகுமோ என வருந்திய அவளுக்கு அவர்தம் பல் அழகும் சொல் அழகும் மிகவும் கலக்கத்தை விளைவித்தது. இவ்விதம் ஐயமுற்ற அந்நங்கை கணவனைப் பார்த்து "அவர்கள் கதை பிறகு கேட்கலாம். உன் பந்தயம் விளையாடு. உன் ஆட்டம் தோற்கும் நிலையில் உள்ளது ஏன் தாமதிக்கிறாய்?" என்றாள். என்று கூறிய பின் சிறிது அவர்களை நோக்கி, "தாய்மார்களே! நான் இப்போது சொன்ன சொல் உங்கட்குக் கோபத்தை விளைவித்தாலும் விளைவிக்கலாம். எனினும் இவர் என் கவனத்தைத் திருப்பி ஆட்டத்தை மாற்றித் தானே ஜெயித்ததாக வாதிடலாம். அதை என்னாற் பொறுக்க இயலாது" என்று கூறிக் கணவனைப் பார்த்து "உன் பந்தயமாடுகிறாயா?" என்றுரைத்துக் கை விரல் நகங்களின் வெண்மையான ஒளி மின்னிடப் பாசிகைகளை வேட்கையுடன் வாங்கி விரல்களாற் புரட்டிக் கைவளைகள் ஓலமிட நகர்த்திப் போட்டாள்.

'நில்! அடடா! பொய் சொல்லாதே! தோற்றாய்' என்றும் 'பறவைகள் பயப்படும்! பையப் பேசு' என்றும் 'உன் காய் என் கைப்பட்டது' என்றும் 'இரட்டைக் காய்களைத் தொடாதே' என்றும் 'கனியைத் தொடலாமா?' என்றும் இவ்விதமாகச் சாதுரியமான பேச்சுக்களுடன் இருவரும் சொக்கட்டான் ஆடினர். எதிரிகள் மேன்மேலும் முன்னேறிவர வீரர்கள் சுறுசுறுப்புடன் பகைவரின் கவசங்கள் இற்று விழும்படி யானை மீதிருந்து போரிடுவதுபோல எதிராளியின் காய்களை வீழ்த்திச் சூது எனும் போர் நிகழ்த்தி விளையாடினர்.

இறுதியில் கணவன் வெற்றி பெற்று வெற்றிக்குப் பந்தயமான 'எச்சிற்படுத்திய மதுவைத் தரும்படியாக' இதழினை அசைத்துச் சைகை காட்டிக் கேட்க, தலையை மெல்ல அசைத்துப் 'பிற பெண்கள்' இருப்பதைக் கண் சாடையால் தெரிவித்தாள் அந்நங்கை. இந்த இனிமையான அழகிய காட்சி கணவன் உளத்தில் வெறி மூட்டவே

அவன் பார்வையாலேயே பன்முறை அதட்டியும், வேண்டியும், தூண்டியும், வணங்கியும், பிணங்கியும் அந்நங்கையை அப்போதே தனது பந்தயத்தைத் தரும்படி விரும்ப அங்கிருந்த நான்கு மடந்தையரும் வேறு திசையைப் பார்த்தவாறு தங்களைப் பார்க்காததை உணர்ந்து தன் முகத்தை அவள் முகத்தருகே வளைத்துப் பார்த்தான். அந்நங்கையும் முன்பே தயாராக அருகினில் வைத்திருந்த அழகிய பொற் கிண்ணத்தில் நிறைத்திருந்த மதுவைத் தன் வாயில் வைத்துப் பின் காதலனின் வாயில் தந்தாள். பிற மங்கையர் தம்மைக் காண்கின்றனரோ? என்று அலையும் கடைக் கண் வீச்சுக்களால் அடிக்கடி அவர்களைப் பார்த்தவாறே அவள் தந்தாள்.

அதோடு நில்லாது காதல் மோகவெறி மூளவே தமது கன்னங்கள் பொற்கிண்ணத்தில் பிரதிபலிப்பதைப் பார்த்தவாறே அவர்கள் இருவரும் கற்பக மதுவை அமுதரசமாக ஒரே பாத்திரத்தில் வாய் வைத்துக் குடித்தார்கள். கன்னத்துடன் கன்னம் சேர்த்தும். அதன் பிரதி பிம்பங்களைப் பார்த்து மெய் மறந்தும், மதுவின் மணம் இனிப்பூட்ட உறிஞ்சியும், (மடக்கு மடக்காக) கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்தும், இதழ்களைச் சுவைத்தும், தமது ஐம் புலன்களையும் திருப்தியுறும்படியாக விண்ணவரின்பம் துய்த்தனர். நாணத்தைக் களைந்து செந்தேன் (மதுரசம்) மயக்கம் விளைந்து இன்புறுத்த. சொற்கள் தடுமாற ஏதேதோ உளறியவாறும் மானம் சிதைய மயக்கப் பார்வையுடன் திகழ்ந்த அவர்கள் கண்களில் செம்மை படர்ந்தது. அவ்வளவில் பொற்கிண்ணத்தில் தன் முகத்தையும் கணவன் முகத்தையும் பார்த்து இந்நங்கை 'அடே! இன்னொருத்தி அதற்குள் உனக்கு உண்டாட்டுக்குத் துணையானாளா? இவள் யார்?' என்று நாக்குழறத் தடுமாறிய சொற்களால் கூறி அம்மதுரசம் பருகாமல் சினந்து ஊடினாள். அப்போதவன் 'பெண்ணே! நன்றாகப்பார்! பிற மாதர் யாரிங்குள்ளார்கள்? உன் நிழல்தான் தெரிகிறது' என்று கூற அவள் அங்கிருந்த அந்தணனின் மனைவி

யரைக் காண்பித்து 'என் நிழலா இவர்கள்! அப்படியா னால் நீ என்னைப்போல இவர்களையும் ஆசையுடன் பார்ப்பாயோ? இவர்கள் இங்கிருக்கக்கூடாது?' என்று கூறினாள். இவ்விதம் அந்நங்கை மதுப் போதையினால் மதி கலங்கி செய்வதறியாமல் அங்குள்ள மங்கையரைப் பூமியிலிறக்க முயன்று சிறிது வளைத்த முகத்துடன் கீழே பார்த்தாள்.

அப்போது அவள் விமானம் பயண வழியில் கோதாவரி நதிக்கரையில் தருமபுரி நகரில் வாழும் கணிகை ஒருத்தியின் வான்தொடும் மாளிகை அருகில் தென்படவே அம்மாளிகையின் உப்பரிகையிற் சேரும்படி தமது தேவ விமானத்தைச் செலுத்தி அம்மங்கையர் நால்வரையும் தானே கைலாகு கொடுத்து அங்கே இறக்கிவிட்டுத் தனது செயலுக்கு உடன்படாது தவிக்கும் கணவனைப் பார்த்து 'மற்றக் கவலைகளை விடுத்துப் புறப்படுங்கள்; புறப்படுங் கள்!' என்று கூறி அம்மங்கையர்களை உத்தேசித்து 'இவர்க ளைத் தவறான கருத்துடன் அணுகுபவர்கள் நிச்சயம் என்னால் துன்புறுத்தப்படுவார்கள்' என்று கூறிவிட்டு வாகனத்தில் அமர்ந்துகொள்ள, கணவன் 'எனக்கு இத்தகு எண்ணம் யாதுமில்லை! இப்பெண்களுக்கு உணவுடை கட்கு என் செய்வதுஎன்றே வருந்துகிறேன்' என்ன, அந் நங்கை அவனுக்கு அம்மாளிகையினுள்ளே இருக்கும் அறைகளைக் கரங்களாற் காட்டி 'அதோ ஆடை அணிகள்! நெய், உண்டிகள். அதோ! மன்னன் வரவுக்குக் காணிக் கைப் பொருள்கள் வைத்தாற்போல எல்லாம் இருக்கின் றன. இம்மங்கையர் எதை விரும்புவார்களோ அவற்றைப் பிறர் தொட்டால் அவர்கள் வாழ்வதரிது' என்று கூறி கணவனுடன் விமானத்திலமர்ந்து தன்வழியே சென்றாள்.

தனது கணவனின் மனம் சஞ்சலமடையுமோ எனும் ஐயப்பாடெழுந்தமையாலும், மதுரசமுண்ட மயக்கத்தா லும் வெளிப்பட்ட அச்சொற்கள் அந்தணர்தம் மனைவிய ரின் உயிருக்கும் கற்புக்கும் பாதுகாப்பாக அமைந்தன.

அந்நங்கை அவ்விதம் சொல்லியபடி அந்த மேடையில் அவர்களை இறக்கிவிட்டுச் செல்வதை அம்மாளிகைக்கு உரியவளான கணிகை மறைந்திருந்து பார்த்துக் குழம்பிய மனத்துடன் 'யாரோ தேவ மகளிர் இம்மாளிகையைச் சரண் அடைந்துள்ளனர். இனி நாம் இங்கிருத்தல் தகாது. இங்குள்ள பொருள்களை விரும்புவதும் தகுதியன்று' என்று நினைத்து அம்மங்கையர்கட்கு எதிரில் சென்று 'இம் மேடையில் இனிதிறங்கியுள்ள தாய்மார்களே. இப்போதி திலுள்ள எல்லாப் பொருள்களையும் உங்கட்குத் தாரை வார்த்துத் தந்தேன்' என்று கூறி நீர் வார்த்துத் தானம் செய்தாள்.

பின்னர் 'இம்மாளிகையைச் சுற்றியுள்ள வீடுகளும் பூந்தோட்டமும் உங்கள் சொத்துத்தான். இனி தாங்கள் எங்களை இதயம் குளிர்வித்துக் காப்பாற்றுங்கள்' என்றாள். பின்னர் ஆங்காங்குள்ள தனது ஆட்களை அழைத்துக்கொண்டு நடந்த வரலாற்றை நகரிலுள்ள மக்கட்கு அறிவித்தாள். அவர்களும் வியப்பும் அச்சமும் உற்றனர். அந்த மங்கையரும் அப்போது நடந்ததெல்லாம் கண்டு மிக்க வியப்புற்று 'ஏழைகள்பால் இறைவன் என்றும் உளான்' என்று நினைத்துக்கொண்டு அம்மாளிகையின் வாசலைத் திறக்காமல் கதவுகளை மூடி உள்ளே இருந்து வாழ்ந்தனர். சகுனம் முதலியவற்றின்மூலம் தம் கணவன் மீண்டும் வந்து சேர்வான் என்ற நம்பிக்கை ஏற்பட்டதால் சிதையாத உறுதிப்பாட்டுடன் விரும்பிய உடல் பெற்றுத் திகழ்ந்தனர். நகர மக்களும் அவ்வப்போது அப்புண்ணிய வதிகளை மணிமயமான மாளிகையின் மேடையில் வரும்போது போகும்போது கண்டு கை கூப்பி வணங்குவரே யன்றி முன் கூறிய செய்தி மனத்தில் இருந்ததால் வேறு விதமான எண்ணங்கள் எழாதிருந்தனர்.

'கந்தருவ மங்கையரோ! யக்ஷகுல மடந்தையரோ? அப்சரஸ்களோ! இம்மேடையில் ஒளியுடன் திகழ்கின்றனராம். எவனாவது கெட்ட எண்ணத்துடன் நோக்கினால்

பிழைக்கமாட்டானாம்! பார்த்துக்கொள்ளுங்கள்' என்று மக்கள் கூறிக்கொண்டு மிக்க பயபக்தியுடன் அவர்களைக் காத்திருந்துகாண்பார்கள். 'வானில் மணிமயமானவிமானத்தில் திரிபவர்கள் இம்மேடையில் நெடுநாட்களாக இருந்து பூலோக மக்களைப் போலச் சமையல் செய்துகொண்டு கணிகை தந்த செல்வத்தை அனுபவிப்பதற்கு என்ன காரணமோ? விரதமெதுவோ? இது எத்தனை நாள்களுக்கோ? இச் கணிகை எவ்வளவு பாக்கியம் செய்தவளோ! நாம் தந்தாலும் இப்படியே ஏற்றுக்கொண்டு அருள் புரிவார்களோ?' என்று நகரமக்கள் நினைத்து அம்மாளிகை வாசல் முன்புள்ள நிலத்தை மெழுகிக் கோலமிட்டு அரிசி நெய், பால் முதலிய பொருள்களைக் கொணர்ந்து பய பக்தியுடன் வைத்தனர். அவர்களும் அவ்வப்போது அப்பொருள்களை ஏற்றுக்கொண்டனர். இப்படிச் சில நாட் கழிந்ததும், அக்கற்புக்கரசிகட்குக் கருவுற்ற சின்னங்கள் தோன்றின. மாதங்கள் நிறைந்தன. கருவிலிருந்த போதே குழந்தைகள் நான்மறைகளும், இதிகாச சாஸ்திரங்களும் கற்றனர். பின் முறையே நால்வருக்கும் நான்கு குழந்தைகள் நல்ல நேரத்தில் பிறந்தனர். அவர்கட்கு அவ்வழியே வந்த ஒரு முனிவன் ஜாதகர்மாதிகள் நடத்தி வைத்தான். பெயரிடும்போது அம்முனிவன் தன் விஞ்ஞானத்தால் முற்றும் உணர்ந்து 'இவர்கள் உருவுற்ற நான்மறைகளே' என்று நிச்சயித்து முதல் வேதன் இரண்டாம் வேதன், மூன்றாம் வேதன், நான்காம் வேதன் என்று பெயர் சூட்டினான்.

அம்மங்கையரும் முன்னர் தமது மாமனார் சொன்ன 'நான்மறைகளே புதல்வர் ஆவர்' என்ற சொல் பலித்து உள்ளது என்று தமக்குள் உணர்ந்து மகிழ்ந்தனர். பின் முனிவனை உரிய காலத்தில் வந்து 'உபநயனம்' செய்விக்கக் கோரினர். அதன்படியே உரிய காலத்தில் உபநயனம் செய்வித்தான். அந்தப் பிரம்மச்சாரிகளும் சுயமாக எல்லாக் கலைகளும் கற்றவர்கள் ஆயினும் முறைக்குக் சாஸ்திரப் பயிற்சி பெற வேண்டிச் சில நாள்கள் எல்லாக் கலை

களையும் கற்றுத் தேர்ந்தனர். இப்படியிருப்ப அம்மங்கையர் நெடுநாளாகியும் தமது கணவன் வாராததால் வருந்தி அவ்விடம் விட்டு வேறெவ்விடமேனும் செல்ல நினைத்து அதைத் தமது குமாரர்கட்கு அறிவிப்ப அவர்கள் இவ்விதம் கூறினர்.

"தலைவன் இன்றி நீங்கள் இவ்வுருவில் எங்கிருந்தாலும் நமக்கு மதிப்பு இராது. வீண் பேச்சுகள் விளைவிப்பார்கள். எல்லா இடத்திலும் நல்லவர்கள் இருப்பார்களா? ஆகையால் நீங்கள் இங்கேயே 'தேவமகளிர்' எனும் ரகசியத்துடனே சில காலம் இருங்கள். நாங்கள் ஒரு மன்னனை அடைந்து மேன்மையுறும்வரை தாங்கள் இப்படியே இருங்கள். அப்படிக்கன்றி எங்கள் தந்தை இருக்குமிடம் ஆராய்ந்து அடைதற்கு இயலாது. இது தவிர வேறு வழியில்லை' என்று கூறி அவர்கள் தம்மிருப்பிடம் பிறரறியா வண்ணம் வெளியேறிச் சென்றனர்.

இவ்விதம் சென்றபின் அந்தப் பிரம்மச்சாரிகள் நால்வரும் நகருக்குள் புகுந்து அப்போதந் நாட்டை ஆளும் அரசன் 'மதாசயன்' ஆதலினாலே அவன் அரண்மனை வாயிலை அடைந்து 'அம்மன்னன் சகல கலைகளும் அறிந்தவன்' என்றும், 'அவனைக் காண்பதற்கு அம்மன்னனின் புரோகிதரின் அனுமதியின்றி முடியாது' என்றும், அப்புரோகிதன் தலை அறிவு மிககவன் இல்லை ஆதலின் தன் மதிப்புப் போய்விடும் எனும் பயத்தால் பிற அறிஞர்களை மன்னனிடம் நெருங்கவிடாமல் வாயிற் காப்போன் முதலிய அரண்மனை ஆள்களைத் தன் வசப்படுத்தியுள்ளான் என்றும், மன்னன் வேள்வி செய்யும் விருப்பு எழுந்தாலும் 'தகுந்த வேதவித்துக்கள் எங்கும் இல்லை' என்று கூறித் தடுத்து விடுவான் என்றும் அங்குள்ளோர் சொல்லக் கேட்டார்கள். மேலும் 'அம்மன்னன் யார்மூலமாவது பேச்சுக் கொடுத்துக் கலைஞான மிக்கவரைக் கண்டுகொள்வானோ' என்று அஞ்சிச் சாதாரணமானவர்களையன்றி அறிவுடையவரை மன்னன் அருகே செல்லவிடான் என்றும் யாராவது

சென்றால் மன்னன் எது கேட்டாலும் "தங்கள் ஆட்சியில் எப்போதும் நன்றாக இருக்கிறோம்?" என்பதன்றி வேறு பேசக் கூடாதென்றும், ஏதாவது செய்திகள் விசாரித்தாலும் "நாங்கள் வீட்டிலேயே இருப்போம்! எங்கட்குத் தெரியாது" என்று கூற வேண்டும் என்றும் கட்டளையிட்டுத் தான் அனுப்புவான்" என்றும் கேள்விப் பட்டார்கள்.

கேட்டபின் அதற்கேற்ப அரசனுக்குத் தம் மகிமை புரியும்படியாகச் சொற் சாதுரியமுடன் அணுக நினைத்துச் சாதாரணச் சிறுவர் போன்ற தோற்றத்துடன் மன்னன் சன்னதிக்குப் போகும் மாம்பழக் கூடைகளைச் சுமக்கும் கூலிகளாகக் கிராமச் சிறுவர்கள் போல் நடித்து உட்புகுந்து காவல்காரர்களிடம் சாதுரியமாகப் பேசி மன்னன் முன்னர்ச் சென்று பழக்கூடைகளை வைத்தனர். வைத்து, பின் சென்று பயமுடன் அங்கிங்கும் நடக்கும் அவர்களைக் கண்ட மன்னன் இரக்கமுடன் மெல்ல நகைத்து "எல்லோரும் சௌக்கியந்தானா? ஏதேனும் சங்கடங்கள் ஒன்றும் இல்லையல்லவா? ஒளியாமல் உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்" என்றான். அதற்கு அவர்கள் மறுமொழியாக வடமொழியிலும் தென்மொழியிலும் பொருள் வருமாறு ஒரு பாடலைப் பாடினார்கள்.

அச்சொற் சாதுரியமுள்ள பாடலைக் கேட்டதும் அப்போது கேட்டதற்கு மறுமொழி தருவதாயும் வேள்வியிற் சிறந்தவர்களைச் சேர்ந்தொழுக வேண்டும் எனும் நீதியை விளக்குவதாயும் உள்ளதை உணர்ந்த மன்னன் மனத்துள் மிக்க வியப்பெய்தி அவர்களது உருவத்தை ஆராய்ந்து நீறுபூத்த நெருப்புப் போல மறைவாக உள்ள மறையவரென்றுணர்ந்து அடக்கத்துடன் எழுந்து மகிழ்ச்சி பொங்கச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான்." என்று சொல்லக் களாபூரணன் கேட்டு "இவர் இத்தனை பெரிய சொற்பொருளுணர்ந்த ரசிகரா? முன்பறியேன்!"

என்று கூறிக் கௌரவமுடன் மதாசயனைக் கண்டான். கண்டு "மதாசயா! உட்கார்" என்று மும்முறை கூறி வற்புறுத்தி உட்கார வைத்துப் பின் மதுரலாலசையை நோக்கி 'அதன் பின் நடந்தது கூறு" எனலும் அவள் இவ்விதம் கூறலானாள்.

"அப்படி மதாசயன் வணங்கி இந்த நால்வருக்கும் ஆசன மிட்டு அமரச் செய்து தனது ஆஸ்தானத்திலுள்ள அவை யோரை நோக்கி 'இப்போது இவர்களது சொல்லில் என்ன சிறப்பிருக்கிறது என்று இவ்வளவு வணங்கினான்' என்று உங்கள் மனத்திலிருக்கலாம்! அச்சொற்களின் சிறப்பைக் கேளுங்கள்! அரசே! உனக்கு வெற்றியாகுக! உன் ஆட்சியில் மகிழ்ச்சி நிறைந்துள்ளது. என் தாய்மீதாணை யாகச் சொல்கிறேன்" என்று தென்மொழியிலுரைத்ததை அறிவீர்கள். அதை வடமொழியாகக் கொண்டால் "வரவைக் கணக்கிற்கொண்டு மூலதனத்தைச் செலவழித்து விடாதே! வேள்வி செய்பவர்கட்கு எல்லாச் செல்வமும் புகழும் சேரும். கற்றோரைப் பேணினால் திருவும் சேரும் என்று பொருள்படும்" என்று கூறி மதாசயன் முதன் மறை யவனைக் கண்டு வணங்கி "நீங்கள் யார்? இப்படி மறை வாக ஏன் வந்தீர்கள்? எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்" எனலும் அவன் தனது தந்தையின் அன்னதான நியமம் முதல் தமது தாயார் சொன்னதைக் கேட்ட வரலாறுகளை யும் தாங்கள் கண்டதும், மன்னனை அடைந்ததுவரையுள்ள யாவற்றையும் கூற, தனது புரோகிதனின் வஞ்சகத்தால் வணங்கத் தக்கோரைக் கௌரவிக்க இயலாதிருந்த தன் அறியாமைக்கு நாணி இவ்விதம் கூறினான்.

"இது தெரிந்துதான் போலும் என் பெயர் மதாசயன் என்றுள்ளது. புரோகிதனின் வஞ்சகத்தால் சான்றோரைக் கண்டு கொள்ளா திருந்தேனே' என்று கூறினான். அவர் களது வற்புறுத்தலுக்காகப் பெரிய தண்டனை கொடாது புரோகிதத்தை மட்டும் காலி செய்வித்துப் புரோகிதனை

வெளியேற்றி அவனுக்குத் துணை புரிந்தவர்கட்கும் சிறு சிறு தண்டனைகள் கொடுத்து அனுப்பினான்.

பின் அவர்களையே தனது புரோகிதர்களாக வைத்துக்கொண்டான். அவர்களும் தமது தாயாருடன் கூடிச் சிறந்த முறையில் கௌரவிக்கப்பெற்று மணம் புரிந்து மகிழ்வுடன் மன்னனுடைய ஆதரவினால் சீரும் சிறப்பு முற்று அவன் விரும்பிய வேள்விகள் செய்துகொண்டும் தமது தந்தையை நாகப்பட்டினம் முதல் பாண்டிய கேரள சோழ திராவிட தேசங்களில் தேடச்செய்து செய்தியொன்றும் கிட்டாததால் வருந்தினர். தமது தாயாரை ஏதேனும் தேறுதல் மொழி கூறி நம்பிக்கையூட்டிவந்தனர்.

அலகுவிரதனும் அவ்விதம் மனைவியரை வீணாக விற்ற வெட்கத்தினால் அக்கிராமத்திலுள்ள சான்றோரிடம் தலைகாட்ட அஞ்சித் தூரதேசங்களில் யாசகம் பெற்றுப் பொருள் திரட்டி அதனளவிற்கு அன்னதானம் செய்துகொண்டு அதுவும் இயலாதபோது தான் அன்னம் உண்பதையே விடுத்துக் காய்கனி கிழங்குகளையுண்டு உடலையோம்பி இடையிடையே செய்யும் சிறிதளவு அன்னதானத்தில் திருப்தியில்லாமல் பெருஞ்செல்வம் அடைய உபாயம் தேடித்திரிந்து முடிவில் மிருகேந்திரவாஹன மகாசக்தியின் மகிமையைக் கேள்வியுற்ற அவளை வழிபடும் மந்திரம் அறிந்து அத்தேவியின் சன்னிதியை அடைந்து அங்கு உன் (களாபூரணன்) கதை கேட்பதால் உண்டாகும் பயன் ஆகிய சகலசெல்வமும் ஆயுள் ஆரோக்கியமும் புத்திர பௌத்திர சந்தானமும் கிடைக்கும் என்பதை அறிந்து புத்திரபௌத்திரர் கிடக்க மற்றப் பயன்களாவது கிட்டுமல்லவா? என்று நினைந்து தவம் செய்ய அதன் மூலம் உன் கதை கேட்பதும் உண்டாயிற்று. முடிவில் அது மிகவும் சிறந்த புத்திர சந்தானமும் அடையச் செய்தது. மணிஸ்தம்பதனயனே! உன்கதை இத்தகு பெருமை வாய்ந்தது!" என்று கூறி, முதல் மறையவனை

நோக்கி 'உங்கள் தந்தையைத் தகுந்த மரியாதை செய்யாமல் இன்னும் தாமதித்தால் பாவமன்றோ?' என்றான்.

அம்மறையவர்கள் நால்வரும் பயபக்தியுடன் அடக்கமும் மகிழ்ச்சியும் பரபரப்புடனும் எழுந்துவந்து அலகுவிரதனின் பாதங்களை வணங்கினர். ஆனந்தக் கண்ணீர் சொரிந்து புளகாங்கித்முற்ற தந்தையும் அவர்களை எடுத்து அரவணைத்து உச்சிமோந்து மகிழ்வுடன் சீராட்டிப் பாராட்டி அவர்களுடன் இருந்தான். அப்போது அச்சான்றோரின் முன்னைய வடமொழித் தென்மொழிச் சிலேடை சிறப்புற்ற அற்புதக் கவிதை தன் உள்ளத்தில் நிலவநிற்றலாலே களாபூரணனும் அவர்களை நோக்கி 'இத்தகு விசித்திரமான கவிதை பாட இப்போதும் இயலுமா?' என்று குதூகலத்துடன் புன்சிரிப்பு தவழக் கேட்டான்.

அதற்கு உடன் முதல் மறையோன் மறுமொழியாக ஒரு பாடல் பாடினான். ''சிறந்த ஒளிமிக்க அரசனே! தங்கள் சிறப்பினாலேயே தாங்கள் விரும்பும் க்விதை கேட்பவர்க்குத் தகுந்தபடி அமையும்'' என்று தென்மொழியில் பாடிய அதைக்கேட்ட மன்னன் '' அடடா! மாபெரும் கவிமன்ன! என் சொற்கு பதில் உரைத்தவாறு அற்புதமான கவிதை படைத்துவிட்டாயே! நன்று! நன்று!'' என்றான். 'எப்படி' என்று கவிமன்னன் கேட்ப, மன்னனும் மெல்ல நகைத்துத் 'திருப்பிப்படி' என்றான். அச்சொற்கேட்ட அந்தணனும் மன்னனைப் பாராட்டினான். இவ்விதம் அவர்களுக்குள்ளே ரசித்து மகிழ்வதையும் அப்பாடலின் சமத்காரம் புரியாமையால் அங்குள்ள அவையினர் ஒன்றும் தெரியாமல் வியந்தனர்.

அவ்வளவில் மன்னன், சபையோரைப் பார்த்து '' இப்போது அப்பாடலைத் 'திரும்பப்படி' என்றது மீண்டும் படிக்கச் சொல்லியன்று. கேளுங்கள். அப்பாடலைத் தலைகீழாகத் திரும்பப்படி' என்று சொன்னேன், அப்படிப் படித்தால் ''மன்ன! உலகில் மலைகள்

உளகாலம் வரையும் ஆள்வாயாக! லவனைப் போலச் சிறப்புடன் திகழ்க! சிறந்த மன்னன் ஆண்டால் அங்குப் புலவர்களைப் போற்றிப் புகழ்பாடுவர்" என்றும் பொருள் வடமொழியில் அமைந்துள்ளது" என்று கூறினான். அவையோரும் அப்பாடலைக் கீழிருந்து மேலாக வடமொழிப் பொருளும் அறிந்து வியந்து பாராட்டினர். ஆசு கவிதையாக இத்தகு அற்புதக் கவிதை பாடிய அந்தணன் திறன் அறிந்து அனைவரும் புகழ்ந்தனர், மன்னனும் ஆடை அணிகலன்களும், பல பரிசுகளும் அளித்தான்.

அப்போது அம்மன்னனின் மந்திரியான சத்வதாத்மன் மதுரலாலஸையை வணங்கி, இப்படிக் கூறினான். "அன்புடைய குழந்தாய்! யோகமுணர்ந்தவளே! நான் முன்பு என் பெயரும் குலம் முதலியவும் மறந்து பின்பு ஓரிடத்தில் இருக்க என்னைக் கொண்டு வந்து காசாரபுரத்தவர்கள் எனக்குச் 'சத்வதாத்மன்' எனும் பெயரிட்டார்கள். எனது வரலாறு அறிந்த பெரியவர்கள் எவரும் இல்லை. ஆதலின் எனது முன் வரலாறு கூறுவாயாக" என்று கேட்ப அப்பெண் குழந்தையும் கண்ணைக் கசக்கிக் கொண்டு இதழ் பிதுக்கி வில் போல வளைந்து இடுப்பை உயர்த்தியவாறு அழத்தொடங்கிற்று. அப்போது அது கண்டு 'இதற்குள் இந்த விபரீதமான செய்கைகள் ஏன்? இப்போது நான் கேட்டதைச் சொல்லம்மா' என்று மீண்டும் அவன் வணங்கினான்.

"திவ்யஞானம் மிக்க குழந்தையாக, முனிவர்களும் அறியாத கதைகளைச் சொல்லி மகிழ்வித்த உனக்குப் பசியும் அழுகையும் உண்டாமோ?" என்றும் "மாயையில் மூழ்கிய எம்மைக் கடைத்தேற்றி உன் திவ்விய போக மகிமையுடனே திகழ்வாயாக" என்றும் அச்சபையிலுள்ளோர் கூறத் தொடங்கினர்; "இன்னும் சிலர் இன்னும் ஏதேனும் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் ஐயப்பாடுகளை நீ அகற்றுவாய் என்றும் நம்பியிருக்கின்றோம்! அம்மா! இந்த மாயங்கள் எல்லாம் ஏன்?" என்று கூறினார்.

இவ்விதம் யார் எவ்விதம் வேண்டினும் திவ்யஞானம் இருப்பது சிறிதும் புலப்படுத்தாது உண்மையாகவே பசிக்கு அக்குழந்தை அழத்தொடங்கிற்று. அப்போது மன்னன் "அந்தச் சொற்சாதுரியமும், திவ்யஞானமும் நிலைத்திருத்தல் கூடுமோ? தெய்வ அருள் ஏதோ அப்போது இந்த மகிமையைச் செய்தது போலும். அப்போது இந்த மகிமையைக் குறித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமற் போனோமே! அடடா!" என்று நினைத்து இருந்தான்.

அதன்பின் அந்த மணிஸ்தம்பதனயன் (களாபூரணன்) ரூபானுபூதியையும் மதாசயனையும் அழைத்து "உங்கள் குழந்தை கதையெல்லாம் கேட்டீர்களல்லவா? உங்கள் பாக்கியத்திற்கு இணையெங்கும் இல்லை. இது முதல் நீங்கள் எனக்கு அத்தையும் மாமனும் ஆனீர்கள்! ஐயமில்லை. இனி நீங்கள் இங்கு ஊழியம் செய்வதை விடுத்து இக்குழந்தையை வீட்டுக்குக் கொண்டு போய் நன்கு பேணி வளர்ப்பீர்களாக" என்று கூறினான்.

அப்போது சத்வதாத்மன் இவ்வாறு கூறினான். "மன்ன! அவர்களது குழந்தையின் கழுத்தில் மணிஹாரம் சூடிய போதே அவர்கள் உனக்கு அத்தையும் மாமனும் ஆயினரென்று கருதினேன். அதற்கேற்ப இக்குழந்தையின் கதையும் அமைந்துள்ளது. இக்குழந்தையின் சிறப்புகளைக் கண்டால், எல்லா மன்னர்களின் மனைவியருடைய மகுட மணிகளைக் கொண்டு உண்டாக்கிய சிலம்புகளை இவள் பாதத்திற்கிடும் பாக்கியம் நேரும் என்பதில் ஐயமில்லை".

இவ்விதம் கூறக்கேட்ட மன்னன் புன்னகையுடன் அவர்களை "நீங்கள் குழந்தையை இல்லத்திற்குக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறி, விடை கொடுத்து அனுப்பி, பின்னே பொன்மணி முதலிய அணிகளையும் புதிதாக அனுப்பிவைத்தான்.

அந்த மதுரலாலஸையின் கதை எதுவும் அந்தப்புரத்துக்குச் செல்லாமல் தடுத்து "அபிநவகௌமுதி (களாபூரணன் மனைவி) ஏன் கேள்விப்பட வேண்டும்?" என்று மறைத்து வைத்தான். பின் அலகுவிரதனின் விருப்பப்படியே அன்னதானம் இடையறாது நிறைவேறும்படியாகப் பெருஞ்செல்வமும் ஊர்களும் மானியமாகக் கொடுத்து மகிழ்வித்து அவனுடைய மக்களோடும் அவன் மனைவியர் இருக்கும் இடத்திற்கு அனுப்பி வைத்தான். மன்னன் செய்த கௌரவத்தினால் ஆனந்தமுற்ற மதாசயனின் மனைவி (ரூபானுபூதி), வீட்டிற்குக் குழந்தையைக் கொண்டு போய் மிக்க வாஞ்சையுடன் வளர்த்தாள்.

அக்குழந்தையை அடிக்கடி எண்ணெய் தேய்த்து மஞ்சள்பூசி, குளிப்பாட்டி முலைதந்து, ஊஞ்சலில் ஆட்டிப் பேணத் தொடங்கினாள். நான்முகனின் சொற்படி இயல்பான கற்புடன் அச்சமயத்தில் தாய் பொற்றொட்டிலில் இட்டு விரைந்து கண் வளரச் செய்யத் தாலாட்டுப் பாடும்போது மன்னனின் (களாபூரணன்) பெருமைகளைப் பாடும்போது குலுங்கக் குலுங்கக் நகைத்தும், மற்றப் பாடல்களைப் பாடினால் அழுவதுமாக இருக்கக்கண்டு 'அடடா! எவ்வளவு பதிபக்தி' என்று அங்கிருந்தோர் நகையாடுவர். அம்மழலைச் செல்வம் விளையாட்டாக எழுந்து உட்காரும்போது தனியோரழகு தவழும். தரையில் மெல்லிய பூங்கைகளை ஊன்றி எழும் போது தனியோரழகு மிளிரும். மெல்ல மெல்லத் தளிர் நடையிடும்போது கொள்ளையின்பம் குலவும். அமுதுகும் மழலையந்தீஞ்சொல் தேன்மொழிகளைக் கூறும்போது மனமயக்கத்தை அளிக்கும். புதிய இன்பம் பூக்கும்.

அக்குழந்தை புத்திளம் பிறைச்சந்திரன் வளர்தல் போலவும், இனிய இளவேனிற் காலத்து இளங்கொடி போலவும், காண்போர் கண்கட்கு விருந்தளித்து, முருந்துறழ் பல்லும் முத்தமிழ்ச் சொல்லும் மருந்தன வந்த மதியுமாகத் திகழ்ந்தாள். எல்லா உறவினர்களும் சீராட்டிப்

பாராட்டிச் செல்லமாக வைத்துக்கொள்ளத் தாயன்பினாலே முற்றத்துற்ற முத்துப்போலப் புதுப்புதுச் சிங்காரமுடன் மிளிர்ந்தாள். அப்போது நிமித்திகர்கள் அவளது கையைப் பார்த்து 'இவள் குறைவிலா நிறை செல்வமுற்று அரசபோகங்களை அடைந்து ஆனந்தமுறுவாள்' என்றும் காலிலுள்ள பதுமரேகைகளை ஆய்ந்து 'மகாராணிகளுடைய வணக்கத்தைப் பெறும் மங்கை இவள்' என்றும் ஆருடம் கூறினார்கள்.

கலகலவென இசைக்கும் சிலம்பும், மேகலையும் வளையும், குண்டலமும், சிந்தாமணியும் பொலியச் சூடிய அக்குழந்தை சில நாள்கள் தாய் தந்தையரைத் தன் சிறு குறும்புகளால் மகிழ்வித்தாள். சுற்றிலுமுள்ள பெண்களைத் தினந்தோறும் விருந்து விருந்து என்று தன்னை விருப்புடன் எடுத்துக்கொண்டு அழைக்கவும் சென்று மேல் வீழ்ந்தும் குதித்தும் ஆடியும் பாடியும் கைகளைப் பிடித்து ஆடச்சொல்ல நாட்டியமாடியும் அழகொழுகப் பேரின்பம் பயந்தாள்.

'பிறக்கும்போதே இதெல்லாம் எங்கே கற்றாய்?' என்று பெண்கள் கேலிசெய்து இன்னம் கிள்ளி வாஞ்சையுடன் வைத்துக்கொள்ள அச்செல்வச் சிறுமி வளர்ந்தாள். நாள்கள் செல்லவும், பொம்மைக்கல்யாணம், சிற்றில் இழைத்தல், கழங்காடல், கண்பொத்தியாடல், தாயமாடல் பல்லாங்குழி, தூண் விளையாட்டு முதலிய சிறுமியர்க்குரிய விளையாட்டுகளில் பொழுதைப் போக்கினாள்.

அச்சின்னஞ்சிறுமி கொஞ்சம் கொஞ்சமாக விளையாட்டுகளை மறந்து, ஆண்கள் எதிரில் அடிக்கடி இருக்க நாணினாள். தந்தையிடமும் அடிக்கடி வரவில்லை. தனது உருவ அழகைப் பேணத் தொடங்கினாள். மேலாடையை எப்போதும் நழுவ விடாது பாதுகாத்தாள். கடைக்கண் பார்வை நோக்கும் திறன் கற்றாள், பேசும்போது புருவங்கள் கூட்டும் விதம் அறிந்தாள். பேரிளம் பெண்டிரின்

காதற் கதைகள் எழுந்தால் நாணமுற்று எழுந்தோடத் தொடங்கினாள். பேதை நிலை கடந்து பெதும்பை நிலையும் கடந்து குமரி நிலையை அடைந்தாள். இளம்பருவ வளர்ச்சி நிலைகள் நிரல்பட வந்தமைய அவள் பருவமடைந்தாள். அக்கன்னிகையின் இடை, முலைகளும், தொடைகளும் பெருத்து வளர்ச்சியுறலால் இருபக்கமும் நெருக்கப்பட்டு மெலிந்த பேதைப் பருவமோ, எனும்படியாக மெலிவுற்றது. சுரிகுழலும் முலையிணையும், கடிதடமும் எழிலுடன் வளர்ச்சியுற்று மன்மதனின் மூவுலக அரசாட்சியும் ஏற்றவளோ எனும்படி அச்செல்வி திகழ்ந்தாள்.

பருத்த முலைகள் எனும் செய்குன்றமும், ஆழமான கொப்பூழ் எனும் நல்வாவியும், அமைந்தும், அழகிய ரோமக்கொடி (வயிற்றிலுள்ள மயிரொழுங்கு) காதல் வெள்ள ஒழுக்கெனவும், மென்விரல்கள் தளிர்கள் ஆகவும், மென்மையான கரங்கள் மென்கொடிகள் போலவும், எழிலார்ந்த தொடைகள் வாழைத்தூண் எனவும், இதழ்கள் கோவைப்பழம் போன்றும், மலர்கள் ஒத்த புன்முறுவலுடனும், தாழிருங் கூந்தல் வண்டின் ஈட்டம் போன்றும், இன்சொற்கள் கிளி குயில்களின் இன்னிசை போன்றும் திகழ அந்நங்கை மன்மதன் உலவி மகிழும் பூங்கா எனும்படியாகப் புத்தெழிலுடன் திகழ்ந்தாள்.

அப்பூங்கொடியாளும், அவ்வளவில் இயலிசை நாடகம் முதலிய பலகலைகளும் கற்று, முற்பிறவி வாசனையால் கவிதை பாடும் திறனும் மிக எளிதில் கைவரப் பெற்றாள். களாபூரணனும் மதுரலாலசையை முன்பு அவள் தாய் தந்தையரிடம் வளர்க்கத் தந்தபின், அபிநவகௌமுதியின் அன்பின் சிறப்பிலும், அரசாங்க அலுவல்களில் மூழ்கியும் மறந்து அதன்பிறகு எப்போதும் அவளைக்குறித்து அக்கரை காட்டவில்லை. மதாசயனும் மன்னனின் மனநிலை தேராமல் பேசாமல் இருந்தான். அவ்வளவில் மதுரலாலசையும் அவ்விதமாக இளமையுற்றுப் பருவ உணர்ச்சிகள் தலை

காட்டக் களாபூரணனைக் கைப்பிடிக்க விழைந்தவளாய் இருந்தனள். அன்புடைய தோழிகளுடன் பேச்சுவாக்கில் மன்னனது குண நலன்களைக் கேட்டுக் கேட்டுக் கேட்டவற்றைச் சிறுபோதும் மறவாது இடையறாது சிந்தித்தும் சிந்தனையிற் கண்டவற்றைக் கவிதை வடிவிற் சித்திரித்தும், மன்னன் மேலுள்ள தனது காதலை முயன்று வளர்த்தாள். அவ்வளவில் காதலனைக் கண்ணெதிரே கண்டு, ஆரத் தழுவி, இதழமுதுண்டு இன்புற மனத்துக்குள் வேண்டி நின்றாள்.

அவளது மனத்தில், தளிர்விட்டு வளர்ந்த ஆசையென்னும் பூங்கொடி படர்ந்து பின் பூத்துக் குலுங்கியதோ எனும்படியாக அவள் மேனியில் பசலை படர்ந்தது. அவள், ஒருத்தியை அழைக்கச்சென்று வேறொருத்தியை அழைப்பாள். தன் மேனியில் ஓரணியை அணியச்சென்று வேறொன்றைக் கழற்றி நிற்பாள். ஓரிடம் செல்ல நினைத்து மற்றோரிடம் சென்று நிற்பாள். இவ்விதம் மன்னன்மேற் காதல் நோய் கூர்ந்து தன்வயமிழந்து சிந்தை தடுமாறினாள். எதைக் கண்டாலும் காதலனின் உருவமே முன்வந்து நிற்க அது முதலில் தோன்றவில்லை. எதைக் கேட்டாலும் காதலனின் இன்சொற்கள் காதிற்படாது. மற்றது முதலில் படுவதில்லை. எது உடலிற் பட்டாலும் காதலனின் பரிசம் தோற்றுமன்றி அது முதலில் தோன்றுவதில்லை. எதைச் சுவைத்தாலும் காதலனின் செவ்விதழ்கள் தோற்றாமல் அது முதலில் தோன்றுவதில்லை. நங்கை வர வரக் காதல்நோய் கண்டு இரவும் பகலும் படர் மெலிந்திரங்கியும் புலம்பியும், சொல் தடுமாறியும் இளைத்தல் கண்டு தோழிகள் அச்சமுற்றனர். செந்தாமரைக் கண்ணாள் எனும்படி பகலிலும் குமுதவிழியாள் எனும்படி இரவிலும் மன்னன்பாற் காதலினால் துயிலொழிந்து துயருற்றாள்.

மதிநிலவின் தேய்பிறைபோல அவள் உடல் மெலிவெய்தி வளர்பிறை போலப் பசலையால் வெளுத்து

ஒளிர்ந்தாள். வீணையைத் தொடுவது அபூர்வமாயிற்று. தோழிகளுடன் அன்புடன் உரையாடுதல் ஒழிந்தாள். களியாட்டங்கள் காணரிது, மான்விழியாள் மிகுந்த காதல் நோயால் மயங்கினாள். தினந்தோறும் இவ்விதம் மேன்மேலும் வளரும் விரகத்தீயினால் சுடப்பட்ட அம்மங்கை படும் பாட்டைக்கண்டு அவளது தோழிகள் மனங் கலங்கினார்கள். 'நெடுநாளாக இக் கன்னியின் நடவடிக்கைகளைப் பார்த்தால் வேறொரு விதமாகத் தோன்றுகிறது. நீங்கள் நன்கு உய்த்தறியுங் கள். கொம்பனாள் மிகவும் மெலிகின்றாள்,! முகத்தில் பசப்பூர்ந்து பருவரலுற்றாள். மனத்துள்ள கவலையோ மும்முரமாக வளர்கிறது. இவையெல்லாம் காதல்நோயின் அறிகுறிகளாகத் தோற்றுகின்றன. நாம் சில சமயம் எல்லாக் குணங்களும் நிறையப்பெற்ற ஏந்தலாகிய களாபூரணனைப் பற்றிப் புகழ்வதை விடுத்தமையால் கொடுமைக்காரனாகிய காமன், இப்படிப்பட்ட இளமங்கை யரை ஏதாவது சாக்கிட்டுத் துன்புறுத்துவான். ஆதலின் இவளையும் வருத்துகின்றான். ஆகையால் இந்நங்கை மன்மதனின் வலைப்பட்டு மிகவும் வருந்துவதுண்மை. இவள் சிந்தனையை மாற்றப் பூந்தோட்டத்திற்கு உலவ அழைத்துச் செல்லவேண்டும்' என்று நினைத்து அவளது தோழிகள் அவளது மனத்தில் உற்சாகமூட்டி மகரந்தம் சிந்தும் பூந்தேனில் துணைபுணரும் தேனீக் கூட்டங்களை யுடைய நந்தன வனத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

அப்போது அப்பூங்கா மென்காற்றும் நுழைய இயலாத படி நெருங்கித் தழைத்துக் கண்கவரும் பச்சைப் பட்டுப் போர்வை போன்று தாழை மடற்செறிந்துளதாய் உயர்ந்து காணும் கூடாரம் போன்ற இளந்தளிர் நிறைந்த மாமரங் களையுடையதாயும்; மதுவுண்டு களித்த மதத்துடன் திரி தரும் மதுகரங்கள் இரும்புச் சங்கிலியாக, செறிந்துள்ள செந்தளிரீட்டம் சிந்தூரப் பொடி போல் சிந்திய பூழ்தியாக, மேலே பூத்த மலர்களும் தளிர்களும் இலைகளும் பல் வண்ணப் பாங்குடன் திகழ்ந்து ஒளிபரப்ப, ஓயாத பூந்தேன்

தென்றல் திரிதர அவ்வப்போது உண்டாகிய மகரந்தத் தூள் சிந்துவது விளையாட்டாகப் புழுதியைச் சிந்துவது போலத் திகழப் புன்னை மரம் யானையைப் போல வேடங் கொண்டதோ எனும் படியாகவும், செந்தளிர்கள் நந்திய பூங்கொடி விதானம் மரகதமும் பவளமும் போல ஒளிவீசிச் சரிகை வேலைப்பாடுடைய குதிரைச் சேணம் போலவும், இருபக்கமும் பூத்துக் குலுங்கும் பூங்கொத்துக்கள் வெண் சாமரையின் அழகு கூட்ட; மேலுள்ள தளிர்கள் தம்பலப் பூச்சி (இந்திர கோபம்)யை ஒத்த பட்டுமெத்தை (வெல்வட்) போலத் திகழக் குருக்கத்திக் கொடிப் புதர்கள் குதிரைகள் போல எழில் பெறவும்; மேற்பரப்பில் நெருக்கமாகப் படர்ந்துள்ள வெற்றிலைக் கொடிகள் தலைப்பாகையாக வும், அதனோடு தோன்றும் சிறிதலர்ந்த தளிர் மென் தாழை மடல்கள் தலைப்பாகையின் சுங்குகளாகவும் திகழ, இளங் கமுகு மரங்கள் வீரர்களை (காலாட்படை)ப் போல விளங் கவும், பல்வேறு படைமாந்தரின் பேரிரைச்சல் போலக் கிளிகளும், பூனைகளும், குயில்களும் கூவ, விரகமுற்றவர்கள் மேல் படையெடுத்து வந்த மன்மதனின் பாசறை (பாடிவீடு) போல அந்த நந்தவனம் திகழ்ந்தது. (நந்தவனம் மன்மதன் பாசறை, புன்னை மரம் யானை, குருக்கத்திப்புதர் குதிரை, கமுகு காலாள் ஆக முப்படைப் பிரிவும் இங்கு உவமிக்கப் பட்டது.)

அங்கே மதிமுக மங்கையர் இயல்பான மென்னடையை மீறும் உற்சாகத்திற்குத் தடையாக இணைமுலைக்குவட்டின் பாரமும், கடிதடமும், மிகவும் அலைக்கழிப்ப, ஒருவரை ஒருவர் கடந்தும், தனித்து நடந்தும், கூடாதேகுவது கண்டு கேலி செய்தும், வைதும், புதுமலர்கள் கொய்தும், மணமிகு மாதவியிடம் சேர்ந்தும், வம்பலர்கள் மிடைந்தும், மல்லிகைகள் விரும்பியும், மாதவிப்பூக்கட்குத் திரும்பியும், குருக்கத்தியைக் கொள்ளையிட்டும், சந்தனத்திற்குப் போரிட்டும், மகிழம்பூக்களைத் தொட்டும், சிந்தூரத்திடம் சென்றும், மந்தாரத்திடம் நின்றும், முல்லையிடம் முறுவல் முகிழ்த்தும் மருதம் கண்டு மகிழ்ந்தும், நெய்தல்

மலருக்கு நெகிழ்ந்தும், குறிஞ்சி மலர்கள் புகழ்ந்தும், பாலையை இகழ்ந்தும், தேமா மரநிழலிற் சாய்ந்தும், குருக்கத்திப் பந்தலில் ஓய்ந்தும், புதரில் நுழைந்தும், பூந்தேன் மாந்தியும், புதரில்லங்களில் ஒளிந்தும், கண்டு நகைத்தும், மணமலர்கள் வீசியும், கதைகள் பேசியும் அங்கிங்கும் ஓடியும், கொடியூசலில் ஆடியும், மன்மத கீதங்கள் பாடியும், மகரந்தம் சிந்தியும், எட்டாத பூங்கொம்பைப் பிடிக்கத் தாவி முந்தியும், சிறு மரங்களில் ஏறியும், மேலாடையை உதறியும், செந்தளிர்களைத் தீயென அஞ்சி ஓடும் தேனீக்களைக் கண்டு பதறியும், குயில் கூவுதல் கேட்டும், பூவைகள் பாட்டும் வேட்டும், கிளிகட்கு மொழிகள் கற்பித்தும், மென்னடையன்னங்கட்குத் தன்னடை கற்பித்தும், பூப்பந்தாட்டம் ஆடியும், ஒருவரை ஒருவர் பிடித்திழுத்தும், குதித்தும் மிகுந்த களிப்புடன் ஆடிக் களைத்து, அதனால் குறுவியர்வரும்ப உடல் நனைந்து மெய்பூசிய சந்தனம், கற்பூரம், குங்குமம் முதலியவற்றின் சேறு மணம் வீசி நாற்றிசையும் பரிமளிப்ப, இயல்பாகவே மெலிவுற்ற அவர்கள் விளையாட்டாலும் களைப்பும் ஆயாசமும் உற்றுத் தள்ளாடி நடுங்கும் இடையிலுள்ள சேலை முடிச்சு அவிழவும் அதனை இறுக்கிச் சொருகும்போது கொப்பூழ் அருகில் சென்ற அவர்களது விரலிலுள்ள பவளம் பதித்த மோதிரத்தின் செவ்வொளி, அங்கை தடுப்பப் புறஞ்செல இயலாது கொப்பூழின் உட்புகுந்து பாதகமலத்தின் வழியே வெளிப் போந்ததோ எனும்படியாக அவர்களது மெல்லிய அடிகள் அதிகம் நடந்ததால் மிகச் சிவந்து காணப்பட்டன.

இப்படியும் அப்படியுமாக முந்தானை விசிறிக்கொள்வதாலே கைவளைகள் ஒலி செய்ய அது கேட்டுத் திடுக்கிட்டு அஞ்சிய சக்கரவாகப் புள் (அன்றில்)களோ எனும்படி இணைமுலைகள் நெட்டுயிர்ப்பினால் அசைந்தாடி எழில் காட்டின. அவ்வன்றில்களின் இறக்கைகளின் அசைவுகளை ஒத்து ஒளிமிக்க அல்லைகளின் எழில் முழங்கை மேற்பகுதியில் ஒளி வீசியும், களைப்பும் மெலிவுமுற்ற ஒருவித ஒய்யாரமான பார்வைக்கு ஆற்றாது மெலிவுற்றது போன்று

வாடிய செவிகளிற் செருகிய கருங்குவளை மலரிதழ்கள், கன்னத்திலுள்ள வியர்வையில் தன் பிரதிபிம்பம் காணப் படுவதால் சகோதர வாஞ்சையுடன் ஆரத்தழுவிக் கொண்டதோ எனும்படியாக, கன்னத்துடன் ஒட்டிக் கொண்டது. நுதலில் பூசிய மணமிகு கஸ்தூரிச் சேற்றில் வீழ்ந்து அசைய முடியாத கருங்குழற் கற்றைகளைத் தமது பிள்ளைகள் என்று நினைத்து வெளிக்கொணரப் பிடித்திழுக் கின்றதோ எனும்படியாக உயிர்ப்புக்காற்றின் மணத்தை வேட்டு வந்த வண்டுகள் மொய்க்க, அந்த வண்டுகளை விரட்ட அதட்டும் மெல்லிய சொற்களைக் கேட்டு, தங்கள் குஞ்சுகளின் மழலையென அருகணைந்த கிளிகளைச் செங்கையால் விரட்டி, செங்கைகளைச் செந்தளிர்கள் எனக் கருதிக் கோத வந்த குயில்களை விரட்டியும், களைத்து நின்றும், வசந்த காலத் திருவினால் அலங்கரிக்கப்பட்ட வானர மகளிர் போல, பூங்கொடி போன்ற மேனி அழகுடன் நடக்கும்போது சிந்திய பூக்களுடன் கூடிய கூந்தலை அவிழ்த்தலும் முடிதலும் கருவமுற்ற கருவண்டுக் கூட்டத்தைச் சிறையிட்டும் பின் அருள் கூர்ந்து விடுவிப்பதும் போல அமைய, அணிகள் கலைந்தும் மகரந்தத் தூள் படிந்த வகுடும், வாடிக் களைத்த முகமும் நடுங்கும் இளங் குரலுமாக அபூர்வ அழகுடன் அவர்கள் இருந்தனர்.

பின்னர், அவர்கள் ஓர் அழகிய பொய்கையைக் கண்ட னர். சிற்றலைகள் தாலாட்ட அசைந்தாடும் கமலங்கள் கைகளாக அன்னங்களும் அன்றில்களும் கூவி ஒளி செய்வது காம சாஸ்திர விவாதங்கள் நடைபெறுகின்றனவோ எனும் படியாக இருந்தது. அப்பொய்கையினை அடைந்து செந் தாமரை எனும் திருமகளை வென்ற முகத்தினராக அன்னங்களும் அன்றில்களும் கூவும் குரலைத் தமது சிலம்பு முதலிய அணிகளினால் எழும் ஒலி அவிப்ப, அம்மடந்தையர் நீர் விளையாடல் புரியும் வேட்கை மிக்கு, சேலைக ளைத் தொடைகளில் உயர்த்திப் பற்றியவாறு படிகளில் இறங்கினர்.

பொய்கை எனும் திருமகள்மேல் தாமரைப் பாதங்கள் நக ஒளியால் கற்பூர வசந்த (ஹோலிப்பண்டிகை) நீர் விளையாடல் புரிந்தது போலத் திகழ்ந்தது.

மென்சிறு காற்றினால் விலகிய முந்தானையை இரு பக்கங்களிலும் இறுக்கி வைத்துக்கொண்டும், அலைகளால் இங்குமங்கும் விலகியோடும் சேலையைத் தொடைகளால் நெருக்கி வைத்துக்கொண்டும், முதலில் இறங்கிய மகளிர்கள் தெளிக்கும் தண்ணீரைக் கைகளால் தடுத்து ஒதுங்கிக் கொண்டும், இடையிடையே எகிறிக் குதித்துவிழும் மீன்களைக் கண்டு திடுக்கிட்டு விலகிக்கொண்டும், குவளை மலர்களின் மறைவிலிருந்து திடீரெனப் பறக்கும் பறவைகளின் ஒலி கேட்டுப் பதறி மருண்ட பார்வையோடு அலமரலுற்றும், தாமரைப் பொய்கையை அடைந்த தளிர்புரை மகளிர்களின் செயல்கள் வியப்பும் புதுமையும் பயந்தன.

அம்மங்கையர் பொய்கை புக்கபோது அதனால் அலைகள் எழவும் அவ்வலைகள் அலைப்பத் தாமரை மலர்களில் மொய்த்த தேன் விழைந்த வண்டுகளின் கூட்டம் மேலே பறந்தும் மொய்த்தும். ஜலதேவதைகள் சாதுரியமாகக் கழங்காடுகின்றனரோ எனும்படியாக இருந்தது. முகங்களும் கரதலமும், முலைகளும், கூந்தலும், பார்வையும், தோற்கடித்ததாலே, மலர்ந்த தாமரைகளும், செந்தாமரைகளும், அன்றில்களும், பாசியும், வண்டுகளும், மீன் கூட்டமும் கலக்கமுற்றுத் தடுமாறின. மங்கையர்களும் மிக விருப்புடனும் களிப்புடனும் புனல் விளையாட்டில் திளைத்தனர்.

நீர் தெளித்துக் கூவியும், விளையாட வேண்டாம் என்று மறுத்தும், 'ஓட இயலாது' என்று கெஞ்சியும் 'குறும்புக்காரி' என்று கொஞ்சியும், கமல மலர்களை எடுத்து வீசியடித்தும், விரட்டிப் பிடித்தும், வைது முகத்திலடித்தும், 'தெம்புகள் போதும் இனி' என்று கோபமுறுவது போல் நடித்தும், வம்புச் சண்டைகள் வளர்த்தும், மெய் விளர்த்தும், குளித்துக் களித்த குமரிப்பெண்கள்

கும்மாளமடித்தனர். குபீர், குபீரென ஒலி எழலால் நீர்ப் பறவைகள் அஞ்சி ஓடின. அலைக்கப்பட்ட மென்முலைக் கும்பங்களிலிருந்து நழுவிய குங்கும சந்தனச் சேறும், கூந்தலிலிருந்து வீழ்ந்த மலர்களும், கூடி அப்பொய்கை பல நிறங்களுடன் கூடிப் புதுமணத்துடன் புகழத்தக்கதாக விளங்கிற்று. இவ்விதம் புனல்விளையாடிய பூவையர்கள் மேனியுடன் நனைந்து வேறுபடுத்த இயலாதவாறு ஒன்றிய சேலையை வயிற்று மடிப்புகளினால் தெரிந்துகொள்ளப் பட்டும், நீர்நனைந்த கூந்தல் குதிங்காலிற்படுமாறு தாழ்ந்து தொங்க இளம் பிடிநடையுடைய அந்நங்கையர்கள் பொய்கையினின்றும் வெளிப்போந்து, புத்தாடை புனைந்து, சந்தன முதலிய பூசி, அணிகள் பூண்டு எழிலுற்ற னர். மதுரலாலசையும் காதலின்மேற் சிந்தனை ஓட, தோழிகள் வற்புறுத்தலுக்கிணங்கி, அவர்களுடன் களித் தும் இங்கங்கும் உலவி ஒருவாறு மகிழ்ந்திருந்தாள்.

அவ்வமயம், புகழ்தற்கொத்த குணநலன்களுடைய களாபூரணனும் காடை வேட்டையாடும் வேட்கையால் அங்கே வந்திருந்து நடமாடிக் கொண்டிருந்தான். ஒரு பறவையைப் பிடிக்கச் சென்ற காடையை அழைத்துக் கொண்டு விரைந்து சென்ற அவன் மதுரலாலசையும் தோழிகளும் இருக்கும் இடத்தை அடைந்தான். அப் போது அம்மங்கை தோழியின் தோளில் பாதிமுகம் தோன்ற நிறுத்தி, கன்னங்கள் எனும் கண்ணாடியில் புளகமுறக் காதலனை ஆர்வம் மீதூரக் கண்டாள். அவனும் அவளைக் கண்டான். அவ்விருவர்தம் பார்வை யின் இடையே வெட்கம் மெல்லக் கவிந்தது. தாமரைக் கண்ணாள் பார்க்கும்போது அவன் பார்வையும்—அவன் பார்க்கும்போது இவளது பார்வையும் மிகுந்த நாணத் தால் பின் வாங்கியும், ஒருவரை ஒருவர் காண முன் சென் றும், ரதியும் மன்மதனும் ஆடும் ஊஞ்சல் மாலையோ எனும்படி எழிலுற்றது.

கேள்வியால் முன்பே காதல் மீதூர்ந்த அக்கமலக் கண்ணாள் தன் காதலனைக் கண்ணாரக் கண்டு மிக்க காம நோயுற்று அப்போதே காதலனைத் தழுவிக்கொள்ள இயலாமைக்காக மனத்துள் கவன்றாள்! அவனும் மதுரலாலசையின்மேல் மயலுற்று மீண்டும் மீண்டும் ஏதாவதொரு சாக்கிட்டு அவளது அழகைப் பருகித் திளைத்து ஆனந்தமுற்றான். முடிவில் ஒருவாறு திரும்பிச் சென்றான். அவ்வளவில் அந்நங்கையும் மனத்துள் மணாளனை நினைந்து அவனது மெல்லடிகளைக் கையால் பிடித்துவிட விரும்புவாள். திருவுறையும் மார்பினைத் தன் முலைகளோடு சேர்க்க விழைவாள். மெல்லிய கன்னங்களோடு தனது கன்னங்களும் கலந்துறவாட வேண்டுவாள். காமனின் மலர்க்கணைகட்கு ஆற்றாது நிலைகுலைந்தாள்.

அப்போது அம்மங்கையின் உருவ அமைப்பைத் தோழிகள் எல்லோரும் கண்டு, " அடடா! வீணாகப் பூக்கொய்தும் புன்லாடியும் பொழுதைப் போக்கினோமன்றி இந் நங்கைக்கு அவைகள் சிறிதும் மனமகிழ்ச்சியைத் தரவில்லை. இவள் உள்ளத்தைச் சிறிது மாற்றலாம் என்று நினைத்த நமது மடமையை என்னென்பது? ஆடினோமன்றி இவள் மனநிலையைப் புரிந்துகொண்டோமில்லை; இவளது கவலை சிறிதும் தீரவில்லை. அதிகமாகத்தான் செய்கிறது. அதுமட்டுமின்றி வேட்டையாடும் வேடங்களணிந்து வேந்தன் வந்ததை இதற்குமுன் இந்நங்கை ஆர்வம் மீதூர அடங்காத் வேட்கையுடன் உடல் விம்மக் கண்டதுபோல் இருந்தது. அதுமுதற்கொண்டே இளவேனிலில் களித்த குயிலோசையும், பூவை, கிளிகளின் ஒலியும், தேனீக்களின் ரீங்காரமும், மெல்லிளம் பூந்தென்றலும், மணமலர்களின் பரிமளமும் எழிலும், செந்தளிர்க் கவினும் இளம் புதர்களின் அழகும், மன்மதனின் பக்கம் சேர்ந்துகொண்டு இவளது ஆற்றாமையை மிகுவிக்கின்றது. நாம் இத்தனை பேரிருந்தும் இதை உணராமற் போனோமே! மங்கையின் காதல் தாபத்தைத் தீர்க்க மன்மதனின் பட்டத்து

ராஜதானி போன்ற பூங்காவிற்கு அழைத்து வரலாமா? ஒளியப்போன திருடன் தலையாரி வீட்டில் நுழைந்தது போலன்றோ இருக்கிறது'' என்று கூறிக் கொண்டிருந்தனர்.

மதுரலாலசை மிகுந்த தாபமெய்தி உஸ்உஸ் என்று நெட்டுயிர்ப்புடன் கண்ணிமைகள் சோர மிகுந்த மயக்கத்தை உற்றாள். தோழிகள் பரபரப்புடன் எழுந்து ஆடை தடுமாற இடை நடுங்கக் களைப்பினால் வியர்வைத் துளிகள் அரும்ப, ஓடோடியும் சென்று, மலர்ந்த தாமரையின் மணம் பரப்பும் பொய்கைக் கரையில், பன்னீர்க் கால்வாயில் பனிபோலக் குளிர்ந்த பச்சைக் கற்பூர வாழை மரங்கள் நட்டுப் பூப்பந்தலிட்டு, வெட்டிவேர் நனைத்து வேய்ந்து, சந்தனச் சேற்றை அப்பி, கருப்பூர மேடை அமைத்து, தண்ணிய செங்கழுநீர் இதழ்களைப் படுக்கையாக்கி, தேன் துளிர்க்கும் பிச்சிப் பூக்களால் தலையணையமைத்து அதில் அந்நங்கையை வைத்து, உலகிலுள்ள சைத்தியோபசாரங்களினால் (குளிர்விக்கும் கருவிகளால் வீசுதல் முதலியன செய்து) தணிவித்தும், அதனாலும் முடிவு காணாது அலுத்தார்கள்.

அம்மலரன்ன மங்கையர்கள் மீண்டும் முயன்று பல தடவை கற்பூரத்தைக் காதுகளில் ஊதியும், பூவிசிறிகளைப் பன்னீரில் நனைத்து அடிக்கடி தோய்த்து வீசியும், முலைகளிலும், மெல்லடிகளிலும், கைகளிலும் சந்தனக் குழம்பைத் தேய்த்தும் குணம் காணாது கலங்கி நின்றனர். அவ்வளவில் மலர்களும் தளிர்களும் சருகுகளாயின. சந்தனப் பூச்சும் பொடிப் பொடியாக உதிர்ந்து போயின. அவளது வெம்மையைக் கண்டு அனைவரும் அயிர்த்தனர். திறமை மிக்க ஒரு தோழி, மதுரலாலசையை அடைந்து, குளிர்ந்த மேலாடையைப் போர்த்து, கண்ணிணைகளைப் பன்னீரால் துடைத்து, சிதறிய கூந்தலைத் திருத்திவிட்டு இவ்வாறு கூறலானாள்; ''உடல் எங்குத் தொடினும் கை கொப்பளிக்குமாறு வெம்மை கனல்கின்றது. குளிர்விக்கும்

செயல்கள் குணமளிக்கவில்லை. உன் மன வேட்கையை அடக்குவதால் யாது பயன்? பெண்ணே! வெட்கப்பட்டு எவ்வளவு காலம் எண்ணத்னத வெளிப்படுத்தாது மறைத்து வைத்து உள்ளுக்குள்ளே குமையமுடியும்? அது மட்டுமன்றி உனக்கு நான் அன்னியமானவளா? என்னிடம் ஒளிவு மறைவுகள் ஏனோ? உயிர்க்குயிரான உயிர்த் தோழியிடம் சொல்ல இயலாதவைகளும் உண்டோ? மான் போல மருண்ட கண்ணினாய்! உயிர்த் தோழியும் உயிரும் ஒன்றேயன்றோ!"

இவ்வளவு வற்புறுத்திக் கேட்ப, தன் உள்ள வேட்கையை உரைப்ப மனம் துணிந்தும், வெட்கத்தினால் தவிர்த்தும், அந்நங்கை கொஞ்ச நேரம் மன்மறுகினாள். அத்தோழியும் அதோடு விடாது மேன்மேலும் தொடர்ந்து வற்புறுத்தித் தன்மீது ஆணைகள் போட்டுப் போட்டு உரைக்குமாறு தூண்டி வேண்டினாள். இவ்விதம் வற்புறுத்திக் கேட்கவே மதுரலாலஸை மனம் துணிந்து. மனத்னதத் திடப்படுத்திக்கொண்டு தன் தோழியிடம் கூறலானாள்.

"சொல்ல என்ன இருக்கிறது? அப்புருஷோத்தமன் என்னை அவ்விதம் சுகக் கடலில் மிதக்கச் செய்து, "உன்னை என்றுங் கைவிடேன்" என்று தேறுதல் கூறிச் சென்றான். அது மட்டுமன்றி அம்மன்னன் இதற்கு முன்பொரு நாள் நம் அருகில் வந்து தனது காளையை அழைத்தவாறு கம்பீரமாக நின்றது முதற்கொண்டு எனது பொறுமை இழந்து ஆற்றாமையின்பாற்பட்டேன். அந்நாள் தொட்டு நினைவில் நீங்காது நிற்கும் காதலன்மேற் காதலுற்று மனமயக்கமுறுகின்றேன்! தோழீ! இனிக் குளிர்ச்சி கிளிர்ச்சி என்று ஏதாவது செய்வது என் மனதிற்கு உகக்காது. அவனது அன்பைத் தவிர வேறொரு மருந்துமில்லை. அடடா! நீங்கள் அறியாமையால் சைத்யோபசாரங்கள் என்றுகூறி ஏன் இங்கு இருக்கிறீர்கள்? வெண்ணிலவு காயும்போது என் மேனி மிகவும் எரியுமன்றோ? தீப்பந்தத்தைப்

பிடித்துக் கொண்டு கோடை காலச் சூரியனைப் போல அதோ! சந்திரனும் வருகின்றான். அமுதகிரணன் என்று பெயர் வேறு கேடா? 'பசுத்தோல் போர்த்த புலி' என்பது இப்படிப்பட்டவர்களைத் தான் அல்லவா? 'கிளிப்பிள்ளை பாடம்' என்று படித்த மூடர்களைச் சொல்லுவது வழக்கம். அத்தகைய கிளிகள் அறிவின்றி அருளின்றி ஏதேதோ புலம்புமன்றி என் மனநிலை உணருமா? குயில்களும் வஞ்சகமாக முட்டையிட்டுத் தன் குஞ்சுகளையே வளர்க்கத் தெரியாதவை. அவை என் பேரில் அருள் கூர்ந்து எனக்குப் பிடிக்கவில்லை என்பதால் கூவாமல் இருக்குமா? ஆகையால் சந்திரனையோ, இந்திரனையோ, குயிலோ கிளியோ என்னைக் காப்பாற்றுமென வேண்டாதீர்கள். என் வாழ்க்கை இந்தப் பகைவர்கட்கு உங்களைப்போல இன்பமளிக்குமா? வளர்த்தவர்கட்கே ஆசையிருக்குமன்றிப் பிறருக்கு என்ன அக்கறை? கடுவன் பூனைக்குக் கிளிப் பிள்ளைமேல் கருணை பிறக்குமா? பலபடப் பேசுவதேன்? விரைவாகக் காதலனின் புணர்ச்சி கைகூடச் செய்ய இயலுமானால் அந்த நம்பிக்கையினால் என் உயிரைச் சிறிது நிறுத்தி வைக்க முடியும்! மற்றவை எல்லாம் பொருளற்ற வீண் செயல்கள் தான்!" என்று கூறினாள்.

அது கேட்ட தோழி 'தாமரை போன்ற நெடுங் கண்ணாய்! உன் காதலனின் புணர்ச்சியை மிகுவிரைவில் சேர்த்து வைப்பேன். அதற்கு நான் ஆயிற்று! கடவுள் அருளால் தடையின்றி எல்லாம் இனிது நிறைவேறும். மனமயங்காமல் நம்பிக்கையுடன் இருப்பாயாக' என்று கூறினாள். அத்தேறுதல் மொழிகள் அமுதம்போல இதய தாபத்தை ஆற்ற மதுரலாலசை ஆறுதலுற்றுத் தன் தோழிகளுடன் தானும் இல்லம் சென்றனள்."

ஏழாவது அத்தியாயம்

செவிகட்கினியதும் மனத்திற்கிசைந்ததுமான புகழை யுடைய களாபூரணன் அவ்விதம் பூங்காவில் கண்டது முதலாக அமுதொழுகும் நிறைமதி போன்ற முகத்தினாளை மனத்தில் நிறுத்தி அவளது குணநலன்கள் எனும் நாணில் தொடுத்து எறிந்த மலரம்புகட்கு உடைந்த மன உறுதி உடையவனாகி, மயலுற்று, அவளையே நினைந்து, தன் எண்ணம் அந்த இளம் பிடியை விடாது பிடித்துக் கொண்டிருத்தலாலே, மற்றச் சிந்தனைகளைத் தவிர்த்து, வெம்மையுற்று வருந்தி, தனித்து இருந்தான்:

தனது அந்தரங்க மந்திரியும், காலக்கணக்கை உணர்த்து பவனுமான முதிய அந்தணனை ஒரு நாள் அழைத்து மறை பொருள்கள் பேசிப் பின் "இனிய நண்ப! உன்னை ஒன்று கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று இருப்பேன். நீ வந்த சமயங்களில் 'அதை என்ன கேட்க?' என்று தவிர்ப்பேன். இனிக் கேட்காமல் இருக்கவும் முடியாது" என்றுகூறி மேலும் இவ்வாறு கூறலானான். "நமது நகரத் திற்குக் கிழக்கே ஒளிமிக்க மணிகளினால் திகழ்வது மதாசயனின் உப்பரிகை (மேடை)கள் அல்லவா? அந்த மாளிகையின் பொன்மயமான பிராகாரங்களுக்கு அடுத்து நாள்தோறும் புதிதாக மலர்ந்து எழில் பெறும் பூக்களும், தளிர்களும் கொண்டிலங்கும் பூங்காவை அறிவாயா? இதற்கு முன்பொரு நாள், நான் அங்கு வேட்டைக் காடை செல்லவே அதை அழைத்துக் கொண்டு சென்றேன். அங்குத் தோழிகளுடன் கூடியிருந்த தாழிருங்கூந்தல் தையலொருத்தியைக் கண்டேன். அவ்வெழில் மிக்க

நங்கையின் உருவ அழகை ஆராய்ந்து பார்க்க எத்துணை ஆத்மாக்கள் இருந்தாலும் போதாது. அவளது எல்லாக் குணநலன்களையும் புகழ எத்தனை நாக்குகள் இருந்தாலும் போதா. அவளது கடைக்கண் பார்வை யமுதிற் சொக்கி விழ எத்தனை கண்கள் இருந்தாலும் போதா! பலபடப் பேசுவானேன். அவள் அழகுகளின் மொத்தமான திரட்சியாகும். உவமைகள், கற்பனைகள், உயர்வு நவிற்சிகள், சொற் சாதுரியங்கள், வருணனைத் திறன்கள் எல்லாம் எந்த மூலைக்கோ? சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாத அவ்ளுடைய எழிலாகும். மூவுலகங்களிலும் அதிகமாக இந்தப்பூமி என்ன புண்ணியம் செய்ததோ? நமது பாரத பூமியிலும் என்ன தவம் செய்ததோ நமது ஆர்யாவத்தம்? அதிலும் என்ன பேறு பெற்றதோ நமது அங்க நாடு. அங்க நாட்டிலும் என்ன நல்வினை செய்ததோ கமுக கண்டோத்தரபுர நகரம். அந்நங்கையின் பொற்பாதங்கள் பட்டுப் பேறடைந்த அந்தப் பூந்தோட்டத்தினால் இந் நகரம் பொலிவுற்றுத் திகழ்கின்றது. அக்கிளிமொழியாளின் கருங்கூந்தல் இருபக்கமும் கூர்மையுடைய வளைவுகளோடு கூடிய கத்தியைப் போலவும், குழல்மேல் சூடிய மலர்ச்சரம், தந்தப்பிடி போலவும் அமைந்து, மன்மதனின் வலிவுடைய வாள் போல என் உறுதியைப் பிளந்தது. அவ்வழகிய சுரிகுழற்பொற்பும், அப்புருவங்களின் எழிலும் அத்தாமரைக் கண்களின் அழகும், அந்தப் புன்னகையோடு கூடிய கன்னங்களும், அச்செந்தாமரை முகமும், அம்மூலைக் குடங்களின் பொலிவும், அவ்வழகிய இடையின் மெலிவும், அந்த நாணுடன் கூடிய வேட்கை மீதூர்ந்த கடைக்கண் பார்வையின் கவினும், என் உள்ளத்திலிருந்து சிறிதும் நீங்காதிருக்கின்றது. இனி உன்னிடம் மறைப்பானேன்? அவளைக் கண்டது முதல் ஐங்கணைகளுடைய மன்மதன் சினந்து சினந்து என்னைத் துன்புறுத்துகிறான். அச்செல்வி கன்னிகை போல அப்போது என் பார்வைக்குத் தோன்றினாள். அவள் யார்? எப்படி? என்பதெல்லாம் நீ அறிந்திருந்தால் சொல். தெரியாவிட்டால் உன்னால் முடிந்த அளவு முயன்று அறிந்து சொல்.''

இவ்வாறு கூறக்கேட்ட பாங்கன், தனது தலைவன் காதல் நோய்கூர்ந்தான் என்பதோர்ந்து 'வேறு சுவை யுண்டாகப் பேசுவோம்' என்று கருதியவனாக மெல்ல நகைத்து இவ்வாறு கூறலானான். "இப்போது அந்த அம்மாள் கன்னியாக இருக்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும். உன்னை வருத்தியதென்னமோ உண்மை. இதுகேட்டு என் மனம் குளிர்ந்தது. அந்த அம்மாள் இவ்வுலகெலாம் ஆட்சிபுரிந்து நன்றாக இருக்கவேண்டும்! இவ்வளவு மகிழ்ச்சியுடன் ஏன் வாழ்த்துகிறேன் என்கிறாயா? கேள்! "எப்போதும் வித்வான்கள் உடைய கூட்டத்தில் இருந்து கொண்டு அது சரி, இது சரியில்லை" என்று விவாதிப்பதற்கு ஒரு முடிவே இல்லை. பௌராணிகளின் அளந்துவிடும் வீண் வெட்டிப் பேச்சுகள் ஓய்ந்தபாடில்லை. செவிகள் குத்தலெடுக்கும்படி கவி வாணர்களின் அரட்டையோ சனிக்கிழமை பிடித்த அடைமழையாகத் தோன்றுகிறது. மந்திரி பிரதானிகளின் ரகசிய ஆலோசனை கள் என்றாலோ குடலில் அரிப்பெடுத்தாற் போலத் (அரிப்பைச் சொறிந்து தடுக்க முடியாதது போல) தவிர்க்க முடியவில்லை. அந்தப்புரத்திற்குச் சென்றாலோ புதன் புறப்பட்டாற்போல (அத்திபூத்தாற்போல) உன்னைக் காண்பதரிது. இச்சமயத்திலன்றி மற்ற நேரங்களில் எங்களையும் இருக்கிறார்களா என்று பேருக்காவது ஆராய்ந்ததுண்டா? (எங்களை மதித்து அழைக்கச் செய்தது அந்தத் தாயல்லவா? வாழ்த்தாமலிருக்க முடியுமா?) அது மட்டுமன்றி இதற்கு முன் எப்போதாவது ஸ்தல சுத்தி செய்து மண்ணைத் தோண்டி முடிப் பச்சைக் கற்பூரத்தால் கட்டுவித்தார்களா? மணமிகு பன்னீர் அகழிகள் தோண்டினார்களா? தாமரைத் தண்டின் உள்ளே உள நார் எடுத்து நல்ல சந்தனத்துடன் மதிற்சுவர் அமைத்தார்களா? புதிய சந்திர காந்தக்கல் மண்டபத்தில் தளிரிலைத் தட்டிகள் வேய்ந்து, செங்கழுநீர்ப் பூக்களால் பந்தல் அமைத்தார்களா? எப்போதாவது முன்பு உனக்கு இது போன்று அந்நங்கை மனத்தில் நின்றாளா? வருந்திய தால் தானே தினம்தோறும் புதிது புதிதான இத்தகைய

செயல்களைக் காணக் கிடைத்தது? இவ்வாறு கூறக் கேட்ட அம்மன்னன் "எல்லாம் சரிதான், வாய்ச்சவடால் அடிப்பதில் கெட்டிக்காரன் என்று உன்னைத் தெரியாதா? எனக்கு முதலில் அந்தப் பெண்ணின் விபரத்தைச் சொல்" என்றான்.

அதற்கு அந்த அந்தணன் "மன்ன! அவள் யாரென்றறிய விரும்புகிறாய்! முதலில் எனக்குச் சொல்! விரகதாபத்தைத் தணிவிக்கும் செய்கையில் ஆன செலவு எல்லாம் அவளிடம் பெறத் துடிக்கிறாயா? அப்படியானால் அதற்குரிய பணத்துக்கு ஊரில் வசூல் செய்வோம். 'விரகவரி' என்று பேரிட்டுப் புதுவரி போடுவோம். செல்வச் செழிப்புமிக்க நம் மக்களும் இதையெல்லாம் லட்சியம் செய்யமாட்டார்கள். இதெல்லாம் விளையாட்டுக்கும் சும்மா சொன்னேன். அன்றி இதெல்லாம் நீ கேட்கவேண்டியதில்லைதான். ஒரு சீட்டு அனுப்பினால் உன் விருப்பங்களை நிறைவேற்ற எல்லா மன்னர்களும் அடிமைகள் மாதிரி ஓடோடி வந்து உதவுகின்றார்கள். 'இவை சந்தனமரங்கள் ஏற்றுக்கொள்க' என்று கேரள நாட்டதிபன் அனுப்பி வைத்தான். 'கட்டாணி முத்துப் பெட்டிகள் இவை; பாண்டிய நாட்டு மன்னன் அனுப்பி வைத்தவை. பன்னீர்ச் செம்பு வண்டிகள் காமரூப நாட்டதிபன் அனுப்பி வைத்தவை, சந்திரகாந்தக்கல் இவை இணையற்றவை; காஸ்மீர நாட்டு அரசன் அனுப்பினான். கற்பூரச்சரக்குகள் இவைத்; துருக்கி நாட்டரசன் அனுப்பி வைத்தான்' என்று உன் அரண்மனை முன்பு மக்கள் பேசிக் கொள்வதை வியப்புடன் கேட்போம். உனக்கு விரகம் வந்தால் மற்ற மன்னர்களின் செல்வமும் கூட உன்னைச் சேர்வதால் அம்மன்னர்களும் (திருமகள் பிரிந்த) விரகமுற்றவராவார்கள். அம்மன்னர்கட்குத் தெரியவில்லை. இவ்வளவு விரகம் தணிவிக்கும் செலவுகளில் ஆன பொருள்களில் பாதி யனுப்பினால் போதுமே. (சந்தன மரம் என்? சந்தனம் போதும், ஆணி முத்துப் பெட்டி ஏன்? முத்து போதும். இப்படிப் பாதி அனுப்பினாற் போதும்) இந்தப் பாதியை அவளுக்கு உன்னை

மணக்குப்படி லஞ்சம் கொடுத்தால் போதாது? இப்படியெல்லாம் செலவழிக்க வேண்டியிருக்கும்போது அவர்கட்கு இந்தப் புத்தி தோன்றுமா?'' என்றான்.

அது கேட்டு மன்னன், ''இப்படி வாயாடிப் பேச்சுகள் பேசுவதில் வல்லவன்தான். உனக்குப் பட்டமே கொடுக்கலாம். உன்னை நம்ப முடியாது. இல்லாவிட்டால் அப்படி உனக்கு லஞ்சம் தரமாட்டேனா?'' என்றான். அது கேட்டு அந்தணன் அரசன் முகத்தைப் பார்த்துச் ''சும்மா குளித்துவிட்டுத் தருப்பையைக் கையில் பிடித்துக் கொண்டு விளக்கெண்ணெய் குடித்தவன் மாதிரி உம்மென்று இருந்தால் பெரிய மனிதனாக்கும். அப்படி இல்லாமல் பேசினால் 'வாயாடி' என்று சொல்கிறாய்!'' என்றுகூறிக் கோபம் வரவழைத்துக் கொண்டு கொஞ்ச தூரம் அப்புறம் விரைந்து சென்றான்.

உடனே மன்னன் ''காராம் பசுப்போலச் சாதுவான பிராமணன் உன்னை 'வாயாடி' என்று சொல்லலாமா? இனிமேற் சொல்லமாட்டேன் வா'' என்றழைத்தலும் அவனும் திரும்பி வந்து மன்னனிடம் இவ்விதம் கூறினான். ''நீ சொன்னாயே இப்போது அதுபோல என்னை நம்பக் கூடாதுதான், உன்னோடு சேர்ந்ததனால்தான் இப்படியாயிற்று. 'யதா ராஜா ததா ப்ரஜா' (மன்னன் எப்படி குடிகளும் அப்படி) என்றபடி உன் வழியில் தானே நாங்களும் இருப்போம். நீ முன்பு ஆஸ்தானத்திலிருந்து மதாசயனையும் ரூபானுபூதியையும் அழைத்து ''இனி நீங்கள் அத்தையும் மாமனும் ஆனீர்கள்'' என்று கூறினாயே. அந்தச் சொல் இப்போது என்னவாயிற்று! சொல். அதை மறந்துவிட்ட குற்றம்தான் இப்போது உன்னை இவ்விதம் துன்புறுத்துகிறது. எப்படியென்று கேட்கிறாயா? கேள்! அதனால்தான் அந்த ரூபானுபூதியின் மகளை அடைய முடியாமல் உன் மனம் வெதும்புகிறது'' என்று கூறலும் ''எப்படி! எப்படி! பெரியவரே!

சொல்லும்; ஏன் இப்படிக் கிராக்கி பண்ணுகிறீர்! இனிமையும் அழகும் திகழ அந்தப் பூந்தோட்டத்தில் நான் கண்டது மதாசயனின் மகள்தானா? அவள் இவ்வளவு விரைவில் பெரியவளாகிவிட்டாளா? விந்ததான்'' என்றான்.

அதற்கு அந்தணன் "என்ன சொல்லச் சொல்லுகிறாய்! இன்னும் சந்தேகமா? உன் மனதைக் கொள்ளை கொள்ள நற்குணங்கள் நிறைந்த அவளைத்தவிர வேறொருத்தி இவ்வுலகிலுண்டோ? பலவிதமான நித்திய கடன்களைச் செய்வதில் சிறிது நேரமும், அரசாங்க அலுவல்களில் சிறிது நேரமும், மந்திர தந்திர வித்தைகளைக் காண்பதில் சிறிது நேரமும், யானை, குதிரை ஏற்றங்களில் சிறிது நேரமும் தேவ பூசையில் சிறிது நேரமும், வேதாந்த, வித்வத் கோஷ்டிகளில் சிறிது நேரமும் உணவருந்துதல் முதலியவற்றில் சிறிது நேரமும், மந்திரிப்பிரதானிகளுடன் ரகசிய ஆலோசனைகளில் கொஞ்ச நேரமும், இப்படிக் காலம் கடந்து போனதால் நீ கேள்விப்படவில்லை போலும், இப்போது அம்மதுரலாலசைக்குத் தகுந்த பருவம் ஆகும். அந்த இளமையும் உனது புகழும் தூண்டிவிட மன்மதன் அவள்மீது படையெடுத்து வருத்துகின்றான். உன் அருள் வேட்டு அவளது தோழியரும் என்னிடம் அடிக்கடி சொல்வார்கள். பாழும் அரசகுல மரியாதைகளை யறிவாயல்லவா? அந்தோ! அம்மடந்தையை, மூவுலகங்களிலும் சிறந்த ரத்தினத்தை, தமது மகளாகப் பெற்றும், அவள் துன்புறுவதையறிந்தும் தமது தன்மான உணர்ச்சியாலே நீயாகக் கேட்கவில்லையே என்று உன்னிடம் அவளது பெற்றோர்களும் கூறவில்லை. அவள்படும் துன்பம் சகிக்காது தோழிகள் வருந்தி "உன்னிடம் சொல்லோமோ'' என்று கருதி என்னிடம் சொல்வார்கள். நானும் தகுந்த காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். 'உன் மனநிலை தெரியாமல் அப்பேச்சை எடுக்க அஞ்சினேன். 'ரூபானுபூதி, மதாசயர்களுக்கு நீ அன்று கூறிய அருளுரைகளை நினைவுறுத்தினாற் போதும்! நீ தவறமாட்டாய்'' என்று நினைப்பேன், எனினும் பிராமண குலத்துக்கியல்பான

பயத்தால் உன்னிடம் கூற அஞ்சுவேன். உனது விரக வேதனையை அறிந்தும் 'இதுவேறு காரணங்கள் இருக்கலாம்'' என நினைப்பேன். இப்போது கூப்பிட்டுக் கேட்டதும் கூட உடனே சொல்லவில்லை. ஏனென்றால் 'நமது மதாசயன் மகள்தானா?' என்று சுலபமாகக் கருதி விடுவாயோ ? என்று பயந்தேன். தமக்கு எட்டாத நிலையிலிருந்தால் கஞ்சியாயினும் விரும்புவார்கள். தமக்கு எளிதில் கிட்டுமாயின் அமுதத்தையும் அலட்சியம் செய்வார்கள். 'தன் முற்றத்துச் செடி மருந்துக்காகாது என்பார்களல்லவா? (முற்றத்து முல்லைக்கு மணமில்லை) இவை பிறருடைய தன்மைகள் அன்றி முற்றும் உணர்ந்த உன்னிடம் இவ்வியல்புகள் இராது. என்றாலும் என் அறியாமையால் விளைந்ததிவையாகும். மேலும், அவளது பெயர் முதலியவை கேட்பதைத் தவிர்த்து 'அவளைச் சேர்ப்பித்தால் உனக்கு லஞ்சம் தரமாட்டேனோ?' என்று நீ கூறியதாலே அவள் மேல் மிக்க மயல் கொண்டுள்ளதை அறிந்து இப்போது அவளது சரித்திரம் எல்லாம் சொல்லி விட்டேன். இனிச் சம்பந்தப் பொருத்தம் ஆராயினும், குறைவொன்றுமில்லாதது. கார்த்தவீர்யார்ஜுனன் மரபு உலகப் புகழ் பெற்றது. இவளது தந்தையோ திக்விஜயம் செய்த மன்னனாகும். இவளது தாயோ புகழ்பெற்ற 'சுக்கிரகன்' எனும் அரசனின் தமக்கையாகும். குலப்புகழ் மிக்க சுக்கிரகனின் நன்னடத்தையைக் கண்டு எல்லா மன்னர்களும் தத்தமது கன்னியரை மணம் புரிய வேண்டுமென்று சொல்லிச் சொல்லி மன்றாட (ஒருவர்க்கிணங்கின் மற்றவர் பகை வருமென்னக்கருதி) மறுத்ததாலே அவர்கள் சினமுற்றுப் படையெடுத்து வர, சுக்கிரகன் அன்று வெளியேறியவன் இதுவரை அவன் ஜாடையே தெரியவில்லை. அவன் பிறக்கும்போது பாக்கியங்கள் நிறைந்த பல கிரகங்கள் ஒன்று கூடியிருந்ததாலே அவனுக்குச் 'சுக்கிரகன்' என்று பேரிட்டனராம். அந்தச் சாத்திரம் என்னவாயிற்றோ தெரியவில்லை. அது எப்படியாவது போகட்டும். இதெல்லாம் கூறுவதேன் என்றால் மதுரலாலசையின் இருகுலமும் (தாய்வழி, தந்தைவழி மரபுகள்) தூயதானதென்று நிறுவு

தற்கே ஆகும். அப்பெண்கள் திலகத்தின் உயிரைக்காத்து அருள்புரிய விருப்பினால் உடனே திருமண ஏற்பாடுகளை மங்களகரமாகச் செய்ய முயல்வாயாக!' என்று கூறி முடித்துப் பஞ்சாங்கமும் புத்தகத்தையும் விடுத்து மிகவும் முயன்று திதிவாரம் முதலியவைகளை ஆராய்ந்து, விரலை எண்ணிப் பின்னர் கிரகதாராதிகளை நிர்ணயித்தான்.

இவ்விதம் நிரூபித்து மகிழ்ச்சியுடன் "தேவரீர் எண்ணியபடியே எல்லாம் நிறைவேறும் பாக்கியத்தை என்னென்பது? நாளைக் கழித்தே உங்கள் இருவர் பெயருக்கும் உத்தமமான பகல் முகூர்த்தம் இருக்கிறது. திருமண விழாவிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் மன்னர் மன்னனுக்கு எப்போதும் நிறைந்திருக்கும் மங்கள கரமாகத் திருவிழாக் கோலம் கொண்டிருப்பதாகும்" என்று கூறி மீண்டும் இவ்விதம் கூறலானான். 'பழங்கள் மஞ்சள் பூசிய மணிகள் எனப் பொலிய, இல்லத்திருமகளின் கழுத் தெனத் திகழும் இளம் பாக்கு மரங்கள் நித்திய உற்சவ கோலங்கொண்டு வாசலில் திகழ்வதாலேயன்றோ இந் நகரைக் கமுககண்டோத்தரபுரம் என அழைப்பார்கள்! ஆயினும் தேவரீர் திருமணத்திற்குத் தகுந்த புத்தம்புதிய புதிய அலங்காரத்துடன் நகர் திகழ வேண்டாமா? ஆதலின் இப்போதே பறையறைவிப்பாயாக. அறவழிப் படி சான்றோர்களைச் சன்மானங்களுடன் உன் மாமன் வீட்டுக்குக் கன்னிகையைக் கேட்பதற்காக அனுப்பி வைப்பாயாக' என்றதும் மன்னன் மகிழ்ந்து அவ்விதம் எல்லாம் 'சத்வதாத்மனை' அழைத்துச் சொல்லி, அவனது சம்மதத்துடன் முதல்மறையோன் முதலான நால்வரை அழைத்துவந்து தனது பட்டத்தரசியிடம் (முதல் மனைவி யான அபிநவகௌமுதியிடம்) அனுப்பிவைத்தான்.

அவர்களும் அவ்வரசியிடம் தகுந்த முறையில் எடுத் துரைத்தார்கள். சொல்லி 'இதற்குப் பதில் என்ன சொல்லுங்கள்' என்று கேட்ப, அக்கற்புக்கரசியும் அவர்களி டம் கூறினாள். 'எல்லாப் பந்துக்களையுந் தண்ணளி

யுடன் அவரவர்கட்கேற்ப நடந்து இனிய குணங்களால் அவர்கள் மனத்தை மகிழ்வித்தலாலே 'அபிநவகௌமுதி' (புத்திளம் நிலவு) என்னும் பெயர் பெற்றேன். நிலவின் ஒளிக்கற்றையிற் பிறந்த அப்சர ஜாதியில் உதித்த நான், (அந்தப் பேருடன் திகழும் நான்) எல்லாக் கற்புடைப் பெண்கட்கும் சாமானிய தருமமான கணவன் விருப்பத்திற் கிசைய நடக்காது மறுப்பேனா? என்னை என்ன கேட்கிறீர்கள்? அம்மன்னனுக்கு எது விருப்பமோ அதுவே எனது விருப்பமும் ஆகும். இது உண்மை! இதையே கூறுங்கள்' என்று சொல்லி விடை கொடுத்தனுப்பவும், அவர்கள் சென்று அவ்விதமே மன்னனிடம் விண்ணப்பித்து, அவன் கட்டளைப்படியே மதாசயனின் வீட்டிற்குச் சென்று அந்தக் களாபூரண மகாராஜாவிற்கு உண்டான விவாஹப் பிரயத்தினங்களைக் கூறிச் சுபமுகூர்த்தத்தில் நிச்சய தாம்பூலம் வைத்துவிட்டு வந்தனர்.

அவ்வளவில் மந்திரிகளும் அத்திருமண விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய நகரில் பறையறைவித்தனர். எங்கு நோக்கினும் வீடுகளில் பொற்குடங்களைப் புதுமெருகிட்டு நிறுத்துபவர்களும், எப்பக்கம் பார்த்தாலும், பனிநீரில் சந்தனம் கரைத்துத் தெளிப்பவர்களும் எவ்விடம் நோக்கினும் சுவர்கட்குப் புனுகு, ஜவ்வாது களைப் பூசுபவர்களும், எத்திசை நோக்கினும் மணி மண்டபங்களை மணமிகு கஸ்தூரியினால் மெழுகுபவர்களும் விருப்புடன் கருப்பூரத்தினால் கோலமிடுவாரும் பந்தலிட்டு, குவளை மலர் மாலை தொடுத்து, பச்சைத் தோரணம் கட்டுபவர்களும் ஆக இரவும் பகலும் சுறுசுறுப்புடன் மக்கள் நகரை அலங்கரித்தனர். மன்னன் அரண்மனையில் திருமணம் என்று சுபமங்களகரமான செய்தியை ஒவ்வொரு வீட்டிலும் சொல்லச் சுமங்கலிகளான பெண்டிர்கள் பொற்பாத்திரங்களில் சுபஅட்சதைகளுடன் இலை பாக்கு, குங்குமம், பூ, எண்ணெய், பழங்கள்கொண்டு மங்கல வாத்தியம் முழங்கத் தகுந்தோர் பின்வரச்சென்று அறிவித்தனர். கற்பூரம், சந்தனம், கஸ்தூரி முதலியன

பொற்கொப்பரைகளில் கலந்துவைத்தும், மல்லிகை, முல்லை, சம்பகம், மகிழம் முதலிய மலர்களை ஏராளமாகச் சேர்த்தும், மிக்க மணமுடைய பாக்குப்பொடி குவித்தும் பொற்றகடுகள் போன்ற இளந்தளிர் வெற்றிலையை மலையெனக் குவித்தும் வைத்துக்கொண்டு அதற்குரிய பெரியவர்கள் மிகு மகிழ்வுடன் எந்தத்தெருவில் பார்த்தாலும் கூட்டமாகக் கூடிநின்று சந்தன புஷ்ப தாம்பூலங்களை மக்களுக்குத் தந்தார்கள்.

மக்கட் பேற்றில் சிறந்த சுமங்கலிகள் சுபவேளையில் மதுரலாலஸைக்கு மங்கள ஸ்நானம் செய்வித்தனர். பல்வேறு வாத்தியங்கள் திசைகள் நிறைய இசைத்தன. புத்தம் புதிதாக ஒரு பெண், மணமேடையைக் கஸ்தூரியால் மெழுகினாள். முத்துக்களால் ஒரு பெண் கோலம் இட்டாள். சித்தம் களிப்ப ஒரு பெண் பொன்னாலான பீடம் வைத்தாள். அதன்மேல் ஒருத்தி தூய ஆடையைப் போர்த்தினாள். பேரிளம்பெண் ஒருத்தி மணமகளைக் கிழக்கு முகம் நோக்கி நிறுத்தி, பீடத்தமர்த்தி, சம்பங்கி எண்ணெயைத் தேய்த்தாள். பெண்கள் பின்னர் மஞ்சள் கலந்த சந்தனத்தோடு நெல்லிக்காய் அரைத்துக் குழலில் தடவிப் பொற்குடங்களிலுள்ள நீரூற்றிக் குளிப்பாட்டினர். மென் துகிலால் ஈரம் உலர்த்தி மஞ்சள் கரையுடைய வெண் பட்டுத் துகிலுடுத்தி, கூந்தலின் ஈரம் போக்கி அகிற்புகையூட்டி, பூமுடித்து, சந்தனம் உடலெலாம் பூசி மென்முலைகளில் குங்குமம் எழுதி, கஸ்தூரித் திலகம் இட்டு நங்கையின் இமைகளில் கண்மை இட்டு, செம்பஞ்சுக் குழம்பால் பாதங்களை அலங்கரித்து, மணமகளை அணியுறச் செய்தனர்.

காலில் மணிச் சிலம்பும், இடையில் மணிமேகலையும், மார்பில் முத்துமாலைகளும், சிந்தாமணியும், கரங்களில் பொன்வளைகளும், காதிற் குண்டலமும், விரல்களில் மோதிரங்களும், மூக்குத்தி முதலிய ஆபரணங்களும் அணிவித்து, அணிகளுக்கு ஓர் அணியாக அந்நங்கை விளங்கிக் கண்விருந்தாக நின்றாள். இப்படி அலங்கரித்த

பின் அப்பெண்டிர் மதுரலாலஸையின் தாயை அழைத்து 'உன் மகளின் அழகை நன்றாகப் பார்! ரூபானுபூதி என்ற சிறப்புப் பெயர் பெற்றுப் புகழ் பெற்றவள் நீ. உன் போல் யாரும் உருவ அழகை உணர்வாரில்லை' என்று கூற அவள் சிரித்தவாறு அங்கிருந்து சிறிது தள்ளிச் சென்று அடிக்கடி கீழும் மேலுமாகக் கடைக்கண்ணால் மகள் அழகைக் கண்டு வியந்து 'இதைவிட யார் இனி அழகுபடுத்தமுடியும்?' என்று கூறி அவர்களது திறமையைப் பாராட்டினாள்.

மெச்சிப் புகழ்ந்து அத்தாய் பார்வைக்கு மிகவும் எழில் பெற விளங்குதலால் 'கண்ணேறுபடுமோ?' என்று அஞ்சிப் பூமாலை திருத்துவது போலச் சிறிது குறைவுபடுத்த நினைத்துக் கழுத்தருகே செங்கழுநீர்ப் பூவொன்று வைக்க அது முலைமுகட்டில் தனியோரழகு காட்டத் திருஷ்டி கழிக்க வேண்டிப் பூமாலைகளை ஒன்று சேர்த்துத் தலை சுற்றிப் போட்டு வீசி எறிந்தாள். இவ்விதம் மணமகளை அலங்கரித்து வைத்திருக்கும் போது களாபூரணனும் திருமணத்துக்கு ஆயத்தமானான்.

முதல் மறையோன் முதலாக உள்ள அந்தணர்கள் வாழ்த்தொலியும், பல சுமங்கலியரின் மங்கள கீத இசையும், மாகதவைதாளிகர்களின் துதிப்பாடற் பேர் ஒலியும், பேட்டிகாணச் சிற்றரசர் முதலானவர்களைக் கட்டுப் படுத்தும் மெய்க்காப்பாளர்களின் பேரரவமும், எல்லா மக்களின் ஜயஜய கோஷமும், சங்கு, காகளம், பேரி, மத்தளம், தப்பட்டை முதலிய வாத்திய முழக்கமும், ஒன்று கூடி நாற்றிசையும் எதிரொலிப்ப மிகவும் சிறப்புடன் வைபவமாக நகரிலிருந்து புறப்பட்டு நல்லணிகள் பூண்டு எழில் பெற்ற புரவிமேல் அமர்ந்து செல்ல, பல்வேறு மன்னர் தம் மகுடங்களும் அணிகளும், நெருக்குண்டுதிர்ந்த பொற்றுகட் படலமும், மதகளிற்றினத்தின் மததாரையும் கூடி, குங்குமச் சேறுடன் கலந்துறவாடவும், மலர்களும் தளிர்களும் செறிந்த மாலைகளுடன் கூடிய பந்தல் போல அழகு காட்டி வெயிலின் கடுமை நீக்கித் தேன்துளி சிந்தி

நிலவெனப் பொலிய முத்துமாலைகள் தாரகைகள் என எழில் கூட்ட வெண்கொற்றக் குடையானது முழு மதியான விழிக்கின்பம் பயக்க, சந்தனம் பன்னீராதிகளைக் கொடுத்துபசரிப்பதுபோலத் தென்றற் காற்று தவழ, மல்லிகை, முல்லை, மருக்கொழுந்து முதலான மலர்கள், வசந்தன் தந்துதவ, கருப்பு வில்லையுடைய மன்மதனின் இருபுறமும் படை கொண்ட கிளி, குயில், வண்டுகளின் கூட்டம் போல மரகதம், கெம்பு, நீல மணிகள் அரங்கில் ஒளிவீச, செந்தளிர்களும் மென்மலர்களும் கொண்டியற்றிய திரைச்சீலையும், விதானமும், பன்னீர்த்துளிகள் சிதறும்படி யாக இயற்றிய கருவிகளும், மென்துகளின் எழில் காட்டச் செல்வச் செழிப்புடைய நகர லக்ஷ்மியின் மென்முலைகள் போல ஒவ்வோர் இல்லத்திலும் வைத்துள்ள பூரண கும்பங்கள் பொலிவூட்ட, அகில்புகை மேலெழுந்து கார் முகில் நிரைகாட்ட, அதிலிருந்து வீழ்ந்த அமுத தாரை களோ எனும்படி மாடியிலிருந்து சுமங்கலிகள் வாழ்த்திச் சிந்திய அக்ஷதை (மஞ்சள் பூசிய அரிசி) வீழ, முகிலுடன் இணைந்த மின்னற் கொடிகளின் ஒளி வீச்செனத் தங்க முலாம் பூசிய பிரம்பினைச் சுழற்றுவதால் ஒளிக்கற்றைகள் தெளிப்ப, குதிரையின் நடையால் அலமரலானும் காதிலணிந்த பூங்கொத்தின் ஒளி முத்துக்கள் சிதறியதைப் போல எழில் மிகவும் அருகிலுள்ள வெண் சாமரை வீச்சு, புன்சிரிப்புடைய கன்னத்தருகே நாணற் பூக்கள் அசைந் தாடுவது போல் அழகூட்ட, செங்கதிரவனின் ஒளிவெள்ளம் ஏந்திமுன் நின்ற வெண்தாமரை மலரும், வண்டின் கூட்டமும், மகரந்தத்தின் பொலிவும், பூந்தேனின் அழகும் இணையாகும்படி மகுடமும் நீலமணியும் பொன்னும் வைரமும் ஒளி வீசிக் கண்களுக்கு விருந்தளிப்ப, தாமரை மலர்கள் நோக்கது போல மாடிகளிலிருந்து முகங்கள் தோன்ற, மலரினைச் சூழ்ந்த கருவண்டுகளென அவர்தம் பார்வை மிளிர, சந்தனம், மஞ்சள் முதலியவை ஏந்திய சுமங்கலிகள் சூழ்ந்துவர, உலகம் வியக்கும் பேரெழில் படைத்த களாபூரணன் கம்பீரமாக மன்னர் புடைசூழ வந்து மதாசயனின் இல்லம் சென்றான்.

மதாசயனனும் தூரத்திலேயே எதிர்கொண்டழைக்கப் பரபரப்புடன் ஓடோடிவந்து வரவேற்றான். இரண்டு பிரிவாக நின்ற சுமங்கலிகள் அக்ஷதைகளுடன் நீர்தெளித்த னர். அப்போது மணமகனின் முகத்திற்குக் கேடயத்தைத் தடுப்பாக வைத்தான் குருமன்னன். மச்ச நாட்டரசன் குதிரைக் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தினான். சேதி நாட்டரசன் கைலாகு கொடுத்து இறக்கிவிட்டான். மகத நாட்டு மன்னன் தன் மேலாடையால் குதிரைக் கண்களை மறைத்து நின்றான்.

'வரவேற்று என் தாயின் தோழியர்கள் சிந்தும் அக்ஷதை மழையைப் பொருட்படுத்தாமல் செல்வதற்கு எதிரிகளின் சரமழையல்ல' என்று பாங்கன் கேலி செய்தான், சீரும் சிறப்புடனும் மன்னர் மன்னனை இவ் விதம் மதாசயன் வரவேற்று அழைத்துச்சென்று மணி பீடத்தமர்த்திப் பொற்கிண்ணத்தில் மனைவி தண்ணீர் வார்க்கப் பாதங்களைக் கழுவி, கற்கண்டு, கனிவகைகள் முன்வைத்து, முறைப்படி செய்தான். திருமணத்திற்கு முதுகுரவர்கள் இருபக்கமும் இருக்க முதல்மறையோன் சுப முகூர்த்தத்தில் களாபூரணனுக்கும், மதுரலாலசைக் கும் சாஸ்திரப்படி இல்லற தருமத்தை உபதேசித்தான்.

மங்கள கீதமும் வாத்தியங்களும் முழங்கக் களாபூரணன் இல்லக் கிழத்திக்கு மங்களசூத்திரம் (தாலி) கட்டினான். இருபுறமும் தோழியர் தூண்டிவிடவும் புன்னகையுடன் சிறிது நாணம் களைந்து, இணை முலைகளை எதிர்த் தெழில்பெறும் கரங்களை மேலுயர்த்தி, இடை தடுமாறச் சுமங்கலிகள் ஏந்திய பொன் வட்டிலிலுள்ள அக்ஷதையை இருகரங்களாலும் எடுத்துக் கணவனின் விரைவிற்கிணை யாகும்படி தானும் அக்ஷதை மழை பொழிவித்தாள், அது கண்டார் 'காணக் கண்கோடி வேண்டும்' என்று களி கூர்ந்தார்கள்.

முன்னிலையில் வேள்வித்தீக் கொழுந்துகள் ஒளிபடர அம்மங்கை (பொரிசிந்தல்) லாஜஹோமத்தில் அஞ்சலித்து நிற்பது பரமேசுவரனைக் காணத் துடித்த பார்வதியோ எனத் தோன்றியது. மறையவன் ஏவலில் அவள் லாஜ ஹோமம் செய்யும்போது தென்றல் அசைத்தலால் தளிர் களுடன் கூடிய மாமரத்தின் மல்லிகைக்கொடி உதிர்த்த பூக்களோ எனும்படி இருந்தது. தோழியர்கள் வற்புறுத் திக் கைகள் தொட்டுப் பலதடவை எடுத்து நிறுத்தலால் நாணம் மிக்க அம்மங்கை, மென்மெல வெளிப்பட்டு வரும் நிலவு போல முகத்தை நிமிர்த்தி அடக்கத்துடன் இருந்தாள். "மிக நுட்பமாக மினுக்கு மினுக்கென்று ஒளியுடனுள்ள துருவ தாரகையைப் பார்த்தாயா? அதோ அருந்ததி நட்சத்திரத்தைப் பார்த்தாயா?" என்று அதன் அருகிலுள்ள விண்மீன்களை அடையாளம் காட்டித் தோழிகள் காண்பிக்க அவளும் 'கண்டேன்' என்று கூறினாள்.

அவ்வளவில் செந்நெலரிசிச் சோறும், நெய், தயிர் தேன், பால்பாயாசம், பலாப்பழம், திராட்சைப்பழம், கதலி, மாம்பழம், அப்பளம், வடை, பருப்பு முதலிய பலவகைகளுடன் காய்கறிகளும் வைத்து மக்கள் வயிறார உண்ண இரவும், பகலும் பெரு விருந்துகள் படைத்தனர். தின்னல், பருகல், வற்றல், லேகியம் உண்ணல் முதலிய வேறுபாடுகளுடைய சமையல் திறன் உடைய பதார்த்தங்கள் எத்தனை உண்டோ அத்தனையும் கொணர்ந்து எப்போது எவருக்கு எது வேண்டுமோ அப்போது ஆராய்ந்து உபசரித்து அளித்தார்கள். அங்கு உள்ள உணவு வகைகள் எண்ணத்தரமன்று.

இது இப்படியிருக்க, சுமங்கலிகள் மலர் குழலிற்சூடி. முடித்து, நிறைகுடத்தில் பொன்னையிட்டு மணமக்கள் யார் முதலில் எடுக்கிறார்கள் என்றறியப் போட்டியிட

வைக்க இருவரும் பிணங்கியவாறு புளகமெய்திப் புன்முறுவல் சிந்தி, மெல்லிய பரிச சுகத்தையடைந்தனர். எல்லாவகையிலும் சிறந்த மணமக்களின் இணைப்பைக் கண்டு மக்கள் பெருவிழா அயர்ந்தின்புற்றனர். அவர்களைக் கண்டு மனத்தில் வியப்பெய்தினர். பலபடப் பாராட்டினர். மகாசயன், எண்ணற்ற சீர்வரிசைகளுடன் தன் அன்பான மகளை மாப்பிள்ளையுடன் அனுப்பி வைத்தான்.

இவ்விதம் அனுப்பும்போது தகுந்த நீதிகளையும் உலக நடப்புகளையும் ஒழுக்கத்தையும் தெளிவாக எடுத்தியம்பி ரூபானுபூதி தன் மகளிடம் இவ்விதம் அறிவுரைகள் கூறினாள். "சுமுகாசத்தி, மணிஸ்தம்பமா யோகிந்திரர் உனது மாமி மாமன்மார். அவர்கள் உன் மருமகள் தன்மைகளை ஆராயமாட்டார்கள். யோகத்தில் லயித்திருப்பார்கள். மாமி, மாமன்மார் என்றாலும், ஆசாரியன் என்றாலும், நல்லறம் என்றாலும், குலதெய்வம் என்றாலும் உனக்குக் கணவனைப் போலத்தான் கௌரவிக்கத்தக்கவர்கள். இது மகோபதேசமாக அறிவாயாக. உன் சகௌனத்தி சிறந்த குணங்களையுடைய கற்புடையவள். உன் கணவனைவிட அவளை மரியாதையுடன் சேவை செய்ய வேண்டும். பயபக்தி விநயங்களுடன் நடந்துகொள்ள வேண்டும். அழகு, ஒய்யாரங்களிலேயே மனம் மயங்கி இதர குணங்களைப் பொதுவாக ஆண்கள் ஆராயமாட்டார்கள். ஆனால் உன் கணவன் இன்புறுவது உனது நற்குண நற்செய்கைகளினால்தான். சிலர் உருவ அழகினாலும், சிலர் கற்பொழுக்கத்தாலும் கணவனை இன்புறுத்துவார்கள். குறைவிலாத எழிலும் கற்பொழுக்கமும் இணைந்த மங்கை கிடைத்தால் கணவனுக்கு வேறென்ன வேண்டும். பொன்மலர் மணம் பெற்றது போலச் சிறக்குமன்றோ? ஆதலால் உருவும் இளமையும் மிகுந்துளதென்னும் செருக்கினாலோ, கணவன் தரும் அன்பு ஆதரவுகளால் அன்பு மனையாள் என்ற நம்பிக்கையாலோ, அடக்கமில்லாமல்

நடந்துகொள்ளக் கூடாது. உன் காதற்கொழுநனையும், அவன் உறவினர்களையும், சக்களத்தியரையும் தகுந்த முறையில் மகிழ்விக்கச் செய்வாயாக" என்று நாத்தழு தழுக்க விழி நீர் இமைகளால் தடுத்து, மகளை அனுப்ப மனமின்றி வருத்தத்தை உள்ளடக்கி அனுப்பிவைத்தாள்.

மகளும் தாயிடம் விடைபெற இயலாமல் வருந்தி எப்படியோ ஒரு விதத்தில் விடைபெற்றாள். பதிபக்தியும் தாய்ப்பாசத்தை விரைவில் மறக்கச் செய்யமுடியாதன்றோ? இவ்விதமாக மதுரலாலசையை மணந்த திருமண விழா முடிந்ததும் களாபூரணன் புதுமனைபுகு விழாவின் பின்னர், பல்வேறு நாட்டு மன்னர்களையும், விருந்துகளும் பரிசு களும் அளித்துத் தத்தம் நாடுகளுக்கு அனுப்பிவைத்தான்.

அவ்வளவில் அம்மணமகள் மலர்ந்த முகமுடன் கூடிய தோழிகளின் கிசுகிசுப்புக்களால் தன் முதலிரவு என்று உணர்ந்து கொண்டு, மனமகிழ்ந்தவளாய், வந்த இடத்திற்கு வந்தும் போன இடந்திற்குப் போய்க் கொண்டும் ஏதோ ஒருவிதக் கலக்கமுடன் இருந்தாள்.

"மதுரலாலசா! இன்று கணவனுடன் படுக்கை" என்று கூறி அவள் கோபத்தைக் காண்பவர்களும், "கோப மெதற்கு? உன் கோரிக்கை பலித்ததல்லவா!" என்று அவள் அதட்டலுக்கு எதிராகப் பொய்ச் சினத்துடன் அதட்டுபவர் களும், "என் கண்ணே! பொய் சொல்கிறார்கள்; அவ்வளவு தான்; நம்பிவிடாதே!" என்று அமைதியாகச் சொல்பவர் களும், "இப்போதென்ன சொல்வது! பொய்யா? நிஜமா? என்று அப்போது தெரியும்! எங்களுக்கென்ன போயிற்று?" என்றுகூறி நகைப்பவர்களும், "உண்மையானால் என்ன வாய்? உன்னை இவர்கள் வேண்டுமென்றே விரட்டியடிக் கிறார்கள்" என்று கூறுபவர்களுமாய், தோழிகள் சரச சல்லாப வார்த்தைகள் ஆட அன்றைய பகல் கழிந்தது.

அவ்வளவில் குழல்வீசி, மிகுந்த புதுமையுடைய சிங்காரங்கள் திறனுடன் தோழியர் அக்கன்னிகத்துச் செய்

தனர். வெட்கத்தால் தலைகுனிந்த அக்குமரி சம்மத மற்றவள் போல நடிக்கத் தோழிகள் பலவந்தமாக அழகு படுத்தினர். இப்படிச் சிங்காரித்து எதிரே கண்ணாடி வைத்துப் "பார்த்துக் கொள்" என நாணத்தால் பார்க்க அஞ்சினாள். தோழிகள் கொஞ்ச தூரம் தள்ளிச் சென்றவுடன் நிலைக்கண்ணாடியில் பார்த்து நுனி விரலால் குழலையும் மலர்களையும் திருத்துவாள். அதற்குள் அவர்கள் வரவும் கண்ணாடியைப் பரீட்சிப்பது போல இருப்பாள். தனது அலங்காரம் சிதையுமுன்பே கணவன் தன்னைக் காணவேண்டுமென மனத்துள் நினைப்பாள்.

மின்னனைய, மென்னடை அன்னம் அன்ன கன்னியவள் வெட்கத்தால் தோழிகளின் சேர்க்கை விடுத்து அணிகளின் அமைப்பை ஆராய்ந்து எழில் சிதையாதிருக்க விழிப்புடன் கவனத்துடன் இருந்தாள். கஸ்தூரிக் கண்மையும், குங்குமமும், இணையற்ற அணிகளும் பூண்டு புத்தெழிலுடன் பொன்னிற கிருகலட்சுமியின் கன்னங்களோ எனத் திகழும் நிலைக் கண்ணாடியில் தனது பிரதிபிம்பம் வீழ அக்கன்னி பொலிவுடன் திகழ்ந்தாள்.

அந்தச் சௌபாக்கியவதி ஒரு தனியிடத்தில் பூமெளியில் தகுந்த உபதேசங்கள் செய்யப்பட்டவளாகக் கன்னங்களில் (மகரிகாபத்திரங்கள் எழுத) கையூன்றி இருந்தாள். இவ் விதம் அம் மான்கண்ணினள் தனித்துக் கணவனது வருகையை எதிர்நோக்கி, விரைந்து வரவேண்டுமென வேட்கையுற்றவளாகத் தன் மனத்துள் எண்ணங்கள் குமிழியிட இருந்தாள்.

"கணவன் இனி எப்போது வருவானோ! ஏதாவது தடைநேர்ந்ததுவோ? எனது சக்களத்தி அபிநவகௌமுதியினால் ஏதாவது தடுக்கப்பட்டாரோ? என் கணவன் வேறு மகளிரை நினைக்கமாட்டாரல்லவா? அபிநவகௌமுதியிடம் சென்று பாதங்களைப் பணிந்த போது 'சுமங்கலியாக நீடூழி வாழ்க' என்று அன்புடன் வாழ்த்தினாள்.

அவள் அருளை நம்பலாமா? அதுமட்டுமின்றி மூவுலகிலும் இணையற்ற எழிலுடைய கணவனைக் கலந்து இன்புற்ற மடந்தை ஒரு நிமிட நேரமேனும் அவனைப் பிரிய ஆற்று வாளா? தகுந்த முறையில் பிரியவொட்டாமல் வைத்துக் கொள்வாள் அல்லவா?

உலகோர் காமன் காமன் என்று அளவறியாது மன்னனை உவமிப்பார்கள். மக்கள் ஆட்டுமந்தை போல ஒருவரை ஒருவர் பின் தொடர்வார்கள் அன்றித் தாமே சிந்திக்கமாட்டார்கள். இல்லாவிட்டால் 'காமன்' என்று சொல்வார்களா? இவனோ எல்லோருடைய கண்களுக்கும் விருந்தளிப்பானல்லவா? முக்கண்ணனின் நெருப்பை வர வழைக்க மாட்டானல்லவா?

தொட்டால் கன்றிவிடுமோ எனும்படியான பாலொழு கும் அம்மன்னனின் மின்னிடும் கன்னங்கள் கண்கட்கினிய தாகப் பரமானந்தத்தை விளைவிக்கும். அவனது கண் எனும் தாமரையின் கடையிலுள்ள செவ்வரிகள், திருமகள் உறையும் விழிகள் எனும் வண்டுகள் அசையும்போது சிந்திய மகரந்தங்களை ஒதுக்கிச் செல்லும் வழியோ எனும் படி மயக்கத்தையுண்டுபண்ணியது. மன்மதன், அற்புதமான சங்கு ஒன்றைச் (மன்னனின் கழுத்து) சம்பாதித்து, மார் பணிந்த கஸ்தூரி எனும் கையிற்பூண்டு பொன்னிறம் பெற வேண்டிச் சந்திரனுக்கு (முகத்திற்குக்) காட்டச் சந்திரனும் மேகமண்டலத்திலிருந்து (கூந்தலிலிருந்து) தோன்றுவது போல அவனது கழுத்தும், கூந்தலும், முகமும் தோன் றிற்று. சாந்தம், காம்பீர்யம், தைரியம், பொறுமை, தயை, பராக்கிரமம், மகிழ்ச்சி முதலிய உத்தம குணங்கள் எனும் மணிகளை வைத்த பொக்கிஷ அறையின் பொன் வாசல் தூண்கள் ஒத்த, தோள்களையுடைய அம்மன்னனின் மார்பு எனும் கதவில் பொற்பட்டை போல என் கரங்களை இணைப்பது எப்பொழுதோ? அவ்வழகிய மெல்லடிகள் வருடும் கைகளே கைகள்! வேட்கையுடன் அழகிய (மார்பு)

அகலம் அணையும் முலைகளே முலைகள்! ஆர்வமுடன் அவனது அந்தரங்கங்களைக் கேட்கும் செவிகளே செவிகள்! என்ன சொல்வது? அவன் கலவி பெற்ற வாழ்வே வாழ்வு!''

இவ்வாறு எண்ணியவளாக ''என் தோழிகள் அழைக்க வருவர். எங்கிருக்கிறேன் என்றறியாமல் என்னிடம் தேடுகின்றனரோ?'' என்று எழுந்து செல்ல மலரன்ன மங்கை முயலும்போது அதற்குள் தோழிகள் அங்குப் பரபரப்புடன் சிரித்தவாறே வந்தனர். அவருள் ஒரு திறன்மிக்க மடந்தை நயமாக ''அருமைத் தோழியே! இங்கேயா இருக்கிறாய்!'' என்று கூறி அருகணைந்து, ஒளிபடர் நகங்களால் கூந்தல் திருத்தி, வகிடு எடுத்துத் திலகம் ஆய்ந்து ''கணவனைக் காணும் நேரமிதாம். தாமதமின்றி வா'' என்று கூறிச் சிறிது பேசாமல் இருந்து ''அந்தோ! கணவன் உன் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். விருப்பமுணர்ந்து நடந்து கொள்க!'' என்றாள்.

இவ்விதம் கூறவும் பதில் பேசாமல் நாணச் சுமையால் வளைந்த முகத்தாமரையுடன், அம்மலர்க்கண்ணாள் முலை இணையிற் கண்ணிணை ஒளிபரவ, மங்கல பூரணகலசங்களில் சந்தனக் கஸ்தூரி தெளித்துச் சுபகர்மங்கள் செய்யும் பொலிவு தோன்ற இருந்தாள். இவ்விதமிருக்கக் கண்ட தோழிகள் ''என்ன இந்தப் பக்கம் வருகிறாய்! அப்பக்கம் போவதற்கென்னவாம்? நீ இவ்வளவுதானா? இது பெண்மைக்கழகோ? எழுந்து போ!'' என்று கூறவும் மிகுந்த வெட்கத்துடன் சிறிது துணிவுற்று எழமுயன்று, மீண்டும் நாணமுடன் தவிர்த்து, தோழியர் பலவந்தமாக உள்ளே அனுப்பட்டுமென்று விரும்பியவளாக இருந்தாள்.

அவ்வளவில் சாதுரியம் மிக்க தோழி ஒருத்தி அன்புடன் அருகே வந்து ''கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்தி மகனையும் மகளையும் பெற்றெடுத்த இல்லக்கிழத்தியருக்கும் உன் போல வெட்கமில்லை என்று நினைத்தாயா?

பேசாமல் வருகிறாயா? என்ன வேண்டும்?'' என்று கூறிய வாறு கையைப் பிடித்திழுத்தாள்.

அப்போது களாபூரணன் அவள் வருகையை எதிர் பார்த்து அவர்களது கிசுகிசு வென்ற அரவம் அருகில் கேட்கவே, காதலியைக் காணவேண்டும் என்னும் வேட்கையை அடக்க முடியாமல் எழுந்துவந்து குதூகலத் துடன் ஜன்னல் வழியாக அவள் உருவ அழகைப் பார்த்து வியப்பெய்தித் தலைமுதல் கால் வரை ஆராய்ந்து தன் மனத்துள் இவ்விதம் எண்ணலானாள்.

"கீழும் மேலுமாக வீழ்ந்து பொறாமையுடன் போராடும் (நுதல்) பிறைச்சந்திரனின் தோள்கள் என வகிடணிந்து, முத்துமாலையும், பொங்கி எழும் இருளி னுடைய (கூந்தல்) தோள்கள் எனக் கஸ்தூரித் திலகமும் தோன்றின. அவளது பிறைநுதலும் இருட்கூந்தலும் போராடும் பாங்கு என்னென்பது!

மன்மதன் அர்த்த சந்திர பாணம் தொடுத்தாற் போல வகிடுடன் நுதல் தோன்ற, அதைத் தடுக்க வைத்த வில் போல அவளது புருவங்கள் திகழ்கின்றன. மன்மதன் தனது கொடிக்குச் சின்னம் தேடிக் கிடைத்த ஒன்றோ டொன்று விரட்டியாடும் இரு கயல்களை (கண்கள்) முகம் எனும் முறுவல் சிந்தும் அமுதப் பொய்கையில் விட்டு, அவை துள்ளி விழாமல் தடுக்க வைத்த சம்பகத்தின் அம்புப் பொதியோ எனும்படியாக அவள் நாசி திகழ்ந்தது. கண்கள் எனும் கயல்கள் அசைந்தோடுவதால் முகமெனும் பொய்கையில் அழகு எனும் அமுத வெள்ளம் பாய அதை விடாமல் தடுக்க ஏற்படுத்திய சிறிய குளமோ எனும் படியாகச் செவிகள் இருந்தன.

தண்கதிர் மதியமொத்த முகமுடைய இவள் இதழ்கள் தொண்டையங்கனியெனத் திகழ்கின்றன. சுகாதி முனிவர்

கள் பிரம்மானந்தமுறுவது போலவும், கிளிகள் கனிரசம் மாந்திக் களிப்பது போலவும் நானும் இவள் இதழமுதம் மாந்துவேன். அந்திச் செவ்வொளி படர்ந்த சிறுமுகில் கீற்றினிடையே, ஒரு சிறிது தோன்றிக் கண்சிமிட்டும் தாரகைகள் போலச் செவ்விதழ் மறைவிடையே முல்லையம் பற்கள் இலங்குகின்றன. புதுமகரந்தமும், பராகமும், காய்களுடனும், தும்பிகளுடனும் திகழ்கின்ற கமுகினைப் போல, காதொளிரும் மணியுடனும் மலர்களுடனும் திகழ் கின்ற இவள் கழுத்து எழிலுடனிருந்தது. பொற்றாமரை முகைகளை (முலைகள்) நிறுத்திய இரண்டு நாளங்களென இடையும், அவை பாரத்தினால் குறுக்கு முகமானதெனத் தோற்றும் முலைகளின் எழில், அழகிய அந்த நாளங்களின் இடைவெளி போன்ற மயிரொழுங்கு திகழ்கின்றன. இரு நாளங்களையும் இணைத்த பற்றவைப்பு போல வயிற்று மடிப்புகள் உள்ளன. அடடா! என்னவென்று சொல்வது! இவை என்னை அலைக்கழிப்பது சரிதான். மன்மதனின் மலரம்புகளில் தாமரையும் ஒன்றல்லவா? மன்மதனும் ரதியும் களியாட்டயரத்தகுந்த பூப்பந்துகள் எனத்தகும் முலைகள், பூப்பந்துகளைத் தேனீக்கள் அண்டாமல் தடுக்க வைத்த சம்பகமலர்ச் சரம் போன்ற தோள்கள். களியுடன் அமைத்த தளிர்கள்தான் இவள் கரங்கள். இவளது சுழிபோன்ற கொப்பூழ், என்னுளத்தை ஈர்த்துச் சுழலச் செய்கிறது. மங்கை நல்லாளின் நிதம்பம் ஜம்புநதி (பொன்விளையும் இடம்) மணல் திட்டென எழில் பெறும் மென்பனியென வெண்டுகில் அழகூட்டும்.

அணங்கிவள் தொடைகள் பிடியின் துதிக்கை போன்றும் பிருஷ்டபாகம் அதன் தலைபோன்றும் தோன்று கிறது. தாமரைக் கண்ணாளின் மெல்லடிகளிற் சிலம்பு புலம்புவது எனக்கிணையை வென்றேன் என்று கூறுவது போலுளது. இதற்கு இணை இவ்வுலகில் வேறுவமை கூற முடியுமா? இவள் பாதமாகிய தாமரைமலரைப் பற்றிய விண்மீன்கள் நகங்களாக ஒளிர்கின்றன. இது

நியாயம்தான். முன்பு தாமரை மலர்களும், விண்மீனின் தலைவனாகிய சந்திரனும் சூரியனின் ஒளி பெற்றுப் புகழ் பெற்றவர்கள்தானே. ஆகையால் விண்மீன்கள் தம் தலைவனான சந்திரனுக்கு நட்பான தாமரையை நட்பாட வந்துற்றன."

இவ்விதமாக வர்ணித்துக் கொண்டு அவளது அரவணைப்பை வேண்டி ஆர்வம் மீதூரத் தடையின்றி விரைவில் வரவேண்டுமென மனத்துட் கோரினான். அவ்விளம்பிடி அவ்வளவில் அவ்வறைக்கருகே வந்ததும் வெட்கத்தால் நடக்காமல் தோழிகளை மிகவும் அலைக்கழித்தாள். மன்னனும் "ஏ! கொடிய வெட்கமே! உனக்கு நான் என்ன தவறிழைத்தேன்! ஏன் என் காதலியை வரவிடாமல் தடுத்து என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்று பழித்தான். அவ்வளவில் அவ்வில்லத்தின் முன் நங்கை வரவும் விரைந்து சென்று மன்னன் தன் படுக்கையிற் படுத்துக்கொண்டு மகிழ்ச்சி பொங்க இருந்தான்.

அவ்வளவில் ஒரு தோழிப்பெண் கையால் வாயைப் பொத்திக்கொண்டு "அடி! பைத்தியக்காரி! பிணங்காமல் சும்மா வா! அதோ! எதிரே பார்த்துக்கொண்டிருப்பார்" என்று கூறி மணாளனைக் காட்டினாள். மெல்லடி தடுமாற, புளகாங்கிதமுற்றவாறு தோழியின் பின்புற மொதுங்கச் சென்றவாறே கடைக்கண் பார்வையால் காதலனிருப்பிடத்தை மெல்ல ஆராய்ந்தாள்! அவளது கடைவிழிப் பார்வை ரதிமன்மதர்கள் பல்லக்கில் போவது போல இருந்தது. எப்படி என்றால், அவளது கண் மேல் இமை மயிர்கள் பட்டுமெத்தையின் கரைக்குஞ்சங்களாகவும், இமைகள் பல்லக்கின் மேற்கட்டாகவும், கருவிழிகள் கண்ணோரத்தில் காணப்படுவது, செவ்வரி எனும் திண்டினிற் சாய்ந்து கொண்டிருக்கும் ரதி, மன்மதரின் தலைகளாகவும், வெண்விழிப் படலம், வெண்துகில் போர்த்த உடலாகவும் தோன்றியது.

அவ்வளவில் திரும்பித் திரும்பிப் போக முயலும் அக்கன்னிகையைத் தோழியர் பலவந்தமாகப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள். அப்போது ஒருத்தி அவளது இரு தோள்களையும் பிடித்துக் கணவனின் பாதத்தருகே இருத்தினாள். பின் "மணாளனின் பாதங்களைப் பிடித்து விடுவாயாக! மறுத்தால் தெரியும் அல்லவா?" என்று கூறி மன்னனைப் பார்த்து "இங்கு அடி வைத்து மிதித்து விடாதீர்கள்! கவனமாயிருங்கள்!" என்று கூறி நகைத்தாள். பின் மன்னனின் பாதங்களை மங்கையின் தொடைகளில் வைத்து அடியொற்றச் செய்து வற்புறுத்தி அவள் கரங்களால் பாதங்களைப் பிடிக்கச் செய்தனர். "அதோ! யாரோ அழைக்கிறாற் போலிருக்கிறது! என்னவென்று கேட்டு வருகிறேன்" என்று கூறி ஒருத்தி சென்றாள். "கிளி பசியோடிருப்பதை மறந்துவிட்டோமே! அதோ கூப்பிடுகிறது! போகிறேன்!" என்று ஒருத்தி நகர்ந்தாள். "அடடா! தாம்பூலப் பெட்டி கொண்டுவர மறந்து விட்டேன்! கொண்டு வருகிறேன்" என்று ஒருத்தி கூறியவாறு போனாள். "அவள் போய் எவ்வளவு நேரமாயிற்று! நான் போய்க் கூட இருந்து அழைத்து வருகிறேன்" என்று ஒருத்தி கடந்தாள். "எல்லோரும் போகிறீர்களே! நானும் வருவேன்" என்று விரைந்தெழமுயன்ற மதுரலாலசையின் தொடைகளைக் களாபூரணன், தன் பாதங்களால் அழுத்திப் பிடித்து நிறுத்தினான்.

மங்கை பிணங்கி மீண்டும் எழ முயல அவளது அணிகள் ஒலி செய்ய மன்னன் "இவ்விதம் சப்தம் செய்தால் உன்னை நாணுடையவள் என்பரோ" எனக் கூறியவாறு தன் மேல் விழுமாறு கையைப் பிடித்திழுத்தான். செவிமலர்கள் அசைய நங்கை "அணிகள் ஒலி செய்யுமாறு அசைதல் கூடாதென்று" நினைத்தவாறு சிலம்பு முதலிய சில அணிகளைக் கழற்றவும் "காதலி! ஆயத்தம் செய்வது நன்றாயுள்ளது" என்று கூறி நகைத்தவாறு அவள் கன்னங்களை உராயும்படியாக அந்தரங்கங்கள் பேசினான்.

அப்போது எந்தப் பேச்சும் செவியில் விழாதவாறு பிணங்கி முகத்தைத் திருப்பித் தூரமாக விலக்கவும் அல்லவுமான அவளது கரஸ்பரிசமே மன்னனுக்கு இந்திர போகமாகவும், அவள் அழகிய முகத்தாமரையை இமை விடாமற் பார்த்துக் கொண்டிருப்பதே பிரம்மானந்தமாகவும் இருந்தது.

பிரசித்தமான காதற் கதைகளைச் சொல்லி இதய பயத்தை நீக்கி, ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி முலை தொட்டு ஸ்பரிச சுகமீந்து பழக்கப்படுத்தி, காமக் குறும்புகளால் கன்னங்களில் நகை நிலவை முளைக்கச் செய்தும், வெட்கத்தை விளைவிக்கும் சொற்களை அடிக்கடி பேசி நாணத்தைக் களைந்தும், காதல் வேதத்தைக் கற்பித்தான். மணாளனின் காமக் குறும்புகளால் காதல் மிகுந்து உணர்ச்சிகள் மின்னலென ஒளிர்ந்தாலும் அவளது நாணம் எனும் மேகத்தில் நிலையிலாது உடன் மறைந்துவிடும். அதுகூட அவன் உள்ளத்திற்கு மிக்க மகிழ்ச்சியை ஈந்தது. பின் அச்சமும் நாணமும் உடைய அணங்கன்னாளை உடன்படுவித்து முத்தங்கள் ஈந்து அவள் மனதைக் கரைய வைத்தான். இவ்விதமாக மிகுந்திடும் காதல் உணர்ச்சிகளால் மங்கையைக் கலவிக்கிசைய வைத்துக் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டு அரவணைத்துக் கொண்டு, சொக்கியும், சொக்கவைத்தும், பலவிதமான காதற் களியாட்டயர்ந்தான். நாள்தோறும் கலவியின் உற்சாகம் பிறந்து வெட்கமும் அச்சமும் விட்டொழித்து மங்கையும் இணையென நின்றாள். கொங்கைகளைத் தொடவிடாது, இதழுக்கு முகஸ்பரிசம் விடாது, சேலை அவிழ்க்க விடாது, பிணங்கி நாளடைவில் அலுத்து விட்டவள் போல, இணங்கி மன்னனை மகிழ்வித்தாள். தழுவுவதைத் தடுப்பதுபோல் பராக்காக இருந்து இதழமுது பருக இசைந்தும். இதழ் சுவைத்தலைக் கடிவது போலிருந்து முலைக்குவடுகளை ஒற்ற இடம் தந்தும் முலைப் பூங்கொத்துகளைப் பார்ப்பது போலிருந்து இடைத்துகில் கவர இணங்கியும் துகில் சரிப்படுத்துவது

போல இருந்து அல்குல்லைதவர அனுமதித்தும், தன் நாணத்தையும் காத்துக்கொண்டு மன்மதலீலைக்கும் உடன் பட்டுக் கணவனுக்குப் புதிய இன்பம் விளைவித்தாள்.

பொய்த்துயில் கூரும்போது, கணவனை ஆரத்தழுவி இதழோடிதழ் சேர்த்து இன்புறும்படி மகிழ்வித்தாள். பொய்த்துயில் எனபதுணர்ந்தும் உணராததுபோல் சில இரவுகள் கடக்கக் கணவன் அடக்கமுடியாமல் நகைக்கவே தானும் நகைத்தாள். பின்னர்க் காதல் மிகுதியில் நாணத் தைப் போக்கியவளாகக் கணவன் செய்கைகளைத் தடுக்கும் போது சிரித்தும் பேசியும் 'நான் சம்மதிக்காவிட்டாலும் விட மாட்டாய்! இப்போது இதைப் பொறுத்துக் கொள்க' என்று நகைத்தவாறே கூறிக் கணவனின் இதழ் களை முன்பற்களால் அழுத்தினாள்.

'நான் சொன்னதுபோல் செய்யாவிட்டால் பிணங்கினா யானால் நீ செய்ததுபோல நானும் பதிலுக்குச்செய்வேன்' என்று கணவன் அதட்ட அஞ்சினாற்போலத் தான் கணவ னின் வேட்கையைத் தீர்த்துப் புருஷாயித கேளியில் இன்புறுத்தினாள். மென்முலைகளைக் கணவன் இன்புடன் காண வெட்கத்தால் அவனது மார்பில் சாய்ந்தும், மீண்டும் எடுத்து நிறுத்திப் பிடிக்க இருகரங்களால் முகத்தை மூடிக் கொண்டும், தனது மறைவுறுப்பை மறைக்க இயலாமல் ஓடியும், முதலில் மறுத்தாலும் பின் புருஷாயித கேளியில் ஈடுபட்டபின் அளவறியாமல் தன்னை மறந்து, முயங்கி இன்புற்றாள். கலவியில் களைப்புற்ற அவளது—கலைந்த கருங்கூந்தல் மேகமாகவும் அசைந்தாடும் காதணிகள் மின்னலென ஒளி வீசவும், சிதறிய மல்லிகைப் பூக்கள் கொக்குகள் வரிசையாகப் பறப்பது போலவும், அறுந்த முத்துமாலை ஆலங்கட்டிகளாகவும், நெட்டுயிர்ப்புடன் கூடிய வியர்வைத் துளிகள் மழையாகவும் அமையக்கண்டு மன்னனின் இதயம் எனும் மயில் கண்டு களிநடம் புரிந்தது. சிறிதே மூடிய விழிகளையுடையவளாய், இற்ற இடையணி (மேகலை) யுடையவளாய், ஓய்வுற்ற மூலை

யசைவுகளையுடையவளாய், தளர்ந்த தொடைகளுடைய வளாய், களாஸ்தானங்கள் தொடும் போது மெதுவான குரலெழுப்பியும், களைத்து மீண்டும் வேட்கையுடன் புருஷாயித கேளியில் திருப்தியுற்றாள்.

இவ்விதம் நாள்தோறும் வளரும் மன்மதக் கலை நுட்பங்களை ஓர்ந்து அம்மங்கையுடன் மன்னன் இன்புற்றிருந்தான். அவ்வளவில் வசந்த காலம் முடிவுற்றுக் கோடை வந்தது. இளவேனிற்கால மலர்கள் எனும் மன்மதனின் படைகளை முதுவேனிற் காலப்பெருங்காற்று அள்ளித் தூற்றிவிடவே, அவனது சினத்தீயோ எனும்படியாகப் புரச மரங்களின் செந்நிறமான பூக்கள் எங்கும் ஒளி வீசியது. தாமரைப் பொய்கைத் தடங்களிலும் பன்னீர் தெளித்த பந்தரில்லங்களிலும், நிலவுமிழும் சந்திரகாந்தக் கல் மேடைகளிலும், செங்குவளை மலர்ப்படுக்கைகளிலும், கற்பூரவேதிகைகளிலும், அமர்ந்து முத்து மாலையணிந்தும் மல்லிகைப் பூந்தொடையல் பூண்டும், சந்தனம் பூசியும், தண்மையுற்று அத்தம்பதிகள் கோடைக் காலத்தைக் கழித்தார்கள்.

கார்காலமும் சீர்பெற வந்தது. தாமரை மலர்களை துப்புரவில்லையென நீங்கிய வண்டுகள் கடம்ப மலர்களை நாடிச் செல்லவே, அவற்றோடு செல்லும் புகழோ எனும் படியாக அன்னங்களும் அகன்றன. அக்காலத்தில் மின்னலுக்கும் இடிமுழக்கிற்கும் அஞ்சும் பாவனையில் அம்மங்கை கணவனை அரவணைத்துக்கொண்டு விடாமல் இருந்தாள். மன்னனும் அவளைத் தேற்றுவது போலத் தழுவிக் கொண்டு விடாமல் இருந்தான். இவ்விதமாக ஒருவரை ஒருவர் காதல் மிகுதியினால் இளமை நலம் துய்த்தவர்களாக இன்பக் கடலில் திளைத்தனர்.

அவ்வளவில் அற்சிரம் (முன்பனிக்காலம்) வந்தது. தனது தலைவன் இவ்விதம் அம்மங்கையுடன் இன்புறலால் பூமி எனும் நல்லாள் சரத்ருதுவெனும் பசலைக்காட்பட

டாளோ எனும்படியாக முற்றிய நெற்கதிர்களையுடைய வயல்களுடனும், கரும்புத் தோட்டங்களுடனும், நாணற் பூக்களுடனும், கருமருதாணிகளுடனும் செழித்துப் புதிய பொலிவு கொண்டாள்.

அந்நங்கைக்கும் நம்பிக்கும் அந்நாட்கள் மிகுந்த களிப்பை ஈந்தன. கற்பூரம் சந்தனம் தழுவி வந்த இளந் தென்றற் காற்று அவர்களது கலவிக் களைப்பில் விளைந்த வியர்வையைப் போக்கி ஆனந்த வெள்ளத்தில் மிதக்கச் செய்தது. பின் ஹேமந்த ருது (பின்பனிக்காலம்) வந்தது. தாமரை மலர்கள் நலிவெய்த மஞ்சு சூழ்தரப் பனிக்காற் றானது முயங்கும் வனிதையர் முகமெனப் பொலிந்த நிலவு மிகும்படியாக இரவுகள் நீண்டன.

அகிலும், ஜவ்வாதும் பூசிய வைரமணி மேடையில் அம்மன்னன் தளிரிலையொத்த தையலை ஆரத்தழுவிப் பனி நீக்கிய பகலவன் எனத் திகழ்ந்தான். மாசிலாத மாசி மாதம் லவங்கக் கொடிகளை நாடிய தும்பிகளை யுடையதாயும், பனியெனும் பணியாள் கொண்டு மன்மதன் கொடுமைப்படுத்தவே, கலவியின்றியும் கவவுக்கை நெகிழாது தழுவிய இளைஞர்களையுடையதாயும் சிறப் புற்றது. மடிப்புகளையுடைய போர்வைகளையும், கொசு வலை மஞ்சமும், கணப்பையுடைய அடுப்புகளையும் அகிற்புகைகளையும் உடையதான பனிக்காலத்தை மங்கை யின் கொங்கைகளைச் சரண் அடைந்தவனாக மன்னன் கழித்தான்.

வசந்த காலம் வந்தது. மலர்ந்த பூக்கள் எங்கும் காணப்பட்டன. செந்தளிர்கள் முந்தி வந்தன. மந்தா னிலம் மருங்கசைந்தன. மாங்குயில்களும், பைங்கிளிகளும் பாடின. முற்றிய மாதுளம் பழத்தைப் பற்றிக் கீறும் கிளிகளும் இளந்தளிர் கோதும் குயில்களும் மங்கையின் மென்முலைக் குவடு பற்றும் ஆசையையும், இதழ் கோதும் ஆசையையும் மன்னனுக்கு ஊட்டின.

இவ்விதம் அவன் எல்லாப் பருவங்களிலும் மேன் மேலும் வளரும் காதல் மிகவே தகுந்த கருவிகளுடனும் செல்வங்களுடனும் மிகுந்த இன்பத்துடன் புதுமணமதுவின் தேறல் மாந்திச் சுகித்திருந்தான்.

மென்தளிர்ப்படுக்கையில் அரிதாக வரவழைத்த புலவி யினால் மாறுமுகம் கொண்டு புரண்டு படுத்து 'உங்கட்கு இவ்வளவு சாகசம் ஆமோ?' என்று கூறி மீண்டும் புன்னகை யுடன் அணைத்துக்கொள்வாள். அம்மன்னன் அபிநவ கௌமுதி (முதல் மனைவி)யுடனும் நெறியுடன் சமான மான காதலுடன் தக்ஷிணநாயகனாக மிளிர்ந்தான்.

இப்படியிருக்கும் காலத்தில் ஒருநாள் அபிநவகௌமுதி இசைமணம் பரவ எழில்மிகும் வீணையை ஏந்திப் பாடி மன்னனை மகிழ்வித்தாள். அவ்விசையைக் கேட்க, மன்னன் மதுரலாலசையைப்பார்த்து 'நங்கையே! உன்னை இசை வல்லாள் என்று சொல்லக்கேட்டேன். இவ்வீணையை ஏந்திப் பாடுவாயாக' என்றான். எனலும் உடன்படவும் மறுக்கவும் இயலாதவளாய் அஞ்சியவளாக அங்குமிங்கும் பார்த்துக் கலவரமுற்ற மதுரலாலசையைப் பார்த்து மன்னன் 'என்ன இது? சொல்' என்று வற்புறுத்திக் கேட்டான். கேட்டதும் 'இந்த வீணையின் சுரத்திற்கும் என் சுரம் இணைந்து வருமா? என்று ஐயம் ஏற்பட்டது' என்றாள். அதற்கு மன்னன் 'பரவாயில்லை! 'இயல்பாகவே பாடலாம்' என்றான். வீணையின் சுரத்தை மடக்கி உன்னதமான முறையில் அவள் குரலிசை அமுத வெள்ள மாகப் பாய்ந்தது. மன்னன் வியப்புற்று அவள் திறனைப் பாராட்டி 'மூவுலகிலும் ஈடற்ற இசை' என்று புகழ்ந்துரைத் தான். அபிநவகௌமுதியும் மிகுந்த வியப்பெய்தினாள். பின் சிறிது சிந்தித்து மன்னன் மதுரலாலசையை நோக்கி 'நீ வாசிக்கும் வீணையைக் கொண்டுவரச்செய்! அதன் திறன் காண்போம்?' என்றான். அதற்கு அவள் அடக்கத் துடன் 'யாருக்கு எப்படித் தோன்றினும் உண்மை சொல்வ தல்லது மறைத்து வைக்கும் எண்ணம் என்னிடம் இல்லை.

என் குரலுக்கு இணையாகப் பாடும் வீணை எங்கு ஆராய்ந்தும் கிடைக்கவில்லை. இங்குள்ள இவ்வீணையைப்பற்றிக் கேட்டுப்பார்க்கவேண்டும் என்று அவாவினேன். அதன் திறனும் தாங்களே தெளிவாகக் கண்டதுதான்' என்றாள்.

இவ்விதம் கூறவும் அம்மன்னன் அம்மங்கையிடம் இவ்விதம் கூறினான். "தற்காலத்துள்ள வீணைகளில் இதுதான் சிறப்புடையது என்று கருதி இதைவிடச் சிறந்ததைத் தேடும் கருத்தின்றி இருந்தேன். உன் இசை கேட்ட பின் இது திறனற்றதென்றும் இதைவிடச் சிறந்தது வேண்டும் என்றும் தோன்றுகிறது." பின் அபிநவகௌமுதியைப் பார்த்து "இவளது குரலுக்கேற்ற வீணை எங்கேனும் உண்டா?" என்று கேட்டான். அது கேட்ட அவள் "மன்ன! தேவரீருக்கு இசை பற்றிய ஆய்வு வேளையில் முன்பு நான் கூறியுள்ளேன். எனது இந்த வீணை எல்லா வீணைகளுக்கும் மேலானதென முன் தும்புரு பாராட்டி வைத்துக்கொண்டிருந்தார். அவருடைய அன்புக்குகந்த மாணவியாதலின் அதை எனக்குத் தந்தார். இதைவிடச் சிறந்தது எங்கு கிடைக்கும்?" என்று கூறிச் சிறிது சிந்தித்த பின் இப்படிக் கூறினாள். "அந்தத் தும்புருவும் நாரதரிடம் தோற்றதாகக் கேள்விப்பட்டோம். அதன் காரணம் முழுதும் தெரியாது. வேறென்ன சிறப்புகள் உள்ளதோ? யாரறிவார்?"

இவ்விதம் கூறவும் அச்சொற்களினால் களாபூரணன் முன்பு மதுரலாலசை சொன்ன கதைகளில் தான் கேள்வியுற்ற தும்புருவின் வெற்றி முயற்சிகளை நினைத்துக் கொண்டு அதன் மூலம் தன் முற்பிறப்பு நிகழ்ச்சிகள் நினைவுக்கு வர அதில் மிருகேந்திரவாஹனி (சக்தி) கோயிலில் தான் மறைத்து வைத்த தனது வீணையைப் பற்றி நினைவுகூர்ந்து, 'மதுரலாலசையின் குரலுக்கேற்ற வீணை அதுதான்' என்று முடிவு செய்து அவளைப் பார்த்து "இன்னொரு வீணை ஓரிடத்தில் இருக்கிறது. உன் குரலுக்கு ஒத்துவரும்" என்று சொன்னான்.

இப்படிச் சொல்லுமுன்பே அபிநவகௌமுதியை அவளது தோழிகள் அருகழைத்து எட்ட அழைத்துச் சென்று தனியிடத்தில் இவ்வாறு கூறலானார்கள். "அந்தோ ! பெண்ணே ! உன் சக்களத்தி மேல் கணவன் அன்பு மீதூரச் சொல்லும் சொற்களுக்கெல்லாம் ஆமாம் சாமிபோடுகிறாயே ! வீணை குறித்து நீயே எல்லாம் சொல்கிறாய். அவளது இசைக்கு உன் வீணை கீழடங்கி விடும் என்று உணர்ந்துதான் அவர் அவளை அழைத்து வந்து உன்னை அவமானப் படுத்தியிருக்கிறார். எங்கள் பேச்சை நம்பு அவள் மீது உன் கணவன் அன்பு பூண்டு அவளது அணியைத் தன் கரத்திற் பூண்டுள்ளான். உனக்குத்தான் ஒன்றுந் தெரியாதே. சிறிது புலவி கூர்ந்து முகம் திருப்பினால் என்ன குறைவந்துவிடும்? எவ்வளவு சொன்னாலும் உனக்குக் கோபம் வருவதில்லை. இன்று புலவி கொண்டு உன் அன்பை நிலைநிறுத்திக்கொள். உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு இன்று கணவனிடம் எப்போதும் போலப் பேசாமல் சிறிது இருந்து பொறுமை காட்டு. எங்களுக்காகவாவது இப்படிச் செய். மதுரலாலசை மேல் காதல் மிக்கிருந்தால் தனித்து அவள் இசையைக் கேட்க வேண்டியதுதான். அதற்காக இப்படி உன்னைத் தாழ்மைப்படுத்த வேண்டுமா ? நீயும் பொறுத்திருக்கலாமா? ஆகையால் உன் எளிமை நீங்கச் சிறிது நேரம் பேசாதிரு! மன்னன் தானாக வந்து உன் விருப்பம் நிறைவேற்றுவான். அவன் அன்பின் அளவை நாங்கள் அறிய மாட்டோமா ?" என்றிவ்வாறு போதனை செய்து அத்தோழியர் புத்தியை மாற்றிவிடவே அம்மங்கையும் தன் மனத்தில் "என் அன்புப் பெருக்கால் கணவனின் தன்மையைப் பற்றிச் சிந்திக்கவில்லையன்றித் தோழியர் சொல்வதும் ஆராய்ந்து பார்த்தால் உண்மையாகவே தோன்றுகிறது. ஆதலின் நான் இன்று புலவி கொண்டு இருப்பேன்." என்று நினைத்து அப்போது தோழிகளை அனுப்பி வைத்து அசையா உறுதியுடன் எப்போதும் போலிருந்தான்.

அவ்வளவில் அன்றிரவு மன்னன் தனதில்லத்திற்கு வரும்போது கண்டதும் மிகுந்த மரியாதையுடனும் அடக்கத்துடனும் பரபரப்புடனும் எழுந்திருந்து நன்கு அலங்கரிக்கப்படாத மேனியுடன் உபசாரங்கள் செய்தாள் எனினும் சரசமான பேச்சுக்களோ கடைக்கண் வீச்சுக்களோ இன்றிக் காதலுணர்வு காட்டாதிருந்தனள். படுக்கையில் தூசியில்லாமல் துடைத்து வெண் துகில் விரித்துத் தலையணையை வைத்து அமளிகொள்ளச் சித்தமாக்கி வைத்தபின் கணவன் படுத்திருப்ப அம்மங்கை அருகில் பொற்கட்டிலில் அமர்ந்து வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். இதெல்லாம் கண்ணுற்ற மன்னன் தன் மனத்தில் 'நான் இவள் அருகில் வரும்போது கன்னமெனும் கண்ணாடியில் காதற் சிறுபுன்னகையொளி மின்னிடும். மலரம்புகள் போல் மேன்மேலும் கடைக்கண் வீச்சுகள் படரும். தேன்ததும்பும் இன்சொற்கள் வெளிவந்துலவும். மென்முலைக்குவட்டில் நாற்று முளைத்தாற்போல் புளகாங்கிதம் உண்டாகும். ஆனால் இன்று ஏனோ இவைகள் இன்றி வெறும் பதிவிரதத்துடன் கூடிய மரியாதை மட்டுமே உள்ளது. என்னை ஏன் இப்படி வருத்துகிறாளோ தெரியவில்லை'' என்று ஐயுற்று ''இன்று ஏற்பட்ட இசைப்பாடல் தான் இவளது குடிலத்திற்குக் காரணம் போலும்! ஆராய்ந்து பார்ப்போம்'' என்று அத்தாமரைக்கண்ணாளை நோக்கி இவ்விதம் கூறினான். ''ஏனின்று ஒரு மாதிரியாகக் காணப்படுகிறாய்? எப்போதும் இப்படி இருக்கக் கண்டதில்லை'' என்று கூறவும் பதில் பேசாமல் மங்கை இருந்தாள்.

மீண்டும் மன்னன் 'மங்காய்! உன் மனம் இரும்பா? நீ மௌனமாக இருந்தால் எப்படிச் சகிப்பேன்? உன் மனத்துள்ளதை ஐயமின்றி என்னிடம் சொல்!' என்றான். அதற்கு அவள் சோர்வுடன் கணவனிடம் இவ்வாறு கூறினாள். 'இசையில் வென்ற மனைவியின் சொற்களே சொற்களன்றி இவ்விதம் தோற்ற எமது சொற்கள் உங்கட்கெதற்கு? அன்பு ஒரு பக்கம் இருக்கும்போது அனாவசிய

மான வெட்டிப் பேச்சுக்கள் எங்களிடம் பேசுவானேன்! எங்கள் பணி யாதுள்ளது? உங்களைக் காண்பதே அரிது இவ்வளவாவது தொண்டு செய்யக் கிடைத்ததே பெரும் பாக்கியம். மற்ற இன்பங்கள் எல்லாம் எங்கட்கு இனி எத்துணைத் தூரமோ? எட்டாக் கனிதானே! என் பாசம் நேசம், பரிவு, காதல் எல்லாம் இருக்கும்போதே இறப்பது தான் மேல்! அந்தப்பாக்கியம் கிடைக்கவேண்டி இந்தப் பாவி உயிரை வைது கொள்வதன்றி வேறென்ன செய்ய முடியும்! குணங்களிற் சிறந்த உன்னைக் குறைகூற முடியுமா? இசையிற் சிறந்து விளங்கும் மான்விழியாளின் மயல்களுக்கு உருகுவது தப்பா? அல்லது அவமானமுறச் செய்து ஒரு பெண்ணைப் பிரிவதுதான் தப்பா? ஆண்களுக்கு எதுவும் செல்லும்'.

இதுகேட்ட மன்னன் 'நான் என்ன குற்றம் செய்தேன் என்று இவ்விதம் என்னைப் பழி தூற்றுகிறாய்! என்னை விதி செய்த சதியால் விரக வேதனைக்குட்படுத்த வெறும் ஐயப்பாடுகளை யாரோ உண்டாக்கி விட்டார்கள் போலும். நான் உனக்குக் கேடு செய்வேனோ? உன் பாதங்கள் மீதாணை' என்று எழுந்துவந்து அவளது மெல்லடித் தாமரைகளைப் பிடித்தான். 'தொடாதீர்கள்! போதும்! போதும். உங்கள் மோகத்துக்குரியவளைப் பிடித்தால் தகுந்ததேயன்றி எங்கள் காலைப் பிடித்து ஏன் வெறும் குற்றங்களைச் சுமத்தப் பார்க்கிறீர்கள்!' என்று சினந்து கூறிப் பாதங்களை நகர்த்திக்கொண்டு தன் கரங்களால் மன்னன் கரங்களை விலக்கினாள்.

மன்னன் "ஓ! மதிமுக மடந்தாய்! உன்னைவிட மோகத்துக்குரியவர் வேறு யார் உள்ளார்கள்?" என்று கூறி இரு கைகளாலும் பிடித்தணைத்து மார்பில் சேர்த்துக் கொண்டான். அத்தளிர் மேனியாளும் கண்ணீர் மல்க நாதழுதழுக்க "உன் அன்புக்கும் தயைக்கும் குறைவுண்டாமோ? என்றும் உண்டாகாது! எனினும் இன்று என் உள்ளத்தில் நாணமும் தாழ்வுணர்ச்சியும் வருத்தமும்

மீதூர்ந்துள்ளது" என்றாள். எனலும் அம்மன்னன்!, "அன்பே! உன் வருத்தத்தை நான் அறிவேன். இன்று வரை இணையற்றது என்றிருந்த உன் வீணை மற்றொருத்தியின் குரலால் அவமானமுற்றதை எப்படிப் பொறுப்பது என்று வருந்துகிறாய். அதைவிடச் சிறந்த வீணை ஒன்று என் முற்பிறப்பில் வைத்திருந்தது ஓரிடத்தில் இருப்பதாக கேள்விப் பட்டேன். அதை எப்படியும் கொண்டு வந்து அதை மீட்டுவதால் உன்னை யாரும் வெல்ல இயலாதவாறு இசைக் கலையில் ஒளிபெற்றுத் திகழச் செய்கிறேன். நம்பு" என்று கூறினான். அவளும் அவன் முற்பிறப்பில் மணிகந்தரன் எனும் கந்தருவ குமாரன் என்று உணர்ந்தவளாதலின் அவனுக்கு அத்தகு வீணை இருப்பது கூடும் என்று மனதில் திடம்கொண்டு மகிழ்ச்சியுற்றாள். களாபூரணனும் அம் மங்கையின் மனக்குறையை நீக்கி மகிழ்ச்சிக் கடலில் திளைத்து இன்புற்றான்.

மறுநாள் அபிநவகௌமுதியின் தோழிகள் பேச்சுக் களால் செவிவழிச் செய்தியாக மதுரலாலசையின் தோழிகள் கேட்டு அவளிடம் தெரிவித்தார்கள். அம்மங்கை தன் மனத்துள் "கணவனைத் தன் வசம் நிறுத்திக்கொள்ளும் வாழ்க்கைக்கு இசையமுது ஈந்து மகிழ்விக்கும் எம் வாழ்வு இணையாகுமோ? எனக்குக் கொண்டுவருவதாகச் சொன்ன சிறந்த வீணையைத் தனக்குத் தரும்படியாகச் செய்துகொண்டாள். அடடா! கணவன் அன்பை வழிப் பறியாகக் கொள்ளை கொண்டாள். பெண் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்" என்று நினைத்தவளாக இருந்தாள்.

அன்றிரவு மன்னன் வரவும் புலவி கூர்ந்து ஒருவிதமாகக் காணப்படவே கண்ட மன்னன் அவள் காலில் வீழ்ந்து எண் திசை மன்னர்கள் மனைவியரின் மகுட மணிகளைக் கொணர்ந்து காற்சிலம்பு செய்து தருவேன் என்று ஆணை யிட்டுப் புலவி தீர்த்தான்.

இவ்விதம் இருமனைவியருக்கும் அவரவர்கட்குத் தான் தருவதாக ஒப்புக்கொண்ட பொருள்களைச் சாதிக்கும் பொருட்டு, எண்ணம் கொண்டு ஒரு நாள் இவ்விதம் சிந்திக்கலானான். "அபிநவகௌமுதிக்கு அவ்வீணையை இருக்குமிடம் சொல்லிவிட்டால் அவளே தருவித்துக் கொள்வாள். எனினும் அது தகுந்ததன்று. என் திறனுக்கும் இழுக்காகும். வேறுயாரையேனும் அனுப்பினால் தடை செய்வோர் இருப்பினும் வெற்றியுடன் திரும்பவேண்டும். மேலும் அந்நாட்டு மன்னன் அப்பொருளை விழைந்தாலும் விழையலாம். படைகொண்டு சென்றால் வழிப்பட்ட மன்னர் செல்வமும் நம் கைக்கு வரும். மேலும் மதுரலாலசைக்கு உடன்பட்ட சிலம்பு செய்வதெனில் திக்விஜயம் செய்தாலன்றி இயலாது என்றே தோன்றுகிறது" என்றிவ்வாறு ஆராய்ந்த மன்னன் தனது அமைச்சனான சத்வதாத்மனை அழைத்து மந்திராலோசனை மண்டபம் புக்கு யாரும் உள்ளே வராதவாறு வாயிற்காப்போர்களை அமைத்துத் தானும் அவனும் இருந்து ஆய்ந்தனர்.

மன்னன் தன் கருத்தை முற்றும் தெரிவித்த பின்னர்ச் சத்வதாத்மன் "மன்ன! அன்று நான் கணித்துச் சொன்னது சரியாக உள்ளதல்லவா?" என்றுகூறி மகிழ்ந்தான். மன்னனும் நினைவுகூர்ந்து 'ஆம்! அப்படித்தான்!' என்று கூறி "இதற்கு வழியென்ன? அறத்தாறு ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும்" என்றான்.

பின்னர் மன்னன் மீண்டும் இவ்வாறு கூறலானான். "சான்றோய்! நான்கு செவிகள் (இருவர் மட்டும்) மட்டும் அமைந்த சூழ்திறனே மந்திரமெனப்படும். அந்த மந்திராலோசனையே பயன்படுவது ஆகும். நான்கு வேதமுணர்ந்த மந்திர வேள்விக்கிணையெனத்தக்கது. எனக்குத் தோன்றுவதைச் சொன்னால் அறத்தாற்றினை ஆராய்ந்து கொண்

டிருப்பது திறனற்றவர்களின் முறையாகவே படுகிறது. திறமைசாலிகட்கு எச்செயலிலும் வெற்றி கிட்டுவது உறுதி என்றே படுகிறது. எங்கு, எப்போது, எதைக்கொண்டு எவனை வெல்லவேண்டுமோ அவற்றைத் திறனுடையவன் எப்போது முயல்கிறானோ அப்போதே அடைந்து விடுகிறான். திறனுடையவனுக்குப் போரில் எதிரியைக் கண்டதுமே ஓர் ஊக்கம் பிறந்துவிடுகிறது நெருப்பானது காட்டை எரிக்கு முன்பே எழுந்து கொழுந்து (ஜ்வாலை களை)களைச் சேர்த்துக் கொண்டா வருகிறது? அவ்வப் போது கிடைத்த சாதனங்களைப் பற்றிக் கொண்டல்லவா அது பெரும் தீயாக உருவெடுக்கிறது. மலை போன்றிருப் பினும் மந்த நடையுடைமையால் மதகளிற்றைச் சிற்றுடல் வாய்ந்த சிங்கமானது ஊக்கமுடன் பாய்ந்து கொல்வது காணின் திறமையினால்தான் வெற்றியுள்ளது என்பது புலனாகிறதல்லவா? ஆற்றல் வாய்ந்தவனிடம் எல்லாக் கலைகளையும் உணர்ந்த நிபுணர்கள் சேவகம் செய்வதைக் காண்கிறோம். ஆற்றல் எனும் செல்வத்திற்கு இணை யாகப் பிற கலைகளை மதிக்க இயலாது. செங்கதிரோன் ஒளிக்கற்றைகள் படரவும் காரிருள் மாயமாக மறைந்து விடுகிறது. கலைகளையுடைய மதிநிலவுக்கு அப்படி இருள் போக்கும் ஆற்றல் இல்லை. ஆற்றலுள்ளவனுக்கும் கலை யறிஞனுக்கும் உள்ள வேற்றுமை இதில் காணலாம். எத்தனை தேவர்கள் இருந்தும் உருத்திரன் ஒருவன்தான் மேருமலையை வில்லாக வளைத்தான். ஆராய்ந்து பார்த்தால் ஆன்றோர்களைவிட ஆற்றல் வாய்ந்தவர்களே சிறப்புறுகின்றார்கள். 'இது மிகக் கடினம், இது சுலபம்' என்னும் வேறுபாட்டுணர்ச்சி சாதாரண மனிதர்கட்காகு மன்றி ஆற்றல் மிக்கவனுக்கு இல்லை. நெருப்பு, இது காய்ந்தது இது பச்சையானது என்று வேறுபாடு பாராது எல்லாவற்றையும் சுட்டெரிப்பது போல ஆற்றல் மிக்க வனும் எதையும் எளிதில் முடிப்பான். ஆதலின் விறல் மிக்கவன் உற்சாகத்துடன் இருக்கும் போதே எதிரிகளைப் படைகொண்டு போர் செய்ய வேண்டும். அதற்கு இப்போது தகுந்த சமயமாகும்.''

அது கேட்ட சத்வதாத்மன் (அமைச்சன்) மன்னனிடம் வினயமாக இவ்வாறு விண்ணப்பித்தான். "மாமன்ன! தாங்கள் அறிந்தது போல நான் அறிவேனா! எனினும் என் மனதுக்குத் தோன்றியதை உன் அனுமதியுடன் விண்ணப்பம் பேரில் அச்சமின்றிச் செய்து கொள்கிறேன். நெருங்கிய நட்பானவர்கள் இச்சகம் பேசக்கூடாதல்லவா? இடித்துரைக்கும் கேளிர்கள் அச்சமின்றி இச்சகம் பேசாது மெய்மையுணர்த்தல் முறையல்லவா? மன்ன! மிகுந்த பிரதாபமுடைய உன் கருத்துகட்கு என் மென்சொற்கள் சிறிது சரியாகத் தோன்றின் ஏற்றுக்கொள்க. நெருப்பில் ஒளிரும் வாளுக்குத் தண்ணீர் போல என் சொற்களும் பயன்படுவதாக. மன்னன் அறத்தாறு பிறழினும், நீந்துபவன் புணையைக் கைவிடினும், நோயாளி பத்தியத்தை விடினும், சில சமயம் வெற்றி பெறுவார்கள். எனினும் தோற்பினோ அவர்கட்கு வசை வந்து சேரும். அறத்தாற்றில் செல்லும் மன்னனுக்கு ஒரு தீங்கு நேரிட்டாலும் மக்கள் மன்னனை வசை கூறாமல் படைத்தவனை (கடவுளை)த்தான் நோவார்கள். எங்கும் அறத்தாறு அறியாதவனைச் சேர்ந்த திருவை (செல்வத்தை)த் திட்டு வார்கள்! இவனிடம் எப்படி இது சேர்ந்ததெனச் சபிப் பார்கள். இரும்போடு கூடிய நெருப்புக்கு அடிவிழாமல் போகுமா? எங்கும் புகழ் பெற்று ஏற்றம் மிக்க வலிமை யுடைய பேருடல் வாய்ந்த மதகளிற்றையும் மனிதர்கள் தங்கள் வாகனமாக்கிக் கொள்வதற்குக் காரணம் அறத்தாறு தானல்லவா! இச்செயல் இங்கு இயற்றலாம்! இச்செயல் இப்படிச் செய்ய முடியும்" என்று கூறுவது தானே நீதி என்பது. இந்த விவேகம் பேராற்றல் வாய்ந்த வர்களிடம் காண்பதரிது. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் தன் வெற்றிக்காக மலையை வில்லாகப் பூண்டது சான்றாகும். வில்லில் தொடுத்து எய்யும் அம்பு எவ்வளவு தூரம் போகுமோ அவ்வளவு தூரம் வெறும் கையால் கடவுள் போட்டாலும் போகாது. ஆதலின் வலிமையை விட அறத்தின் வலிமைதான் மேலானது.

மன்ன! கேள்! சந்தி! விக்கிரகம், யானம், ஆசனம் த்வைதம், ஆஸ்ரயம் என்று சொல்லப்படும் ஆறு குணங்களும் தகுந்த காலத்தில் அனுஷ்டிப்பதால் நன்மை பயக்கும். தகுந்த காலமின்றிப் பிரயோகித்தால் அதுவே தீமை செய்யும். சாம தான பேத தண்டம் எனும் நான்கு உபாயங்களையும் அதன் இலக்கணங்களையும் எல்லோரும் சொல்வார்கள். ஆனால் அதன் தன்மையுணர்ந்து பிரயோகிப்பவர்கள் அரிது. நகத்தால் கிள்ளத்தக்கதைக் கோடாலி கொண்டும். கோடாலி கொண்டு வெட்டத் தக்கதை நகத்தாற் கிள்ளவும் முயல்வது எப்படித் தகுந்ததன்றோ அது போல நான்கு உபாயங்களையும் எது எளிது எது அரிது என்று ஆராயாமற் செய்வது தகுந்ததல்ல. தன்னோடிணையான எதிரியிடம் சாமத்தாலும், மூல பலத்தாலும் வெல்லற்கரியவனைப் பேதத்தாலும், படைபல மிகுந்தவனைத் தானத்தாலும், தோல்வியுறுவான் என்று நிச்சயிக்கப்பட்ட வலிவற்றவனைத் தண்டத்தாலும் தன் கீழ்ப்படுத்தவேண்டும். வலிவற்றவனை க்ஷயம், ஸ்தானம் விருத்தி எனும் திரிவர்க்கத்தை உணர்ந்து காரிய ஆரம்ப உபாயம், ஆள் பலஉதவி, தேச கால வேறுபாடுகள், வீழ்ச்சியை மீட்டல், காரிய சித்தி எனும் பஞ்ச அங்கங்களையும் தெரிந்து, மூன்று ஆற்றலுடன் திகழவேண்டும். சூழ்ச்சியை மறைவாக வைத்துக்கொள்வதில் (மந்திர கோபனம்) விழிப்பின்மை, நீடு ஆராய்தல், வீண் ஆய்வு அருளின்மை, பெரியோரிடம் ஆராயாதிருத்தல், நலன் விழைந்து செயற்படாமை, பொய்ம்மை, மடி, நாத்திகம் பொருள்களில் வீண் செலவு, கடுஞ்சினம், தீர்க்க சூத்திரத்துவம், நிர்ணயித்த காரியங்களைச் செயற்படுத்தாமை எனும் பதினான்கு குற்றங்களை விட்டு, காம வெகுளிகளால் ஏற்படும் பெண் விழைவு, சூது, மது, வேட்டை கடுஞ்சொல், கொடுங்கோல், பொருள் தூற்றல் எனும் ஏழு விசனங்களையும் நீக்கி மன்னன் இருக்கவேண்டும்.

தன்னைச் சேவிப்பவர்களுக்குக் கூலியைக் காலந் தவறாமல் முழுமையாகத் தரவேண்டும். அவர்களது

அன்பே மன்னனுக்கு எல்லாவற்றிலும் சிறந்த வலிமையாகும். எந்தெந்தக் கட்டளைகள் யார் யாருக்கோ அவரவர்கள் தவறாது இயங்கும்படி மன்னன் மக்களை நீதி நெறியில் காக்க வேண்டும். தூய்மையுடன் கூடியவனாகத் திருட்டு முதலிய துன்பங்கள் நேராவண்ணம் மக்களைப் பரிபாலிக்க வேண்டும். தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டிக்காமல் விடுப்பதும், தண்டிக்கத் தகாதவர்களைத் தண்டிப்பதும் எனும் இரண்டும் மன்னனுக்கு வசையை உண்டாக்கி மன்னர்களை நரகினை அடைவிக்கும்.

இவையெல்லாம் இப்போது பேச்சுவாக்கில் சொல்லப்பட்டது. அன்றி எல்லா நீதி நெறிகளும் உணர்ந்த உனக்கு யாம் சொல்ல வேண்டியதில்லை. நீதி நெறியில் இயல்பாகச் செல்லும் ஆற்றல் உனக்கே உள்ளது. சகல திசைகளிலும் வெற்றிக்கொடி நாட்டிய மதாசயனை வென்றபோதே உன் ஆணை எல்லாத் திசைகளிலும் செல்லும் என்பது உறுதிப்பட்டது. எனினும் மன்னர்களின் அமைதி நிலையற்றதாகும். ஆதலின் நீயும் சென்று இடையில் தற்போது முளைத்த எதிர்க்கத் துணிந்த பகைவர்கள் எங்கெங்குளரோ அவர்களை அடக்கி வென்று உன் ஆற்றலைக் காட்டுவது தகுந்த செயலேயாகும். தாங்கள் ஆணையிட்டபடி அதற்குத் தகுந்த சமயம் இதுவேயாகும். எப்படி என்றால் நீ மதுரலாலசைக்குச் சகலதிசை மன்னர்களின் மகுட மணிகளால் நிர்மிக்கப்பட்ட சிலம்பு கருவதற்குச் சூளுரைத்தமையால் அதற்கு இதுவே தகுந்த காலமாகும். மதுரலாலசையின் அதிர்ஷ்டத்தால் உன் வெற்றி நிச்சயமாகும். அதன் துணைப்பயனாக அபிநவகௌமுதிக்கு வாக்களித்த வினையை அடைதற்கும் திக்விஜயம் இன்றியமையாததே. இவையிரண்டும் எளிதில் கைகூடும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆதலின் நீதி நெறிப்படி ஆற்றல் காட்டிப் படைகொண்டு செல்க" என்று கூறி மீண்டும் கூறினான். "பகைவனை வென்றபின் படை பலமும்

பொருள் வளமும் குறைந்து பெற்ற வெற்றி வெற்றியாமோ? உன் மனைவியின் அதிர்ஷ்டத்தால் உனக்குப் பொருள் வளத்துடன் வெற்றி கிட்டும். நீதி நெறிப்படி போரிடுபவனுக்கு வெற்றியுடன் திருவும் இணைவது உறுதி. மன்ன! கிழக்கு முகமாகச் சென்று முதலில் போர் செய்வது நலம். முன்னர்க் கிழக்கு, தெற்கு, மேற்கு மன்னர்களை முதலில் வென்று பின்னர் வடக்குமுகமாக வருக. உனக்கும் பின்னுள்ள நாடான மகத நாட்டு மன்னனைச் சமாதான உடன்படிக்கை மூலம் சந்தி செய்து கொள்வாயாக" என்றான்.

எட்டாவது அத்தியாயம்

அந்த மந்திரியின் நீதி நெறிமுறைகளைக் கேட்ட மன்னர் மிகவும் மகிழ்ந்து, மகத மன்னன் சீரும் சிறப்பும் மிக்கவன் ஆதலினால் அவனுடன் சமாதானம் செய்து கொள்வதே நலம் என்று ஓர்ந்து, அம்மன்னன் அவைக்குத் தூதனுப்ப முனைந்தான். உட்பகையாறும் வென்றவனும், மானமிக்கவனும், நேயம் மிக்கவனும், செஞ்சொல் ஆற்றலும், வீரமும், பிற அவையினர் தம் மனங்கவரும் திறமையும் உள்ளவனும், எங்கு அடக்கமாயிருக்க வேண்டும், எங்குச் செருக்குடன் இருக்க வேண்டும் என்ற விவேகமுள்ளவனும் ஆன தூதுவன் ஒருவனை மகத மன்னன்பால் அனுப்பி வைத்தான்.

அத்தூதுவனும் பிரபலமானவர்களின் மூலம் மகத மன்னனின் புரோகிதர், மந்திரி முதலானவர்களைச் சாம தானங்கள் மூலம் தன் வயப்படுத்திக்கொண்டு எல்லோரும் மரியாதை செய்யும் வகையில் அவையில் புகுந்து அம் மன்னனின் கேள்விகட்குத் தகுந்த விடையளித்துத் தான் வந்த செய்தியையும் தனது மன்னனின் பெருமையையும் எடுத்துக்கூறி அம்மன்னனின் மானத்திற்கு ஊறு நேரா வண்ணம் பக்குவமாக உரையாடி அம்மன்னனைப் புகழ்ந்துரைத்து நீதிநெறிகளை எடுத்துக்காட்டி இரு மன்னர்கட்கும் சந்தி செய்வித்தான்.

இணையற்ற வீரமுடைய அங்க நாட்டரசனாகிய களாபூரணன் தகுந்த முறையில் தன் நாட்டில் பொருள்

ளையும், தானியங்களையும், படைகளையும் குறைவின்றி நிலைநிறுத்தும்படி செய்து கோட்டையை அரண் செய்து தன் சேனாபதிகட்குத் தனது பயணத்தைத் தெரிவித்தான். அவர்கள் உற்சாகத்துடன் தத்தமது பாளையங்கட்குத் தெரிவித்தனர்.

செஞ்சுடர் மேற்கடலினை அணைய மெல்ல மெல்லச் செல்லவும், அருகணைவதால் கடலில் உள்ள பவள நிறமும் அலைகளின் குளிர்மையும் அடைந்ததோ எனும்படியாகச் செம்மை நிறமும் தண்மையும் பெற்றுத் திகழ்ந்தான். காலம் எனும் உழவன் மாலை நேரத்தில் செஞ்சுடரின் மஞ்சள் வெயில் என்னும் முற்றிவிளைந்த நெற்பயிரை அறுத்துக் கட்டுக் கட்டாகச் சுமந்து விரைந்தேகிச் சேர்த்த நெற்போர் போலக் கதிரவன் மிகவும் அகன்று பெரிதாகி மேற்கு மலையில் திகழ்ந்தான். காலம் எனும் தட்டான் மாலை வெயில் எனும் பொன்துகளை மேற்குத்திசை என்னும் மூசையில் இட்டுக் காய்ச்சி எடுத்த பொற்கட்டியோ எனுமாறு அழகுடன் கதிரவன் திகழ்ந்தான். அசன்பின் அந்தத் தங்கக்கட்டியை வெம்மை போக நீரில் மூக்கியது போலக் கதிரவன் கடலில் மூழ்கினான்.

பகல் எனும் உழவனின் கையிலிருக்கும் கதிரவன் என்னும் தீவட்டியை அவித்து வலிவுடன் மண்ணுக்கும் விண்ணுக்கும் இடை நின்ற பயிர்களை எல்லாம் உண்ண வந்த இரவு என்னும் மதகளிற்றின் முகத்திலுள்ள செம் புள்ளிகள் போலக் கமையந்தி நேரம் தோன்றிற்று. விஷ்ணு தனது விராட்சொருபத்தைக் கிருஷ்ணன் எனும் (கருப்பன்) தன் பெயருக்குப் பொருத்தமாக இருக்கக் கருமையாக்கினனோ? அல்லது சிவன் தனது கரியுரிப் போர்வையை மூடிக் கொண்டானோ? எனும் படியாக இருள் பரந்தது.

வானம் எனும் பருத்தித் தோட்டத்தில் இரத்த பலியிட்டார்கள் எனும்படி அந்தி வானச் செக்கர் தோன்றப்

பின்னர் மலர்ந்த ஒளிமிகும் பருத்திப் பூக்களோ எனுப்படி விண்மீன்கள் மிளிர்ந்தன. "வானுலகம் ஒளிமயமானது என்பது ஐயமின்றித் தெளிவாகத் தெரிகின்றது. அதோ வானம் என்னும் பழைய சப்பரத்தின் ஓட்டைகள் வழியாக் ஒளி வெள்ளம் புலப்படுகிறது" என்று காண்போர் மிக்க மகிழ்வுடன் காணும் வகையில் விண்மீன்கள் தோன்றின. விண்ணவர்கோமான் மாளிகை முன்றிலில் சந்தனம் தெளித்தார் எனக் கீழ்த்திசை வெளுப்ப, முன்றிலில் நிறுத்திய வெள்ளை யானை போலத் திங்கள் திகழ்ந்தது.

காலம் எனும் சாலியன் நிலவு எனும் ஆடையை நெய்ய உண்டாக்கிய தறி போலப் புதுக்கதிர்கள் பொலிவுற, அவன் வீட்டின் துவாரம் போலத் திங்கட் செல்வன் திகழ்ந்தான். வெண்பட்டுத்துகில் விரித்தாற் போலவும். பால் ஆறவைத்த பாங்கிலும், மாவைத் தெளித்தாற் போன்றும் நிலா அழகாக நிலவு பொழிந்தது. தமோ குணமென்னும் உலகிலுள்ள களங்கங்களைச் சத்வகுண மென்னும் நிலவு கழுவியது போல வானம் எழிலுற்றது. எனினும் பிறவி வினையோ என முகில்கள் மிளிர்ந்தன. இரவின் காதலனாகிய சந்திரன் ஒளிரவும், திருமகள் தாமரையை நீங்கிக் குமுத மலரை நாடினாள். மன்னனால் கைப்பிடிக்கப்பட்டோரே தேவியர் என்ற சொல் உண்மை தான்! அந்நேரத்தில் இரவில் பூ விற்கும் பூக்காரிகளிடம் விடர்கள் சரசசல்லாபமாகப் பேசலானார்கள். "இந்தப் பூக்களை வாங்கும்" என்று அவர் கூற "மன்மதன் வீசும் மலர்கள் மிகுதியாயிற்றே" என்றும் "வெறும் பேச்சுக்குக் கிடைக்குமோ?" என்ன "விரும்பும் விலை தருவோம்" என்றும் "உங்கட்குப் பிடித்தமானவை எவை" என்று கேட்க "ஒளித்து வைத்திருக்கும் பூங்கொத்துகள் தான்" என்றும், "இது விற்றபின் தான் அது விற்போம்!" என், தெரியும்! "நாங்களும் இதைத் தொடமாட்டோம்" என்றும் கூறி வெளியே வைத்திருக்கும் பூக்களை நாடாது ஈரத்துணியால் மூடி மறைத்துள்ள பூக்களை வேண்டுவது

போலச் (பூங்கொத்தொத்த மென் முலைகளை வேண்டு கின்ற தொனிப் பொருளுடன்) சரசசல்லாபம் செய்யும் விடர்களிடம் இருபொருளில் சாதுரியமாகப் பேசிப் பூக்காரிகள் பூக்கள் விற்றார்கள்.

அந்த மாலைப்போதில் நகரிலுள்ள சேனைத்தலைவர் கள் எல்லோரும் தாது மன்னனின் பயணத்திற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். களாபூரணன் அபிநவ கௌமுதியின் இல்லம் சென்று அத்தளிர் மென்கொடியாளி டம் "ஓ! மதிமுக மடந்தாய்! உனக்குத் தருவதாக இசைந்த வீணையைப் பெறுவதற்காகத் திக்விஜயம் செய் யப்போகிறேன். இன்று விடியற்காலை புறப்படப் போகி றோம்" என்றான். பின் மதுரலாலசையிடம் சென்று "உன் சிலம்பு செய்வதற்காக நான் திக்விஜயம் செய்யப்போ கிறேன். நாளை நன்னாள்" என்று கூறி அவளை மகிழ் வித்தான்.

அவ்வளவில் தமது மனைவியரின் அரவணைப்பில் மறந் திருந்த பயண வேட்கை விடிந்ததும் மிகுந்திடலால் பரபரப் புடன் எழுந்து கிழக்கே பார்க்கும்படியாக இரவு கழிந்தது. சந்திரன் மெல்லமெல்ல மறைந்தான். கோழி படபடவென்று இறக்கைகள் அடித்துக்கொண்டு கூவுவது விடியல் எனும் பள்ளத்தாக்கில் உள்ள கொள்ளைக்காரன் பெண்களின் மானம் எனும் செல்வத்தைப் பறிக்கத் தப்பட்டை அடித்து முழக்குகிறானோ எனும்படி இருந்தது. காலம் எனும் ரச வாத சித்தபுருஷன் பாதரசத்தைக் கட்டிக் குளிகையாக்கி வெண்ணிலவென்னும் பாலில் வேகவைத்து நன்கு வெந் ததோ எனப்பார்த்தது போல விடிவெள்ளி விளங்கியது. அந்த ரசகுளிகை தொட்ட இடமெல்லாம் தங்கமாக யாறி யதோ எனும்படியாகக் கீழ்வானில் எழில் மிகுந்த செவ் வொளி படர்ந்தது.

சந்திரன் மறையும்போது ஆஹநவநீயம் எனும் தீயிலி ருந்து பற்றவைத்த உமியில் வைத்து கார்ஹபத்தியம்

(வீட்டுத்தீ) என்று விளங்கியது. அகத்திய விண்மீன் தக்ஷிணாக்கினியாகத் திகழ்ந்தது. அருணோதய ஒளி ஆஹவநீயமாகப் பொலிந்தது. (எரிந்த உமி சிதறியது போல) சிறுசிறு நட்சத்திரங்களும் மிளிர்ந்தன. காலங்கடந்து விடுமோ என்ற ஐயப்பாடுடன் விரைந்தெழுந்த மக்கட் கூட்டமும், தேரில் கொடி ஏற்றுதல் முதலிய செயல்களில் முனைந்து திரிதரும் சாரதிகளும், மணி, கம்பளிப் போர்வை முதலியவற்றை யானைக்குச் சித்தப்படுத்திக்கொண்டிருக்கும் மாவுத்தர்களும், கடிவாளம் சேணம் முதலியவற்றை ஆயத்தப்படுத்தி விரைந்து செயல்படும் குதிரைவீரர்களும், தயிர் மோர், ஊறுகாய் முதலியவற்றை விற்கும் பெண்களின் கூப்பாடு கேட்டு விரைந்து உண்டி முடிக்கும் வீரர்களும் கூடி ஆரவாரமுடன் அந்நகரம் திகழ்ந்தது. தகுமுறையில் பல்லக்கு, சப்பரம் முதலியவற்றை ஆயத்தம் செய்யும் பல்லக்குச் சுமப்பவர்களும், தகுந்த வாகனங்களில் அந்தப்புர மகளிர்களை ஏற்றித் திண்டுகள் போடும் அந்தப்புரக் காவலாளர்களும், வழியில் சிப்பாய்களை நிறுத்தி அதன் முனையில் காணப்படும் சேனைத்தலைவர்களும், ஒட்டகம், பெண்குதிரை, எருது, வண்டி முதலியவற்றில் பொன் நாணயப் பெட்டிகளை ஏற்றிச் செல்லும் கஜானா அதிகாரிகளும் மிகவும் விரைவுடன் ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்த ஆரவாரமானது சந்திரனைக் கண்ட கடல் போலத் திகழ்ந்தது.

போர் செய்யப் புறப்படும் காலத்துக்குத் தகுந்த வேத மந்திரங்களை அந்தணர்கள் ஓதி, வாழ்த்திசைப்பவும் புலவர்கள், போற்றி, போற்றி வெல்க வெனப் பல்லாண்டிசைப்பவும், மெய்க்காப்பாளர்கள், வெள்ளிப் பிரம்புடன் பெயர்களை விளக்கிக் கூறச் சிற்றரசர்கள் வந்தடி பணிந்து நிற்கவும், பட்டத்து யானை, குதிரை, பொற்பல்லக்குகளைத் தகுந்த முறையில் ஆயத்தப்படுத்தி அருகில் வைக்கவும், போர் முரசம் முழக்கமிடத் திசைகள் நடுக்கமுற வெற்றி முரசார்த்தெழ, நல்ல நேரம் பார்த்து நல்ல

முகூர்த்தத்தில் இல்லத்தினின்றும் களாபூரண பரமஸ்னன் புறப்பட்டான்.

இவ்விதமாகப் பட்டத்து யானை மீதேறி வெற்றி எக்காளம் ஊதும் பேரொலி கடலையும் கலக்குறுத்த யாத்திரை புறப்பட்டான். முகிற்படலங்களை விலக்கும் கொடிகளுடன் கூடிய தேர்களும், மலையைப் போன்ற மதகளிறுகளும், காற்றுடன் போட்டியிடும் விரைவினையுடைய குதிரைகளும், காலாட் படைகளும் கூடிவர நகரை நீங்கிச் சென்றான்.

மண்ணும் விண்ணும் கூடுமிடத்தில் விளிம்பு விரிந்து காணப்பட்ட பிரம்மாண்டத்தின் பேரொளியோ? எனும் படியாகவும், திசைகளை எண்ணும்போது பிரம்மதேவனால் எழுதப் பெற்ற முதல் இலக்கமோ எனும்படியாகவும், *கீழ் மலையரசன் தலையிலணிந்த பொற்பட்டுத் தலைப்பாகையோ எனும்படியாகவும், வானம் என்னும் பலா மரத்தின் உச்சிக் கிளையில் பழுத்த பலாப்பழமோ எனும்படியாகவும், சந்திரன் ஆகிய விண்மீன்களின் கேள்வன் நிலவு என்னும் பாலன்னம் உண்ட பிறகு கீழ்வான அந்தி என்னும் மடந்தை கழுவி வைத்த பொன்வட்டிலோ எனும்படியாகவும் உதயசூரியன் உலகினுக்குப் படிப்படியாகக் காணப்பட்டான்.

இவ்விதம் சூரிய உதயமானது எல்லா மக்களது உள்ளங்களையும் கவர்ந்து எழிலுடன் திகழ்ந்திடும்போது அச்சேனையின் காலாட்படையினரின் வாள்ஒளி சூரிய ஒளிபட்டுக் கண்விருந்தயர அழகுற்றது. இவ்விதம் அப்படைகள் கமுககண்டபுரத்திலிருந்து புறப்படும்போது ஒருநிமிடத்தில் எதிரில் கண்ட பொருள்கள் அடுத்த நிமிடத்தில் இல்லாதவாறு தேர்கள் விரைந்தன. பரிகள் விரைந்து செல்வதால் எழுந்த பூழ்தியைக் கரிகளின் மதம் நனைத்தும், கரிகளின்

---

*தெலுங்கு எழுத்தில் ஒன்று எனும் முதல் இலக்கம் அரைவட்டமாக "౧" என இருத்தலின் இவ்வுவமை கூறப்பட்டது.

மததாரையினால் சேறாகிய தெருவைப் பரிகளின் விரைவி லெழுந்த பூழ்தி படிந்து முன்னிலைமையை அடைவிக்கவும் ஆகச்சேறும் புழுதியுமில்லாதபடி பாதை இனிதமைந்தது.

வேலும் வாளும் வீசி எறிந்து விரைந்தோடிப் பிடிப் பாரும், கண்ணைக் கூசச் செய்யும் வாளினால் விண்ணைத் துழாவுவாரும், அம்பினை விடுத்து வம்புகள் செய்வாரும் குதித்தாடுவாரும், ஒருவர்க்கொருவர் எதிர் வந்ததும் கண்டுகளிப்பாரும், விளையாட்டுப் போர் புரிவாரும் ஆக வீரர்கள் உற்சாகத்துடனும் திணவெடுத்த தோள்களுடனும் சென்றனர். படைகட்கு முன் சென்ற வணிகர்கள் சாலை களில் கூடாரங்கள் அடித்து வேண்டிய உணவு உடை மற்றப் பொருள்களைச் சித்தம் செய்து விற்றார்கள். வேண்டு மிடத்தில் வேண்டிய பொருள்கள் கிடைத்ததாலும் பெண்கள் திரைகளுடன் கூடிய பல்லக்கில் போனதாலும் அந்த மன்னனின் படை எழுச்சி நகரில் இருந்தாற் போன்றே தடையிலா போகந் துய்ப்பதாக இன்புடன் அமைந்தது.

மிகுந்த வலியுடன் படையெடுத்து வருகிறான் என்ற செய்தி கேட்ட சில மன்னர்கள் தம் நகர்விட்டு வெளிநாடு சென்றனர். சிலர் வேண்டிய பொருள்களைக் காணிக்கை யாக அனுப்பினர். சிலர் அடக்கத்துடன் பணிந்து நின்ற னர். "எல்லா மன்னர்கள் பட்டத்தரசிகளின் மகுட ரத்தி னங்களைக் கொண்டு தன் மனைவியாகிய மதுரலாலசைக் குக் காற்சிலம்பொன்று செய்ய மாமன்னன் களாபூரணன் படையெடுத்து வந்துள்ளான். தங்களது உயிர் உடமை களைக் காத்துக்கொள்ள வேண்டுவோர் மன்னன் ஆணைப் படி நடப்பீர்களாக" என்று எல்லா மன்னர்கட்கும் சத்வ தாத்மன் ஓலையனுப்பி வைத்தான். அப்படியே சில மன்னர்களும் அனுப்பிவைத்தனர்.

ஆனால் கௌடதேச மன்னன் மட்டும் எதிர்த்தான். அதைஅறிந்த களாபூரணன், "காணிக்கை கொண்டு வரு

வான் என்றல்லவா இதுகாறும் அலட்சியமாய் இருந்தேன். இப்படிச் செய்வான் என்றறிந்தால் முன்னே முடித்திருப்பேன். இதோ இப்போதே சென்று ஒடுக்கி வைப்பேன்" என்று கூறி, "குதிரையைக் கொண்டு வருக" என்று பணித்து "என் சேனையைக் கடந்து உயிருடன் மீள்வானோ?" என்றும் "என் திறமையை மதிக்கவில்லையோ" என்றும் கூறியவாறு ஒளிமிக்க வாளை உறையினின்றும் எடுத்தான். பாசறையிலிருந்தும் பரபரப்புடன் வெளியேறிய மன்னன் முன்னர்ப் போருக்குத் தயாராக உள்ளதும் விரைவும் எழில் வண்ணமும் உடையதும், சூரியனின் தேரை நடத்தும் குதிரைகளை வெல்லும் திறனுடையதும், கனைத்தலால் எதிரிகளின் இதயங்களைத் திகிலடையச் செய்ய வல்லதுமான குதிரையைக் கொண்டு நிறுத்தினர். உடனே மன்னன் பரிமீதமர்ந்து விரைந்து முன்னேறப் பிற தளபதிகளும் அவனுடன் முன்னேறிச் சென்றனர். கத்தி, ஈட்டி, குந்தம், கட்டாரி, வாள் முதலிய ஆயுதங்கள் கொண்டு காலாட்படையினர் கடுந்திறலுடன் போரிட்டனர். அங்க நாட்டதிபதியாகிய களாபூரணனும் எதிரிகள் புறமுதுகிட்டோடும்படியாக விரட்டினான். கௌட மன்னன் தன் படைகளைக் கண்டு "ஓடாதீர், ஓடாதீர்!" என்று கூறித் தன் சைனியத்தை நிறுத்திப் போர் புரியலானான்.

வலைஞன் வலைவீசி மீன்களை மொத்தமாகப் பிடிப்பது போல மன்னனும் சேனையின் மீது அடர்ந்து இடி போன்ற அம்புகளை விடுத்துப் பகைவர் திறலைக் கெடுத்து வீர முழக்கம் செய்தான். குதிரை மீதமர்ந்து களாபூரணன் நண்பகற் செஞ்சுடர்போல ஒளிர்ந்தவனாக எதிரி சேனைகளை விரட்டியவாறு மின்னொளி வீசும் வாளைச் சுழற்றியவாறு முன்னேறிச் சென்றான்.

குதிரையை 'ஹு' என்று அதட்டியவாறு போர்முனையிற் புகுந்தது கண்டனர். மறுநிமிடமே வந்த வழியும் போன வழியும் தெரியாமல் அவன் வாள்வீச்சுக்கிரையாகிய

பரிகளும் கரிகளும் பிணக்குவியல்கள் நிறைய, முனேறிப் பகைவரைப் புறமுதுகிட்டோடச் செய்தான். எதிரியின் சைனியங்கள் வீழ்ச்சியுறவே மீந்து தனித்திருந்த கௌட தேச மன்னன் மந்தையெல்லாம் விலைபோகத் தனியே மீந்த ஆடுபோலத் திருதிருவென விழித்தான். அப்போது யாத்திராசங்கன் எனும் களாபூரணனின் படைத்தளபதி எதிரியைக் கண்டு வாட்போருக்கழைத்தான். அவ்விருவரும் பயங்கரமான வாட்போர் குதிரைமீதமர்ந்தவாறு நடத்தினர். ஒருவரை ஒருவர் அடித்தற்கனுகூலமானபடி குதிரைகளை முன்னும் பின்னும் நடத்திக்கொண்டிருந்தனர். வாளொடு வாள் தாக்குறவே முறிந்துவிழும் எஃகுத் துகள்கள் ஒளிரும் மின் மினிப்பூச்சிகள் போன்றிருந்தன. ஓரிடத்தில் அடிப்பது போல முனைப்புக்காட்டி வேறிடத்தில் (மறுபக்கம்) அடிக்கவே விழிப்புடனுள்ள மற்றவன் கவசத்தில் வீழ்ந்து மத்தாப்புப் போல நெருப்புப் பூக்கள் சிதறி விழுந்தன. வீரசுவர்க்கம் புகும் போரில் மடிந்த வீரர்களைத் தாமே சுயமாக மணக்க வந்த வான்மகளிர் தம் கடைக்கண் வீச்சுகள் போன்ற அவர்தம் வாள்வீச்சுகள் ஒப்புவமையின்றிச் சரிசமமான ஆற்றலுடன் திகழ்ந்தன.

இப்போரைப் பார்த்து அனைவரும் வியந்தபோது எதிரியின் குதிரை வீரன் ஒருவன் களாபூரணன் தன்னைக் காப்பாற்றுவதில் ஏமாந்திருந்ததைப் போலத் தோன்றவே விரைந்து குதிரை மீதேறி வாளால் களாபூரணன் மேல் திடீரென ஓங்க, ஏமாற்றிய களாபூரணன் ஓரே வாள் வீச்சில் அவன் வாள் இரண்டாயும் அவன் உடல் இரண்டாயும் அவன் குதிரை இரண்டாயும் விழும்படியாக அற்புதத் திறல் காட்டினான். அது கண்ட வானோரும் மற்றோரும் மன்னனின் அற்புதமான திறமையைப் பாராட்டினார்கள். இவ்விதம் யுத்தகளத்தில் கௌடசேனைகளை வீழ்த்தவே எதிரிகள் பயந்து ஆளுயரமுள்ள முள் மரங்களைக் கூட ஆவரங்குழைகள் போல மிதித்தோடியவாறு புறமுதுகிட்டனர். இவ்விதம் தோற்ற அம்மன்னன் தன்னகர் புக்கான். களாபூரணனும் தன் திறல் மிக்க சேனையுடன் வெற்றி

முழக்கம் செய்தவாறு அவன் நகரை முற்றுகையிடவே அம் மன்னன் களாபூரணனைக்கண்டு அவனருள் பெற்றுக் கப்பம் கட்டினான்.

பின்னர்க் களாபூரணன் மற்றொரு மன்னனாய நாற் படை வலிமையின் செருக்குடன் எதிர்த்த உத்கல (ஒரியா) நாட்டு மன்னனைத் தன் மறம் காட்டி எதிரிகளை ஓட்டிப் பெரும் போர் புரிந்தான். பூழ்தி மிகுந்த போது செங் குருதி வெள்ளம் நனைத்து அதனை அடக்கிற்று. செருக்கு டன் போர் புரிந்த வீரர்கள் களைப்பால் சிறிது நேரம் அடங்கினர். சினத்துடன் எதிர்த்த மறவர் சிறிது நேரத்தில் தெம்பிழந்தும் மீண்டும் கருவத்துடன் புத்துணர்ச்சியுற்றும் போர் புரிந்தனர்.

அச்சமயத்தில் களாபூரணன் அசையும் மலையோ எனும்படியான யானை மீதமர்ந்து பரிவாரங்கள் சூழ எதிரிகள் சேனைகளின்பால் சென்றான். அப்போது முன்னென்றும் கண்டிராதவாறு களிறுகள் பிளிறலுடன் பயங்கரமாகப் போரிட்டன. யானைப் போரை வியந்து கண்டவர்கள் பாராட்டலானார்கள். ஆங்காங்கு ஒன்று கூடிச் சுழல் போல் திரிந்தும், பின்வாங்கி அவற்றின் தந்தங்கள் முறியுமாறு ஒன்றை ஒன்று மோதியும், இடம் பெயர விடாது வலிவுடன் பற்றி அங்குமிங்கும் தள்ளி அலைக்கழித்தும், மாவுத்தர்கள் போரிட்டு மடிந்தும் தாம் மட்டும் வலிவோடு முன்னின்று போர்புரிவனவும் ஆக அம் மதயானைகள் போரிட்டன. தந்தங்களின் உரசும் பெரு முழக்கமும், மணிகளின் கணகணவென்ற பேரொலியும், பிளிறும் பேரொலியும், கலந்து திசைகளை அதிர வைத்தன.

அச்சமயம் களாபூரணனின் மதயானை பிற யானை களை மோதி விரட்டியடித்து ஓட்டவும் அவைகள் மாவுத்தர்கள் கீழே வீழ்ந்துபடத் தாமும் நிலத்தில் வீழ்ந்தன. களாபூரணன் தன் மதயானை மீதமர்ந்து

எதிரிசேனைகளைக் கலக்கி உத்கல மன்னனை எதிர் கண்டு கடும் போரிட்டுத் தனது முஷ்டியால் அவன் முதுகில் புடைத்து அவன் கரங்களைப் பின்னுக்குக் கட்டி 'இனி என்றும் எம் போன்ற பெரு வீருடன் போரிடாதே' என்று கூறிச் சிறைப்படுத்தி ரத்ன ஹாரங்களைக் கைக் கொண்டான்.

இவ்விதம் தடையற்ற வெற்றிகளை எய்திய களாபூரணன் கலிங்க, த்ராவிட, சோழ, பாண்டிய மன்னர்களைக் கைப்படுத்திக் கேரள மன்னன் மீது படை எடுத்தான். இரண்டு கடல்கள் பொங்கிற்றோ எனும் படியாக யானைகளும் குதிரைகளும் காலாட்களும் பெரும் போரிட்ட அப்படையின் அழிவு கண்ட கேரள மன்னன் தூதனுப்பி 'நேருக்கு நேர் கத்திச் சண்டை புரியுமாறும் அதில் வென்றவர் வென்றவராவார்' என்றும் கூறினான். அதற்கு மன்னன் உடன்பட்டான். பொன் முலாம் பூசிய பட்டாக் கத்திகளுடன் அவ்விருவீரர்களும் வீரஞ்செறிந்த கடைக்கண் வீச்சுகளுடன் அங்கிங்கும் அலைந்தபடி போரிட்டனர். ஒருவரை ஒருவர் அதட்டியவாறும் "அப்படித்தான் அப்படித்தான்' என்றும் 'தப்பித்துக் கொள்' என்றும் 'அதுதான் சரி' என்றும் முழக்கமிட்ட வாறு கண் சிதையாமல், ஐந்து பத்தாக்காமல் (ஐந்து விரல்களைப் பத்து விரல்களாக்காமல், வணங்காமல் என்பது குறிப்பு) போரிட்டார்கள்.

வாள் வீச்சை மிஞ்சிய சினங்கொண்ட கண்வீச்சுகளி னால் செவ்வொளி படர்ந்து வாளில் மின்னின. அது கண்ட பிறர் குருதி படிந்தனவோ என ஐயுற்றனர். ஒருவரை ஒருவர் கத்திமுனை படாது போரிட்ட அவ்வீரத்திறனைப் பாராட்டினர். அவ்வளவில் களாபூரணன் மிகு வியப்பளிக் கும் விதத்தில் அற்புதமான கைலாவகமுடன் எதிரியைக் கத்திமுனை பல்வேறிடத்தும் சிறிது புகுமாறு குத்தினான். அவனது வீரத்தினைக் கண்ட கேரள மன்னன் பாராட்டித் தன்னையும் கொல்லாது விடுத்தமைக்காக நன்றியுணர்வு

டன் தன் பட்டாக் கத்தியை வீசி எறிந்தான். இவ்விதம் அம்மன்னன் தன் கைகள் கூப்பி "மாமன்னனே! நீ அரசன் மட்டுமன்று, தெய்வீக புருஷனும் ஆவாய். நான் ஆந்திர தேசத்திலிருந்து வந்த ஒரு சிறந்த வாள் வீரனிடம் பயின்று நெடுநாள் முயன்று சிறந்த வாள் வீரர்களையும் வென்று தன்னிகரிலாதவனென்னும் கருவம் கொண்டிருந்தேன். ஆதலின் இத்தகைய போருக்கு உன்னை அழைத்தேன். என்னைத் தோற்பித்தது மிகு வியப்பேயாகும்" என்று கூறிப் பாராட்டிக் களாபூரணனின் பரிவாரங்களையும் அழைத்து உபசாரம் செய்து விருந்து படைத்து அரண்மனை அந்தப்புர மடந்தையர் மணிமகுடங்களிலுள்ள மணிகளைக் கொணர்ந்து முன் வைத்து வணங்கினான்.

அப்போது களாபூரணன் அம்மன்னன் மூலமாக மிருகேந்திரவாஹினியின் கோயில் உள்ள இடம் தெரிந்து அங்குச் சென்று அத்தேவியைப் பூஜித்து அக்கோயில் சுவர்களை ஆராய்ந்து தனது முற்பிறவியின் வீணையைக் கண்டு எடுத்துக் கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் வடதிசை நோக்கிப் பயணமானான். கூர்ஜர மன்னன் எதிர்க்கவே அவனை வென்று அந்தப்புர மகளிர் மகுட மணிகளைப் பெற்றுச் சென்றான். அப்போது துவாரகா நகரம் வெள்ளத்தில் மூழ்கி அழிந்தமையால் கண்ணனைக் காணக் கிடைக்காததால் வருந்தி முற்பிறவியில் குருவாக இருந்த கண்ணபிரானை நினைந்து வழிபட்டுப் பின் மாளவ பர்பர மன்னர்களை வென்று ஹூணர்களையும் வென்று வந்தான். பிராக் ஜோதிஷபுர மன்னன் "தனக்கிணையான மன்னன் இவன்தான்" எனக்கருதிக் களாபூரணனுடன் போரிட்டான். கிழிந்த கொடிகளும், அழிந்த இரதங்களும், ஓடிய வீரர்களும், வீடிய குதிரைகளும், கண்மூடிய களிறுகளும், புகல் நாடிய மாவுத்தர்களும். உயிர் தேடிய காலாட்களும். பொடிப் பொடியான வில்லம்புகளும், ஒடிந்த கதைகளும், கத்திகளும் வடிந்த செந்நீரும், மடிந்த உடல்களும், மண் படிந்தநிணமும் என்பும் ஆக அந்தப் போர்க்களம் பயங்கரமாகவும், வெறுப்பளிப்பதாயும், வீரச்சுவை மிக்கதாயும்

காட்சியளித்தது. களாபூரணன் தன் வலி காட்டி பிராக் ஜோதிஷ மன்னனை வென்றான். கோசல மகத நாட்டு மன்னர்களும் தத்தம் காணிக்கைகளைச் செலுத்தினர்.

இவ்விதமாகக் களாபூரணன் தன் திக்விஜய யாத்திரையை வெற்றிக்கொடி நாட்டி முடித்து மீண்டும் தன்னகருக்கு வந்தான். "இனிச் சிறிது வீட்டிற்சென்று இளைப்பாறி மகிழ்வோம், தாமதியாது உடன் வருக" என்றும், "அதோ, பளபளவென நம் நகர்ப் பொன்விமானம் பிரகாசிக்கிறது" என்றும் "இந்தத் தோட்டக் காடுகளின் எழில் என்னே! எல்லா நாடுகளும் சுற்றி வந்தோம் இதற்கிணையுண்டோ? வேறெங்கும் கண்டிலேம்" என்றும் "மீண்டும் கமுகபுரத்தின் எழில் காணப்பெற்றோம்" என்றும் கூறிக்கொண்டு தமது சுற்றத்தார் எதிர்கொண்டழைக்கத் தத்தம் பொருள்களைச் சரிபார்த்தவாறு வழி நடைச் சிரமங்களை மறந்து நகரில் புகுந்தார்கள்.

முன்னைய பழைய நகரின் பாதைகள் அதோ! ரோமபாதன் தன் மருமகன் ருஷிய சிருங்கனை இல்லறத்துட்படுத்திய செல்வச் செழிப்புடைய மேடை அதோ புத்தெழிலுடன் பொலிகின்றன. வள்ளல் கர்ணனின் மகன் விருஷசேனன் தனது குதிரையைத் தாண்டுவித்த சிற்றோடை அதோ! இச்செயல் அன்று அற்புதமாக இருப்பினும் இன்று நம் குதிரைகள் எளிதில் தாண்டும்! இங்கிருந்து சில யோசனை தூரத்தில் காசாரபுரம் உள்ளது. அங்குச் சத்வதாத்மன் ஆள்கிறான். அவனே இந்த எழிலார்ந்த சிறப்புடைய நகரை நிர்மாணித்தான். அவன் களாபூரணனுக்குப் பட்டம் கட்டித் தான் அமைச்சனாக இருந்து மகிழ்ந்தான். இவ்விதமாக ஆங்காங்குள விசேஷங்களைக் கண்டு மகிழ்ந்து கூறியவாறு வீரர்களும் மக்களும் தெருக்களில் சென்றனர்,

பேரி மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்க விண்ணதிர்ந்தது. மிகுந்த வைபவத்துடன் மன்னன் தன்னகர்

புக்கான். பேரி முதலியவற்றின் முழக்கத்தையும் மீறிய மன்னன் வருகையைக் காணவேண்டுமென்ற குதூகல முடைய மடந்தையர் மேடை மீதேறச் சிலம்பு ஒலித்தது. அங்குள்ள மக்கள் தொகையின் சிறப்பு எத்தகையதோ என வியப்படையச் செய்தது. மன்னனது புகழ் நிலவுக்காற்றாது ஆயிரம் பிரிவாயுடைந்த வானகங்கையின் பொற்றாமரை மலர்களோ எனும்படியாக வெண்மாளிகைகளின் ஜன்னல் களில் பெண் மக்களின் முகத்தாமரைகள் ஒளிர்ந்தன. ஒரு மடந்தையின் கூந்தல் விரைந்தேகலால் அவிழ்ந்திட மன்மத னின் படைவீரர்களான கருவண்டுகள் பற்றியீர்த்துச் செல் கின்றனவோ எனுமாறு தோன்றிற்று. மற்றொரு நங்கை மன்னனைப் பார்க்கக் கூந்தல் அலைந்தாட நெற்றிச் சுட்டியை இமையிற் கோத்தும், இடையிலணியும் ஒட்டி யாணத்தைக் கழுத்திற் பூட்டியும் தடுமாறிக்கொண்டு ஓடி வந்தாள். மற்றொரு நங்கை மணாளனின் புணர்ச்சியினால் அவிழ்ந்த சீலை முடியை விரைந்து கட்டிக்கொண்டு முன்றானை காலிற் சுற்றிக்கொள்ளக் கொங்கைகளை மூடு வதை விரும்பவில்லையோ என்று தோன்ற; முலைக்கோடு களை மறைக்கக் கணவனின் மேலாடை கையிற்பட்டதும் கவனியாது போர்த்துக் கொண்டோடி வந்தாள். மற் றொரு மங்கை அப்போதே குளித்து மெல்லிய காவிநிறத் துகிலினால் கூந்தல் உலர்த்தியவாறு யோகினியைப் போல வந்தாள். இவ்வாறு நகரத்தார் கண்களிப்ப உருவெழில் கொஞ்சச் செல்வச் செழிப்புடன் களாபூரணன் கமுக புரத்தையடைந்தான்.

நலமமைந்த வீணையை அபிநவகௌமுதிக்குத் தந்து மந்திரியிடம் மதுரலாலசைக்கு மகுடமணிகள் குயின்ற சிலம்பு செய்விக்கப் பணித்தான். அதுகேட்ட மதுர லாலசை மிகவும் மகிழ்ந்து அபூர்வமான அணிகளைப் பற்றிய பேச்சு வரவே தன்தோழிகள் மூலம் தனது இளம் வயதில் கிடைத்த மணிஹாரத்தைப் பற்றிக் கேள்விப் பட்டு, தன் கணவனை முதலிற் கண்டபோது அவனால் அருளப்பட்டதாகையால் அதன்மேல் அபிமானமேற்பட்டு

அதைக் கொண்டுவரச் செய்து தன் இதயத்தில் பொருந்துமாறு இருபக்கமும் சில மணிகள் கோத்து அணிந்து கொண்டாள். பின்னர்த் தன் கணவனருகணைந்து பணிவிடை செய்யலானாள். அப்போது சத்வதாத்மன் நன்கு இயற்றப்பட்ட அச்சிலம்புகளைக் கையில் கொண்டுவந்து மன்னனின் கண்சாடையறிந்து அம்மங்கையின்முன் வைத்து "மன்ன! எல்லாத் திசைகளிலுமுள்ள உன்னால் வெல்லப் பட்ட மன்னர்களின் மனைவியரது மகுட மணிகளைக் கொண்டியற்றப்பட்ட சிலம்புகள் இவை" என்று கூறி "அம்மா! இவற்றை அணிந்து கொள்ளுங்கள்" என்று வணங்கினான். வணங்கவும் "வேண்டாம்! வேண்டாம்! நான்தான் உன்னை வணங்கவேண்டும்! இதுகாறும் என் தாய்மாமன் நீயென்பதறியாதிருந்தேன். இன்று அறிந்தேன்" என்று கூறியவாறு அவள் வணங்கினாள். அவள் வணங்கவும் அவன் பின் நகர்ந்து வியப்புடன் நோக்கவும் "உண்மை! பயிர்ப்புறேல்" என்று கூறினாள்.

அப்போது களாபூரணன் சிரித்தவாறு அவனைக் கண்டு "இம்மங்கை கூறியது உண்மையாயிருக்கலாம்! ஐயம் ஏன்? அதன் விவரத்தைத் தெரிவிக்க வேண்டுவோம்" என்றான். மேலும் மன்னன் "இவள் சிறு குழந்தையாயிருக்கும்போது நீ உன் குலகோத்திரங்களைக் கேட்டாய்! அது இன்று தெரிந்தது போலும்" என்றுகூறி அவளை நோக்கி "உன் சிறு வயதில் இருந்த பழமையுணரும் ஆற்றல் இப்போது கிடைத்ததா? உனக்கு இவன் தாய்மாமன் ஆனவிதம் எவ்வாறு? அன்று அவன் கேட்கும் போது கூறாமல் இருந்ததன் காரணம் யாது? குழந்தையாயிருக்கும்போது உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத தற்கு வருந்துகிறேன். எல்லாவற்றையும் விரிவாகக்கூறு" என்றான்.

அதுகேட்ட மங்கை எல்லாம் தெளிவரக்குகிறேன் என்று கூறிக் கணவனுக்கு விசிறி வீசியவாறு உரைக்கலானாள். "மன்ன! முன்னிவன் மகாராட்டிர தேசத்தை ஆளும் 'சுக்கிரகன்' என்னும் அரசன். எங்கள் தாய்

ரூபானுபூதி இவனது தமக்கை. இவனது பண்பாடறிந்த எல்லா மன்னர்களும் மகிழ்ந்து தத்தமது மகளை மணம் புரிய வேண்டுமெனக்கோரி ஓலையனுப்பினார். இதனால் சம்பந்த பாந்தவ்யம் உண்டாகுமெனக் கருதினான். ஆனால் இவனோ யாருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது? யாருடையதைத் தள்ளுவது என ஆராய்ந்து முடிவு கூறாமல் நெடுநாள் கழித்தான். இதை அம்மன்னர்கள் தம்மை அவமதிப்பதாகக் கருதி வருந்தி ஏதாவதொரு சாக்கிட்டு முறையின்றிப் போர் புரிய வந்தார்கள். இவன் தான் புறம் போந்து எப்படியாவது இவர்களை அடக்கி வெற்றிபெற வேண்டும் என்று கருதிச் சிறந்த குதிரை மீதமர்ந்து நகரைவிட்டு வெளியேறினான். இப்படி மன்னன் வெளியேறுவதறிந்த அம்மன்னர்கள் மன்னன் இல்லாத நாட்டைப் பிடித்து வெற்றி கொள்வது வீர மன்று" என்று கருதித் தத்தமது நாடுகட்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். இவன் அம்மன்னர்கள் திரும்பிச் சென்ற செய்தியறியான். ஆதலினாலே மிகு தொலைவேகி ஒரு காட்டின் நடுவிலிருந்துகொண்டு இப்பகைவர்களை எப்படி வெல்வது என்று சூழ்ந்து சிறிது நேரம் கழித்து எதிர்கால நடவடிக்கைகட்காக இப்படிச் சிந்தித்தான். "மிகுந்த சங்கடத்தால் அவசர கோலமாக இப்படி வந்து விட்டேன். நகர் துணையின்றி என்னவாயிற்றோ? மக்கள் என்னானார்களோ? பகையரசர் நிலையறியும் வழி என்னோ? நான் திரும்பிச் சென்றால் பகைவர் அறிய, தடுப்பார்கள். இருக்குமிடத்திலிருந்துகொண்டே எல்லாவற்றையும் அறியும் பேறு பெற்றவன் எத்தகைய பாக்கியவான்! அத்தகையவனின் வாழ்வே வாழ்வின்றிப் பிற பெருமையெல்லாம் சிறப்பாகுமோ?" என்று இவ்விதம் சிந்தித்தவாறு சர்வக்ஞத்துவத்தை (முற்றறிவை)ப் பெற உறுதி பூண்டு முனைப்புடன் பரிமேலிவர்ந்து வாசுதேவன் (கண்ணபிரான்) நித்தியம் உறைந்த யமுனா நதி தீரத்தை யடைந்து அங்குப் பிருந்தாவனத்தையடைந்தான். அங்குத் தான் என்றும் வணங்கும் பாலகிருஷ்ணனை, ஆலிலை துயின்ற அழகனை, மனத்தில் நினைந்து தவமியற்றினான்.

'அழகிய ஆலிலையில் படுத்துக்கிடக்கும் உருவத்துடனும், கரங்களால் பத்திரமாகக் காலைப் பிடித்து வாயில் வைக்கும் கோலத்தை, கால் விரலைச் சப்பும் போதொழுகிய எச்சில் நீரால் நனைந்த முத்து மாலையை அணிந்த எழிலுருவை, கண்விருந்தாகிப் பிரம்மானந்த பரவச நிலையான எழிலொழுகும் காட்சியை, அவன் மனத்தில் இடைவிடாது சிந்தித்துத் தவமியற்றினான். கண்ணபிரானும் கருணைகூர்ந்து அவன்முன் காட்சிதந்து "வேண்டும் வரம் கேள்" என விளம்ப யாதொன்றும் கூறத் தோன்றாமல் சிறிது நேரம் அப்படியே இருந்தான். பின் விழிப்புற்று அப்பாத மலர்களை வணங்கி நெற்றியில் கரம் குவித்து வணங்கி இவ்விதம் கூறலானான். "எல்லையிலா இன்பத்தால் பேசமுடியாதிருக்கிறேன்! தேவா! நின்னால் முற்றறிவு (சர்வக்ஞத்வம்) பெறவேண்டி வந்தேன். தயை புரிக" என்று கூறவும் கண்ணபிரான் தன் கழுத்திலிருந்த ரத்தின மாலையை எடுத்து "இதன் தலைமை மணி யாருடைய இதயத்தில் எவ்வளவு நேரம் தொட்டுக் கிடக்குமோ அவ்வளவு நேரம் முற்றறவு வாய்க்கும். சொற்சாதுரியமும் வாய்க்கும்" என்று கூறி "அந்தணாளர்களை மனம் நோகச் செய்தால் அவரிடம் இது தங்காது" என்று ஆணையிட்டு அதை இவனிடம் கொடுத்துவிட்டு மறைந்தான்.

இவன் மாபெரும் சிறப்புடைய மாலையைப் பெற்றவனாக அக்காட்டிலிருக்கும் ஒரு கோயிலையடைந்தான். அங்குக் கோயில் வாயிலில் ஒளி மிகுந்து வலிவுடைய தொட்டால் கன்றிவிடுமோ எனும்படியாக எழிலார்ந்த முலைகளுடனும், மிகு மெலிந்த பிடியிலடங்கும் இடையுடனும், புன்முறுவற் பூந்தேனொளி சிந்தி மின்னும் இளங் கன்னங்களுடனும், உலகெங்கும் காண இயலாத அழகுமயமான அமுதொழுகும் களைமிக்க சிறிய நிறைமுகத்துடனும், கவினார்ந்த எல்லா உறுப்புகளுடனும் அணிகள் பூண்ட கலைத்திறனார்ந்த அற்புதமான சிற்பமொன்றைக் கண்டான். கண்டு மனம் மகிழ்ந்து பாராட்டி அப்பக்கம்

இவன் இருக்கும்போது அவ்வளவில் ஆசாரசீலனான துறவியொருவன் வழிப்போக்கில் அங்கு வந்துசேர்ந்தான். சேர்ந்து காவியுடை முனையை வீசியவாறு "ஹரி ஹரி" என்று கூறியவாறு சிறிதுநேரம் வழிநடைச் சிரமம் நீங்க நின்றான். அம்முனிவன் அழகிய அந்தச் சிற்பப் பெண்ணைப் பார்த்து "அடடா! சிற்பகுலேந்திரனே! பிரம்மனை மீறிவிட்டாய்! இச்சிலையை எவ்விதம் செய் தாய்" என்று தன் மனத்துட் பாராட்டித் தலையசைத்து "இத்தகைய பெண்கள் உலகில் உள்ளனரோ?" என்று நினைத்து "இத்தகையவை துறவிகள் பார்க்கக் கூடாது" என்று முகம் திருப்பி, மீண்டும் மீண்டும் மனம் தூண்டப் பார்த்துக்கொண்டே இருந்து என்ன சொல்ல...! அவன் மனம் விகாரமுற்றது" என்றுகூறி நாணமுற்ற அம்மடந்தை திறன் கண்ட மந்திரி ஏதோ காரணம் கூறி விலகிச் சென்றான்.

களாபூரணனும் மனைவியின் முகம் நோக்கிக் "கதை முடிவு என்னவாயிற்று? எனக்கும் குதூகலத்தை உண் டாக்குகிறது! சொல்க" என்றான். "இனி என்ன சொல்வது! மன்ன! அம்முனிவன் மனம் தாளாமல் ஒரு மறைவில் சுக்கிரகன் அங்கிருப்பதை அறியாமல் எழுந்து வந்து அச்சிலையை அணைத்துக்கொண்டான். அதைக் கண்ட சுக்கிரகன் நகையடக்க முடியாமல் கலகலவெனச் சிரித்தான். சிரிக்கவும் அவன் அதைக் கேட்டும் கேளாத வன் போல நடித்து அச்சிலையை அணைத்தது ஒரு மரபு வழக்கம்போலக் காணும்படி ஏமாற்றுவதற்காக அக் கோயிலிலுள்ள பிற காவற் சிற்பங்கள் தெய்வங்கள் முதலியவற்றையும் அணைத்துக்கொண்டு வணங்கி வலம் வரத் தொடங்கினான். சுக்கிரகன் அவனது வஞ்சமான நடத்தையை அறிந்து "இப்படி எவ்வளவு செய்தாலும் நான் உன் முற்செயலை அறிவேன் அல்லவா? அதை மறக்க மாட்டேன்" என்று கூறிப் பரிகாசம் செய்தான். அதற்கு அம்முனிவன் மனம் நொந்து சினந்து "இதுவரைக்கும் உள்ள உன்னுடைய அறிவெல்லாம் மறைந்தொழியட்டும்"

என்று சாபம் இட்டான். சுக்கிரகன் மிகுந்த பயத்துடன் சாப நீக்கம் தருமாறு தயைகூரவேண்டுமெனக் காலில் வீழ்ந்து இறைஞ்சினான். அம்முனிவன் "எனது இந்த இரகசியச் செயல் எங்கேனும் நீ கேட்கப் பெற்றால் அன்று தொட்டு உன் போன ஞானம் திரும்பப் பெறுவாய்" என்று கூறித் தன்வழிச் சென்றான்.

அன்றுதொட்டு அதற்கு முன்னிருந்த உலக ஞானமெல்லாம் இழந்த சுக்கிரகன் தன் சரித்திரம் முழுதும் மறந்து விட்டான். ஆகையால் அவன் அதற்கு முன்னர் பெற்றிருந்த அற்புத ரத்தின மாலையை வைத்ததும் மறந்து விட்டான். "அந்தணாளர் மனம் நோகச் செய்தால் இம் மாலை நிற்காது" என்று கண்ணன் முதலிற் கூறிய கூற்றைக் கேட்டும் முனிவனை மனம் நோகச் செய்து மாலையை இழந்துவிட்டான். விதிவலியை யாரே கடக்க முடியும்? உலகில் யார் செய்த தீமையேனும் சொல்வது பாவமாகும். மகாபுருஷர்கட்கு ஒருகுறை ஓரிடத்தில் நிகழ்ந்தாலும் அதைத் தூற்றித் திரியும் பாவம் சும்மா விடுமா? அவ்வளவில் ஊழ்வினையால் அவ்விடத்தை விட்டகன்று சுக்கிரகன் திவ்யதேசங்களில் திரிந்தவாறு தன் ஊர் பேர் வரலாறுகளை மறந்து பித்தன் போல, மயங்கியவன் போல, சிறு குழந்தை போல எதைக்கண்டாலும் வியப்புற்றுக் கண்டு சுற்றித் திரிந்தான். பின்னர்ச் சிறிது சிறிதாகப் புதிதாகக் குழந்தைகட்குப் போலப் பகுத்தறிவும் பொருட்பண்புகளும் செயல் அறிவும் புலப்பட்டன. தன்குலம், பெயர் முதலியன தவிரப் பிற அறிவைப் பெற்றுத் திகழ்ந்தானன்றி அவனையறிந்தவர் இதுவரைக்கும் கிட்டாமையால் தன் வரலாறு மட்டும் அறியாதிருந்தான். இவ்விதமாகத் திரிந்து வருங் காலத்தில் ஒருநாள் கங்கையும் சரயுநதியும் சேரும் இடத்தில் சஞ்சரிக்கும்போது அக்காலத்தில் காசாரபுரம் எனும் இடத்தில் மன்னனின்றியிருந்தமையால் மந்திரி புரோகிதர் முதலியவர்களும் ஊர்ப்பிரமுகர்களும் ஒன்றுகூடி அரசனைத்தேட உத்தமமான மத்த யானை ஒன்றை அலங்கரித்து அதன் துதிக்கையில் ஒரு பூமாலையைத் தந்து "இது யாருடைய

கழுத்தில் போடுமோ அவனே நமக்கு அரசன்" என்று நிச்சயித்துக் கடவுளை வணங்கி அதனை விடுத்துப் பின் தொடர்ந்தேகினர். அந்த யானை சென்று தன் துதிக்கையிலுள்ள பூமாலையை இந்தச் சுக்கிரகன் கழுத்தில் இட்டது.

அரசனின்றி அவலமுற்ற மந்திரி முதலானோர் சுக்கிரகனைக் கண்டதும் அவர்கள் உள்ளத்தில் ஒரு சத்வ விசேஷம் (சிறப்பு மெய்ப்பாடு) உதித்ததாலே இவனுக்குச் 'சத்வதாத்மன்' என்று பெயரிட்டு, யானை மீதேற்றி நகருக்குக் கொணர்ந்து பட்டாபிஷேகம் செய்தனர். 'சத்வதாத்மன்' என்ற பெயரில் இவன் புகழ் பரவியது. இவ்விதம் காசாரபுரத்தில் மன்னனாகி அரசபோகங்களை எய்தி உனது (களாபூரணனுடைய) தாய் தந்தையராகிய சுமுகாசத்தி மணிஸ்தம்பர்களைத் தன் நகரில் இருக்கச் செய்து தொண்டுசெய்து வந்தபின் உனக்கு மந்திரியானான். அச்செய்திகளை விரிவாக உனக்கு என் குழந்தைப் பிராயத்திலேயே சொல்லியிருக்கிறேன். நினைவு கூர்க. இவ்விதம் மந்திரியான பின் அங்க தேசத்தை ஆக்கிரமித்து அங்குக் 'சுமுககண்டபுரம்' எனும் இந்நகரைப் படைத்து உன்னைப் பட்டம் சூட்டியது உனக்குத் தெரியும், அதைச் சொல்வானேன். ஓ! மாமன்னனே! இந்தச் சத்வதாத்மன் தனது குலம் பேர் முதலியன முன்பு என்னைக் கேட்ட போது நான் சொல்லாமல் இருந்து இப்போது சொல்வதற்கும், மற்றும் அன்று சகலஞானமும் பெற்றதற்கும் காரணம் கேட்டாய், அதைச் சொல்கிறேன் கேட்பாயாக" என்று கூறி மீண்டும் இவ்விதம் கூறலானாள்.

"அவ்விதம் சுக்கிரகன் முன்பு அக்கோயிலில் வைத்து விட்டுப் பின் மீண்டும் கொணர மறந்துவிட்ட அந்த 'ரத்தினஹாரத்தை' வட மதுரையைச் சேர்ந்த பிராமணன் ஒருவன் தெய்வ வசத்தால் அங்கு வந்து பார்த்து எடுத்துக் கொண்டுபோய்ப் பல ஆண்டுகள் வீட்டில் தெய்வம் போலப் பாவித்துப் பூஜைசெய்து வந்தான். பின் திரிலோகாதிபதியாகிய கண்ணபிரானுக்குக் காணிக்கை

செலுத்தினான். கண்ணனும் தன்மீது 'தண்டகம்' பாடி மகிழ்வித்த மணிகந்தரனுக்கு மகிழ்ச்சியுடன் அளித்தான். மணிகந்தரன் பெரும்பேறெனமகிழ்ந்து தன் கழுத்தில் தரித்தற்கேதுவாகச் சிறிதாக இருந்தமையால் தன் கழுத்தில் மறைவாக அணிந்திருந்தான். அவன் இதயத்தில் படவில்லையாதலால் அது அவனுக்கு முற்றறிவைத் தரவில்லை. அம்மணிகந்தரன் முடிவில் 'அலகு விரத'னுக்கு அதைத் தந்தான். அப்பிராம்மணன் அதை உனக்குத் தந்தான். நீ அதை எனக்கு இட்டாய். அதன் தலைமை மணி என் இதயத்தில் தொடவே முற்றறிவு பெற்றுக் குழந்தையாயிருக்கும்போது எல்லாம் சொல்ல முடிந்தது. மன்ன! நீ முற்பிறப்பில் மணிகந்தரனாக இருந்தபோது கண்ணபிரானிடம் இருந்துபெற்ற 'ரத்தினஹாரத்தை' இப்பிறப்பில் அந்தணன் மூலம் பெற்று என்னைப் பாராட்டி அளித்துச் சிறப்பித்தாய். அப்போது சத்வதாத்மன் தன் வரலாறு கேட்கும்போது நான் அங்குமிங்கும் அசைந்ததால் என் இதயம் தொட்டிருந்த ரத்தினஹாரம் விலகிவிட்டதால் என் முற்றறிவு நீங்கிவிட்டது. ஆதலால் அப்போது சத்வதாத்மன் வரலாறுகூற இயலாததற்கு இதுவே காரணமாகும். அன்று அவ்விதம் ஞானம் பிறந்ததற்கும் மறந்ததற்கும் மூலகாரணம் இந்த ரத்தினஹாரம்தான் என்று யாரும் அறியாமையால் இது சாதாரணமான மாலைதான் என்று நினைத்து எங்களவர்கள் ஒளித்துவைத்து மறந்துவிட்டனர். அது முதல் இன்றுவரை இத்தெய்வீக ஹாரத்தை என்றும் அணிந்ததில்லை. இன்று ஆபரணங்களைப் பாதுகாக்கும்போது பேச்சுவாக்கில் நினைவுக்கு வரவே தோழியர் இது கிடைத்த விதமும் உன்னால் எனக்கு அருளப்பட்டதென்ற விவரமும் தெரிய வந்ததனால் மிகுந்த ஆர்வத்துடன் இதனைக் கொணர்வித்து இதயத்தைத் தொடும்படியாகத் தலைமாணிக்கத்தை அமைத்து இப்போது அணிந்திருக்கிறேன். இவ்விடத்திற்குச் சிலப்புக்ளைக் கேர்ணர்ந்து சத்வதாத்மன் வரவே "இத்தற்குள் கொலுக்கூடத்திற்கு வரும் இவனது ஆர்வம் எத்தகையதோ?" என்று இவனைக் குறித்துச் சிந்திக்கவும்

இவனது குலப்பிறப்பாதிகள் எல்லாம் இந்த இரத்தின ஹாரத்தின் மகிமையால் சொல்லத் தோன்றியது. இறப்பு எதிர்வு நிகழ் காலங்களில் இச்சகல பிரபஞ்சத்திலும் எதையேனும் தெரிய வேண்டினால் உள்ளங்கை நெலலிக் கனியாகத் தெரியும்'' என்று கூறி, "இதை அணிந்து பாருங்கள்'' என்று திரைமறைவில் இருக்கும் நாட்டியப் பெண் போல முன் தானை மறைவில் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் அந்த ரத்தின ஹாரத்தை எடுத்துக் காட்ட. மன்னன் "வேண்டாம் வேண்டாம்! எடுக்க வேண்டாம்! நான் தந்ததை மீண்டும் பெறுவது தகுதியன்று. இதன் பெருமை நீ தெரிவித்ததே சிறந்ததாகும்'' என்றுகூறி மறுத்தான்.

மதுரலாலசை மன்னன் மார்பில் வீழ்ந்து அவன் மார்பில் அம்மணிஹாரம் தொடும்படியாக அணைத்துக் "காண்பன காண்'' எனலும் "இப்போது காணவேண்டியது எனக்கு இதுதான்'' என்று கூறியவாறு அவளை இறுகத் தழுவினான். அதன்பின் மன்னன் மன்மதன் மலரப்புகளின் செயலால் இயங்கியவனாக முத்தமிட "எதற்கு முயன்று எதில் முடிந்தது? சரிதான்'' என்று அவள் நகைத்தாள். பின் மன்னனும் அம்மணி ஹாரத்தால் முற்றறிவு வருதலுணர்ந்து இதுவரை அவள் கூறியதெல்லாம் உண்மை என ஓர்ந்தான். சத்வதாத்மனும் தன் சாபம் நீங்கப்பெற்றுத் தனது குழந்தைப்பருவ முதலான முன்னைய நினைவுகள் கைவரப்பெற்று "இந்தத் தம்பதிகளால் அல்லவா இப்போது பெற்றேன்'' என்று அவர்களை வணங்கி "நான முன்னைய மகாராஷ்டிரதேச மன்னனாயிருப்பதைக் காட்டிலும் நின்னையண்டியிருப்பதே மிகுந்த சிறப்புடையதெனக் கருதுகிறேன். அவ்விதமே இங்கு இருக்க அருள் புரிக'' எனலும் களாபூரணன் தன் உறவினன் ஆதலறிந்து முன்னினும் அதிக கௌரவத்துடன் அவனை மதித்து அவனில்லம் அனுப்பிவைத்தான், பின் மதுரலாலசையுடன் இன்புடன் இருந்தான்.

இருவர் இதய பரிசததால் மணிமாலையின் மகிமை யால் ஒருவரை ஒருவர் மிகவுப புரிந்துகொண்டு நேசித்து ஒரே சொல்லுடன் இணைந்து மகிழ்ந்தனர். கற்பும் பொற்பும் மிக்க அபிநவசௌமுதியின் அன்புக்கேற்ப மன்னன் தகுந்த முறையில் நடத்தினான். மதுரலாலசை அந்த ரத்னஹார மகிமையால் தெளிவும் அறிவும் சொல் லாற்றலும் மிக்க கலைகளின் சிறப்பினை உணர்வித்துத் திருத்தி இன்புற்றாள்.

அம்மணிமாலையின் மகிமையால் தன்னாட்டிலும் பிற நாட்டிலும் உள்ள மக்கள் நற்குண தீக்குணங்களை ஆய்ந்து தெரிந்து மன்னவனை எச்சரித்து வந்தாள். மதுரலாலசையின் மார்பைத் தழுவும்போது மணிமாலை யின் பரிசம்பட்ட மன்னன் முற்றறிவுடையவனாக மண் ணுலகம் வியந்து பாராட்ட மறம் நீக்கித் தீயன புறம் போக்கி அறம் நிறுவினான். 'தான் அறிந்த செய்தியை இவன் சொல்லவில்லை' என்று கூறித் தன் நண்பர்களைத் தண்டிப்பான். 'பகைக்கு இடங் கொடுத்தான்' 'குற்ற வாளி இவன்' என்று கூறி அமைச்சர் குற்றங்களை அறிந்து தண்டிப்பான். 'இவன் திருட நினைத்தான்' என்று அறிந்து தண்டிப்பான். 'இவன் தன் மனைவியுடன் சின்னஞ்சிறு குற்றத்திற்கும் சினந்து துயர் செய்தான்' எனத் தண்டிப்பான். அவ்விதம் தீயன கடிந்து திருத்தி அல்லன போக்கி நல்லன ஆக்கி நலமுடன் ஆண்டு வந்தான்.

ஒரு நாள் மதுரலாலசையுடன் தனித்திருக்கும்போது முற்றறிவுக்குக் காரணமான ரத்னஹாரத்தைப் புகழும் போது அதனை அருளிய திருமாலின் பெருமை நினைவுக்கு வரவே, திருமாலைப்பாடியபாடல்கள் இகபர சாதனமெனத் தேர்ந்து "முற்பிறப்பில் அனந்தசயனபத்மநாபன் சன்னதி யில் சான்றோர் உரைக்கேற்ப இயற்றிய 'லக்ஷ்மி நாராயண சம்வாதம்' கதை நினைவுக்கு வரவே நினைந்து அந்தக் கவிதைகள் மதுரலாலசையின் மதுரமான குரலில் கேட்டல்

இன்பமும் சிறப்பும் தரும் என ஓர்ந்து அவள் மூலம் கேட்க விருப்பினான். "மடந்தாய்! மதுரலாலசையே! என் முற்பிறவியில் நான் லக்ஷ்மிநாராயண சம்வாதமெனும் காவியம் செய்தது உன் குழந்தைப் பருவத்தில் கூறிய என் வரலாற்றால் அறிந்தேன். அந்தக் கவியமுதை உன் மணிமாலையின் திறனால் அறிந்து முற்றும் இப்போது சொல்ல வேண்டும். உன்னைத் தழுவும்போது உன்மீது காதல் மீறி மோகவெறியால் நானே உணர முடியவில்லை" என்றனன். அது கேட்டு நாணுடன் நகைத்த நங்கை "மன்ன! தங்கட்கெது விருப்பமோ அதையே யானும் விரும்புகிறேன். அப்புண்ணிய கதை முழுதும் சொல்கிறேன்" என்று கூறித் தனது முற்றறிவுக்கு நிலையமான இதயந் தொட்டிருக்கும் மணியாலையை வணங்கி, அது கிடைத்தற்குக் காரணமான களாபூரணனையும், அலகுவிரதனையும், மணிகந்தரனையும், கண்ணனையும் அந்தணனையும், சுக்கிரகனையும், வடபத்திர சாயியையும் மனத்தில்நினைந்து, 'இந்தக் குருபரம்பரை அருள்புரிவதாக' என்று வணங்கி, அந்த லக்ஷ்மிநாராயண சம்வாத கதையை முன்னாள் மணிகந்தரன் சொன்னவாறு இவ்வாறு கூறத் தொடங்கினாள்.

"அமுதவெள்ளம் பாய்ந்தோடும் விரஜா நதியின் கண்களால் தடுக்க முடியாத பிறவிச் சுழலையுடையதும், எண்ணிலாப் பிரம்மாண்டங்கள் என்னும் நீர்க்குமிழிகளையுடைய மாயைப் பெருங்கடலுக்கப்பாலானதும், கதிரவன் மதி, தீ எனும் ஒளிகளைச் சாராமல் இயல்பான சுயம் பிரகாசமுடையதும், சுதந்திரமுடையதும், ஒளி பொருந்தியதுமான சுத்த சத்துவகுண சரீரிகளான நித்திய முக்தர்களையுடையதும், சகல வேதாந்தங்களினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லா நலன்களுடையதுமான பரப்பிரம்மத்துவத்தை என்றும் கண்ணாரக்காணும் பேறுடைய அறிஞர்களையுடையதுமான வைகுண்டம், திருமாலின் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

சித்(ஜீவன்) அசித் (உலகம்) ஈஸ்வரன் (இறைவன்) எனும் முப்பொருளையுமுடையதும், நீர், நெருப்பு, காற்று, மண் விண், அகங்காரம், மகத்தத்துவம், பிரகிருதி முதலிய ஆவரணங்களை (மறைப்புகளை) உடையதும் ஆன பிரபஞ்சத்திற்கு அப்பால் உள்ள அந்த உலகம் திகழும் உலகிலுள்ள குற்றங்கள் அணுமாத்திரமும் அங்கில்லை. பரிபூரணானந்த மயமானது அவ்விடம். சான்றோர் பாராட்டும் பிரம்மலோகத்தை விடக் கோடி மடங்கு உயர்ந்தது. அரம் அரண்யம் எனும் அமுதக்கடல்கள் குளிர் நுரைத்திவலைகள் எறியும் அலைகளுடன் திகழ்கின்றது. மோட்சலட்சுமியை மறைத்த திரைபோல விரஜா நதி அந்த வைகுண்ட எல்லையாகத் திகழ்கின்றது. அந்த விரஜா நதியினருகில் முகில் ஒளி சிந்தும் எழில் மிகும் பொய்கை உள்ளது. பாசி எனும் கேசமும், தாமரை எனும் முகமும், வண்டின் கூட்டமெனும் பார்வையும் வயிற்றின் மும்முடிப்பொத்த அலைகளும், தாமரைத் தண்டுகள் என்னும் கைகளும், அன்றில் புள் எனும் முலையுமுடைய மோட்சலட்சுமி எனுந்தகைய அப் பொய்கையின் சிறப்பென்னென்பது?

இன்புமிக்க அவ்விடத்தில் 'சாமசதனம்' எனும் பெயருடைய அஸ்வத்த மரம் உண்டு. சிறப்புடைய அம்மரம் தங்கமயமாகவும் முப்பெருங்கிளைகளுடன் திகழ்ந்து மறைகள் பாராட்டும் மாண்புடையதாகித் திகழ்கிறது. அம்மரநிழலில் மெல்லிடைப் பூங்கொடியாரான அப்சரஸ்திரீகள், பூ, சந்தனம், உடை, அணிமணிகள் முதலியவை பல கையிலேந்திப் பற்றறுத்து வீடு புக்க பாகவதர்களை எதிர் சென்றழைத்து அலங்காரம் செய்வார்கள்.

செவ்வரிபடர்ந்த கடைக்கண்பார்வைகள் எனும் கருங்குவளைப் பூக்களைத் தூவித் தூவி, புன்முறுவல் எனும் சந்தனச் சாற்றைப் பல தடவை முகத்தாலே தெளித்துத் தெளித்து, மாலைகள் இட்டு, கக்குள் எனும் கனக காந்தியாம், மஞ்சள் பூசிப்பூசி, செவிகட்கு அணிகள் இட்டு, கைத்தாமரையொளி எனும் குங்குமம் கன்னத்தில்

தேய்த்துத் தேய்த்து. அந்த நீரரமகளிர்கள் அவர்களை மகிழ்வித்து முக்தி எனும் கன்னிகையை மணம் புரிய வந்த மணமக்களைக் கேலிசெய்யும் மணமகளின் தோழிகளோ எனும்படியாகத் திகழ்ந்தார்கள்.

இவ்விதம் பரம ஆனந்த அற்புதமான அந்த உலகம் சிந்தைக்கும் சொல்லுக்கும் எட்டாத செல்வங்களையுடைய தாகத் திகழ்ந்தது. கடம் (குடம்) என்றும் படம் (ஆடை) என்றும் பலதர்க்கவாதங்களைப் புரிகின்ற தீய தார்க்கிகர் கட்குத் தூரமாயதும், சுருதி, ஸ்மிருதி என்று வெறும் கருமத்தைப் பாராட்டும் மீமாம்சர்கட்குப் புரிபடாததாயும் வல்லினம் மெல்லினம், வேர்ச்சொல் என்று பிதற்றும் இலக்கணப் புலவர்கட்கு எட்டாததாயும், மாயை கானல் நீர் என்று பொருளுரைகளில் போரிடும் அத்வைதிகட்கு அடையொணாததும் 'கிருஷ்ணா! விஷ்ணோ! ஹ்ருஷி கேசா! கேசவா!' என்று பாராட்டும் பக்தர்கட்கு எளிதில் அடையத்தக்கதும் ஆக, உலகமாயைகள் ஒண்டாத பேரின்ப மயமான வைகுண்டம் திகழ்கின்றது.

ஆங்கு அமுதக்குளமோ, வெள்ளி நிலப்பரப்போ? அகன்ற மரகதமணி நிலவோ? பச்சைப் பசும்புல்வெளியோ? பதுமராக மேடைகளோ? செந்தளிர் யரக்கூட்டமோ? எனும்படியாக மயக்கத்தையுண்டுபண்ணும் தன்மையது. பூக்கள் சிந்துவானேன், தம் எழிற் புன்னகை படர்ந்தாற் போதாதோ? கற்பூரக் கோலங்களிடலேன், தம் புனித நகத்தொளி மிளிர்ந்தாற் போதாதோ? என்று வியந்து கண்டார் போற்றும்படியாக மங்கையர் அங்கே உலவுவர்.

மலர்களின் தூய்மையும், செந்தளிர்புரை கருணையும் பச்சிலை போன்ற ஆத்ம ஒளியும், பூந்தாதொத்த இருளொளியும், பூந்தேனொத்த ஆனந்தக்கண்ணீரும், மொட்டுகள் ஒத்த புளகமும், மணம் போன்ற அறிவும், பேரின்பும் மிக்கு நித்திய முத்தர்கள் அங்கிருப்பர். அவர்கள் செடி

கொடிகள் மரங்களாகவே இருப்பதும் உண்டு. அவர்க ளைப்போல் சிலர் குயில் கிளிகளாக ஆங்கிருந்து பாடிக் களிப்பிப்பர். இவ்விதம் பரஸ்பரம் இன்புறுத்தி வாழ்வது பரம பாகவதர்கள் இயல்பன்றோ?

ஆங்குள்ள பூங்காக்களின் மரங்கள் திருமகள் பாதத்தி லணிந்த செம்பஞ்சுக் குழம்பின் எழிலால் மலர்ந்தவை. (அசோகமரம் உதைத்தலின் பூக்கும்). சில திருமகளின் திரியும் விழியிணைப் பார்வையில் மலர்ந்தவை! (மகிழ்-பெண்கள் பார்த்தலின் பூக்கும்) சில கரநக முனைகள்படச் சிலிர்த்தவை. மா கைபடத் தளிர்க்கும்) ஆங்கு எப்போதும் பூந்தேனும் பூந்தாதும் சிந்திக் குளிர்ந்த நிலமாக இருக்கும். இத்தகைய புனிதமான வைகுண்ட நகரின் நடுவே, கோடிச் சூரியரை வென்ற பேரொளியுடன் விளங்கும் மணிமயமான ஆயிரக்கால் மண்டபத்தில், நித்திய சூரிகள் ஆயிர இதழ்த் தாமரையில் ஆதிசேடப்பாம்பணைப் பள்ளியில் திருமகள், நிலமகள், நீளா எனும் மூவரும் அடிபற்றிவருட அகில கோடி அண்டங்களைக் காத்தருளும் அச்சுதன் அமர்ந் திருந்தான். அமர மங்கையர் பணிவிடை புரிவர். படுக்கை, அமரும் பீடம், குடை, வஸ்திரம் ஆக ஆதிசேடனே அமைந்து பணிபுரியக் கருடன் கொடி வாகனம் விசிறியாக இருப்ப விஸ்வக்சேனன் வேத்திர ஹஸ்தராகக் (பிரம்புகைக்கொண்டு) காவல்புரியக் குமுதன் முதலிய துவார பாலகர்கள் பணிபுரிய, உலகில் தீயோரைக் கடிய பாஞ்சஜன்யம் எனும் சங்கும், சுதர்ஸனம் எனும் சக்கரமும், சார்ங்கம் எனும் வில்லும், கௌமோதகி எனும் கதையும் நந்தகம் எனும் வாளும் படைகளாகக் கொண்டு பெருமாள் அமர்ந்திருந்தார்.

தாமரை வென்ற முகமும், மதி வென்ற நகமும், களிற் றின் துதிக்கை வென்ற தொடையும், களிற்றினை வென்ற நடையும், நகிலும் நான்முகன் அமர்ந்த நளினமலர் உந்தி யும், திருமகள் அமர்ந்து புன்னகை சிந்தியும், கௌஸ்துப மணி நந்தியும், வைஜயந்தி மாலை ஒளி முந்தியும் நிகழவும்

இயற்கை எனத்தகைய மறுவும், அகங்காரம் எனத்தகு சங்கும், மனோமயமெனத்தகு சக்கரமும் அமைய எழில் தரும் இருகரமும் பாம்பணை ஊன்றிய கரமும், முழங் காலில் ஒருகரமும், புத்தெழில் மகரகுண்டல ஒளியும், நுதலின் ஒளியும், பவள இதழும், சம்பக மலர்புரை நாசி யும், வெண்டாமரை யொத்த கண்களும், விற்புருவங்களும், கருங்குழலும், புன்னகை சிந்தும் எழில் வதனமும், பொன் னொளி சிந்தும் கிரீடமும், முகில்புரை வண்ணமும், கோடிச் சூரியரை எள்ளும் பேரொளிப் பிழம்பும் ஆக விளங்கும் திவ்ய மங்கள சொரூபனாகிய திருமால் திருமகள் கேள்வன், அழிவிலாதான், இறைவன், நித்தியன் பிறப்பிலான், பாவங்களை நீக்கும் பரமன், ஜகந்நாதன் முச்குணம் பற்றா முதல்வன், மூவுலகுக்கிறைவன். அருள் தரும் அமலன், மறைபாடும் இறை, நாராயணன் ஆகிய விஷ்ணுவை நித்திய முக்தர்கள் அங்குத் துதித்து இன்புற் றிருப்பர்.

தன் கண்சைகை கணவனின் காத்தல் தொழிலுக்கு ஆசிரியர்போல் அமைய, தன் விலாசம் கணவனின் காதல் அரசாட்சிக்கு மந்திரியாக மிளிர, தன் விளையாட்டு கணவ னின் பத்துவகை நாடகத்தின் இயக்குநராக அமைய, தன் யென் சொல், பக்தர்கட்கு அருளமுதீயும் கற்பகத் தருவா யமைய, எல்லாக் கலைகட்கும் துணையாயிருந்த, பாற் கடற் பிறந்த பாவையாகிய திருமகளை மார்பில் ஏந்தி ஆதரித்தான் திருமால். அத்திருமகள், உலகமாதா, ஏதோ பேச்சுவாக்கில், சம்சார பந்தம் என்னும் காட்டுத் தீயில் வெந்து கருகும் மக்கள் தொகையினரைக்கண்டு உருகிய உள்ளத்துடன் தாமரைக் கண்ணானைப் பார்த்து மெல்ல இவ்விதம் கூறலானாள்.

"தேவா! தங்களை ஒன்று கேட்க மனம் விழைகின்றது. என் கோரிக்கையைக் கேட்டருளவேண்டும். உலகங்கள் எல்லாம் படைக்கவும் காக்கவும் அழிக்கவும் ஆற்றல் படைத்தவன் நீதான்!. உன் அருளால் அன்றோ நான்

முகன் படைப்பையும் மன்மதனை அழித்த மகேசன் அழிப்பினையும் மேற்கொண்டு தொழில் புரிகின்றனர். உயிர்த் தொகுதிகளின் கருமவினைக்கீடாகப் பயன் துய்க்கும் வகையில் நீ நினைந்து பிரம்மாண்டங்களின் சிருஷ்டி ஸ்திதி லயங்களை உண்டாக்கினாய்! என்று சுருதிகள் பாடும் ஆதியந்தமற்ற நல்வினை தீவினைக்கீடாகப் பயன் துய்த்தற்கு முடிவின்மையின் ஆத்மஞானம் அருளிட வேதங்களைப் படைத்தாய். இத்தகைய வேத சாஸ்திரங்களையும் (சுருதிஸ்மிருதிகளை) அறிய இயலா மக்கட்காக இராமகிருஷ்ண அவதாரங்களை எடுத்து அருள்பாலித்தாய்! உன்னை எவ்விதம் புகழ இயலும்; சிறிதும் பிணங்காது பால் நினைந்தூட்டும் தாயினைப் போல வலிதின் வந்தருள் புரியும்போது கேசவா! ஒரு சிலரே பயனடைந்துய்ந்தார்கள். ஆனால் கோடிக்கணக்கான மக்கள் இன்னும் பிறவிக் கடலில் தத்தளிக்கின்றார்கள். எல்லாம் உன் மாயாவிலாசமேயன்றி யாம் என்னறிய முடியும். நீ நினைத்தது நடந்தே தீரும் என்பது தெரிகிறது. ஆகையால் எல்லா உயிர்களும் ஈடேறும் வகையில் உன் அருள் அமுதம் பாய்ச்சும்படி கேட்டுக்கொள்கிறேன். எல்லாம் கடந்தொளிரும் தங்கட்கு வேற்றுமையுண்டோ? எல்லா உயிர்களும் உய்ய அருள் தருவாயாக!''

என்று இவ்விதம் எல்லாவற்றையும் காக்கும் அருள் உள்ளத்துடன் திருமகள் கேட்ப, தன் காதற் கிழத்தியின் மென்மொழித் தேன்மொழிகள் கேட்டுத் திருமால் உளம் மகிழ்ந்து அருள்பூத்துப் புன்னகை புரிந்து மெல்ல நோக்கித் 'தந்தையைவிடத் தாய்க்கு மக்களிடம் அன்பு அதிகம்' என்பர். ஆதலின் உன்னுடைய இணையிலா அருளும் ஏற்புடையதே. ஆதலின் உன்னுடைய, நீ கூறியபடி யார்பாலும் கண்ணோட்டமின்றி நடுநிலை நின்று அருள்தல் உண்மைதான். எனினும் அவரவர் குண தோஷங்களைக் கருத்திற்கொள்ளாமல் எப்படி ஒன்றாகப் பார்க்கமுடியும்? இருவினைக்கேற்பப் பயன் தருவதும்,மறைகளை வகுத்ததும்

யானே! ஆகையால் அவரவர் கருமங்கட்கேற்பவே நான் நன்மை தருவதுதான் இயல்பானது. எனினும் மனிதன் சிறிது நன்மையின்பால் மனம் வைத்தாலும் உடனே அவனைக் காத்துக் கடைத்தேற்றுவேன். நன்மையிடத்தும், என்னை வணங்கவும் மக்கள் மனம் முயலும் வகையில் நான் பத்தவதாரங்கள் எடுத்துத் திருவிளையாடல் புரிந்தேன். மோட்சமடையும் உபாயமாக என்னை வணங்கி மக்கள் எளிதின் உய்யும்படி திருவரங்கம் முதலிய தலங்களில் எழுந்தருளியுள்ளேன். இதுவும் போதாதென்று இன்னும் எல்லா மக்கட்கும் கடைத்தேற்றும் வழி வேண்டினாய் என்றால் அது எமக்கும் விருப்பமுடையதுதான். எல்லா உயிர்களையும் அருள்பாலிக்கும் நல்லறத்தை யார்தான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் நின் கோரிக்கையை ஏற்று இப்போது நான் தரும் சிறப்பினைக் கேள். உலகம் கடைதேறும் வகையில் நான் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கம், காஞ்சி, வேங்கடம் அகோபலம், புருஷோத்தமம் முதலாய திருத்தலங்கட்குச் செல்ல இயலாதவர்கள் தத்தம் இடத்திலிருந்துகொண்டே என்னை மனதார நினைந்து வழிபட்டால் அவர்களது பிறவிப்பிணி நீக்கி வீடருள்வேன்!'' என்று திருவாய் மலர்ந்தருளத் தேவி மகிழ்ந்து 'இதுவே போதும்' என்று கூறி அத்தேவதேவனின் எளியர்க்கிரங்கும் தாயன்பைப் பாராட்டினாள்!''

என்றுகூறி மதுரலாலசை அக்களாபூரண மகாராசனிடம் இது இப்போது தாங்கள் கேட்ட தங்கள் முற்பிறவியில் இயற்றிய 'லக்ஷ்மி நாராயண சம்வாதம் கதை' யாகும். தாங்கள் கேட்டதால் வீடுபேறடையும் நன்னெறி கிடைத்தது. தாங்கள் கேட்டதால் இன்று சுபதினம் ஆயிற்று. என் பிறவிப்பயன் அடைந்தேன் என்று கூறி ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேச மகாத்மியத்தைக் கேட்டு வியப்புற்று "இத்தகைய பக்த வச்சலனா' என்று திருமாலைப் புகழ்ந்து கொண்டாடி வணங்கினாள்.

களாபூரணனும் அது முதற்கொண்டு திருமாலை வழிபட்டுக்கொண்டு நீதி நெறியில் அரசோச்சி இன்புற்று வாழ்ந்து வந்தான். அவன் தன் முதல் மனைவி அபிநவகௌமுதியிடம் சுப்பிரசாதன் என்னும் மகனும், இரண்டாம் மனைவி மதுபலாலசையிடம் சரசன் என்னும் மகனும் பெற்று மகிழ்ந்தான், நவவருஷங்கள் (ஒன்பது ஆண்டுகள்-பாரத வருஷம் முதலிய ஒன்பது), கண்டங்கள் உடைய பூமிதேவியைப் புணர்ந்து இன்பமுடன் உலகினை ஆண்டான். அம்மன்னனைப் போரில் எதிர்ப்பார் இலர். எதிர்த்தாலும் மதகளிற்றின் கும்பமெனும் முலைத்தடத்தில் நகக்குறியிழைத்தவரேயாவர், அம்மன்னனின் போர்க் காலத்தெழுந்த படைகளின் தூசிப்படலம் கடலை முழ்கடித்து, வற்றச் செய்யவும், பகைவர்தம் பெண்டிரின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் வெள்ளம் தமக்கிணையான கயல்கட்கு ஆதரவளிக்கும் பொருட்டாகப் பாய்ந்து கடலை நிறைவித்தது. உருவெழிலிற் சிறந்த மன்மதன் போலவும், வீரனாகவும் தீரனாகவும் உறவினர்க்குதவும் மந்தாரமாகவும், நீதிநெறி செல்லும் அருளுடையனாகவும், மாசற்ற மன்னனாகவும் அக்களாபூரணன் திகழ்ந்து இன்புடன் நீடூழி வாழ்ந்து வந்தான்.

எல்லா நற்குணங்களும் நிறையப்பெற்ற களாபூரணனின் கதையைக் கேட்டவர் சகல வைபவமும் சந்ததியும் பெற்றுப்பொலிவர் என்று முன் நான்முகன் கூறிய வாழ்த்து உள்ளதாதலின் சான்றோர் அனைவரும் இதனைக் கற்றுக் கேட்டுப் படித்து இன்புடன் வாழ்வார்களாக! இம்மகா காவியம் எல்லா நாடுகளிலும் புகழ்பெற்றுப் பிரசித்தி பெற்றுக் கண்ணன் அருள் உற்றுச் சான்றோர் அருளால் என்றும் புகழுடன் திகழ்வதாக!

இது சான்றோர் போற்றும் கவிவளம் சான்ற பிங்களி அமரநார்யர் புத்திரர் சூரனர் படைத்த களாபூரணோதயம் என்னும் மகா காவியம்.

முற்றும்

அனுபந்தம்

முகவுரை*

டாக்டர். சி ஆர் ரெட்டி

களாபூரணோதயத்தை இயற்றியவர் மகாகவி பிங்களிசூரனர். இவர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயருக்குப் பின்னிருந்தவர். அனேகமாக ராமராஜ பூஷணருக்கு முன்பிருந்தவர். மேலும் இங்கிலாந்தில் மிகச்சிறந்த நாடகங்கள் இயற்றிய சேக்ஸ்பியருக்குச் சமகாலத்தவர் எனக் கூறலாம்.

அக்காலத்தில் தெலுங்கு நாட்டில் பிரபலமாக இருந்த கவிதைப் போக்கு, பிரபந்தம் இயற்றுவதாகும். பிங்களிசூரனர் மத்தியகாலக் கவிஞர் ஆகையால் தமக்கு முன்பிருந்த பழம் பேரிலக்கியங்களைச் சிறப்பாக மகா பாரதத்தை நன்றாகப் பயின்றவர். பிற கவிஞர்களுடன் ஒப்பிடத்தக்க சில கவிதைகள் இருப்பதைக் கண்டு நம் கவிஞர் அவற்றை நகல் செய்ததாகக் கருதுவது கூடாது. நம் கவிஞர் உயர்ந்த கவிஞர்களின் போக்கை உணர்ந்தாலும் கூடத் தன்காலக் கவிஞர்களின் போக்கிற்கிணங்க, சில சிருங்கார வருணணைகள் செய்திருக்கிறார். இக்காலத்தைப் போல அந்நாளில் நூல் வெளியிட்டு, மக்கள் வாங்கிப் படித்து, பிரசாரம் அடைந்து அதன் மூலம் பணம் சம்பாதிக்க முடியாது. ஆகையால் நம் கவிஞர் அரசர்களைச் சார்ந்துதான் வாழ வேண்டியிருந்தது. ஆதலின்

---

*புகழ்மிக்க பேரறிஞர் சி. ஆர். ரெட்டி அவர்கள் களாபூரணோதயம் மூலநூல் பதிப்புக்காக எழுதிய இந்த முன்னுரை நூலின் சிறப்பினை விளக்குவதாக இருப்பதால் இங்கு அனுபந்தமாகத் தரப்பட்டுள்ளது.

அரசரின் விருப்பு வெறுப்புகட்கேற்பவே கவிஞர்கள் கவிதைகளைப் படைக்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. உதாரணமாக நம் கவிஞர் சைவமதத்தவரேனும் அரசரைத் திருப்திபடுத்தவேண்டித் திருமாலை வணங்கும் பாடலை முதலில் இயற்றியுள்ளார். எனினும் கவிஞர் கருத்தாழமும் அறிவுச் செல்வமும் மிக்கவராதலின் தனது விருப்புக்கும் அரசரது விருப்புக்கும் இடையே நின்று 'திரிசங்கு சொர்க்க' நிலையிலே கவிதைகள் படைத்துள்ளார் என்று தெரிகிறது. இவர் இயற்றிய பிறநூல்கள் 'ராகவ பாண்டவீயம்' என்னும் சிலேடைக் காவியமும் "பிரபாவதி பிரத்யும்னம்" எனும் காவியமும் ஆகும்.

களாபூரணோதயம் தெலுங்கில் இணையற்ற நூல். பாரதம், மனுசரித்ர முதலியவற்றைப்போல மொழி பெயர்ப்போ, தழுவலோ அன்று. கவிஞருடைய சுய கற்பனைப் படைப்பாகும். பிரபந்தக் கவிகளிடம் காணரிய கவித்திறனும் கருத்தாழமும், கற்பனை வளமும் பொருத்தமும், பாத்திரங்கட்கேற்பச் செய்யுள் நடை அமைத்தலும் இதில் மிகச்சிறந்து விளங்குகின்றது. எனினும், காலச் சூழ்நிலையைத் தவிர்க்க முடியாதாதலால் பிரபந்த கவிகளிடமுள்ள சில குறைபாடுகள் இதிலும் உண்டு. எனினும் குறையைவிட நிறைவே ஆயிரமடங்கு அதிகம். சூரணர் எழுதிய நூல்களில் இதுவே மிகச் சிறந்தது. எனினும் 'ராகவபாண்டவீயத்தைப்' போற்றிய அளவு களாபூரணோதயத்தை நம் கவிஞர் போற்ற வில்லை.

ராகவபாண்டவீயத்திற்குப் பிறகு சிலேடை நயத்தில் கவிஞர்க்கு அவ்வளவாக விருப்பமில்லை என்பது அதன் பின் இயற்றிய இரு காவியங்கள் மூலம் புலனாகிறது. இக்காவியத்தின் குறை நிறைகட்கு மூலகாரணமானது. சூரனர் நூலின் தொடக்கத்தில் செய்துகொண்ட சூளுரையாகும். "எல்லா இலக்கணத்திற்கும் இலக்கியமாக அமையத்தக்க மகாபிரபந்தம் செய்வது புகழுக்குரியது"

என்று நினைத்துப் "புதுமையான கதைப் படைப்பின் சிறந்ததாகவும், அற்புத நிகழ்ச்சிகள் உடைத்தாயும் சிருங்கார ரசமிக்கதாகவும் நலந்தரும் பொருள் வருணனைக்குறைவிடமாகவும் உள்ள களாபூரணோதயம் எனும் மகா காவியத்தை" இயற்ற முனைந்துள்ளார்.

கவிஞரின் குறிக்கோள் இக்காவியம் இத்தனை இலக்கணங்களோடு கூடியிருக்கவேண்டும் என்பதாகும். கவிஞர் தம் குறிக்கோளை அடைந்துவிட்டார் என்றா லும் இப்படிச் சூளுரைத்துக்கொண்டு எழுதியதால் முழு நிறைவுடைய மாசிலாத காவியமாக மலர்ந்ததா என்பது ஐயப்பாடுடையதாக உள்ளது. கதை இயல்பாகத் தன் பொருளுக்கேற்பத் தானாக வளர்ந்துகொண்டே செல்ல வேண்டும். அப்போதுதான் சுவை குன்றாமல் பொருத்த முடன் திகழும். அதை அதன் போக்கில் வளரவிட்டு அவ் வப்போது சீர்திருத்தங்கள் செய்துகொண்டும் சரிப் படுத்திக்கொண்டும் சென்றால் அது சிறப்பாக அமையும். அதைவிடுத்து முன்கூட்டியே இந்த அம்சங்களைப் புகுத்தியே தீர வேண்டும் என்று சங்கற்பம் செய்துகொண்டு வலிந்து புகுத்திக்கொண்டு போனால் இயல்பான கதை யோட்டம் வருமா? அது சிறப்புறுமா? என்று சிந்திக்க வேண்டும்.

சூரனருக்கு இந்த முயற்சியால் கிடைத்த நன்மைதீமை கள் எவை என்றால் புதுமைக் கதைப் படைப்பியற்ற முயன்றதால் தனது கவித்திறனுக்கும் கற்பனை வளத்திற் கும் நல்ல இடம் கிடைத்துள்ளது. களாபூரணோதயம் சாதாரணக் காவியங்களைவிடச் சுவையோடிருப்பதற்கு இதுவே காரணமாகும். ஆனாலும் ராமாயண பாரதங் களின் அளவு ரசனை இல்லாதிருப்பதற்குக் காரணம் என்ன வென்றால் 'எல்லா லட்சணங்களையும் பலாத்காரமாக வாவது கொண்டுவர வேண்டும்' என்று முன்கூட்டியே சங்கற்பித்துக் கொண்டதால் கதையை இயல்பான பக்குவ நிலைக்குக் கொண்டுவராமல் அங்கங்கே விறுவிறுப்பைக்

குறைத்துள்ளார். எனினும் பிரபந்தங்களில் கதை கண்ணுக்குத் தெரியாத அளவு குறுக்கப்பட்டிருக்குமாதலின் அக்குறையைப் போக்கி இந்தக் காவியத்தில் கதையை வளமுடன் அமைத்துள்ளார். அதற்குக் காரணம் எல்லா லட்சணமும் இருக்கவேண்டுமென்ற சங்கற்பமே பிரபந்தங்களில் சிருங்கார ரசமேயன்றிப் பிற ரசங்கள் சாதாரணமாகக் காணப்படாது. நமது சூரனர் களாபூரணோதயத்தில் எல்லா ரசங்களும் இடம்பெற வேண்டி அதற்கேற்பக் கதையை விரிவாகக் கற்பிக்க வேண்டியவரானார். ஆதலின் இங்குக் கதை விஸ்தாரமாக உள்ளது. எல்லா ரசங்களையும் ஊடாட விட வேண்டினால் கதையைத் தாறுமாறாக இழுக்க வேண்டித்தான் வரும். இக்குறைபாடு தவிர்க்க முடியாததென்றே கருத வேண்டியுள்ளது.

கற்பனைத்திறன் இக்கவிஞனைப்போல் தெலுங்குக் கவிஞர்களில் வேறெவரிடமும் இல்லை. திக்கன்னர் போன்ற ஒரு சிலருக்கு வேண்டுமானாலிருக்கலாம். சூரனரிடம் பிரபந்த கவிகளிடமிருக்கும் வருணனைத் திறனுடன் அவர்கட்கில்லாத கதை கற்பிக்கும் திறனும், பல்வேறு சந்தர்ப்பங்களை ஒன்றுகூட்டும் திறனும், கற்பனை வளத்துடன் சொல்வளமும் உண்டு. கவிதையின் உருவத்தை வருணிக்கும் இச்செய்யுளின் கருத்தே இதற்குத் தகுந்த உதாரணமாகும். “குளிர்ந்த வெண்ணிலவுக்கு நறுமணம் வாய்த்தாலும், நறுமணமும் தண்மையுமுடைய கற்பூரத்திற்கு மென்மையும் கூடினாலும், நறுமணமும் தண்மையும், மென்மையும் கூடி மக்கட்கின்பம் தரும் இளந்தென்றற் காற்றுக்கு இசைசுவையும் ஏற்பட்டாலும், கவிஞனுடைய சொல்லின்பத்திற்கு இணையென்று ஒருவேளை சொல்லலாம்.” கருத்து, நடையை மிஞ்சியதா? நடை, கருத்தை மிஞ்சியதா? என்றெண்ணத்தக்க பாடல்களில் ஒன்றிது. மேலும் சூரனர் தமது சமகாலத்தவரான சேக்ஷ்பியரைப் போன்றே அங்கங்கே கவிதை நடையைக் குறித்த ஆய்வுகளைத் தனக்கும் கதைக்கும் குறைபாடு நேராவண்ணம்

பாத்திரங்களின் மூலமாகச் சொல்லியுள்ளார். வெளிப்படாமலேயே தனது நூலைத் தானே விமரிசித்துள்ளார். களாபூரணோதயத்தை இயற்றும் காலத்தில் கவிஞர் பொருளணிகளுடன் சொல்லணிகட்கும் முக்கியம் கொடுத்துள்ளார்.

பின்னர்ப் 'பிரபாவதிபிரத்யும்னம்' இயற்றிய காலத்தில் தன் நடையை மாற்றிக்கொண்டு பொருளணிகட்கும், கருத்தாழம், கதையைப் பொருத்தமாக இணைத்தல் முதலியவற்றில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தியுள்ளார். ஆதலினால்தான் பிரபாவதி பிரத்யும்னத்தில் சித்திரக் கவிதைகள் கொஞ்சங்கூட இல்லை. களாபூரணோதயத்தில் கொஞ்சம் அதிகம்தான். களாபூரணோதயத்தை விடப் பிரபாவதிபிரத்யும்னம் படைப்பில் சிறந்ததே எனினும், அனேகமாகக் கவிஞன் வயதில் மூத்தமையால் பற்றுகள் தளர்ந்திருக்கும்போல் தெரிகிறது கற்பனைத்திறன் குறைபட்டுள்ளது. களாபூரணோதயத்தில் உள்ள கற்பனைத் திறன், பிரபாவதி பிரத்யும்னத்தில் இல்லை. பொருளைக் கொண்டு பார்த்தால் களாபூரணோதயம் இணையற்றது. எனினும் நடை பிரபந்தோரணையிலுள்ளது. சிலேடை, யமகம், கடை எதுகை, இருமொழிக் கவிதை போன்ற செய்யுள் நடைகளும் சொற்சிலம்பங்களும் உள. ரகடை, தண்டகப் போன்ற செய்யுள் நடைகளும் உண்டு.

கதையை விவரிக்கும் முறை இரண்டு: 1) விஷயத்தை நடந்த வரிசைக் கிரமமாகக் கால வரிசைப்படி கூறுவது. 2) காலக்கிரமத்தை விடுத்து ரசமான ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு ஆரம்பித்துப் பின், முன் பின்னாகக் கதையை வளர்த்து முடிவு செய்தல். முதலாவதைக் காலக்கிரமம் என்றும் இரண்டாவதைக் காரிய காரணக் கிரமமென்றும் கூறலாம், பொருள் தத்துவ பரிசீலனையில் காலக்கிரமத்திற்குப் பிரசித்தியதிகம். காவியங்களில் ரசமே பிரதானமாகையால் மொத்தத்தில் காலக்கிரமத்தைவிட்டு விடுவதே நல்லது. காரியகாரணக் கிரமமாகக் கதையை

விளக்கியவர்கள் தெலுங்கில் எனக்குத் தெரியச் சூரனரைத் தவிர்த்து வேறொருவர் இல்லை. இவ்வழி நடையை முதன் முதலில் கடைப்பிடித்தவர் இவர்தான் போலும். காலக் கிரமத்தையொட்டிப் பார்த்தால் இந்தக்கதைக்கு முதற் பகுதி ஐந்தாவது அத்தியாயத்தில் வரும் கலைமகள், நான்முகனின் கேளிக்கையாகும். அதாவது சாதாரணக் கவிஞன் எழுதியிருந்தால் ஐந்தாம் காண்டம் முதற் காண்டமாயிருக்கும். பார்த்தீர்களா இக்கவிஞரின் கதையிணைப்பிலுள்ள திறமையை! கதைத் தொடக்கத்திற்கும் காவியத் தொடக்கத்திற்கும் எவ்வளவோ தூரம் உள்ளது. இப்படித் தூரமாக இருந்தாலும் கூடக் கோவை விடாமல் எழிலுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது கதை முழுமையும் தெரிய ஐந்து அத்தியாயங்களும் படித்துத் தீர வேண்டும். இனிக் கதை தெரியவேண்டுமென்னும் குதூகலமோ முதல் அத்தியாயத்திலேயே உண்டாகிவிடுகிறது. ரம்பையும் நளகூபரனும் பேசும்போது கடைசியில் கேட்ட வாக்கியம் ஒன்றை நினைத்துக்கொண்டு, கை கூப்பியவாறு கலபாஷிணி நாரதனிடம் தான் கேட்ட பிரகாரம் இப்படி என்று கூறிக்கொள்கிறாள்.

"... ... ... நான் வீண் மயக்கத்தால் கொஞ்சதூரம் சென்றேன். அப்போது ஒரு சொல் கேட்டேன். அதைக் கேட்பீராக. நளகூபரன் "ரம்பா இந்த நாதனுடைய பேச்சிடையே வந்துவிட்டது. களாபூரணனுடைய செய்தி என்ன ஆயிற்று? முடிவு தெரிவிக்கவும்" என்று கூறவே, ரம்பை இப்போது சொல்லமாட்டேன். உனக்குச் சொல்லக் கூடாதவளாக இருக்கிறேன். இதுவரை சொன்ன கதை கூட நீ யாரிடமும் சொல்லக்கூடாது". இதுதான் முதன் முதலில் களாபூரணனைக் குறித்த பிரஸ்தாவனை. விறுவிறுப்பை உண்டாக்கும் விதத்தைப் பாருங்கள். ரம்பை தன் காதலனுக்கும் சொல்லக்கூடாத கதை என்ன? எதனால் அவள் மவுனமாகி விட்டாள்? என்பது போன்ற கேள்விகள் உண்டாகி அதற்கு விடை கிடைக்கும்வரைக்கும்

ஓர் உற்சாகத்தைக் கதை படிப்பதில் ஏற்படுத்திவிடுகிறது. இப்படிப்பட்ட ஒருமைக்குணம் அதாவது கதை முழுதும் ஒரே தடவையில் படிக்கவேண்டுமெனும் விருப்பம் காவியங்கட்கு அவசியமாகும். மேலும் "நான் தெரிந்து கொள்ள வேட்கையுடன் இருக்கிறேன். ஓ தவமுனிவரே! அந்தச் சளாபூரணன் என்பது யார்? அவனது செய்தி முன்பென்ன சொன்னாய்? எதைச் சொல்லக்கூடா தென்றாய்?" என்று கலபாஷிணி கேட்கும் சொற்கள் அவளுடையது மட்டுமல்ல. நமது உணர்ச்சிகளும் அதுவே தான். அதற்குப் பதில் நாரதன் என்ன கூறுகிறான். "இதெல்லாம் அபூர்வமானது. நானும் சொல்லக் கூடாது." இந்தப் பதிலைக் கேட்டதும் நமது விறுவிறுப்பு அதிகமாகிறது. கதையைப் படிக்கும் ஆர்வத்தைக் கவிஞர் இவ்விதமாக ஊட்டுகிறார். நாரதன் கலபாஷிணி யிடம் மேலும் சொல்லும்போது, "ரர்பை நளகூபர னிடம் இக்கதை கூறாததற்குக் காரணம் இக்கதையைக் கூறியவர்களும் கேட்டவர்களும், நன்மக்கட்பேற்றுடன் பரம்பரை பரம்பரையாகப் பன்னெடுங்காலம் நலமுடன் பூவுலகில் வாழ்வார்கள் என்ற சொல் இருப்பதால், இக் கதை சொன்னால் உலகில் பிறக்கவேண்டி வருமே என்ற காரணத்தாலும், கணவனைப் பிரிய நேருமென்ற காரணத்தாலும் தான் கூறவில்லையாம். நாரதன் கூறாததற்கும் அதுவே காரணமாகும்" என்று கவிஞர் தனது நூற்பயனைக்கூட அதியற்புதமாகக் கதையில் வைத்து இணைத்துத் தன் திறமையைக் காட்டுகிறார்.

இதனால், நமக்குக் கவிஞரின் திறன்கண்டு வியப்பு உண்டாகிறது. மேலும் இக்கதையைக் கூறினால் தேவர்க ளுக்கு நன்மை பயக்காததால் அவர்கள் சொல்லமாட்டார் கள். நமக்குக் கேட்பதால் நன்மை ஆதலின் கேட்க வேண்டுமென்ற விருப்பம் அதிகரிக்கிறது. ஒருவர்க்கு நன்மையாகவும் மற்றவர்க்குத் தீமையாகவும் முடிந்த இக் கதை எப்படி உலகினர்க்குத் தெரியமுடியும் என்றும் வியப்புறுகிறோம். கதை வானுலகில் பிறந்திருக்கிறது.

வானவர்கள் கூறாமல் இக்கதை தெரிவதெப்படி? கதை தெரிந்துதானிருக்கிறது. இல்லாவிட்டால் இக்காவியமே உண்டாகாதல்லவா?

நாரதன், "மடந்தாய்! கேள்! ரம்பைக்குள்ள அச்சம் எனக்கும் உண்டு. ஆதலின் அக்கதை யானும் சொல்லக் கூடாது. எனினும் இக்கதை உலகில் வெளிப்படுத்தப் படும். அதற்குரிய வழிகளும் உண்டு" என்று கூறுகிறான். அவர் கூற்று நிச்சயம் நிறைவேறும். ஆதலினால் யாருக்கும் தீங்கு நேராமல் எந்த மந்திரத்தினால் இந்த வேலையைக் கவிஞர் சாதுரியமாகச் செய்துமுடிப்பார் என்று வியப்பும் விரைவும் படிப்பார்கட்கு உண்டாகிறது.

ஆறாவது அத்தியாயத்தின் பாதி வரைக்குமுள்ள பெருங் கவித்திறன் பின்னருள்ள பாகங்களில் இல்லை. இந்தக் காவியத்தினை இத்துடன் முடித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஏழாவது எட்டாவது அத்தியாயங்களில் கற்பனைத்திறன், பெருமை, அழகு முதலிய கவிதையின் உயிர்த்துடிப்புகள் பல தீனமாகவே இருக்கிறது. கடைசியில் மதுரலாலசையின் திருமணத்தை வருணிக்காவிடினும் அதற்குமுன் கதையினால் நாமே ஊகித்தறியத்தக்கதாகையால் அதை மீண்டும் புகுத்தியது வேண்டற்பாலதன்று என்றே கருதத்தக்கது.

கதையின்போக்கும், இணைப்பும் ஆற்றொழுக்கான ஒற்றுமையுடன் கூடி இருத்தல் கலையின் சிறப்பாகும். இத்தகைய ஒற்றுமைக்கு ஆறாவது அத்தியாயத்திற்குப் பின்வரும் சம்பவங்கள் சிதைவைத் தருகின்றன. ஆதலினால்தான் முதலிலிருந்து முடிவு வரைக்கும் மணிகளைக் கோத்துள்ள நூலிழைபோல 'மணியாரத்தின்' கதையைப் படைத்துள்ளார். இந்த ஆரத்தின் கதையைக் கவனியுங்கள்.

'மணியார' விருத்தாந்தம்

இதற்கு முதல்தலைவன் திருமாலாகும். அவரைத் தன் தவவலிமையால் திருப்தியுண்டாக்கி அந்த மணி யாரத்தைப் பெற்றவன் 'சுக்கிரகன்'. பின் பிராமண சாபத்தால் அவன் தனது முன்னறிவெல்லாம் இழந்த வுடனே, புதிய பிறப்பெடுத்தவன்போல் 'சத்வதாத்மன்' என்னும் பெயரில் விளங்கி, அரசனாகச் சிலகாலமிருந்து, பின்னர்க் களாபூரணனுக்கு மந்திரியாக அமர்கிறான். சுக்கிரகன் முன் தேவதாலயத்தில் வைத்துக்கொண்டு போய்த் தன்வீட்டில் பன்னெடுங்காலம் பூஜைசெய்து வைத்துக்கொண்டு, துவாரகைக்குப்போய் கண்ணபெருமா னிடம் சமர்ப்பிக்கின்றான். கண்ணன் தன்னைப் புகழ்ந்து கவிதை பாடிய மணிகந்தரனுக்கு அதைத் தருகிறான். மணிகந்தரன் அலகுவிரதனுக்கும், அவன் களாபூரண னுக்கும், அவன் சிறுகுழந்தையான மதுரலாலசைக்கும் முறையே வழங்கினர். ஆதலின் இந்த ஆரம் சரஸ்வதி பிரம்மாக்களின் சரசஸல்லாபத்தைப் போலக் கதையை ஒன்றுபடுத்தும் கற்பனைகளில் ஒன்றாகும். காவியத்தின் முன் பின்னிருபாகங்களுக்கு இந்த ஆரம் பொதுவானது. கதை முழுவதும் தவழ்ந்திருக்கும் கொடி போன்றது. இவ்விதமாக இக்கற்பனை மிகச் சிறந்ததாயினும்கூடக் குறையற்றதன்று. எப்படியெனின், அந்த ஆரத்தின் தலைமணி யாருடைய இதயத்தை எவ்வளவு காலம் தொட்டிருக்குமோ அவ்வளவு காலத்திற்கு அவருக்கு முற்றறிவும், சொற்செல்வமும் கிடைக்குமென்று திருமால் வரம் தந்திருக்கிறார். அதன் உண்மையும், அனுபவமும் தெரிந்துகொள்ளுமுன்பே சுக்கிரகன் சாபவசத்தனானான். மதுரைப் பிராமணன் என்றாலோ அதைக் கழுத்தில் போட்டுக்கொள்ளாமல் பூஜை செய்துகொண்டு பன்னெடுங் காலமிருந்தாலும், அவனது மனைவியின் மனோதிடம் எத்தகையதோ? தன் கணவன் பூசைசெய்யும் மணியாரத் தைப் பூண்டு அழகு பார்ராமல் இருந்திருக்கிறாளே! அவள் கூடத் தன் கணவனறியாமலாவது கழுத்தில் போட்டாலும் சிறியதாக இருந்ததால் கழுத்தளவிலேயே இருந்ததன்,

நெஞ்சைத் தொடவில்லையாம். சிறியதாக இருந்தது என்பது எவ்வளவு பொருத்தமோ? இனி அந்த மணியாரம் கடைசியில் களாபூரணனிடம் சேர்ந்ததும் அவன் சிறு குழந்தையாக இருந்த மதுரலாலசைக்குப் போடவே தலைமணி அவள் இதயத்தைத் தொட்டு கிடக்கும்படி விழுந்தது. ஏதோ சமயம் பார்த்து விழவேண்டிய இடத்தில்தான் விழுந்தது. அறிவுள்ள மணியாரம் போலும். அதனால் முற்றறிவடைந்த குழந்தை அனேகருடைய முன்சரிதங்களைச் சொல்லிச் சத்வதாத்மன் சரிதம் சொல்ல வரும்போது இப்படியும் அப்படியும் புரளவே முற்றறிவு நீங்கிவிட்டது. அதன்பிறகும் மதுரலாலசையிடம் இருந்தும், அந்த மணியாரத்தின் மகிமை தெரியாததால் வெறும் ஆரம் எனக்கருதி ஒருபக்கம் பத்திரப்படுத்தி வைத்திருந்ததால் குழந்தைப்பருவம் விட்டுக் கன்னியாகும் வரை அதை யாரும் எடுத்ததில்லை. பின் ஒருநாள் மதுரலாலசை திடீரென நினைவு வரவே அதை எடுத்து அணிந்துகொள்கிறாள். இதயம் தொடும்படி அணிவதால் மீண்டும் முற்றறிவு பெற்றுப் பல கதைகள் கூறுகிறாள்.

இது, காமரூபம் திவ்யதிருஷ்டி போன்ற கற்பனைகளும் ஒன்றாகி விடுகிறது. இப்படியிருக்காது எனும் ஐயத்தைக் கிளப்பிக் கதையில் நம்பிக்கையைக் குறைத்து விடுகிறது. இக்கதையிலுள்ள குறைகளிரண்டு. விரககாலத்தும் கல்யாணம் செய்துகொண்ட நாளிலும் வராத திடீர் எண்ணம் அப்போதெப்படி மதுரலாலசைக்கு வந்தது. மற்றொன்று:- இதயத்தைத்தொடும்படியாகத் தலைமணியை வைத்துக்கொள்ளும்படியான எண்ணம் எப்படி வந்தது? உலகில் அதிர்ஷ்ட வசமாகவும் காரணமற்ற அகஸ்மாத்தாகவும் செயல்கள் நடைபெறத்தான் செய்கின்றன. ஆனால் அடிக்கடி காகமேறப் பனம்பழம் விழுந்த கதையாக அமைத்தால் கற்பனைக்குக் குறைவுண்டாகத்தான் செய்யும்.

காமரூபம், திவ்யதிருஷ்டி போன்றவை எல்லா இடர்களுக்கும் அனுகூலமான சாதனங்களாகையால் சிறப்

புடையவையன்று. இப்படிப்பட்டவை கூடுமானவரை வராதிருப்பதே நலம். நாடக ரீதியில் சம்பாஷணைகள் மூலம் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவதிலும் இந்த நூல் இணையற்றதாக உள்ளது. கதைத் தொடக்கத்திலேயே எவ்வளவு விரைவாக எத்தனை பாத்திரங்களைப் புகுவித்துள்ளார் என்றுகண்டு இன்பமும் வியப்பும் அடைகிறோம். நாரதனும் அவன் சீடனும் பேசுவதும் அருகே ரம்பை நளகூபரன் வருவதும், கலபாஷிணி அவர்களைக் காண்பதுயாக நிகழ்ச்சிகள் கவிஞரின் அதி உன்னதமான திறமையை வெளிப்படுத்துகின்றன.

ஒற்றுமை

சாதாரணக் கவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது சூரனரின் கலைத்திறன் இன்னும் தெளிவாகப் புலப்படும். நமது பிரபந்தங்கள் அனேகமாகக் கதாநாயகனான அரசன் என்னும் ஒரேபாத்திரத்துடன் தான் தோற்றமளிக்கும். அவனைப்பற்றிய சம்பந்தமற்ற வருணனைகள் முடிய ஒரு மணி நேரமாவது வேண்டும். பின்னர்த் தோழனோ யாரோ ஒருவன் வருவான். பின் வேட்டைக்குச் செல்வார்கள். அங்கே சில தோழிகளுடன் கூடிவரும் ஒரு பெண்ணைக்கண்டு அரசனும் விதூஷகனும் தலைவியைப் பற்றிய வருணனையை இரண்டு மணி நேரத்திற்கு ஒருவரோடொருவர் சிலேடை உயர்வு நவிற்சி, உருவகங்களோடு உளறும்போது இது பித்தம் பிடித்த காவியமெனத் தூர எறிவோம். ஆனால் களாபூரணோதயம் ஒப்பற்றது. வேரும் கிழங்கும் சாதாரணமானதாயினும்கூடப் பல்வேறு கிளைகளுடன் பூத்துக் குலுங்கும் பயன்மரம் போன்றது. சாதாரணப் பிரபந்தம், வளையங்கள் கோத்த சங்கிலி போன்றது. அவற்றில் இணைப்பு இல்லை. எத்தனை வளையமாயினும் எடுக்கலாம். மீண்டும் சேர்க்கலாம். நீளத்தைத்தவிர வேறு லாபநஷ்டமொன்றுமில்லை. உருவம் மாறாது. பயன்மரம் போன்ற உயிருடைய பொருளைப் போன்ற காவியங்களை எந்தப் பகுதியிலும்

சிதைக்க இயலாது. புதிய அங்கங்களைச் சேர்க்கவும் இயலாது. எப்படிச் செய்யினும் அளவு வேற்றுமையே யன்றி உருவமும் சீர்குலையும். ஒற்றுமை எனும் கதை இலக்கணத்தைப் பரீட்சிக்கும் முறையாதெனில், உள்ள பாகத்தை எடுத்துவிடலாமா? புதிதாக ஏதாவது சேர்க்க முடியுமா என்று விமர்சித்தலாகும். இவையிரண்டும் இயலாதது ஒற்றுமை உடையதெனத் தெளிவாகும். இயலின் ஒற்றுமைப் பண்பு பண்படவில்லை என்றே கருத வேண்டும்.

மனித இயல்பைக் கண்ணாடி போலக் காட்டும் திறன் உள்ளவர்; சம்பாஷணைகள் நிர்மிப்பதில் திக்கன்னருக்கு இணையானவர் என்று சூரனரைப் புகழ்வதற்குக் காரண மான முக்கிய கட்டங்கள் களாபூரணோதயத்தில் இரண்டு ரம்பைகளும், இரண்டு நளகூபரர்களும் வந்து விசித்திர கதிகளில் தவறுதலாக நடந்தும் தகுதியற்றவைக்குட் படாமல் தப்பித்துக்கொள்ளும் நிகழ்ச்சிகள் உடைய மூன்றாவது நான்காவது அத்தியாயங்கள் ஆகும்.

சூரனரும் சேக்ஷ்பியரும் ஒருவரையொருவர் அறியாத அறிய இயலாத தொலை தூரத்திலுள்ள சம காலக் கவிஞர்கள் ஆவார்கள்; ஜாதி மத தேசபாஷைகளில் வேறுபாடுடையவர்கள். எனினும் சேக்ஷ்பியர் எழுதிய காமடீ ஆப் எரர்ஸ் (தவறுகளின் இன்பியல்) எனும் நாடகம் ரம்பா நளகூபர இரட்டைகளின் நடத்தைக்கு ஒற்றுமையுடைத்தாயுள்ளது. இரண்டிலும், வேறுபாடி லாத உருவுடைய தலைவர்கள் இருவர், தலைவியர் இருவர் உள்ளனர். இந்தப் பாத்திரம் தான் என நிரூபிக்க இயலாத வண்ணம் மயக்கம் மேற்பட வைத்துத் தலைவ னும் தலைவியும் தாம் விரும்பியவர் என ஒருவரோடொரு வர் கலந்திருப்ப. அய்யோ பாவம்! வேறொருவருடன் இருக்கின்றனரே என வருத்தம் உண்டாகும். ஆனால் கதை முதலிலிருந்து முடிவுவரை ஆய்ந்தால், அவரவர்க் கேற்ற விதத்தில் கலந்துறைந்தார்கள் என்று கண்டு நமது

மயக்கம் நீங்குவதோடு அடக்க இயலாத மகிழ்ச்சியும் உண்டாகும்.

இப்படிப்பட்ட கதை நிகழ்ச்சிகளுடைய கட்டங்கள் மிக அபூர்வமானதாகும். அப்படிப்பட்ட சிறந்த கற்பனையை இந்தியாவில் சூரனரும், மேனாட்டில் சேக்ஷ்பியரும் எத்தகைய தொடர்பில்லாதிருந்தும் படைத்திருப்பது வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும் இது காலத்தின் செல்வாக்கால் வந்ததா? தற்செயலாக நிகழ்ந்ததா? என வியக்கிறோம்.

களாபூரணோதயத்தில் ஐந்தாறு விதமான காதல்களைக் காண்கிறோம். அவற்றில் சிறந்தவை இவை.

1. சல்யாசுரன் சரிதம்

மிருகேந்திர வாஹன சக்தியினால் மடிந்த தன் பந்துவான மகிஷாசுரனுக்குப் பழிவாங்க நினைக்கும் சல்யாசுரன், அப்சரஸ்திரீயாகிய அபிநவகௌமுதியைக் காதலிக்கிறான். அவளைத் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறான். அவளோ உன்னைக் கொன்றவனையே மணப்பேன் என்கிறாள். அவனோ தன் வலுவெலாம் மறந்து காதலுக்காக ஏங்குகிறான். முடிவில் மணிகந்தரனால் கொல்லப்படுகிறான். அவனிடம் கொடுமையும் கருணையும் இருந்திருக்கிறது. வலிமையும் மென்மையும் கலந்துறவாடுகிறது. அவனது வாழ்க்கை வருந்தத்தக்க வறண்ட வாழ்க்கைதான், எனினும் மாசற்ற காதலால் ஒளிர்கின்றது.

2. சுகாத்திரி சாலீனர்கள் விசித்திரக்கதை

சுகாத்திரி ஒரு பிராமணன் மகள். அவளது முறை மாப்பிள்ளை சாலீனன். சாலீனன் செயற்கை அழகை விரும்பாமல் இயற்கை அழகை மட்டுமே விரும்புகிறான். இவர்கள் கதையில் கண்டதும் காதல்கொண்டுவிடும் துச்ச சுகத்தை விடுத்து அதியுன்னதமான நிர்மலமான

காதலின் சிறப்பை விளக்கிக் காட்டித் தன் கலைத்திறத்தை வெளியிடுகிறார்.

3. சரஸ்வதி பிரம்மாக்களின் கேளிக்கை

இதுபோன்ற ஒரு கற்பனை தெலுங்கில் (எந்த மொழியிலும்) எங்குமே இல்லை. பொய்கைக் கரையிலமர்ந்துள்ள அவர்களது விளையாட்டும் பேச்சுகளும் ஒரு அற்புதமான காவியத்தைப் படைத்துவிடுகிறது. உருவகத்தின் உன்னதமான கலையழகு இங்கே மிளிர்கிறது.

4. கலபாஷிணியின் கதை

இக்கதையின் பாத்திரங்களில் மிகச் சிறந்த படைப்பு கலபாஷிணி. காதலின் விளக்கமான மடந்தை. குலத்தில் கணிகையாயினும் குடிப்பிறந்தவர்களைவிடச் சிறந்தவள். ஒரே தடவை இருவரைக் காதலித்தமையால் கவிஞர் இவளைக் கணிகையாக்கினார் போலும். நாரதன் சிஷ்யை மணிகந்தரனைக் காதலித்தும் தன் காதலினை உள்ளடக்கிக் கொள்ளுகிறாள். நளகூபரனைக் கண்டு மோகிக்கிறாள். அவனையடைய விரும்பி முடிவில் பலிபீடத்தருகே நிற்கிறாள். எனினும் தைரியமான பண்பு நலங்களைக் காண்கிறோம். அவள் ரம்பை உருவில் பேசிய சாதுரியப் பேச்சுகளும், மரணம் நிச்சயம் எனத் தெரிந்தபின் பேசும் திடமான அறிவுரைகளும் நமதுள்ளங்கவர்பவை. இந்தப் பாத்திர சிருஷ்டி அதியற்புதமானதாகும். அனுபவிக்கத் தகுந்த கலைச் சிகரமாகும். இவள் காளிகோயிலில் வெட்டுண்டிறந்ததாகக் கவி துன்பியலாக வருணிக்க விரும்பாமல் மீண்டும் காளியருளால் பிழைத்ததாக எழுதியது கற்பனைக் குறையேயாம். துன்பியலாக வருணிக்க நமது கவிகட்கு விருப்பமில்லை போலும். துன்பியலாக வருணித்திருப்பின் இந்தப்பாத்திரம் இன்னும் கவர்ச்சியுடையதாகச் சிறப்பாக அமைந்திருக்கும். சோக ரசத்தை அப்படியே காட்டத் தயங்குவானேன்? பாரதமே துன்பியலாக முடிந்திருக்க அதற்கு வராத குறை நம் கவிஞர்களின் படைப்புகட்கு வந்து விடுமா? இத்தகைய சிறந்த காவியத்தில் கற்பனைக் குறைகள் இருப்பது வருந்தத்தக்கது. மதுரலாலசையின்

கதை பழைய பிரபந்த தோரணியில் உள்ளது. அரசனைக் கண்டு காமுறல், பூங்கா செல்லல், புனல் விளையாட்டு, சைத்தியோபசாரங்கள், சந்திரனைப் பழித்தல், திருமணம், கலவி வருணனை முதலிய இலக்கண மரபுகளையும் வருணித்துத் தனது சுயகற்பனைத் திறனுக்கு ஊறுண்டாக்கிக் கொள்ளினும், அவரது எல்லாரசமும் இருக்க வேண்டுமென்று சங்கற்பித்ததன் விளைவென்று தெரிந்து அமைதி பெற வேண்டியதுதான். கற்பனைத் திறனால் இயல்பாகத் தடையற்றுப் பொங்குகின்ற கவிதையழகு, பாண்டித்தியத்தினால் வராது என்பது இந்தப் பகுதியைக் கண்டால் தெளிவாகும். சூரனர் இரண்டிலும் சிறந்தவர். தெலுங்கின் அற்புதக் காவியமாக இந்தக் களாபூர்ணோதயம் படைக்கப்பட்டுள்ளது. இதில் நவரசங்களும் பதினெட்டு வருணனைகளும் உள்ளன. ஒரே ரசமாக இல்லாதிருப்பது நல்லதுதான். எல்லா ரசங்களையும் கொண்ட காவியம் இயற்றுவது சாதாரணக் கவிஞர்களால் இயலுவதன்று. பாரத ராமாயணங்களைப் போன்ற விரிவான இதிகாசங்களைத் தவிர்த்து மற்றொன்றை எல்லாக் குண நலங்கட்கும் நிலையமானதாகப் படைத்தல் இயலாது. ஆனால் களாபூர்ணோதயம் எல்லா அழகும் வாய்ந்த அற்புதக் கற்பனைக் காவியமாகும். இதை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். இதிலுள்ள கற்பனைகள், சந்தர்ப்பங்கள், நிகழ்ச்சிகள் அதியற்புதமானவை. நடைத்திறனோ சொல்லிமுடியாது. அமைதியாக ஆழ்ந்தனுபவித்துப் பரவசமாகி இன்புறவேண்டியதேயன்றிச் சொல்லி நிறைவுறாது. பாத்திரங்களின் வசனமே அமுத மழைதான்.

பிங்களிசூரனரிடம் நன்றியும் பக்தியும் காட்ட நினைப்பவர்களும், இயல்பாகத் தமக்கிருக்கின்ற இலக்கிய வேட்கையை நிறைவுறச்செய்ய நினைப்பவர்களும் ஆன ரசிகப் பெருமக்கள் இக்கவிகுலச் சக்கரவர்த்தியின் நூல்களைப் பன்முறை படித்துப் பயன்பெறுவார்களாக!

16—6—1917,
மைசூர்.

சி. ஆர். ரெட்டி